பல தேவர் பாடல்

ப. கோட்டைய நாயகர்

Q2:417
N30
176339

- ஓம்தத்சத்.



# பல தேவர் பாடல்.

காஞ்சீபுரம்

ப. கோட்டைய நாயகர் அவர்களால்

இயற்றப்பட்டது.

26 MAY 1930

TOTAL pages: 207

ACESSNO: 176339

... வன் பிரஸ், காஞ்சிபுரம்.

1 30.

... TERED.

[ரூ. 1—0—0

2:417 N30. 176339

உ

ஓம் சிவ சத்திமயம்.



6 MAY 1930

# பல தேவர் பாடல்.

இஃது

காஞ்சிபுரம் வெள்ளைகுளத் தெரு

ஸ்ரீ சந்தவெளியம்மன் தேவஸ்தான தர்மகர்த்தர்

ம-ள-ள-ஸ்ரீ

ப. கோட்டைய நாயகர்

அவர்களால்

இயற்றப் பெற்றது.

---

டவுன் பிரஸ், காஞ்சிபுரம்.

1929.

176339
Q2:417
1180

உ

ஓம் ஸ்ரீ சிவசத்திமயம்.

# ஸ்ரீ சந்தவெளியம்மன் தேவஸ்தான ஜீர்ணோத்தாரண
# தர்ம கைங்கரியப் பத்திரிகை.

ஆசிரியப்பா.

மன்னு மயோத்தி மதுரா மாயா
துன்னு காசி துவாரை யவந்திகா
பன்னு காஞ்சிப் பதியென வேழும்
நன்னக ராமென நவின்றனர் மேலோர்.

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

உலகினி லனந்தங் கோடி யூர்களுண் டதனின் மிக்க
நலந்தரு பிருதி வப்பு நற்றேயு வாயு வோடு
பலந்தரு விசும்பா மைந்தும் பஞ்சபூ தங்க ளென்னூர்
தலந்தனிற் சிறந்த காஞ்சித் தனிநக ரென்பர் மேலோர்.

இதுவுமது.

ஜெகமெலாம் புகழுங் காஞ்சி க்ஷேத்திரந் தன்னி லிந்த
பகவதி கோயின் மிக்க பழுதுபட் டிருப்ப தாலே
சுகமுடன் கட்டுவித்துத் தொண்டுசெய் வோர்க ளென்றும்
இகபர சுகங்க ளெய்தி யிமையவ ராவர் தாமே.

வெண்பா.

மாலயத்து மன்னிவளர் மாகச்சிச் சந்தவெளி
யாலயத்து ளம்மையடிக் கன்புசெய்வீர்—ஆலயத்தின்
மாமதிலு மண்டபமும் வாய்ந்துவிளங் கப்புரிவீர்
தாமெவ் வளவேனுந் தந்து.

இதுமவுது.

உலகும் பொருளு முயர்கல்வி ஞான
மிலகும் படிபெறலா மென்றுங்—குலவுதிருக்
கச்சிக் குடபாலிற் காவல்கொண்ட சந்தவெளிக்
கிச்சித் தொருதரும மீந்து.

இந்நில வுலகின்கண் பலவள மலிந்து செழிப்புற்றோங்கும்
ஜம்புத்தீவில் கன்னல், கமுகு, கதலி, மா, பலா, தேங்கு வளர்ந்து
நிறைந்துள்ள [illegible] எந்நாட்டாரும் நன்னுடனைப்
பொன்னுடரும் புகழ்ந்து ஏத்தும் ஸ்ரீ காஞ்சி [illegible]
மிகவும் சிறப்புற்றோங்கி அநேக மகத்துவம் வாய்ந்த [illegible]வதீர்த்தத்
திற்குத் தெற்கு, உபநிடத வேத மடத்திற்கு வடக்கு, அரசுகா[illegible]
ளென்கிற சம்பத்கிரீஸ்வரி ஆலயத்திற்கு மேற்கு, சந்திர புஷ்கரணி
தீர்த்தத்திற்கு கிழக்கு, இந்நாற்பாங்கெல்லைக்கு மத்தியில் ஆன்ம
கோடிகள் உய்யும் வண்ணம் திருக்கோயில் கொண்டெழுந்தருளி
யிருக்கும் அஷ்ட சத்திகளில் ஓர் சத்தியாய் க்ஷேத்ராங்கி வாருண
சக்தி யென்னும், துர்க்கா பரமேஸ்வரியும் ஜம்புகனென்னும், அந்தக
பிராமணனுக்குக் கண் கொடுத்தருளிய வைசூரசம்மாரி என்று
வழங்கும் ஸ்ரீ சந்தவெளியம்மன், பக்தகோடிகளை இரட்சிக்கும்
ஸ்ரீ பார்ப்பனத்தியம்மன், கருப்பழகி ஆரியமாலை அன்ன முத்து உகந்
தழகியார் சமேத ஸ்ரீ காத்தவராய சுவாமி, சந்திரகலாம்பிகை சமேத
ஸ்ரீ சந்திரமௌலி ஈஸ்வரர் இவர்களுடைய திருவாலயங்கள் மிகவும்
சிலமாய் இருப்பதால் இவைகளை ஜீர்ணோத்தாரணஞ் செய்யும்படி
யாய் நன்கு உத்தேசித்திருப்பதால் இத்தேசத்தில் சீருஞ் சிறப்பும்
செல்வமும் அன்பும் குணமும் நிரம்ப வாய்ந்துள்ள புண்ணிய புரு
ஷர்களும், புண்ணியவதிகளும், இதைக் கண்ணுற்று நாம் பிறவி
யெடுத்ததற்கு உரியபிரயோஜனம் என்னெனக்கருதி ஷை திருவாலய
திருப்பணி கைங்கரியத்தை நடத்திப் பூர்த்திசெய்வதே சிறந்த
தென விளங்கும். ஆதலால் ஷை தெய்வங்களுடைய மூலஸ்தான
முன் மண்டபம் திருமதில் கோபுர முதலிய திருப்பணிகளை நடத்திக்
கும்பாபிஷேகங்களைச்செய்து வைத்து நித்தியபடி அபிஷேக ஆரா
தனைக்குரிய தக்க ஏற்பாடுகளைச் செய்துவைத்து இகபர சுகசாதன
இன்பம் எய்தி ஷை சிவசத்தியின் திருவருளால் தேவாம்சத்தைப்
பெற்று நீடூழி வாழ்வார்களாகவும். சுபம். சுபம். சுபம்.

ஷை திருப்பணிக்குப் பொருளுதவி செய்யும் அன்பர்களனைவ
ரும் செங்கல்பட்டு ஜில்லா காஞ்சிபுரம் தாலூக்கா பெரியகாஞ்சிபுரம்
கங்கைகொண்டான் மண்டபம் ஜவுளி வியாபாரியும் முனிசிபல்
கௌன்சிலருமாகிய ம-ள-ள-ஸ்ரீ பெ. சுப்பராய முதலியார் அவர்கள்
பேருக்கும் ஷை பெரியகாஞ்சிபுரம் இராஜவீதி வட்டி வியாபாரியும்
முனிசிபல்கௌன்சிலருமாகிய ம-ள-ள-ஸ்ரீ மு. கதிர்வேலு முதலியார்
அவர்கள் பேருக்கும் அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

ப. கோட்டைய நாயகர்.

# சாற்றுக்கவிகள்.

## எண்சீர் விருத்தம்.

காயற கார்

காமாக்ஷி யம்மையுமை நம்மை யீன்றாள்
நேராருஞ் சந்தவெளி நிமலிழும்மை
நிலவுதிருக் கோயிலியற் றரும கர்த்தன்
பாராரும் வன்னிகுலப் பனையப் பப்பேர்ப்
பண்பனருள் கோட்டையன் பரிவின்மிக்கான்
சீராரும் பலதேவ தேவர்ப் போற்றி
திருத்துதமிழ்க் கவிபுனைந்தான் தெளிதேன் மாதோ.

இது இயற்றினவர்,
வித்வான். மணி. திருவேங்கட முதலியார்,
பிள்ளையார்பாளயம், காஞ்சிபுரம்.

காஞ்சிபுரம் பச்சையப்பன் கலாசாலைத்தலைமைத் தமிழ்ப் புலவர்
வெண்பாப்புலி. தி. சு. வேலுசாமி பிள்ளை அவர்கள் இயற்றிய,

## நேரிசை வெண்பா.

பன்னினனற் கச்சிப் பதிக்கான சந்தவெளிக்
கன்னிதிருக் கோயில்பணி கர்த்தனும்—வன்னி
குலதேவ பக்தி குலவுறு கோட் டையன்
பலதேவர் பாடல் பரிந்து.

காஞ்சிபுரம் பிள்ளையார்பாளயம் திருமேற்றளித் தெரு,
வித்வான். சோமசுந்தர முதலியார் அவர்கள் இயற்றிய,

## கலி விருத்தம்.

தேர்ந்த கச்சித் திருநகர் தன்னிலே
கூர்ந்த வன்னி குலத்தவக் கோட்டையன்
சேர்ந்த பற்பல தேவர்கள் பாடலை
யார்ந்த வன்புட னுக்கின னுமரோ.

காஞ்சிபுரம் காமாக்ஷியம்மன் சன்னதி வீதி,
வித்வான். கு. சுப்ரமண்ய நாயகர் அவர்கள் இயற்றிய,

## கட்டளை கலித்துறை.

கச்சியில் வன்னி குலப்பனை யப்பன் கவின்மகனும்
அச்சமில்சந்த வெளியுமை கோயிலறம் புரிவான்
விச்சையில் வல்லவன் கோட்டைய நாயக விற்பனனு
மெச்சுநல் லன்பன் பலதேவர்பாடல் விளம்பினனே.

## காப்பு. நேரிசை வெண்பா.

திருக்காம கோட்டத் திருந்திழையைப் பாடிக்
கருக்காம கோட்டங் கழிப்பான்—இருக்காமக்
கோட்டத்தில் வாழ்வான் குறித்துக் கொடுத்தவொரு
கோட்டத்த னன்புகொடுக் கும்.

## ஆரம்ப துதி.

ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ
ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ
ஆ ஈ ஊ ஏ ஓ ஆ ஈ ஊ ஏ ஓ
ஈ ஊ ஆ ஏ ஓ ஈ ஊ ஆ ஏ ஓ
ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ
ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ
ஓ மவ்வுஞ் சவ்வுமான ஒப்பிலா நமசிவாயம்
ஆ மூவ்வும் வவ்வுமான அரகரா நமசிவாயம்
அரனரி யம்மையப்ப னாகிய நமசிவாயம்
பரம்பரை யாகியெங்கும் பரவிய நமசிவாயம்
ஊமை யெழுத்தோ டோரெழுத்தி லுதித்த மூன்றக்கரமாய்
ஆமையுருவா யைந்தெழுத்தாய் யைம்பத்தோ ரட்சரமாய்
ஆறுதாரத்திற் கப்பாலுக் கப்பாலாய்
வேறாய்க் குலவிவளர் வேதாந்த விளக்கொளியாய்
சுத்தபரப் பிரம்ம சோதியா யாதிசிவ
சத்தி மனோன்மணியாய்ச் சாம்பவியாய்த் தற்பரையாய்
நிராமயமாய் நிஷ்களமாய் நின்மலமாய் நிற்குணியாய்
பராபரமாய்ப் பசுபதியாய்ப் பகலிரவாய் யவனவளாய்ச்
சுகசொரூப மெஞ்ஞான சுந்தரியாய்க் காஞ்சிநகர்த்
திகழ்காம பீடத் திரிபுரையாய்ப் பிலாகாச
மருவுகா யத்திரிமகா மண்டபத்தின் மகாமௌன
குருவாகி ஓங்கார கோணத்திலே யென்றுஞ்
சகஸ்திரதள கமலத்தில் சதுர்ப்புஜையாய் வீற்றிருக்கும்
பகவதியாய் காமாக்ஷி பதுமமலரடிக் கமலம்
கைதொழுது காப்பாகக் கனகமணிச் சிலம்பொலிக்க
மெய்மகிழ்ந்து யான்பாட மேவியசற் குருவாகி
அற்புதஞ்செய் யொருகோட் டையனு மைங்கானின்
பொற்பதத்தை மனத்திருத்திப் போற்றிசெய் தேத்திவாழ்வோம்
ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம்.

உ

ஓம் ஸ்ரீ சிவசத்திமயம்.

## சுந்தரகணபதி துதி.

### நேரிசை வெண்பா.

தருமா தலத்திற் றனைப்பணிவார்க் கைந்து
தருமா தடக்கையான் சம்பு—பெருமானோர்
மந்தரமா தங்க வரிவிலன்சே யாம்பால
சுந்தரமா தங்கஞ் சுகம்.

## சந்தான கணபதி துதி.

மா துமையே கம்பர் மகிழ்கச்சி வெள்ளைகுள
வீதிவளர்ந் தோங்கி விளங்கிவரு—நீதியருள்
முந்தான மாமுகவன் முக்கண்ணன் முத்திதருஞ்
சந்தான வைங்கரன்றாள் சார்.

### அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

மலர்மகண் மருவுங் காஞ்சி மாநகர் தன்னிற் றூய
நலமிகுந் திலகு வெள்ளை நற்குளக் கரையின் மேவும்
புலவர்கள் விழையுஞ் சித்திபுத்தி வல்லபையோ டென்றும்
அலகிலாப்புகழ்ஸ்ரீ சம்பத் தைங்கரன் மலர்த்தாள் காப்பே.

### இதுவுமது.

கார்மலி சோலைசூழுங் கம்பைமா நதிசேர் காஞ்சி
பேர்மலிநகரந் தன்னிற் பேசரு மறைமாவின்பால்
சீர்மலி யாயிரக்கால் சிறந்தமண் டபத்தி லென்றும்
ஏர்மலி விகடசக்ர விபமுகன் கழல்கள் காப்பாம்.

### துதி கலி.

ஐங்கர முடையாய் போற்றி யங்குச பாசா போற்றி
மங்கள முடையாய் போற்றி மலைமகள் புதல்வா போற்றி
பங்கயன் முதலோ ரேத்தும் பரப்பிரம்ம சொரூபா போற்றி
கங்கைவார் சடையோ னீன்றகணபதி போற்றி போற்றி.

### அடதாளம்.

ஓம்மாகா ஓம்மாகா ஓம்மாகாஓம் ஓம்மாகா ஓம்மாகா ரீம்மாகாஓம்
சத்திகஜ சத்திகஜ சத்திகஜமுகனே சத்திகஜ சத்திகஜ சித்திகஜமுகனே
தந்திமுகத் தந்திமுகத் தந்திமுகத்தோனே தந்திமுகத் தந்திமுகத்தைந்துகாத்தானே
ஞானரத்ந ஞானரத்ந ஞானரத்ந மணியே ஞானரத்ந ஞானரத்ந மோனசித்ர மணியே.

## கணபதி வர்ணிப்பு சாதாபாடல்.

ஓங்கார பிரணவத்தில் உதித்தெழுந்த கணபதியே
பாங்கான மறைமுதலில் பரவிநின்ற கணபதியே
வானவ ரிடர் தீர்க்க வந்துதித்த கணபதியே
ஞான சிகாமணியாய் நடனமிடுங் கணபதியே
சிவசத்தி புத்திரனாய்ச் சிறந்திருக்குங் கணபதியே
தவறில்லாமற் றுதிகள் தான்கொண்ட கணபதியே
கொடியசுரா சதனுயிரைக் கொள்ளைகொண்ட கணபதியே
அடியா ரிடர்தீர்த்து அருள்புரியுங் கணபதியே
ஐங்கரமுடை யவராய் அமர்ந்திருக்குங் கணபதியே
பங்கயன்மால் இந்திரன்வானோர் பணிந்தேத்துங் கணபதியே
அண்டாத கஜமுகனை அழித்திட்ட கணபதியே
தொண்டரொடு மாதவருந் தொழுதேத்துங் கணபதியே
அந்தமிகு மூஷிகத்தில் அமர்ந்துவருங் கணபதியே
விந்தையா யுலகமெல்லாம் விளங்கிநின்ற கணபதியே
அத்திமுக மானவனே அலங்கார கணபதியே
பக்தருக்கு மித்திரனே பால கணபதியே
சித்திபுத்தி தந்தருளுஞ் சிவசம்பத் கணபதியே
வெற்றிமிகத் தந்தருளும் வேத கணபதியே
சத்தியுமை யீன்றெடுத்த சந்தான கணபதியே
சித்ரமயில் வாகனர்முன் செனித்துவந்த கணபதியே
உக்ர விஸ்வரூபமா யுதித்துவந்த கணபதியே
அக்குமணி தாவடங்க ளணிந்துவருங் கணபதியே
பஞ்சமுகந் தசக்கரமாய்ப் பரவவந்த கணபதியே
அஞ்சலஞ்ச லென்றவரை யாதரிக்குங் கணபதியே
எங்கும்பரி பூரணமா யிருந்தருளுங் கணபதியே
அங்குச மேந்திவரும் ஆனந்த கணபதியே
செந்தா மரை யடியைச் சேவித்தேன் கணபதியே
முந்திமுந்தி யிக்கொலுவில் முன்னமர்வீர் கணபதியே
முக்கனியுஞ் சர்க்கரையு முகமலர்ந்து கணபதியே
அக்கரையா யுட்கொண்டு அருள்புரியுங் கணபதியே.

## மூடுத பாடல்.

செகமெலாம் புகழுங்காஞ்சி க்ஷேத்திரக் கணபதியே
ககனரிட ரகலவென்றுங் கருணைசெய்யுங் கணபதியே
தும்பைமலர் மாலையணி தூய கணபதியே
கம்பாநதிக் கரையருகில் களித்திருக்குங் கணபதியே
பூவடியை,ந் தொழுவோர்க்குப் புத்திதருங் கணபதியே
மாவடி மலறநிழலில் மருவிநிற்குங் கணபதியே

தூயமலர் மகள்நிதமுந் துதித்தேத்துங் கணபதியே
ஆயிரக்கால் மண்டபத்தி லமர்ந்திருக்குங் கணபதியே
பல்லவ கோபுரத்தின் பாலமர்ந்த கணபதியே
உல்லாச ரெட்டையர்கள் உலாப்புகலுங் கணபதியே
எல்லாமாய்த் தான்விளங்கு மேகாட்சரக் கணபதியே
வல்வினையைத் தீர்த்துநல்ல வரமருளுங் கணபதியே
ஏகாம்பரர் புத்திரராய் என்றுமுள்ள கணபதியே
வாகான காமாட்சி வரபுத்ர கணபதியே
மாயன்விகட நடனஞ்செய மனமகிழுங் கணபதியே
ஆயனுக்குத் திகிரிசங்கம் அளித்த கணபதியே
எக்கருமம் எவர்செய்யினும் இறைவா கணபதியே
அக்கரும முன்னையன்றி யாகாது கணபதியே
எண்குணமாய் விளங்கும் ஏகாந்த கணபதியே
சண்முகன் தமையனான சாமி கணபதியே
விந்தை மிகுந்திலகும் விகடசக்ர கணபதியே
பந்தமாய்த் தான்விளங்கும் பஞ்சசக்தி கணபதியே
வந்தமரர் தொழுதேத்தும் வலம்புரி கணபதியே
சந்ததம் மறைபுகழுஞ் சங்குபாணி கணபதியே
கருணை புரியுமிரு கவுட்டுளைக் கணபதியே
அருண ப்ரகாசரான ஐங்கரக் கணபதியே
கந்தமணி துண்டீரக் கடவுளே கணபதியே
செந்திருமான் மருகனான செல்வக் கணபதியே
வந்தடியார் தொழுதிறைஞ்சும் வன்னி கணபதியே
எந்தனிட நாவதனில் இருந்தருள்வீர் கணபதியே
குடவயி றுடையவனே குஞ்சரக் கணபதியே
வடவா லடிதனிலே வாழுங் கணபதியே
அத்திமா வரசடிவாழ் அலங்கார கணபதியே
சித்ரமிகும் வேம்படிவாழ் சிங்காரக் கணபதியே
மங்களஞ்சேர் வைகையோரம் மருவிநிற்குங் கணபதியே
சிங்காரப் பொய்கையிடஞ் சிறந்திருக்குங் கணபதியே
விந்தைமிகும் வீதிகளில் வீற்றிருக்குங் கணபதியே
சுந்தரமிகுஞ் சோலைகளில் சூழ்ந்திருக்குங் கணபதியே
அலங்கார மாடங்களில் அமைந்திருக்குங் கணபதியே
நலமுள்ள கூடங்களில் நடித்திருக்குங் கணபதியே
துப்பணைய மேனிவாய்ந்த தும்பிமுகக் கணபதியே
அப்பணி சடையோனீன்ற வையா கணபதியே
சிந்துரனை மார்பிளந்து செயம்புரிந்த கணபதியே
அந்தண ராகவந்த அருளாங் கணபதியே
விந்தையபிடேகங் கொண்டு வீற்றிருக்குங் கணபதியே

அந்தமிகும் பட்டாடை யரையணிந்த கணபதியே
சந்தனங்கஸ்தூரி அத்தர் சாந்தணியுங் கணபதியே
மந்தாரைமல்லி முல்லை மருவணியுங் கணபதியே
திருமலரறுகு வன்னி திகழுங் கணபதியே
குருவேரிறு வாட்சிவில்வங் கொன்றையணி கணபதியே
வாசமிகு மலரணிந்து வாழுங் கணபதியே
ஈசரிட மாங்கனிபெற் றிருக்குங் கணபதியே
பச்சரிசி யவல்கடலை பயறுண்ணுங் கணபதியே
மொச்சை துவரைகன்னல் மோதகமுண் கணபதியே
மாங்கனியு வாழைபலா மகிழ்ந்துண்ணுங் கணபதியே
தேங்காயுடன் செவ்விளநீர் தேனுண்ணுங் கணபதியே
அன்னம்பால் சர்க்கரையும் அருந்துங் கணபதியே
உன்னதக் கறிவகைகள் உண்ணுங்கணபதியே
பட்சண வகைகளெல்லாம் பரிந்துண்ணுங் கணபதியே
இட்டகனி வர்க்கமெலாம் இசைந்துண்ணுங் கணபதியே
வண்டயங் கலகலென்ன வந்தருளுங் கணபதியே
அண்டரெல்லாஞ்செய செயென்ன வமர்ந்தாடுங் கணபதியே
கற்பூர தூபதீபங் காணுவீர் கணபதியே
அற்புதமா மலர்தூவி அடிபணிந்தேன் கணபதியே
சந்ததமு நின்சமயஞ் சாற்றிடக் கணபதியே
வந்துவென் னுவிருந்து வாக்கருள்வீர் கணபதியே
சித்திபுத்தி வல்லபையைச் சேருங் கணபதியே
முத்துக் குமரனுக்கு மூத்த கணபதியே
பாலன் கோட்டையனிட பாடலுக்குக் கணபதியே
சீலமாய் வந்துநல்ல சீரருள்வீர் கணபதியே
புலித்தோலா மாசனத்தில் பொருந்துவீர் கணபதியே
மலிவான மான்றோலில் மருவிநிற்பீர் கணபதியே
ஆரை நினைப்பேனையா அலங்காரக் கணபதியே
கோருகின்ற வென்னுவில் கொலுவிருப்பீர் கணபதியே

கணபதி வர்ணிப்பு முற்றிற்று.

உ

ஓம் ஸ்ரீ சிவசத்திமயம்.



## சரஸ்வதி துதி.

### வெண்பா.

இமையவர் கண்மௌலி இணை மலர்த்தாள் சூட்டிச்
சமையந் தொறுநின்ற தையல்—சிமய
மலைமடந்தைவாச மலர்மடந்தை யெண்ணெண்
கலைமடந்தை நாவலர்க்குக் கண்.

### அறுசீர் ஆசிரிய விநத்தம்.

வெண்டா மறையின்வடி வாகி வேத னயன்ற னாவின்கற்
கண்டா மொழியா யிருக்குமெண்ணெண் கலைமா மகளே காரணியே
பண்டே செய்தவினைப் பயனாற் பாடவறியேன் பாரதிநின்
தண்டா மறையின் றிருவடியைத்தந்து காப்பாய் சரஸ்வதியே.

### துதி கவி.

மதுரவாக்கருள்வாய் போற்றி மரகதக்குன்றே போற்றி
பதுமத்திலமர்ந்தாய் போற்றி பரப்பிரம்ம சொரூபி போற்றி
குதூகுல மாய்விளங்கும் குணக்கடலாளே போற்றி
சதுமுகன் றேவிஞான சரஸ்வதி போற்றி போற்றி.

### இதுவுமது.

நாரணன் மருகி போற்றி நான்முகன் தேவி போற்றி
ஆரண மானாய் போற்றி அகில ரட்சகியே போற்றி
காரண குருவாய் வந்தென் கவலையை தீர்ப்பாய் போற்றி
சாரதா தேவி ஞான சரஸ்வதி போற்றி போற்றி.

### கட்டளைக் கலித்துறை.

இயலா னதுகொண்டு நின்றிரு நாமங்கள் ஏத்துதற்கு
முயலாமை யாற்றடுமாறுகின்றேன் இந்த மூவுலகும்
செயலா லமைத்த கலைமகளே நின்றிரு வருளைச்
கயலாவிடாமல் அடியேனையு முவந்தாண் டருளே.

### அடதாளம்.

ஓம்சார ஓம்சார ஓம்சாரதாம்பா
ஓம்சார ஓம்சார ரீம்சாரதாம்பா
வாணி கலைவாணி கலைவாணி கலைவாணி
வாணி கலைவா [illegible] ல்வேணி
ஞானரூப ஞானரூப ஞானரூப மயிலே
ஞானரூப ஞானரூப மோனரூபக்குயிலே.

### பாடல்.

விந்தைமிகும் வேதங்களில் விளையாடுஞ் சரஸ்வதியே
இந்திராதிதேவ ரெல்லாமேத்தி தொழுஞ் சரஸ்வதியே
அற்புதமாய்க் கும்பமதில் அவதரித்த சரஸ்வதியே
பொற்சதங்கை கலகலென்ன பொருந்திவருஞ் சரஸ்வதியே
வெள்ளையரா விந்தமதில் வீற்றிருக்குஞ் சரஸ்வதியே
வெள்ளைத் துகிலுடுத்தி விளையாடுஞ் சரஸ்வதியே
கல்விக் கரசாய் விளங்குங் கன்னி சரஸ்வதியே
சொல் பொருளாய்த் துலங்குஞ் சோதி சரஸ்வதியே
சென்ற விடங்களெல்லாஞ் சிறப்புத் தருஞ் சரஸ்வதியே
ஐம்பத்தோ ரட்சரத்தில் அமர்ந்தாடுஞ் சரஸ்வதியே
அங்குமிங்கு மெங்கு மாகி யருளுஞ் சரஸ்வதியே
பங்கயன் றேவியான பாலை சரஸ்வதியே
மூலாதாரப் பொருளே முத்திதருஞ் சரஸ்வதியே
கோல மிகுந்த ஞானக் கொழுந்தே சரஸ்வதியே
பொன் மகள் மருகியான பூவே சரஸ்வதியே
நன்மையாய்ப் பாவலர்கள் நாவில் வாழ் சரஸ்வதியே.

### முடுகு பாடல்.

மாமலராள் தன்னாலே மாதா சரஸ்வதியே
பூமலரோ னுனைப் பிரிந்து பூங்கொடியே சரஸ்வதியே
எத்திசை புகழுங் காஞ்சி யெழில் னகரில் சரஸ்வதியே
அத்திகிரி யெனவிளங்கு மம்மலைமேல் சரஸ்வதியே
நாரணனைக் கோரி மகம நடத்த சரஸ்வதியே
காரணந் தனையுணர்ந்து கண்மணியே சரஸ்வதியே
விக்கினமாய் முடியும்படி விமலி சரஸ்வதியே
கொக்கரித் தனந்தவித கோலமாய்ச் சரஸ்வதியே
பற்பல வுருவெடுத்துப் பங்கயன்முன் சரஸ்வதியே
அற்புதங்கள் தானடத்தி அவ்வேள்வி சரஸ்வதியே
நடவாமல் வேகவதி நதியுருவாய் சரஸ்வதியே
குடபாலி லிருந்து வெள்ளங் கொண்டுவா சரஸ்வதியே
அங்கயனும் வரதராஜன் அடியிணையைச் சரஸ்வதியே

மங்களமாய் தொழுதேத்த மாதவனுஞ் சரஸ்வதியே
தேகாரோக்ய மாகவேதான் தேப்பெருமாள் சரஸ்வதியே
வேகா சேதுயென விளங்க வேணுநாதன் சரஸ்வதியே
யதோத் காரிபெருமாளென வவதரித்து சரஸ்வதியே
மதோன் மஸ்த்தாய் வீற்றிருக்கும் [illegible]ம்மதைச சரஸ்வதியே
[illegible]து நல்தநின்கீழ் பால் சென்ற சரஸ்வதியே
தெரிந்துதிரு மால்பிர்ம்மன் றேடவுன்னை சரஸ்வதியே
ஒதரிய வேதனிடம் மொத்திருந்த சரஸ்வதியே
காதலாய் கணவனுவில் கலந்திருந்த சரஸ்வதியே
ஆதிகாம கோடிபீடத் தருகிருந்த சரஸ்வதியே
நீதிமய மாய்விளங்கும் நிமலி சரஸ்வதியே
தம்புரு வீணைகையில் தரித்திருக்குஞ் சரஸ்வதியே
உம்பர்மன மிகமகிழ வுவந்திருக்குஞ் சரஸ்வதியே
மணிவடமும் அங்கையில் நாண் மலரேடுஞ் சரஸ்வதியே
பணிவுடனே கொண்டிருக்கும் பாரதியே சரஸ்வதியே
உபநிடத படையாளே யுத்தமியே சரஸ்வதியே
அபுரூப வதியாளே அலங்கார சரஸ்வதியே
வாசமல ரணிகுழலே வாணி சரஸ்வதியே
மாசிலா மேனியான மருவே சரஸ்வதியே
ஆற்றிற் றவழ்ந் தேறிவந்த அருளே சரஸ்வதியே
போற்றினோர்முன் யெந்நாளும் பொலியுஞ் சரஸ்வதியே
நெருப்பில்பச் சோலையாக நின்ற சரஸ்வதியே
அருள்தந்து காருமம்மாள் ஆதி சரஸ்வதியே
வெண்டா மரையாளே வேல்விழியே சரஸ்வதியே
தண்டா மரையாளுன் றாள்பணிந்தேன் சரஸ்வதியே
ஓதவகை யறியே னோங்கார சரஸ்வதியே
வேதமுறை யறியேன் வேல்விழியே சரஸ்வதியே
மந்திர நெறியறியேன் மாதாவே சரஸ்வதியே
உந்தனை பூஜிக்கும் உறுதி யறியேன் சரஸ்வதியே
கற்றோறை நத்திநிதங் கண்டறியேன் சரஸ்வதியே
பொற்றா மரையடியைப் போற்றறியேன் சரஸ்வதியே
புல்லறிவே னென்னுவில் புகலுமம்மா சரஸ்வதியே
அல்லல் வினையகற்றி யருளுமமா சரஸ்வதியே
வான்மாரி போலென்றன் வாக்கில் சரஸ்வதியே
தேன்மாரி கவி பொழிவாய் தேவி சரஸ்வதியே
பூவில் கொலுவமர்ந்து புகலுமம்மா சரஸ்வதியே
நாவில் குடியிருந்து நவிலுமம்மா சரஸ்வதியே
தப்பிதங்கள் நேராமல் தற்காப்பாய் சரஸ்வதியே
எப்போது மங்களமா யிருக்கவருள் சரஸ்வதியே

கற்பூர தூப தீபங் காணுமம்மா சரஸ்வதியே
அற்புதமா மலர்தூவி அடிபணிந்தேன் சரஸ்வதியே
அவ்வைமுத லெழுவரையு மளித்த சரஸ்வதியே
செவ்வையா யிக்கொலுவில் சேர்ந்தமரும் சரஸ்வதியே
பாலன் கோட் டையனிட பாடலுக்கு சரஸ்வதியே
சீலமாய் வந்துநல்ல சீரருள்வீர் சரஸ்வதியே
புலித்தோலா மாசனத்தில் பொருந்துமம்மா சரஸ்வதியே
மலிவான மான்றோலில் மகிழ்ந்திருப்பாய் சரஸ்வதியே
ஆரை நினைப்பனம்மா வலங்கார சரஸ்வதியே
கோருகின்ற வென்னாவில் கொலுவிருப்பாய் சரஸ்வதியே.

சரஸ்வதி வர்ணிப்பு முற்றிற்று.

---

உ

ஓம் ஸ்ரீ சிவசத்திமயம்.

## சபை வணக்கம்.

### அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

காதலாய் வேத நான்குங் கலைகளோ ராறு மூவா
றேதமில் புராண காவ்ய மெழில் வியாகரண மெல்லாம்
பூதலந் தன்னி லோதிப் புகழுறு புலவர் தங்கள்
பாத தாமரை யெந்நாளும் பணிந்து நான்றுதி செய்வேனே.

### துதி கலி.

அந்தணர் முனிவர்ப் போற்றி அருந்தவப் பெரியோர்ப் போற்றி
விந்தையா மன்னர்ப் போற்றி விளங்கு வைசியரைப் போற்றி
பந்தமார் சூத்ர ரென்னும் பல்குலத் தவரைப் போற்றி
வந்தனஞ் செய்தே னென்னை வாழ்விப்பீர் போற்றி போற்றி.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

நற்றவ ருறையுங் காஞ்சி நகர்வெள்ளைக் குளத்து வீதி
உற்றழற் குலத்தில் வந்தே யுதித்த கோட்டையன் றன்னாற்
பற்றற விளங்கு நல்ல பலதேவர் சரித மெல்லாங்
கற்றவர் கழல் பணிந்து கழறிடுங் கதைசொல் வேனே.

### எண்சீர் விருத்தம்.

பன்னுமறை துதிகாஞ்சி பதியில் வாழும்
பார்வதியாங் காமாக்ஷி பாதம் போற்றி
பொன் மணியின் சிலம்பிசையும் பாடலுக்குப்
பொருந்துபல தேவரிட சரித மெல்லாம்
வன்னி குலக்ஷத்திரிய னெனவளர் கோட்டையன்
வணங்கியே கவிவாணர் தாளைப் போற்றி
பன்னினே னிக்கதையிற் பிழையுண் டாயிற்
பரிகரித்துப் பகர்ந்தருள் வீர்பாவ லோரே.

### அடதாளம்.

வாணரடி வாணரடி வாணர நாடி
வாணரடி வாணரடி வணங்கிடுவோம் தேடி
கோலகவி கோலகவி கோலகவி யோரே
கோலகவி கோலகவி குற்றம் பொருப்பீரே
குருநாதன் குருநாதன் குருநாதன் பாதம்
குருநாதன் குருநாதன் கும்பிடுவேன் போதம்.

### பாடல்.

கோலமிகும் பொற்சிலபாங் கோருந்திரு பாடல்களை
ஞாலமதில் நன்றாக நவில அலங்காரமுடன்
கற்பித்த சற்குருவின் கழலடிகள் நமஸ்கரிப்பாம்
அற்புத நற்குருவின் அடியிணைகள் தொழுதிடுவோம்
நாவலர்கள் ஞானியர்கள் நளினமலர் அடிபணிவோம்
பூவேந்தர் பூசுரர்கள் பொன்னடியைப் போற்றி செய்வோம்
சீலமிகும் பெரியோர்கள் சேவடியை வணங்கிடுவோம்
ஞாலம்புகழிச் சபையோர் நற்பாதம் நமஸ்கரிப்போம்
வல்லவாரா மாந்ரீகர் வாதியர்க ளடிதொழுவோம்
பல்லோர்கள் நல்லோர்கள் பதுமமல ரடிபணிவோம்
உக்ரவீர சத்தியான உமையவள்தன் கிருபையினால்
பக்குவமாய்ச் சிலம்பெடுத்து பாடுகிறோம் பாடல்களை

### முடுகு பாடல்.

மழைக்குநிக ரென்றுபனி மாநிலத்தில் சொரிவதுபோல்
அழகான சந்திரன்முன் னுடுமின் மினிபோலும்
மயிலாட வான்கோழி மண்டலத் தாடல்போலும்
குயில்கூவக் காகங்கண்டு கூடவே கூவுதல் போல்
தடமாருந் தாமரைமுன் தான்பூர்க்குங் கொட்டியைப்போல்
கடனீருக் கொப்பாய் சிறு கால்வந்து பாய்வதுபோல்

நன்னூலிலக் கியமுணர்ந்த நாவலர் தங்கள் முன்னே
பன்னரியாப் பாலகன்யான் பாடுகின்ற பாடல்களில்
தப்புபிழை யிருந்தாலுந் தாய்சேயைக் காப்பதுபோல்
செப்பும்பெரி யோர்களிடச் சேவடிக்குத் தொண்டு செய்வோம்
பாலன்கோட் டையனிட பாடலுக்குப் புலவரெல்லாம்
சீலமாய் வந்துநல்ல சீரருள்வீர் செகந்தனிலே.

சபை வணக்கம் முற்றிற்று.

உ

முருகன் துணை.



## சுப்ரமண்யர் துதி.

### வெண்பா.

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மைந்தனே—யொருகை முகன்
தம்பியே நின்னுடைய தண்டைக் காலெப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் யான்.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

திருமறை முடிவில் ஞான தினகரன் போற் சொலிக்கும்
அருந்தவ முனிவர் வானோர் அனுதினந் துதிசெய் தேத்தும்
கருணை தெய்வானை வள்ளி காதலன் மயிலி லேறுங்
குருபரன் தணிகை மேவுங் குமரன் தாள் வணங்குவோமே.

### இதுவுமது.

திருமுக மாறுந்தோன்றித் திகழிரு மாதர்சூழ
வெருவிட வவுணன்றன்னை வேலினால் மாளச்செய்தே
ஒருதனி மயிலிலேறி யுலகெலாஞ் சுற்றிவந்து
மருவிய குகனுஞ்சுப்ர மணியனை வணக்கம்செய்வாம்.

## இதுவுமது.

மன்னுபொன் மகுடமாறும் மதிமுகந் துலங்க கண்கள்
பன்னிரு தடந்தோ ளோங்கப் பாவைமா ரிருவர் சூழ
அன்புறு மயிலின் மீதே யமர்ந்தருள் அளிக்குங் காஞ்சி
நன்னகர் குமரகோட்ட நாதன்றாள் வணங்கி வாழ்வாம்.

## இதுவுமது.

முப்புர மெரி யெழ முகிழ்த் தவெண் ணகை
அப்பனுக் கருண் மொழி யளித் தவண் ணலை
ஒப்பருங் குரு முனிக் கோது செந் தமிழ்ச்
சுப்பிர மணியரைத் தொழுது போற்றுவாம்.

## துதி கவி.

அய்முகன் சுதனே போற்றி அருமறை முதல்வா போற்றி
செய்யவள் மருகா போற்றி செகத் ரட்சகனே போற்றி
மைவிழி தெய்வானை வள்ளி மணாளனே வருவாய் போற்றி
சைவர்கள் வணங்குஞ் ஞான சண்முகா போற்றி போற்றி.

## அடதாளம்.

ஓங்குகாய ஓங்குகாய ஓங்குகாய நமஓம்
ஓங்குகாய ஓங்குகாய ரீங்குகாய நமஓம்
குமரகுரு குமரகுரு குமரகுரு மூர்த்தி
குமரகுரு குமரகுரு வமரர் தொழுங் கீர்த்தி
வேல்முருகா வேல்முருகா வேல்முருகா நமஓம்
வேல்முருகா வேல்முருகா மால்மருகா நமஓம்.

## பாடல்.

திருமறைகள் தொழுதேத்துந் தெய்வசிவ சுப்ரமண்யா
அருந்தவத்தோர் பணிந்தேத்தும் அருளாஞ்சிவ சுப்ரமண்யா
பிரணவமான ஞான பிர்ம்மமே சுப்ரமண்யா
சரவண பவனேதிருச் சண்முகனே சுப்ரமண்யா
மூலப்பொரு ளானமோன முருகனே சுப்ரமண்யா
நீலமயில் வாகனனே நிற்குணனே சுப்ரமண்யா
கோலமால் மறுகாவுன்னை கோரினேன் சுப்ரமண்யா
காலன்வந் தணுகாமுன்னே காவாய்சிவ சுப்ரமண்யா
தாரக பிரம்மமான தனிமுதலே சுப்ரமண்யா
நார தாதிதேவர் துதி நாயகனே சுப்ரமண்யா

## முடுகு பாடல்.

அரியகயி லாயந்தனில் அமரர் முதல் சுப்ரமண்யா
பரிவுடனே யொருங்குகூடிப் பயமடைந்து சுப்ரமண்யா
அஞ்சலஞ்ச லென்றுசொல்லி யரனடிக்குச் சுப்ரமண்யா
தஞ்சமென்று தாமடையத் தற்பரனுஞ் சுப்ரமண்யா
பயங்கொள்ள வேண்டா மென்று பரமனவர் சுப்ரமண்யா
நயமுடனே வானவர்க்கு நன்மை சொல்லி சுப்ரமண்யா
ஐந்து முகங்களொடு மதோமுகமாய் சுப்ரமண்யா
விந்தையா தான்றோன்றி விழிகளிலே சுப்ரமண்யா
அழற்பொறிக ளாறுதிர வரகாலும் சுப்ரமண்யா
தழற்பொறிக ளண்டரண்டந் தான்றகிக்கச் சுப்ரமண்யா
அவுணர்கள் திகிலடைய வமரர் முதல் சுப்ரமண்யா
கவலையாய் மனது நொந்து கண்ணுதலைச் சுப்ரமண்யா
தொழுது வடிவணங்கி தோத்திரிக்கச் சுப்ரமண்யா
மழுபொறியைத் தானழைத்து மாகாதேவன் சுப்ரமண்யா
அனல்வாயுக் கடவுளிட மதை கொடுக்க சுப்ரமண்யா
மனநடுங்கி யிருவர்களால் மாளாமல் சுப்ரமண்யா
புனலில்விட சரவணத்திற் போயமரச் சுப்ரமண்யா
கனகன் முதல் தேவரெல்லாங் கவலைதீரச் சுப்ரமண்யா
இருமூன்று குழவியாகி யிருந்தசிவ சுப்ரமண்யா
கருணைபுரியு மோனக் கண்ணேசிவ சுப்ரமண்யா
அந்திவண்ணன் விழிப் பொறியா யவதரித்த சுப்ரமண்யா
விந்தையாச் சரவணையில் விளங்கி நின்ற சுப்ரமண்யா
வாநதி புத்திரனு வளர்ந்த சிவ சுப்ரமண்யா
பரிவாய்க் கார்த் திகைமாதர் பாலுண்ட சுப்ரமண்யா
ஆறுமுகமான வெங்கள் அப்பா சிவ சுப்ரமண்யா
மாறிலாப் பார்வதியாள் மகவான சுப்ரமண்யா
சங்கானர் திருக்காத்தில் சதிராடுஞ் சுப்ரமண்யா
மங்கையுமை பக்கவிலே மகிழ்ந்தாடுஞ் சுப்ரமண்யா
பிரணவப் பொருளுரையாப் பிரம்மனைச் சுப்ரமண்யா
கரங்களால் முடியிற் குட்டிக் கால்களிலே சுப்ரமண்யா
விலங்கிட்டுச் சிறையில் வைத்த வீரனே சுப்ரமண்யா
அலரவு மமரர் முராஅரி முதலோர் சுப்ரமண்யா
மங்கைபாக னடிதொழுது மர்மமெல்லாஞ் சுப்ரமண்யா
இங்கிதமா யெடுத்துரைக்க இறைவனர் சுப்ரமண்யா
நந்திதேவர் தமையழைத்து நவிலவுந்தான் சுப்ரமண்யா
வந்து நந்தி தேவரவர் வார்த்தை சொல்ல சுப்ரமண்யா
இணங்காமல் கோபமாக இருக்கவுந்தான் சுப்ரமண்யா
வணக்க மில்லா வார்த்தைதனை வள்ளலிடஞ் சுப்ரமண்யா

அறைய நந்தி தேவர்வந்து ஆதிசிவன் சுப்ரமண்யா
குறை தெரிந்து உபதேசங் கொண்டவருஞ் சுப்ரமண்யா
மலரவன் சிறையைமீட்டு மாதேவன் சுப்ரமண்யா
தலந்தனிற் சிறந்த காஞ்சித் தலஞ்சென்று சுப்ரமண்யா
எம்மொழியை மறுத்ததொரு இட ரகலச் சுப்ரமண்யா
நம்மைநீ பூஜைசெய்ய நடவுமெனச் சுப்ரமண்யா
அம்மொழிக்குத் தான்மகிழ்ந்து அடிபணிந்து சுப்ரமண்யா
செம்மைமிகுந் தவக்கோலஞ் செய்துகொண்டு சுப்ரமண்யா
பன்னுமறை துதிகாஞ்சி பதியில்வந்து சுப்ரமண்யா
அன்பாய்மறை மாவடிக்கீழ் அமர்ந்திருந்த சுப்ரமண்யா
மன்னுங் குமர கோட்டத்தில் மருவிநிற்குஞ் சுப்ரமண்யா
பன்னகா பரணனைத்தான் பக்திசெய்யச் சுப்ரமண்யா
தவக்கோலங் கொண்டு நல்ல தற்பரனைச் சுப்ரமண்யா
சிவநமசி வாயமென்று சிந்தித்த சுப்ரமண்யா
சேனாபதி யீசன்றனைச் சேவைசெய்து சுப்ரமண்யா
வானாடர் தொழு தேத்தநல்ல வரம்பெற்ற சுப்ரமண்யா
தேவ சேனாபதியென்ற தெய்வமே சுப்ரமண்யா
மூவர்களுந் தாம்புகழு மூர்த்தியே சுப்ரமண்யா
குன்று தோருடிய குகனே சிவ சுப்ரமண்யா
துன்னுந் திருப்போரூரில் துலங்குஞ் சிவ சுப்ரமண்யா
விந்தைமிகு மயிலந்தன்னில் வீற்றிருக்குஞ் சுப்ரமண்யா
அந்தமிகும் பழனிமலை அமர்ந்திருக்குஞ் சுப்ரமண்யா
கோலமிகுந் திருவாவின் குடியமர்ந்த சுப்ரமண்யா
சீலமிகுங் கதிர்காமஞ் சிறந்த நல்ல சுப்ரமண்யா
வென்றவர் தொழு மிளையனூர் வேலூர்வாழ் சுப்ரமண்யா
பொன்மகள் வாழ் ஏரகத்தில் பொருந்திய சுப்ரமண்யா
குஞ்சரம்வாழ் திருப்பரங் குன்றமர்ந்த சுப்ரமண்யா
மஞ்சுதவழ் திருச்செந்தூர் மருவிருக்குஞ் சுப்ரமண்யா
மாதவர் சூழ் தீர்த்த மலைவாழுஞ் சுப்ரமண்யா
பூதலம் புகழ் வேலூர் பொருந்திய சுப்ரமண்யா
திருமுருகன் பூண்டிவாழும் தேவே சிவ சுப்ரமண்யா
அருள் புரியும் விராலிமலை யையா சிவ சுப்ரமண்யா
ஆரணம் புகழுடுக்கை யமர்ந்தசிவ சுப்ரமண்யா
ஏர்பாவும் வடமலையி லிருக்குஞ் சிவ சுப்ரமண்யா
வாரககிரி சாரலிலே வசித்திருக்குஞ் சுப்ரமண்யா
பரிவாய் சுவாமிமலை மீதில் பதிந்திருக்குஞ் சுப்ரமண்யா
அண்டர் துதி சோலைமலை யப்பா சிவ சுப்ரமண்யா
தொண்டர் துதி வள்ளிமலைத் துரையே சிவ சுப்ரமண்யா
வெற்றிதரு நாககிரி வேலா சிவ சுப்ரமண்யா

முத்திதருந் திருத்தணிகை முருகா சிவ சுப்ரமண்யா
வந்தனமாய்த் தேவரெல்லாம் வணங்குஞ் சிவ சுப்ரமண்யா
அந்தரத்தோ ரிடர் தீர்க்க வவதரித்த சுப்ரமண்யா
தாருகனை வதைசெய்த தனிமுதலே சுப்ரமண்யா
சூரபன்மன் றனைச்செயித்த சுயம்புவே சுப்ரமண்யா
சிங்கமுகாசூரன் றன் சிரமறுத்த சுப்ரமண்யா
அங்கவுணன் படைகளெல்லா மழித்த சிவ சுப்ரமண்யா
சத்தி வேலால் சூரர்களைச் சம்மரித்த சுப்ரமண்யா
எத்திசையும் வெற்றி பெற்ற எந்தையே சுப்ரமண்யா
அண்டர் சிறை தவிர்த்து ஆதரித்த சுப்ரமண்யா
தொண்டரொடு மாதவர்கள் தொழுதேத்துஞ் சுப்ரமண்யா
கோழிக் கொடியுடைய குருவே சிவ சுப்ரமண்யா
வாழுமயில் வாகனனே வடிவேலா சுப்ரமண்யா
மங்கை தெய்வானை தன்னை மணம்புரிந்த சுப்ரமண்யா
கங்குல்பக லறநின்ற கந்தாசிவ சுப்ரமண்யா
மானின்ற வள்ளியின்மேல் மையல்கொண்ட சுப்ரமண்யா
வானுடர் தொழுதேத்தும் வடிவேசிவ சுப்ரமண்யா
கானவனுய்த் தினைப்புனத்தில் காதல்கொண்ட சுப்ரமண்யா
அற்புத மாகவேட்டை யாடுஞ் சிவ சுப்ரமண்யா
பற்பல லீலைசெய்த பரனே சிவ சுப்ரமண்யா
மாதுவள்ளி தன்முதல் வேங்கை மரமான சுப்ரமண்யா
கோதை வள்ளி முன்பு பால குமாரனான சுப்ரமண்யா
அரிவை யொடு சரசவார்த்தை யாடிய சுப்ரமண்யா
குருமாய் வேடர் வருங் குறியறிந்த சுப்ரமண்யா
அருந்தவக் கிழவனைப்போ லானசிவ சுப்ரமண்யா
கருணையாய் வேடரொடு கலந்துவந்த சுப்ரமண்யா
குரவால் வள்ளியிடங் குலவிய சுப்ரமண்யா
மருமமாய் தேனுந்தினை மாவுண்ட சுப்ரமண்யா
தேவிவள்ளி யோடுசுனை தேடிச் சென்ற சுப்ரமண்யா
ஆவலாய்க் கணபதியை யழைத்த சிவ சுப்ரமண்யா
கரிவரப் பயமுறுத்திக் கலந்த சிவ சுப்ரமண்யா
அரிவை முன்னே தற்சொரூப மாகிய சுப்ரமண்யா
கன்னி வள்ளி நாயகிக்குக் காட்சி தந்த சுப்ரமண்யா
அன்னம்பேடு போல் மருவி யகமகிழ்ந்த சுப்ரமண்யா
கன்னிதோழி மார்கள் குறி காணச் சேர்ந்த சுப்ரமண்யா
அன்பாக வேடர்மனை யறிந்து சென்ற சுப்ரமண்யா
வள்ளியரைச் சிறையெடுத்து வந்து சிவ சுப்ரமண்யா
துள்ளிவந்த வேடர்களைத் தோற்கச் செய்த சுப்ரமண்யா
மறவரை யெழுப்பித் தந்து மணம் புரிந்த சுப்ரமண்யா

சிறையெடுத்து மணம் புரிந்த சிவக் கொழுந்தே சுப்ரமண்யா
குருமுனிக் கருள் புரிந்த கோனே சிவ சுப்ரமண்யா
அரிதிரு மருகனுன ஆதியே சுப்ரமண்யா
குன் றுருவ வேல்விட்ட குருவே சிவ சுப்ரமண்யா
புள்ளிமயிலேறி யேதான் பொருந்துமையா சுப்ரமண்யா
வள்ளி தெய்வானை யோடும் வந்தமரும் சுப்ரமண்யா
கற்பூர தூபதீபங் காணுமையா சுப்ரமண்யா
அற்புதமா மலர் தூவி யடிபணிந்தேன் சுப்ரமண்யா
விந்தையாயிக் கொலுவில் வீற்றிருப்பீர் சுப்ரமண்யா
சந்ததமும் நற்காட்சி தானளிப்பீர் சுப்ரமண்யா
பாலன்கோட் டையனிட பாடலுக்குச் சுப்ரமண்யா
சீலமாய் வந்து நல்ல சீரருள்வீர் சுப்ரமண்யா
புலித்தோலா மாசனத்தில் பொருந்துமையா சுப்ரமண்யா
மலிவான மான்றோலில் மருவிநிற்பீர் சுப்ரமண்யா
யாரைநினைப் பனையா யலங்கார சுப்ரமண்யா
கோருகின்ற வென்னுவில் கொலுவிருப்பீர் சுப்ரமண்யா

சுப்ரமண்யர் வர்ணிப்பு முற்றிற்று.



## பரமேஸ்வரர் துதி.

எழுசீர் ஆசிரிய விருத்தம்.

திருந்திழை தாங்கு கொங்கையந் தழும்புந்
திகழ்மணிக் கைவளைச் சுவடுந்
தருந்திரு மலராள் வாழ்த்துமா ருயிரின்
றலைவிமென் றகாசீன் கூந்தன்
முருந்திள நகையாள் கூறனே மாவின்
முறிநிகர் மேனியர் பாடப்
பொருந்திய வொருகோட் டைய னற்பவளப்
பொருப்பு நின்றுதவி செய்திடுமே.

### வெண்பா.

வேதவுருவாய் விளங்குமொரு மாவின் கீழ்ப்
போதவுருவாம் புனிதன்பொற்— பாதந்
துதிப்பார்க் குண்டாமே சுகானந்த போகம்
மதிப்பார்க் குண்டாமே நல் வாழ்வு.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

மலரய னரியுந் தேடி மலரடி முடியைக் காணு
நிலவிய வழன் மலையாய் நின்ற மெய்ஞ்ஞான சோதி
கலவைசாந் தணியே கம்பா கண்ணுத லான மூர்த்தி
குலவுநின் பாதந் தன்னைக் குறித்திடர் முறித்து வாழ்வாம்.

### இதுவுமது.

திருசடை முடியிற் கங்கை திங்களுங் கொன்றை சூடு
மொருதனி முதல்வனாகி யுலகெலாம் விளங்கு மூர்த்தி
இருவினை யகற்றுங் காஞ்சி எழிற்கம்பை மாவின் கீழே
திருவருள் புரியே கம்பன் றிருவடி வணங்கி வாழ்வாம்.

### துதிகவி.

திங்களை தரித்தாய் போற்றி திரிபுர மெரித்தாய் போற்றி
கங்கையை யணிந்தாய் போற்றி காமனைக் காய்ந்தா போற்றி
மங்கையோர் பாகம் வைத்த மான்மழுக் கரத்தாய் போற்றி
எங்கணும் புகழுங் காஞ்சி யேகம்பா போற்றி போற்றி.

### அடதாளம்.

அரகரஓம் அரகரஓம் அரகரஓம் சம்போ
அரகரஓம் அரகரஓம் பராபரஓம் சம்போ
ஓம்நமசி ஓம்நமசி ஓம்நமசி வாயா
ஓம்நமசி ஓம்நமசி ரீம்நமசி வாயா
ஞானபர ஞானபர ஞானபர ப்ரம்மம்
ஞானபர ஞானபர மோனபர ப்ரம்மம்
ராஜநட ராஜநட ராஜநட ராஜா
ராஜநட ராஜநட ராஜதியாக ராஜா.

## பாடல்.

பூரணமாய் விளங்கும் புகழுஞ் சிவ பசுபதியே
ஆரணமுடி வில் விளை யாடுஞ்சிவ பசுபதியே
சுத்த சிவமான சுயம்பே சிவ பசுபதியே
சத்தி சிவமாகி சார்ந்த சிவ பசுபதியே
வித்தாகி விளைவாகி விளங்குஞ் சிவ பசுபதியே
முத்தியளிக்கு மோன முடிவே சிவ பசுபதியே
முச்சுடராய் விளங்கும் மூர்த்தி சிவ பசுபதியே
சச்சிதா நந்தசிவ சம்போ சிவ பசுபதியே
விண்ணாகி மண்ணாகி விளங்கு சிவ பசுபதியே
கண்ணாகி கருத்தாகி காணுஞ் சிவ பசுபதியே
தத்துவப் பொருளாகித் தழைத்த சிவ பசுபதியே
முத்தொழி லருளுமுழு முதலே சிவ பசுபதியே
கோலமிகு கைலைதன்னில் கொலுவிருக்கும் பசுபதியே
சூலபாணி யாய்விளங்குஞ் சுடரே சிவ பசுபதியே

## முடுகு பாடல்.

செகமெலாம் புகழுங் காஞ்சி க்ஷேத்திரத்தில் பசுபதியே
மகத்துவ மிகுந்த கம்பை மாவடிக்கீழ் பசுபதியே
அருட்சத்தி காமாக்ஷி யம்மையவள் பசுபதியே
திருவடிவாய் மணலிலிங்கந் திரட்டியம்மை பசுபதியே
பொருந்த வைத்துப் பூஜைசெபம் பொலிவு செய்து பசுபதியே
திருமறை மாவடிப்பால் திருந்திழை யாள் பசுபதியே
அருந் தவங்கள் தான்புரிய அரகராவோம் பசுபதியே
பெருந் தவங்கள் தான்புரியப் பெருமானீர் பசுபதியே
கன்னியின் மனவுறுதி காணவென்று பசுபதியே
அன்றுவர நதியாளை யனுப்பிவைத்த பசுபதியே
வீரியமாய் கெங்கையவள் விடுபட்டு பசுபதியே
பாரினி லெழுந்திருந்து பகிரதியாள் பசுபதியே
ஓவென் றிரைந்துகொண்டு ஓடிவரப் பசுபதியே
ஆவென்று கோக்ஷித்து அடர்ந்துவரப் பசுபதியே
கண்டு காமாக்ஷி மனக் கலக்கங் கொண்டு பசுபதியே
அண்டர் பிரானுக் கென்ன வாபத் தென்று பசுபதியே
கன்னிகாளி தேவியினால் கங்கை தன்னை பசுபதியே
அன்று தடைப்படுத்தி யெங்க ளம்மையவள் பசுபதியே
இருகத் தழுவியே தானீசா பசுபதியே
இருகாமு மார்பின்குறி யிலகுசிவ பசுபதியே
வளைத்தழும்பு முலைத்தழும் வடிவுகொண்ட பசுபதியே
களைக்காம லிங்கந்தன்னைக் காதலால் பசுபதியே

கட்டித் தழுவவுந்தன் கண்மணியாள் பசுபதியே
விட்டுவிடு வென்றுரைத்த விமலா பசுபதியே
ஆனந்த மாய் விளங்கு மானே பசுபதியே
ஞானவெளி யேகாம்பர நாதா பசுபதியே
காமாக்ஷி தேவியர்க்கு காக்ஷிதந்த பசுபதியே
மாமணம்பூண்டு கொண்ட மகேசா பசுபதியே
திருப்பாற் கடல் கடையத் தேவர் முதல் பசுபதியே
இருடிகளுந் தானவரு மிந்திரனும் பசுபதியே
மந்ரமெனு மாமலையை மத்தாக்கிப் பசுபதியே
தொந்தமாய் ட.நியையடைத் தூணாக்கிப் பசுபதியே
பாம்பைக் கயிறாக்கித்தலைப் பக்கம் பசுபதியே
வீம்பான தைத்தியர்கள் விரைந்திழுக்கப் பசுபதியே
வானவர் வால்புறமாய் வந்திழுக்கப் பசுபதியே
தானவரமர ரிவ்வாறு தான் கடையப் பசுபதியே
காளரவின் கண்பிதுங்கிக் கக்கவிஷம் பசுபதியே
கோளரவு விடத்தினிடக் கொடுமையாற் பசுபதியே
இந்ரனயன் மால்வானோ ரிருடிகளும் பசுபதியே
உந்தனடி பணியவிட முண்ட பசுபதியே
ஆலமுண் டமரரிட ரகற்றிய பசுபதியே
நீல கண்டனென விளங்கு நிமால பசுபதியே
பங்கயனுந் திருமாலும் பகைமிகுந்து பசுபதியே
சங்கையா யிருவர்களு சமர்புரிய பசுபதியே
அன்னவர்முன் னழன்மலையா யான பசுபதியே
இன்னவை யென்றறியா திருவர்களும் பசுபதியே
அம்மலையி னடிமுடியை யறிந்து வந்தோர் பசுபதியே
செம்மைமிகும் பெரியரெனச் செப்பிப் பசுபதியே
அன்னமுய் ஏனமுமா யரியயனும் பசுபதியே
சென்றுவெகு நாள்தேடிச் சிந்தைநொந்து பசுபதியே
அவனன்றி யோரணுவும் அசையாதெனப் பசுபதியே
சிவன்செய லென்று துதி செய்யப்பசுபதியே
இருவர்மனக் குறையறிந்து ஈசா பசுபதியே
அருள்புரிந் துலிங்கரூப மான பசுபதியே
வண்மைமிகு தாருகா வனரிஷிகள் பசுபதியே
எணணு மி[illegible]ருன்னை யெண்ணமற் பசுபதியே
[illegible] பசுபதியே
பாரில்மாத ரோடுதவம் பண்ணப் பசுபதியே
அச்சமில்லா முனிவர்தவம் அழியப் பசுபதியே
அச்சுதனை மோகினியா யனுப்பிச்சிவ பசுபதியே
முனிவர்மா தவங்களெல்லாம் மோகத்தால் பசுபதியே

அனியாய மாகப்பெண்ணின் அடிபணியப் பசுபதியே
பிக்ஷாடன வுருவாய் ரிஷி பெண்கள்பாற் பசுபதியே
அக்ஷணஞ் சென்றுகற்பை யழித்த சிவ பசுபதியே
மாதர்க ளிருடிகளும் மானங்கெடப் பசுபதியே
வேதனையால் விசார வேள்விசெய்து பசுபதியே
உந்தனைக் கொல்வதென்று உறுதியாப் பசுபதியே
சிந்தையில் நினைந்துமகஞ் செய்யப் பசுபதியே
புலிமழுமான் சற்பங்கள் பூதர்முதல் பசுபதியே
வலியா யுதித்தவைகள் வந்தெதிர்க்கப் பசுபதியே
உதும்பும் புலித்தோலை உரித்தணிந்த பசுபதியே
கதும்பும்உழை வாள்மழுவுங் கழுதுடியும் பசுபதியே
மாத்திரை கோலுங்கண்டா மணிவச்ராம் பசுபதியே
வேத்ரப்படை பாசமுதல் விந்தையாய்ப் பசுபதியே
காங்களிலழைத் தமைத்து களித்த பசுபதியே
அரவுகளைப் பூஷணமா யணிந்த பசுபதியே
பூதர்களைச் சேனையாகப் பொருந்தச் செய்த பசுபதியே
நாதமிடு முயலகன்மேல் நடித்த பசுபதியே
முற்றுந் துறந்தசுக்ர முனிவரெல்லாம் பசுபதியே
பற்றற்று நின்பாதம் பணிவித்த பசுபதியே
பன்னரிய திருமாலும் பங்கயனும் பசுபதியே
பொன்வரையிலிரு வருமோர் பொழுதிருக்கப் பசுபதியே
அன்னாளிற் சுரர்முனிவர் அனைவர்களும் பசுபதியே
ஒன்றாக வந்தவர்கள் உள்ளத்தில் பசுபதியே
சந்தேக நிவர்த்திபெறச் சதுர்முகனைப் பசுபதியே
சிந்தை மகிழ்ந்தவர்கள் சேவித்துப் பசுபதியே
மூவர்களிற் கேடில்லா முதல்வர் தமைப் பசுபதியே
யாவர்களுந் தாமறிய வருளுமென பசுபதியே
நானுகுமென் றயனும் நவிலமால் பசுபதியே
தானகு மென்றிருவர் தர்க்கித்துப் பசுபதியே
வேதத்தாற் சந்தேகம் விலகுமெனப் பசுபதியே
வேதத்தை யழைத்திருவர் விளம்புமெனப் பசுபதியே
தனித் தனியாய் நான்மறைகள் தான்வந்து பசுபதியே
தனிமுதல்வ னுன்னையென்று தானுரைக்க பசுபதியே
ஒப்பாமல் பிரணவத்தை யுடனழைக்க பசுபதியே
அப்போது பிரணவ வந்தான அங்குவந்து பசுபதியே
இருவருக்கு மேலாகி யெங்கெங்கும் பசுபதியே
ஒருபொருளாய் விளங்கும் உன்னையன்றி பசுபதியே
வேறில்லை யென்றுமேதான் வெகு விதமாய் பசுபதியே
கூறிய பிரணவத்தின் கொள்கையைப் பசுபதியே

மீறின விருவர்முன்னே மின்னொளிபோற் பசுபதியே
நீறணி மேனியுமாய் நிற்கநீர் பசுபதியே
திருமால்பயந்து உம்மைத் தெரிசிக்கப் பசுபதியே
அருந்தவ னான்முகனு மவமதிக்கப் பசுபதியே
கொக்கரித்தே யெத்திசையுங் குலுங்கப் பசுபதியே
உக்ரமிகு வைரவரை உதிக்கச்செய்ய பசுபதியே
வைரவனால் பிரமனைந்தா வதுசிரசைப் பசுபதியே
பகிரங்க மாக்கிள்ளிப் பலியேற்கப் பசுபதியே
உவணகே தனன்முதலோ ருதிரமெல்லாம் பசுபதியே
தவறாமற் பலியேற்கத் தான்செய்து பசுபதியே
அவரவர்கள் செருக்கடங்கி யபயமென்று பசுபதியே
சிவசிவா வென்றுதுதி செய்யப் பசுபதியே
வயிரவரை யழைத்துக்காவல் வகுத்த பசுபதியே
பயமிகுந்த தேவர்க்கருள் பாலித்த பசுபதியே
திரிபுரத் தவுணர் செய்யுந் தீங்குகளால் பசுபதியே
அரியய னிந்திரனு மமரர்களும் பசுபதியே
சகிக்கமுடி யாமலுன்றன் சரணடைந்து பசுபதியே
அகிலத்தை ரதமாக வமைத்தவர்கள் பசுபதியே
மந்ரமலை யச்சாக மதியிரவி பசுபதியே
சுந்தரமிகு சக்கரமாய்ச் சுழலப் பசுபதியே
திரைகடல் சீலையாகத் திகழ்தேவர் பசுபதியே
விரைவாகவொவ்வொரு வித மமையப் பசுபதியே
வேதங்கள் மாபரியாய் விளங்கப் பசுபதியே
வேதன் சாரதியாய்த் தேர் விடுக்கப் பசுபதியே
வடவரையை வில்லாக வளைத்துச் சிவ பசுபதியே
கடல் வண்ணனை யம்பாகக் கைக்கொண்டு பசுபதியே
தேர்மீது நீரமரத் தேவரெல்லாம் பசுபதியே
பார்த்து மேயவர்களன்றிப் பகைவரைப் பசுபதியே
எவ்விதஞ் செயிப்பீரென் றிறுமாப்பாய்ப் பசுபதியே
இவ்விதந் தானினைந்த விமையோர்முன் பசுபதியே
புன்னகை கொண்டுதிரி புரமெரித்த பசுபதியே
அன்று மால்விடைமீது அமர்ந்த பசுபதியே
தானவர் மூவர்க்கருள் தான்புரிந்த பசுபதியே
வானவரெலாம் பணிய வருள்சுரந்த பசுபதியே
பாலன் மார்க்கண்டனுக்காய்ப் பரனே பசுபதியே
காலன்றனை யுதைத்துக் காத்த பசுபதியே
அன்பனுக்குச் சிரஞ்சீவி யளித்துப் பசுபதியே
என்றும் பதினாறு யிருக்கப் பசுபதியே
கல்லாலின் கீழமர்ந்த கடவுளே பசுபதியே
வல்லவராம் நால்வர்க்கருள் வகுத்த பசுபதியே

அங்கஜனை யெரித்து ரதிக்கருள்புரிந்த பசுபதியே
மங்கைமலை மகளை மணம்புரிந்த பசுபதியே
தந்திமுகத் தைங்கரனைத் தந்த பசுபதியே
அந்த காசுரனை யழித்த பசுபதியே
ஐயன் வீரபத்திரனை யளித்த பசுபதியே
பையரவணிந் திருக்கும் பரனே பசு[illegible]தியே
இளம்பிறை[illegible]டையணிந்த வீசா பசுதியே
உ[illegible]மகிழ்ந்து செவ்வேளை உதவிய பசுபதியே
அரிகர தேவன்றன்னை யளித்த பசுபதியே
விரிவனங் காத்தவனை விளங்கச்செய்த பசுபதியே
ஆங்கார வயிரவனை யளித்திட்ட பசுபதியே
ஓங்காரமாய் விளங்கும் ஓம்நமோ பசுபதியே
மச்சத்தின் கண்ணணிந்த மாதேவா பசுபதியே
உச்சிதமாங் கூர்மத்தின் ஓடணிந்த பசுபதியே
கோரமிகு வராகத்தின் கோடணிந்த பசுபதியே
ஆரணிந்த செஞ்சடையா யையா பசுபதியே
துய்ய நரசிங்கத்தின் றோலணிந்த பசுபதியே
வையம்புகழ் வடுகராய் வந்தசிவ பசுபதியே
உக்ரமாயத் திதனை யுதைத்துரித்த பசுபதியே
முக்கணனே தக்ஷணா மூர்த்தியாய்ப் பசுபதியே
அலாயுதன் பூஜைக்கு வருள்சுரந்த பசுபதியே
சிலாதான் மதலைக்கருள் செய்த பசுபதியே
வாமனன்றோ லாடையாய் வகுத்த பசுபதியே
ராமனுக்கருள் செய்து ரக்ஷித்த பசுபதியே
அங்கமெல்லாந் தூவிதங்க ளணிந்த பசுபதியே
கங்காள நாதராய்க் காணும் பசுபதியே
வலம்புரிந்து சுரர்முனிவர் வணங்கப் பசுபதியே
சலந்தரனை நேமியால் சங்கரித்த பசுபதியே
பைந்துளப மணிமார்பன் பக்தியாய்ப் பசுபதியே
செந்தாமரையா லுன் சேவடியில் பசுபதியே
அர்ச்சிக்க மாமலரோ ராயிரத்தாற் பசுபதியே
கர்த்தனேநீ ரவருறுதி காணவென்று பசுபதியே
மலரொன்றை மறைத்துவிட மாயனவர் பசுபதியே
பலதினமும் அர்ச்சிக்கும் பாவனைபோல் பசுபதியே
செய்யவோர் மலர்காணாச் செய்கையாற் பசுபதியே
ஐயன்றன் கண்மலரா லர்ச்சிக்கப் பசுபதியே
ஆமோகமாகியேதா னருள் சுரந்த பசுபதியே
தாமோதரற்கு நேமி தந்த பசுபதியே
அருங்கமலக் கண்ணனென வபிதானம் பசுபதியே
திருமாற்பேறென்றவ்வூர் திகழச்செய் பசுபதியே

தக்கனவன் செய்மகத்தைத் தவிர்த்துப் பசுபதியே
தக்கன்றலைக்குத் தகர் தலையமைத்த பசுபதியே
தசக்கிரீவனுக்கு லிங்கம் தந்த பசுபதியே
வசுதேவன் சேயருக்கு வரமளித்த பசுபதியே
தனஞ்செயற்கு பாசுபதங் தந்த பசுபதியே
மனம்வாக்குக் கெட்டாத மகேசா பசுபதியே
முற்றுந் துறந்தசுந்ர மூர்த்திக்குப் பசுபதியே
நற்றூது சென்றுநீ நடித்த பசுபதியே
பற்றற்ற ஞானசம் பந்தர்க்குப் பசுபதியே
உற்றதாய் முலைப்பாலை யூட்டுவித்த பசுபதியே
சற்குண ராமப்பர்தமைச் சமணர்குழாம் பசுபதியே
கற்றூணிற் பூட்டிநடுக் கடலில்விட பசுபதியே
கற்றூணுந் தெப்பமாக் கண்டன்பர் பசுபதியே
பற்றிக் கரையேறவருள் பாலித்த பசுபதியே
வழியறிந்த மாணிக்க வாசகரின் பசுபதியே
மொழிப்படியே யாவணி மூலத்தில் பசுபதியே
அரிமர்த்ன பாண்டியன்முன் னையா பசுபதியே
நரியைப் பரியாக்கி நடத்திவைத்த பசுபதியே
கல்லானை யிக்கருந்தக் கருணைசெய்த பசுபதியெ
வல்லாளன் றன்மகவாய் வந்துதித்த பசுபதியே
சிற்சபையி லாடும்பர சிவனே பசுபதியே
பொற்சபையி லாடுமொரு பொருளே பசுபதியே
கான்மாறித் திருநடனங் காட்டிய பசுபதியே
ஆன்மாக்க ளுய்யவிளை யாடும் பசுபதியே
கேளியாய்த் தேவரெல்லாங் கிரீசாவெனப் பசுபதியே
காளியுட னுடுமழுக் கையா பசுபதியே
அறுபத்து நான்குவிளை யாடல்செய்த பசுபதியே
அறுபத்து மூவர்க் கருளளித்த பசுபதியே
ஓரெழுத்தே மூவெழுத்தா யோரைந்தாய்ப் பசுபதியே
ஈரெழுத்தாய் நான்கெழுத்தா யிருநான்காய்ப் பசுபதியே
ஆறெழுத்தா யைம்பத்தோ ரக்ஷரமாய்ப் பசுபதியே
பேறெழுத்தாய் சீரெழுத்தாய்ப் பிறங்கும் பசுபதியே
இடகலையாய்ப் பிங்கலையா யிருந்துசிவ பசுபதியே
கடைசுழு முனையினீர் கலந்தாடும் பசுபதியே
சுடரொளியாய்ச் சுழிமுனைமேல் சொலித்திருக்கும் பசுபதியே
சுடலைதன்னில் மெஞ்ஞான சூரியனாய்ப் பசுபதியே
ஆடு மகிமைதனை யறிந்து பசுபதியே
கூடும்படிக்கு வரம் கொடுப்பாய் பசுபதியெ
அகமகிழ்ந்து பாற்கடலை யழைத்தளித்த பசுபதியே

கற்பூர தூபதீபங் காணுமையா பசுபதியே
அற்புதமா மலர்தூவி யடிபணிந்தேன் பசுபதியே
பாலன் கோட்டையனிட பாடலுக்குப் பசுபதியே
சீலமாய் வந்துநல்ல சீருள்வீர் பசுபதியே
புலித்தோலா மாசனத்தில் பொருந்துமையா பசுபதியே
மலிவான மான்றோலில் மருவிருப்பீர் பசுபதியே
ஆரை நினைப்பேனையா அலங்கார பசுபதியே
கோருகின்ற வென்னுவில் கொலுவிருப்பீர் பசுபதியே.

பரமேஸ்வரர் வர்ணிப்பு முற்றிற்று.

---

உ

ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் துணை.



## ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் பாடல்.

### எழுசீர் ஆசிரிய விருத்தம்.

திருமணித்தெய்வ மலர்மகள்வளரத் தேன்பொழி பச்சிளந்துளபக்
குருமணிமாலை மார்பினிலமைத்துக் குலவுற வணக்கு நர்க்கருளின்
வருமணிமுகிலின் வண்ணனைக்கச்சி வரதனைவழுத்துவான் வளங்கூர்
தருமணிவிளக்க வலம்புரிமதமா தங்கமென் னெஞ்சகத் துறுமே.

### வெண்பா.

திருத்துள பத்தார்மார்பன் செங்கமலக் கண்ணன்
[illegible] பெம்மான்—திருத்தகுத்தாள்
வேண்டிப் பணிபுரிவான் வேண்டுநெஞ்சே வேலையைமுன்
தாண் டாஞ்சநேயன்றனை.

### இதுவும் ஷை விருத்தம்.

சத்திய விரதக்ஷேத்திரமென்று சாற்றிய காஞ்சிமா நகரிற்
பத்தர்க ளுறையு மத்திபொன் மலையிற்பதுமன்செய் வேள்வியிற் றோன்றிச்
சித்திர மகுடரத்தின வாரஞ் சிருஷ்டிதண்டத் துடனுற்ற
கர்த்தனும் வரதன்கழலடிநாளுங் கருதியஞ்சலி செய்துவாழ்வாம்.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

அருள்வளர்சங்க மாழி யம்படை முதாலாய்வாச
மருமலர்த்துளப மாலை மார்பினிலசையச் செங்கண்
கருமுகில்வண்ண னாகிக் கமலையோடெழுந்திங் காளும்
திருமலை வெங்க டேசன் றிருவடி கமலம் போற்றி

### துதி கவி.

ஆகமப் பொருளே போற்றி அகிலமுண் டவனே போற்றி
வைகநா யகனே போற்றி இரண்ய சம்மாரா போற்றி
பாகனுய் ரதம் விடுத்தே பாரதம் முடித்தாய் போற்றி
நாகமேற் றுயிலும் ஸ்ரீமந் நாரணா போற்றி போற்றி.

### அடதாளம்.

அரிகரிஓம் அரிகரிஓம் அரிகரிஓம் அரியே
அரிகரிஓம் அரிகரிஓம் முரகரிஓம் அரியே
நாராயண நாராயண நாராயண நமஓம்
நாராயண நாராயண வாராயண நமஓம்
கரிவரத கரிவரத கரிவரத ராஜ
கரிவரத கரிவரத அரிவரத ராஜ
ராமராஜ ராமராஜ ராமராஜராம்
ராமராஜ ராமராஜ ராமகிருஷ்ண ராம்.

### பாடல்.

மாமகள் கேள்வனான மாதவனே வெங்கடேசா
பூமகள் கொழுநனான புண்ணியனே வெங்கடேசா
சந்ததமும் பாற்கடலிற் சயனிக்கும் வெங்கடேசா
உந்தியி னான்முகனை யுதவிய வெங்கடேசா
எங்கும் பிரகாசமாக விருக்கும் வடவெங்கடேசா
மங்கை திருமகளை மார்பணிந்த வெங்கடேசா
தாரகப் பொருளானவனே தாமோதரா வெங்கடேசா
காரணகுரு வாகவந்த கண்ணனே வெங்கடேசா
அபசாரிட றகற்றி யாதரித்த வெங்கடேசா
நமன்வந் தணுகாமுன்னே நாயேனை வெங்கடேசா
அஞ்சாதே யென்றுரைத்து ஆதரிப்பாய் வெங்கடேசா
பஞ்சாயுதனே ஞான பாஸ்கரனே வெங்கடேசா

### முடுகு பாடல்.

மகிமை மிகுந்த காஞ்சி மாநகரில் வெங்கடேசா
அகிலம்புக ழத்திகிரி யம்மலைவாழ் வெங்கடேசா
அருளாளா வுன்னைவேண்டி யந்தணனும் வெங்கடேசா
சிருஷ்டி தண்ட மில்லையென்று சிந்தை நொந்து வெங்கடேசா
கலைமகள் பிரிந்திருக்குங் காரணத்தால் வெங்கடேசா
நிலைகலங்கி நான்முகனும் நினைந்துன்னை வெங்கடேசா
பிரமதண்டம் பெறவேண்டிப் பிரியமுடன் வெங்கடேசா
வரந்தரும் அத்திகிரி வந்தயனும் வெங்கடேசா
அலங்கார வேள்வியொன்றை வாவலுடன் வெங்கடேசா
நலமுடனே செய்யவென்று நான்முகனும் வெங்கடேசா
அஷ்டாட்சர மந்திரத்தை அன்புடனே வெங்கடேசா
இஷ்டமுடன் ருன்செபித்து எந்தாய்வட வெங்கடேசா
நாரணா வுனைக்கோரிமகம் நடத்த வடவெங்கடேசா
காரணந் தனையுணர்ந்த கலைமகளும் வெங்கடேசா
அவ்வேள்வி நடவாம லழியும்படி வெங்கடேசா
கொவ்வைக்கனி யிதழாள் கோபங்கொண்டு வெங்கடேசா
பற்பல வடிவங்கொண்டு பங்கஞ்செய்ய வெங்கடேசா
அற்புதந் தனையறிந்து ஆதரித்த வெங்கடேசா
கண்டந்தகலை மகளும் கண்சிவந்து வெங்கடேசா
அண்டவொண்ணா வேகவதி யாறாகி வெங்கடேசா
வருவதறிந்து பிர்மன் வரதா வடவெங்கடேசா
அருமையாயுனைத் தொழவும் அருளாளா வெங்கடேசா
வருநதி தனைத்தடுக்க வரதா வடவெங்கடேசா
பெருமையாயெதோத்காரி பெருமாளென வெங்கடேசா
பள்ளிகொண்ட பாவனையைப் பரந்தாமா வெங்கடேசா
கள்ளத்தன மென்றுணர்ந்து கலைமகளும் வெங்கடேசா
பூமியின் மார்க்கமாகப் போய்மறைய வெங்கடேசா
நேமிகரத் தோனே திரு நெடுமாலே வெங்கடேசா
வேதனயன் செய்யுமந்த வேள்விதனில் வெங்கடேசா
நாதனே வந்துதோன்றி நான்முகற்கு வெங்கடேசா
திருவோண மென்றநக்ஷத் திரத்தில் வடவெங்கடேசா
திருவுருவா யொருகோடி தினகரன்போல் வெங்கடேசா
வானவர் தொழவிளங்கி வரந்தந்த வெங்கடேசா
ஞானதண்ட மளித்துக்காத்த நாரணனே வெங்கடேசா
தேவராஜ னெனவிளங்குந் தெய்வமே வெங்கடேசா
யாவர்களுந் தொழுதேத்தும் அருளாளா வெங்கடேசா
மச்சாவதாரஞ் செய்த மாயவனே வெங்கடேசா
அச்சமில்லாச் சோமுகனை யழித்த வடவெங்கடேசா
கந்தமலர்ப் பிர்ம்மனுக்குக் கலைகள் தந்த வெங்கடேசா

அந்தமிகுங் கூர்மமாக அவதரித்த வெங்கடேசா
தாழாமல் வரையை யாழி தன்னிற்றாங்கும் வெங்கடேசா
வாழ்கன்னி யாயமிர்தம் வழங்கிய வெங்கடேசா
கோலவராக ரூபங் கொண்ட வடவெங்கடேசா
காலனிரணி யாக்கதனைக் கண்டித்த வெங்கடேசா
பூமியைமுன் போலளித்த புண்ணியனே வெங்கடேசா
காமருல கதிரத்தூணில் கற்சித்த வெங்கடேசா
கோளரி சிங்கமாகக் கோலங்கொண்ட வெங்கடேசா
மாளப்பொல்லா யிரணியனை மார்பிளந்த வெங்கடேசா
மாலையாய் மணிக்குடலை மார்பணிந்த வெங்கடேசா
சீலன்பிறக லாதனுக்குச் சீர்செய்த வெங்கடேசா
வாமன ரூபமாக வந்த வடவெங்கடேசா
மாபலியை மூன்றடி மண்கேட்ட வெங்கடேசா
ஓரடியா யுலகளந்த ஓங்கார வெங்கடேசா
சீரான மாபலியைச் சிறைபுரிந்த வெங்கடேசா
பார்புகழுஞ் சமதக்கினி பாலனான வெங்கடேசா
பேர்பரசு ராமனென்று பேசுகின்ற வெங்கடேசா
ஏர்பரவுந் தாயைவெட்டி யெழுப்பிய வெங்கடேசா
கார்த்தவீரியன் றன்னுயிரை கவர்ந்திட்ட வெங்கடேசா
மன்னராந் தசரதர்க்கு மைந்தனான வெங்கடேசா
துன்னுவிஸ்வா மித்ரரோடு தொடர்ந்து சென்ற வெங்கடேசா
கஸ்திசெய்யுந் தாடகையை கண்டுகொன்ற வெங்கடேசா
விஸ்வாமித்ரன் வேள்விகாத்து வீரந்தந்த வெங்கடேசா
வல்லமையாய் மிதிலைவழி வந்த வடவெங்கடேசா
கல்லைப் பெண்ணாக்கிய கருணையுள்ள வெங்கடேசா
சனகமகா ராஜன்றிருச் சமுகஞ்சென்ற வெங்கடேசா
தனுவளைத்து மணம்புரிந்த தனிமுதலே வெங்கடேசா
சீதாலட்சுமியோ டயோத்தி சேர்ந்த வடவெங்கடேசா
ஓதுகை கையாலேமா வுரிதரித்த வெங்கடேசா
தேவிதம்பி யோடுவனந் தேடிச்சென்ற வெங்கடேசா
ஆவலாய்க் குகனோடு அன்புகொண்ட வெங்கடேசா
சுந்தரமிகு சித்ரகூடஞ் சூழவமர் வெங்கடேசா
தந்தையிறந்த சேதி தானறிந்த வெங்கடேசா
காரணமாய்த் தந்தையின்றீக் கடன்முடித்த வெங்கடேசா
கோரிவந்த பரதன்மனக் குறைமுடித்த வெங்கடேசா
அன்றுபாது கையைத்தந்து அனுப்பிய வெங்கடேசா
நன்மை வனந்தேடி நாடிச்சென்ற வெங்கடேசா
பொல்லா விராதனுயிர் போக்கிய வெங்கடேசா
வல்லவனாய்த் தண்டகா வனஞ்சென்ற வெங்கடேசா
அருந்தவரிஷி யோர்க்கு அருள்புரிந்த வெங்கடேசா

திருநிறைந்த பஞ்சவடி தீர்த்தஞ்சென்ற வெங்கடேசா
அங்கு பர்னகசாலைதனில் அமர்ந்த வடவெங்கடேசா
மங்கை சூர்ப்பனகையைபின்ன மாகச்செய்த வெங்கடேசா
தானவகர தூஷணர்கள் தலையறுத்த வெங்கடேசா
மானான மாரீசனை மார்பிளந்த வெங்கடேசா
கருணைமிகுஞ் சடாயுவுக்குக் காட்சிதந்த வெங்கடேசா
கெர்வித்த கபந்தன்பெருங் கரமறுத்த வெங்கடேசா
சவுரிக்கு முத்திதந்த சக்ராயுதா வெங்கடேசா
கவிகுலத் தோடுஅன்பாய்க் கலந்தவட வெங்கடேசா
மராமரந்துளைத்து வாலி மடியச்செய்த வெங்கடேசா
விரிகடலணையாய்க் கட்டி விரைந்துசென்ற வெங்கடேசா
அஞ்சலென்ற விபீஷணற்கு அருள்புரிந்த வெங்கடேசா
வஞ்சராவணாதிகளை வதைசெய்த வெங்கடேசா
வலம்புரிந்து சுரர்முனிவர் வணங்கும் வடவெங்கடேசா
தலம்புகழும் வசுதேவர் தனையரான வெங்கடேசா
பலபத்ர ராமரான பவழவண்ணா வெங்கடேசா
கலப்பையாயுதமுடைய கடவுளே வெங்கடேசா
மஞ்சுகுழல் தேவகியாள் மைந்தனான வெங்கடேசா
வஞ்சியசோதை யிடம் வளர்ந்தவட வெங்கடேசா
பூதனைபா லுண்டுயிர் போக்கிய வெங்கடேசா
சூதன்சகடா சூரன்சிரஞ் சூறையிட்ட வெங்கடேசா
உரலினால் மருதமரம் ஒடியச்செய்த வெங்கடேசா
தருணமணிக் கிரீவர்சாபந் தவிர்த்தவட வெங்கடேசா
பால்தயிர் வெண்ணையுண்டு பாவிய வெங்கடேசா
கோலமிகுங் கோக்கள் மேய்த்துக் கொஞ்சும்வட வெங்கடேசா
ஆலமான காளிங்கன்மேல் ஆடிய வெங்கடேசா
ஓலமிடத் தேனுகனை யுதைத்துக்கொன்ற வெங்கடேசா
கன்னிகோபி மார்களோடு கலந்துகொஞ்சும் வெங்கடேசா
துன்னுங் கோவர்த்னகிரி தூக்கிய வெங்கடேசா
பரிவாயாயர் கோவுகளைப் பாதுகாத்த வெங்கடேசா
பிரலம்பா சூரன்மார்பைப் பிளந்த வடவெங்கடேசா
அன்பாய்வேணு நாதஞ்செய்து ஆடும்வட வெங்கடேசா
கன்றுகொண்டு விளவெறிந்த கண்ணனே வெங்கடேசா
அகாசூரன் றன்னுயிரை யழித்தவட வெங்கடேசா
பகாசூரன் றன்னுயிரை பறித்தவட வெங்கடேசா
மடியவசுரர் கேசியை மார்பிளந்த வெங்கடேசா
கொடியவீரங் கொல்லியைக் கொன்றவட வெங்கடேசா
வல்லமத யானைதன்னை வதைசெய்த வெங்கடேசா
மல்லர்முஷ்டி சாணூரை மடித்தவட வெங்கடேசா
பலமிகுந்த கம்சனுயிர் பதறக்கொன்ற வெங்கடேசா

சலதியில் பஞ்சாசூரனைச் சங்கரித்த வெங்கடேசா
துண்ட நரகாசூரனுயிர் துடிக்கக்கொன்ற வெங்கடேசா
கண்டகனும் பாணாசூரன் கரமறுத்த வெங்கடேசா
தந்திவக்ர சிசுபாலன் றம்மைக்கொன்ற வெங்கடேசா
மந்தராமது கைடவரை மாளச்செய்த வெங்கடேசா
வஞ்சிதுரோபதைக்குத் துகில் வளரச்செய்த வெங்கடேசா
பஞ்சவர்க்குத் தூதுசென்ற பரனேவட வெங்கடேசா
துரியனிட்ட நிலவறையைத் தும்சஞ்செய்த வெங்டேசா
அரியவிஸ்வ ரூபங்கொண்ட ஆண்டவனே வெங்கடேசா
பற்றருத்திகிரியினால் பரிதிதன்னை வெங்கடேசா
சற்றுந்தெரி யாமல்செய்த சாமிவட வெங்கடேசா
பார்த்தனுக்கு ரதம்விடுத்த பச்சைநிற வெங்கடேசா
கீர்த்தியாய் விளங்குஞ்ஸ்ரீ கிருஷ்ணனே வெங்கடேசா
துரியனென்ற பேர்மாளத் துலங்கிய வெங்கடேசா
கரியாதி மூலமென்னக் காத்தவட வெங்கடேசா
கற்கியவதாரங் கொண்ட காரணனே வெங்கடேசா
அற்புதவை குண்டமதில் அமர்ந்தவட வெங்கடேசா
பேராயிரங் கொண்ட பெருமாளே வெங்கடேசா
சீராய்ஸ்ரீ ரங்கத்தில் சிறந்தமர்ந்த வெங்கடேசா
என்கு நிரஞ்சனமாய் இருப்பவட வெங்கடேசா
சங்குசக்ர கோதண்ட சதுர்ப்புஜனே வெங்கடேசா
நீலமேக சாமளனே நீரகத்தாய் வெங்கடேசா
கோலமிகுந் திருப்பதியில் கொலுவமர்ந்த வெங்கடேசா
துன்னுங் கருடனேறும் துரையேவட வெங்கடேசா
பன்னக மாலிலையின்மேல் பள்ளிகொண்ட வெங்கடேசா
பன்னிரு வாழ்வார்கள் பணிந்தேத்தும் வெங்கடேசா
எந்நாளுமனு மந்தன்றொழு தேத்தும்வட வெங்கடேசா
அஷ்டலட்சுமி மார்களோடு மமரும்வட வெங்கடேசா
இஷ்டமாயிக் கொலுவில் எழுந்தருளும் வெங்கடேசா
கற்பூரந் தூபதீபங் காணுமையா வெங்கடேசா
அற்புதமா மலர்தூவி யடிபணிந்தேன் வெங்கடேசா
பாலன் கோடடையனிட பாடலுக்கு வெங்கடேசா
சீலமாய் வந்துநல்ல சீரருள்வீர் வெங்கடேசா
புலித்தோலா மாசனத்தில் பொருந்துமையா வெங்கடேசா
மலிவான மான்றோலில் மருவுமையா வெங்கடேசா
ஆசை நினைப்பேனையா அலங்கார வெங்கடேசா
கோருகின்ற வென்னாவில் கொலுவாரும் வெங்கடேசா.

பெருமாள் வர்ணிப்பு முற்றிற்று.

உ

ஸ்ரீ காமாக்ஷி துணை.



# ஸ்ரீ காமாக்ஷி அம்மன் பாடல்.

## வெண்பா.

துங்கமத வாரணத்தை தோத்தரித்து பாமாலை
மங்கையுமை யம்மை மலைமகடாட்—செங்கமல
பூவிற் பொருந்தப் புனைந்தணிந்தேன் புன்மைதவிர்
நாவிற் கிசைய நயந்து.

## அறுசீர் ஆசிரிய விருத்தம்.

...ணா கரும மாற்றுங் கடவுளர் முடிமேற் றங்குஞ்
சீரணி ஞான பாதச் செல்வியே கம்பர் போற்றித்
தாரணி தழைப்ப நாளுந் தன்னருட் குகையில் வாழும்
பூரணி காமக் கண்ணி பொற்பதஞ் சிரமேற் கொள்வாம்.

## எண்சீர் ஆசிரிய விருத்தம்.

திருமருவு விமயமலை மகளாய்த் தோன்றித்
திங்களணி யீசர்திரு விழி புதைத்தே
அருமைமிகு காசிநக ரறம் வளர்த்தே
யழகமைந்த காஞ்சிகம்பை மா வடிக்கீழ்
பெருமைதரு பூஜைசெப தபங்கள் செய்து
பேசரிய வீசனிட பாகம் பெற்றாள்
கருணையுரி சத்திகா மாக்ஷி தேவி
கழலடியை யெந்நாளுங் கருத்துள் வைப்பாம்.

## அறுசீர் ஆசிரிய விருத்தம்.

வாசநறு மலர்ச்சோலை வான்றவழுங் காஞ்சி ...ர்வந்து லிங்கப்
பூசனையுஞ் செபதபமுங் கம்பைநதி மாவின்கண் புரிந்தோர் நாளில்
ஈசன்றிரு விழிபுதைத்த விடாகல வென்றுமிடப் பாகம் பெற்றே
பேசவரு காமாக்ஷி திருவடியை யனுதினமும் பேணி வாழ்வாம்.

### திருமந்திரம்.

ஓங்காரி யென்பா ளவளொரு பெண்பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தை யுடையவள்
ஆங்காரி யாகியே யைவரை பெற்றிட்டு
ரீங்காரத் துள்ளே யினிதிருந் தாளே.

### அடதாளம்.

ஆதிபரா ஆதிபரா ஆதிபரா சத்தி
ஆதிபரா ஆதிபரா சோதிபரா சத்தி
ஆக்ஷிசக ஆக்ஷிசக ஆக்ஷிசக தாம்பா
ஆக்ஷிசக ஆக்ஷிசக சூக்ஷிசக தாம்பா
ஞானசிவ ஞானசிவ ஞான ஓங்காரி
ஞானசிவ ஞானசிவ மோன ரீங்காரி
விஸ்வபர விஸ்வபர விஸ்வபர பிரம்மம்
விஸ்வபர விஸ்வபர பஸ்பபரப் பிரம்மம்.

### பாடல்.

மங்களமாய் விளங்கும் மனோன்மணி காமாட்சி தேவி
திங்கள்ரவி போல்விளங்கும் திரிபுரை காமாட்சி தேவி
சந்தர சடாதரியே சங்கரி காமாட்சி தேவி
மந்தர பஞ்சாக்ஷரியே மகேஸ்வரி காமாட்சி தேவி
வாலைபுவ னேஸ்வரியே வைரவி காமாட்சி தேவி
சூலப் படையாளே சுந்தரி காமாட்சி தேவி
பூதப் படையாளே பூங்கொடி காமாட்சி தேவி
வேத முதலாளே வேல்விழி காமாட்சி தேவி
செங்கண்மால் தங்கையரே செகதாம்பாள் காமாட்சி தேவி
எங்கும் புகழுடைய வீஸ்வரி காமாட்சி தேவி
முச்சுடராய் விளங்கும் மூர்த்தி காமாட்சி தேவி
சச்சிதானந்த சிவ சங்கரி காமாட்சி தேவி

### முடுகு பாடல்.

ஓரெழுத் துருவமாக ஒளிவிளங்கும் காமாட்சி தேவி
பேராயிர முடைய பெண்மணி காமாட்சி தேவி
மூவருரு வாய்விளங்கும் முதல்வி காமாட்சி தேவி
தேவருக்குத் தேவானோர் தேவி காமாட்சி தேவி
சிருஷ்டிதிதி சம்மார சிவசத்தி காமாட்சி தேவி
அருட் பெருங்கடலான வம்பிகை காமாட்சி தேவி
பஞ்சபூத மாய்விளங்கும் பத்தினி காமாட்சி தேவி
கஞ்சன்மணிச் சிரசைக் கரங்கொண்ட காமாட்சி தேவி
ராஜ ராசேஸ்வரியே ரக்ஷகி காமாட்சி தேவி

பாசவினை யகற்றும் பைரவி காமாட்சி தேவி
சகஸ்ரதள நேத்ரியே சதுர்புஜ காமாட்சி தேவி
அகிலாண்ட கோடியெல்லா மளித்திட்ட காமாட்சி தேவி
நாற்பத்தி முக்கோண நாயகி காமாட்சி தேவி
வேற்றுமை யில்லாத வித்தகி காமாட்சி தேவி
திரிகோண வட்டத்திலே திகழ்ந்திருக்குங் காமாட்சி தேவி
பரிவாயறு கோணத்திலே பதிந்திருக்குங் காமாட்சி தேவி
எண்கோண வட்டத்திலே யெழுந்தருளுங் காமாட்சி தேவி
கண்ணொளிக் கொளியான காரணி காமாட்சி தேவி
உக்ரகோலா கலியே யுத்தமி காமாட்சி தேவி
விக்ரம கபாலிரண வீரி காமாட்சி தேவி
தக்கன் மக ளென்றுவந்த தற்பரை காமாட்சி தேவி
அக்கினி சொரூபியரே யஷ்டாட்சர காமாட்சி தேவி
சிரோங்கு மலையரையன் சேயான காமாட்சி தேவி
பேரோங்கு மைங்கரனைப் பெற்ற காமாட்சி தேவி
ககனத்தோர் தொழுதேத்துங் கண்மணி காமாட்சி தேவி
அகோரவீர பத்திரரை யளித்திட்ட காமாட்சி தேவி
இருண்ட குழலியரே யேகாக்ஷா காமாட்சி தேவி
திருமுருகன் றனையளித்த திருந்திழை காமாட்சி தேவி
அரியர தேவன்றனை அளித்த காமாட்சி தேவி
அரியெனுந் திருநாமம் அமைந்த காமாட்சி தேவி
மலர்வனங் காக்கவொரு மைந்தனை காமாட்சி தேவி
நலங்காத்தவ ராயனென்று நவிலுங் காமாட்சி தேவி
ஓங்கார மாய்விளங்கும் உமையவளே காமாட்சி தேவி
ஆங்கார பைரவரை யளித்திட்ட காமாட்சி தேவி
மும்மூன்றேழா ரக்ஷரியே முக்கனி காமாட்சி தேவி
செம்பொன் னம்பலந்தனிலே சிறந்திருக்குங் காமாட்சி தேவி
அற்புத மேருதன்னி லமர்ந்திருக்குங் காமாட்சி தேவி
பொற்சிங்க வாகனத்தில் பொருந்திவருங் காமாட்சி தேவி
கருணையாய் பாயன்றிருக் கண்புதைத்த காமாட்சி தேவி
இருசுடரின் வழியறிந்த விறைவியாங் காமாட்சி தேவி
நகவிரல் வேற்வையினுல் நதியளித்த காமாட்சி தேவி
இகபரமளிக்குங் காசிக் கேகிய காமாட்சி தேவி
வழியினில் வீரரோடு வாதுசெய்த காமாட்சி தேவி
அழிவில்லா முனிவர்களால் அமர்வென்ற காமாட்சி தேவி
வாசமிகுங் காசிநகர் வந்தமர்ந்த காமாட்சி தேவி
ஆசையாய் கெங்கையில் நீராடிய காமாட்சி தேவி
கண்ணுதலாம் விஸ்வேசர் கழல்பணிந்த காமாட்சி தேவி
எண்ணான் கறம்வளர்த்த எந்தாயே காமாட்சி தேவி
பேர்விசா லாக்ஷியென்று பேசுகின்ற காமாட்சி தேவி

ஏர்பரவுங் காஞ்சிநகர் கேகிய காமாட்சி தேவி
வந்துமா நகரைச்சுற்றி வலம்வந்த காமாட்சி தேவி
அந்தமாப் பிலக்காவாக் கமர்ந்திருந்த காமாட்சி தேவி
தூயகாம பீடத்தில் துலங்குகின்ற காமாட்சி தேவி
காயத்ரீ மண்டபத்தில் கருணைசெய்யுங் காமாட்சி தேவி
ஓங்கார கோணத்திலே ஒளிவிளங்கும் காமாட்சி தேவி
பாங்கான நீலநிறம் படைத்திருக்குங் காமாட்சி தேவி
அலங்காரதுவஜ ஸ்தம்பத்தெதிர் அமர்ந்த காமாட்சி தேவி
கலகலென்று சதங்கைகொஞ்ச காக்ஷிதருங் காமாட்சி தேவி
பஞ்சதீர்த்தக் கரையின்றன் பாலிருக்குங் காமாட்சி தேவி
மஞ்சுபலி பீடத்தெதிர் மகிழ்ந்திருக்குங் காமாட்சி தேவி
விண்டவழுங் கோபுரத்தே விளங்கியருள் காமாட்சி தேவி
எண்ணரிய மண்டபத்தே யிருந்தருளுங் காமாட்சி தேவி
சந்தான ஸ்தம்பமுரச் சார்ந்திருக்குங் காமாட்சி தேவி
பந்தகா சூரனை பலியிட்ட காமாட்சி தேவி
வெற்றி ஸ்தம்பம்நாட்டியே விளங்கியருள் காமாட்சி தேவி
பற்றற்றவர்க ளெல்லாம் பணிந் தேத்துங் காமாட்சி தேவி
வாலை புவனேஸ்வரியே வந்தருள் செய் காமாட்சி தேவி
நாலெட்டறம் வளர்த்த நாயகி காமாட்சி தேவி
அந்தமிகுங் கம்பையில்நீர் ஆடிய காமாட்சி தேவி
விந்தைதரு மாவடிக்கீழ் விளங்கிவருங் காமாட்சி தேவி
செங்கரத் தாலாற்றுமணல் சேர்த்தெடுத்த காமாட்சி தேவி
பொங்கமிகு லிங்கமாகப் பொருந்தவைத்த காமாட்சி தேவி
பக்தியாய் பூஜைசெபம் பண்ணிய காமாட்சி தேவி
சித்த மகிழ்ந்துதவஞ் செய்தசிவ காமாட்சி தேவி
வள்ளலருளாலே வெள்ளம் வரக்கண்ட காமாட்சி தேவி
உள்ளங் கலங்காமல் உறுதிகொண்ட காமாட்சி தேவி
கன்னிகாளி தேவியினால் கங்கைதன்னைக் காமாட்சி தேவி
அன்பாய்த் தடுக்கவைத்த ஆதிசக்தி காமாட்சி தேவி
செங்கைவளைச் சுவடுபட சேர்த்தணைத்த காமாட்சி தேவி
தங்கைமுலைச் சுவடுபடத் தழுவிய காமாட்சி தேவி
ஏகாம்பர நாதரருள் என்றும்பெற்ற காமாட்சி தேவி
நாகாபரணம் பூண்ட நாரணி காமாட்சி தேவி
வாசமல ரணியேல வார்குழலே காமாட்சி தேவி
தேசம்புகழ் திருவருணை தேடிச்சென்ற காமாட்சி தேவி
சித்ரமிகு வாழைநகர் சென்றமர்ந்த காமாட்சி தேவி
புத்ராஜ ஜலமழைத்துப் பூஜைசெய்த காமாட்சி தேவி
களிற்றுரி போர்த்தவீசர் கழல்பணிந்த காமாட்சி தேவி
வளமோங்குந் திருவருணை வந்தமர்ந்த காமாட்சி தேவி
சோதிமிகு கௌதமர்தஞ் சொற்படி காமாட்சி தேவி

ஆதிபக வதிவனத்தி லமர்ந்திட்ட காமாட்சி தேவி
விந்தைமிகு வனந்தனிலே வீற்றிருக்குங் காமாட்சி தேவி
செந்துவர்வாயுமையே தவஞ் செய்திட்ட காமாட்சி தேவி
உந்தனையே மதியாம லுத்தமி காமாட்சி தேவி
வந்தெதிர்த்த மகிடனோடு வாதுசெய்த காமாட்சி தேவி
துற்கியா மகிடனுயிர் துடிக்கக்கொன்ற காமாட்சி தேவி
பொற்படிக லிங்கங்கையிற் பொருந்தகண்ட காமாட்சி தேவி
வாளாலொன்பது தீர்த்தம் வரச்செய்த காமாட்சி தேவி
கேளியாய்த் ஸ்நானஞ்செய்த கிளிமொழி காமாட்சி தேவி
அசுரசம்மாரஞ் செய்த ஆதி காமாட்சி தேவி
தசாவதாரங் கொண்ட தற்பரை காமாட்சி தேவி
அருணாசல வீசர்பொன் னடிபணிந்த காமாட்சி தேவி
அருள்புரியு முண்ணாமலை யம்மையென்ற காமாட்சி தேவி
சீரான நாககிரி சிறந்தமர்ந்த காமாட்சி தேவி
பாரிலழல் வளர்த்தித்தபம் பண்ணிய காமாட்சி தேவி
தேயுவளர்த்தி தபம்புரிந்த தேனே காமாட்சி தேவி
பாயுமால் விடையேறிப் பரமர்வாக் காமாட்சி தேவி
மாதவத்துக் கிரங்கியையர் மகிழ்ந்துவாக் காமாட்சி தேவி
வேதன்மா லிந்திரரும் விண்ணோர்வாக் காமாட்சி தேவி
கந்தர் கணபதியுங் கணங்கள்வாக் காமாட்சி தேவி
சுந்தரமிகுந் தவமுனிவர் சூழ்ந்துவாக் காமாட்சி தேவி
சர்வேசன் சேவைபெற்ற சங்கரி காமாட்சி தேவி
அர்த்தனா ரீஸ்வரியா யமர்ந்த காமாட்சி தேவி
கர்த்தரிட பாகம்பெற்ற கண்மணி காமாட்சி தேவி
நிர்த்தன தாண்டவியே நிமலியரே காமாட்சி தேவி
பாலுஞ் சலம்போல பரவிய காமாட்சி தேவி
ஞாலம்புகழ் மீனாக்ஷி நாயகி காமாட்சி தேவி
பச்சை நிறமான பைரவி காமாட்சிதேவி
பச்சையம்மை யென்றுபெயர் பரவிய காமாட்சி தேவி
கொக்கரித் தேயீமத்தில் கூத்தாடுங் காமாட்சி தேவி
அக்குமணி கொக்கிறகும் அணிந்திருக்குங் காமாட்சி தேவி
நன்மைமிகு சம்பந்தர் நாடியுன்னை காமாட்சி தேவி
அம்மையப்பா வென்றுரைக்க வமதந்தந்த காமாட்சி தேவி
தையலம்மை நீலாய தாக்ஷியே காமாட்சி தேவி
வையகமெலாம் பதியாய் வளர்ந்திருக்குங் காமாட்சி தேவி
அன்பர்மன மகிழவிளை யாடல்செய்த காமாட்சி தேவி
பொன்மணியுஞ் சிலம்புகொஞ்சப் பொருந்துமம்மா காமாட்சி தேவி
அங்கமெல்லாந் தங்கநிற மாகிய காமாட்சி தேவி
சங்கரி சாம்பவியே சதுர்புஜையே காமாட்சி தேவி
கற்பூரந் தூபதீபங் காணுமம்மா காமாட்சி தேவி

அற்புதமா மலர்தூவி யடிபணிந்தேன் காமாட்சி தேவி
விந்தைமிகு மிக்கொலுவில் வீற்றிருப்பாய் காமாட்சி தேவி
சந்ததமும்,நற்காட்சி தானளிப்பாய் காமாட்சி தேவி
பாலன் கோட்டையனிட பாடலுக்கு காமாட்சி தேவி
சீலமாய் வந்துநல்ல சீரருள்வீர் காமாட்சி தேவி
புலித்தோலா மாசனத்தில் பொருந்திருப்பாய் காமாட்சி தேவி
மலிவான மாங்ரேலில் மருவிருப்பாய் காமாட்சி தேவி
ஆலைநினைப் பணம்மா யலங்கார காமாட்சி தேவி
கோருகின்ற வென்னுவில் கொலுவிருப்பாய் காமாட்சி தேவி.

ஸ்ரீ காமாட்சி அம்மன் வர்ணிப்பு முற்றிற்று.

உ

ஸ்ரீ பச்சையம்மன் துணை.



## ஸ்ரீ பச்சையம்மன் பாடல்.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

சலதிசார்ந் துலவும்வங்கத் தன்மையுற் றொளிருமிந்த
உலகினிலெ வருங்காண வும்பர்களுறைந்து போற்ற
அலகிலாப் புகழ்கொள்பச்சை யம்மைமன் னுதாராகிக்
குலவுவாரிவர் பொற்பாதங் குறித்திடர் முறித்துவாழ்வாம்.

### இதுவுமது.

பூரணக்காஞ்சிக் கம்பைப்புனல் படிந்தன்பு கூர்ந்தே
ஆ[illegible] பள்ளியே மணலெடுத்துக்
காரண லிங்கமாக்கிக் கடவுளைப் பூஜித்தேத்தும்
நாரணி பச்சையம்மை நற்பதம் நமஸ்கரிப்பாம்.

### இதுவுமது.

சகனர்க ளுரையுங்காஞ்சிக் கடிநகர்க் குடபால் தன்னில்
பகருறு சிறுகா வேரிப் பாக்கத்தின் முனிவர்சூழ
புகழுடன் வீற்றிருக்கும் புவனங்களெல்லா மீன்ற
பகவதி பச்சையம்மை பங்கயமலர்த்தாள் போற்றி.

### திருமந்திரம்.

அவனை யறியா வமாரு மில்லை
அவனன்றிச் செய்யு மருந்தவ மில்லை
அவனன்றி யைவரா லாவதொன் றில்லை
அவனன்றி யூர்புகுமா றறியேனே.

### அடதாளம்.

ஞானவடி ஞானவடி ஞானவடி வாம்பா
ஞானவடி ஞானவடி மோனவடி வாம்பா
காமிசிவ காமிசிவ காமிசிவ காமி
காமிசிவ காமிசிவ காமிகுற மாமி
வசியசிவ வசியசிவ வசிய திரிசூலி
வசியசிவ வசியசிவ வசிய பரிபாலி.

### பாடல்

இமயமலை தனிலுதித்த வீஸ்வரியே பச்சையம்மாள்
அமரர்கள் தொழுதேத்தும் ஆதிசத்தி பச்சையம்மாள்
மகமேருகிரிதனிலே மகிழ்ந்திருக்கும் பச்சையம்மாள்
அகமகிழ்ந்து கைலைதனி லமர்ந்திருக்கும் பச்சையம்மாள்
நாற்றிசையும் புகழ்காசி நகரமர்ந்த பச்சையம்மாள்
சாற்றியவழைநகர் சார்ந்திருக்கும் பச்சையம்மாள்
பன்னரிய திருவருணைப் பதியமர்ந்த பச்சையம்மாள்
நன்மைமிகு செங்கோட்டூர் நாடிச்சென்ற பச்சையம்மாள்.

### முடுகு பாடல்.

கோலமிகு நாககிரி கொலுவமர்ந்த பச்சையம்மாள்
ஏலங்கமழ் கமலாலயம் எழுந்தருளும் பச்சையம்மாள்
கடம்பவனத்தமர்ந்த கண்மணியே பச்சையம்மாள்
குடந்தை நகர்தனிலே குலவுகின்ற பச்சையம்மாள்
தில்லைப்பதியமர்ந்த திருவுருவே பச்சையம்மாள்
கொல்லைமலைதனிலே கொலுவமர்ந்த பச்சையம்மாள்
திண்டிவனத் [illegible] பச்சையம்மாள்
தண்டரை சேர்ப்பாகை தனிலமர்ந்த பச்சையம்மாள்
செஞ்சிப்பதிதனிலே செழித்திருக்கும் பச்சையம்மாள்

மஞ்சுதவழ் மலையனூர் மருவிநிற்கும் பச்சையம்மாள்
நன்னிலந் தனிலமர்ந்த நாயகியே பச்சையம்மாள்
செங்நாவூர் தனிலமர்ந்த சேல்விழியே பச்சையம்மாள்
பெருந்துறையூரமர்ந்த பெண்மணியே பச்சையம்மாள்
திருமுல்லைவாயலில்வாழ் திகம்பரியே பச்சையம்மாள்
ஆலங்கா டமர்ந்தவளே ஆதிசக்தி பச்சையம்மாள்
ஞாலம்புகழ்நாகை நகரமர்ந்த பச்சையம்மாள்
பார்பரவுமோங்கூரில் பதியமர்ந்த பச்சையம்மாள்
சீர்காழி பதியமர்ந்த சிவசக்தி பச்சையம்மாள்
புள்ளிருக்கும் வேளூரில் புரிந்திருக்கும் பச்சையம்மாள்
வள்ளல்புகழ்தணிகை வந்தமர்ந்த பச்சையம்மாள்
அற்புதப்பிலாம்பேட்டி லமர்ந்திருக்கும் பச்சையம்மாள்
கற்குடி தனிலமர்ந்த காரணியே பச்சையம்மாள்
வீராணத்தெல்லையிலே விளையாடும் பச்சையம்மாள்
சீரான தற்கோலஞ் சிறந்துநிற்கும் பச்சையம்மாள்
களந்தைபதிவாழும் கண்மணியே பச்சையம்மாள்
வளமிகுந் திருவதிகை வந்தமர்ந்த பச்சையம்மாள்
புதுவைநகரமர்ந்த பூங்கொடியே பச்சையம்மாள்
சதுரங்கபட்டணம்வாழ் சங்கரியே பச்சையம்மாள்
மயிலாப்பூர் தனிலமர்ந்த மகேஸ்வரியே பச்சையம்மாள்
ஒயிலான கன்னிகோயி லூரமர்ந்த பச்சையம்மாள்
ஒற்றியூர் தனிலமர்ந்த உத்தமியே பச்சையம்மாள்
குற்ற மகற்றுங்கழுக் குன்றமமர்ந்த பச்சையம்மாள்
வரும்வினை யகற்றுமாய வரமமர்ந்த பச்சையம்மாள்
கருவினை மாற்றுங்கோ கர்ணம்வாழ் பச்சையம்மாள்
கற்றவர்சூழ்ந்திருக் கடையூர்வாழ் பச்சையம்மாள்
குற்றாலந் தனிலமர்ந்து குலவுகின்ற பச்சையம்மாள்
தஞ்சை நகரமர்ந்த தற்பரையே பச்சையம்மாள்
கஞ்சனூர் பதியமர்ந்த கற்பகமே பச்சையம்மாள்
மருதூரில் வாழ்கின்ற மனோன்மணியே பச்சையம்மாள்
கருதரியதிருவானைக் காவமர்ந்த பச்சையம்மாள்
வெண்காடமர்ந்தவளே வேல்விழியே பச்சையம்மாள்
பண்பாடுந்திரிச்சிராப் பள்ளியமர் பச்சையம்மாள்
மேலோர்கள் பணியும்ரா மேச்சுரம் வாழ் பச்சையம்மாள்
கோலமிகுங் காளாஸ்திரிவாழ் கோதிலாப் பச்சையம்மாள்
சிறுகரும்பூரமர்ந்த சிற்பரையே பச்சையம்மாள்
சிறுமுக்கைநல்லாளஞ் சீருற்ற பச்சையம்மாள்
பெருமுக்கைநல்லாளப்பேசரும் பச்சையம்மாள்
கருங்குழிதனிலமர்ந்த கட்டழகி பச்சையம்மாள்
திருமாகறலமர்ந்த தேன்மொழியே பச்சையம்மாள்

முருக்கம் பேட்டெல்லேவாழும் முக்கனியே பச்சையம்மாள்
திருமாற்பேறாமர்ந்த திருவுருவே பச்சையம்மாள்
அருள்பெருந் தாலநக ரமர்ந்திருக்கும் பச்சையம்மாள்
பரங்குன்றத் தமர்ந்தவளே பராபரையே பச்சையம்மாள்
குரங்கணின் முட்டம்வாழ் குண்டலியே பச்சையம்மாள்
நாலூரு மயானத்து நாயகியே பச்சையம்மாள்
பாலூரில் வாழுகின்ற பைங்கிளியே பச்சையம்மாள்
வான்மீயூர் வாழுகின்ற வரநதியே பச்சையம்மாள்
மாணும்பதி வாழும் மாதுமையே பச்சையம்மாள்
பட்டிச்சுரம் வாழும் பத்தினியே பச்சையம்மாள்
சிட்டறம் பாகைவாழ் சிவமணியே பச்சையம்மாள்
வாக்காற் புகழுமந்த வாசியமர் பச்சையம்மாள்
சிக்கனுங் குப்பம்வாழ் சின்மயமே பச்சையம்மாள்
சூறைநக ரமர்ந்த சுந்தரியே பச்சையம்மாள்
காறைக் காடமர்ந்தவளே கபாலியரே பச்சையம்மாள்
வேதாரண்ய க்ஷேத்திரம்வாழ் வேல்விழியே பச்சையம்மாள்
மாதவர்விரும்புங் கச்சூர் மாநகர்வாழ் பச்சையம்மாள்
செய்யனூர் தனிலமர்ந்த சிவவடிவே பச்சையம்மாள்
ஐயங் குளக்கரையி லமர்ந்திருக்கும் பச்சையம்மாள்
பனங்கா டமர்ந்தவளே பகவதியே பச்சையம்மாள்
தனமிகுந்த விரிஞ்சிபுரந் தானமர்ந்த பச்சையம்மாள்
விற்குடி தனிலமர்ந்த விமலியரே பச்சையம்மாள்
நற்றவ ருறையுஞ் சென்னை நகரமர்ந்த பச்சையம்மாள்
பக்தர்கள் வணங்குந்தேனம் பாக்கம்வாழ் பச்சையம்மாள்
சித்தர்களுறையுஞ் நெல்லூர்ச் சிவசத்தி பச்சையம்மாள்
கீர்த்திதரும்புவன கிரிவாழும் பச்சையம்மாள்
வார்கடல்சூ ழுலகமெல்லாம் வாசஞ்செய் பச்சையம்மாள்
அகிலம்புகழ் தாழனூர் அமர்ந்திருக்கும் பச்சையம்மாள்
மகிமைமிகும் காஞ்சிமா நகர்வாழ் பச்சையம்மாள்
கம்பைக்கு நேர்மேற்கே கண்மணியே பச்சையம்மாள்
அம்பிகை வனங்கிழக்கே யமர்ந்தருளும் பச்சையம்மாள்
ஈஸ்வர கோஷ்டமென்று மேந்திழையே பச்சையம்மாள்
ஆச்சரிய மாய்விளங்கு மவ்வழியிற் பச்சையம்மாள்
புத்தேரி கரையருகிற் புதுமையாய்ப் பச்சையம்மாள்

பக்தர்தொழுஞ் சிறுகாவேரிப் பாக்கத்திற் பச்சையம்மாள்
விந்தைமிகு நந்தவனம் விளங்கிவரும் பச்சையம்மாள்
அந்தமிகுந் தேங்கமுகு வமர்ந்துவரும் பச்சையம்மாள்
கோலமிகு மாலயத்தில் கொலுவிருக்கும் பச்சையம்மாள்
மூலப்பொரு ளாய்விளங்கும் மூர்த்தியே பச்சையம்மாள்
சுற்றுமதில் கோபுரமுஞ் சூழ்ந்திருக்கும் பச்சையம்மாள்
அத்தன்மன் னுடனேடு மமர்ந்திருக்கும் பச்சையம்மாள்
வேங்கைபூங் குறத்தியொடு வீற்றிருக்கும் பச்சையம்மாள்
பாங்கான முடியழகி பாலிருக்கும் பச்சையம்மாள்
காத்தாயி புங்கனியுங் களித்திருக்கும் பச்சையம்மாள்
ஆத்தாள்தேச நாகியும் அழகுறும் பச்சையம்மாள்
தும்பைமலர் மாலை தோளணியும் பச்சையம்மாள்
செம்முனியுங் கருமுனியுஞ் சேவைசெய்யும் பச்சையம்மாள்
முத்துமுனி லாடமுனி முடிவணங்கும் பச்சையம்மாள்
பக்திமிகு பூமுனியும் பணிந்தேத்தும் பச்சையம்மாள்
தவமுனியும் வாழ்முனியுந் தாள்பணியும் பச்சையம்மாள்
புவனங்க ளனைத்துமீன்ற பூரணியே பச்சையம்மாள்
வீரன்வீராக்ஷி போற்ற வீற்றிருக்கும் பச்சையம்மாள்
ஆரகேயூர மகுடமுட னமர்ந்திருக்கும் பச்சையம்மாள்
எழ்முனிவர் போற்றிசெய்ய யெழுந்தருளும் பச்சையம்மாள்
வாழ்முனிவர் வாளேந்த வரமளிக்கும் பச்சையம்மாள்
உக்ரவீரன் கொக்கரிக்க உளமகிழும் பச்சையம்மாள்
விக்ரம மாகவேதான் விளையாடும் பச்சையம்மாள்
கற்பூர தூபதீபங் காணுவீர் பச்சையம்மாள்
அற்புதமா மலர்தூவி யடிபணிந்தேன் பச்சையம்மாள்
பாலன் கோட்டையனிட பாடலுக்கு பச்சையம்மாள்
சீலமாய் வந்துநல்ல சீரருள்வீர் பச்சையம்மாள்
புலித்தோலா மாசனத்தில் பொருந்துவீர் பச்சையம்மாள்
மலிவான மான்றோலில் மருவிநிற்கும் பச்சையம்மாள்
ஆரைநினைப் பனம்மா அலங்கார பச்சையம்மாள்
கோருகின்ற வென்னுவில் கொலுவிருப்பாய் பச்சையம்மாள்

ஸ்ரீ பச்சையம்மன் வர்ணிப்பு முற்றிற்று.

உ

ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி துணை.



# ஸ்ரீ அங்காளபரமேஸ்வரி பாடல்.

## எண்சீர் ஆசிரிய விருத்தம்.

கோகனக மகளுறையு மலைய னூரிற்
கோயில் கொண் டெழுந்தருள கௌரியான
வாகனக நான் மாடகூடல் சூழ்ந்தே
வளங்குலவு தண்டுறையம் பாக்கம் தன்னில்
நாகம் வளர்மாப்புன்னை விருட்சத்தின் கீழ்
நற்குழவி யாய்த்தோன்ற வலையன் கண்டு
தாகமுடன் னெடுத்திடு மங்காள தேவி
தாட்கமல மெந்நாளுந் தலைமேற் கொள்வாம்.

## அறுசீர் ஆசிரிய விருத்தம்.

பொன் னுலகோர்க ளென்றும் போற்றிசெய் தேத்துகின்ற
நன்னகர் மலைய னூரிற் நாரணி வன்மீக மானாய்
என்னகர் தன்னி லுள்ளோர் யாவருந் தொழு போற்ற
அன்னவர்க் கருள்செய் ஞான அங்காள தேவி தாயே.

## இதுவுமது.

மாமறைதொழு திறைஞ்சு மனோன்மணி அங்காளதேவி
க்ஷேமமாய் நினதுநாமம் செப்பியே செவைசெய்தேன்
காமனை நகைத்தெரித்த காதர்க்கங்காள னோடு
நேமமாய் வருவாயம்மாள் நேறினி லடியேன்காண

### இதுவுமது.

பன்னூநான் மறைகளேத்தும் பார்வதி கௌரிநீலி
யுன்னையே தொழுவோர்தங்கள் ஊழ்வலி தன்னைபோக்கி
என்னையே கார்க்கவிங்கே யெழுந்தருள் செய்வாய்தாயே
அன்னபூரணியே ஞான அங்காள தேவியம்பா.

### துதிகவி.

ஓம்சாம்பவியே போற்றி யோதரும் பொருளே போற்றி
பாம்பணிபூண்டாய் போற்றி பரப்ரம்ம சொரூபிபோற்றி
காம்பணி தோளிப்ரம்ம கபாலிசெஞ் சடைச்சி போற்றி
தேம்புவோர்க் கருளங்காள தேவியேபோற்றி போற்றி.

### இதுவுமது.

சத்திசாமுண்டி போற்றி சாம்பவிருத்ரி போற்றி
நித்யகல்யாணி போற்றி நிமலியெண்டோளி போற்றி
ரத்னகுண் டலியேசர்வ ரக்ஷகிகௌரி போற்றி
பக்தர்கள் தொழுமங்காள பரதேவிபோற்றி போற்றி.

### திருமந்திரம்.

அறிவார் பராசத்தி யானந்த மென்பாற்
அறிவா ரறிவுரு வாமவ ளென்பாற்
அறிவார் கரும மவளிச்சை யென்பாற்
அறிவார் பரனு மவளிடந் தானே.

### அடதாளம்.

சங்ரசடா சங்ரசடா சங்ரசடா தரியே
சங்ரசடா சங்ரசடா சுங்ரசடா தரியே
ஆயிசக ஆயிசக ஆயிசக தாயி
ஆயிசக ஆயிசக ஆயிமக மாயி
சிவராஜ சிவராஜ சிவராஜ சத்தி
சிவராஜ சிவராஜ தவராஜ சத்தி

### பாடல்

ஆதிசிவ சங்கரியே யம்பிகையங் காளதேவி
சோதிசிவ னிடபாகம் சூழுமங் காளதேவி
வேதம் புகழ்ந்தேத்தும் வேல்விழியங் களாதேவி
மாதவர்கள் தொழுதேத்தும் மாதாவங் காளதேவி
பங்கயன் சிரசைக்காம் பற்றுமங் காளதேவி
செங்கண்மால் தங்கையான சேல்விழியங் காளதேவி

கொக்கரித்து யெத்திசையுங் கொலுவிருக்குமங் காளதேவி
விக்கிரமமாய்ச் சுடலைதன்னில் விளையாடுமங் காளதேவி
சடையாட முடிகுலுங்க சதுர்பெற்றவங் காளதேவி
விடையேறு மீசருடன் வீற்றிருக்குமங் காளதேவி

முடுகு பாடல்.

நந்தவனங் களிலே நடித்திருக்குமங் காளதேவி
விந்தையாய்த் தில்லைதனில் விளங்குமங் காளதேவி
கார்த்தவழுந் திருப்பனங் காடமருமங் காளதேவி
பார்புகழுஞ் செஞ்சிமலை பதியமாங் காளதேவி
பூமகள் புகழும்ராய புரமமாங் காளதேவி
நாமகள் மருவுங்கூவ நகரமாங் காளதேவி
தேன்சொரியு மலையாள தேசம்வாழுங் காளதேவி
வான்றுவுந் தீர்த்தகிரி வந்தமாங் காளதேவி
அத்தி நகர்தனிலே அமர்ந்தருளங் காளதேவி
பக்தர்தொழு தேத்துமெட்டிப் பாளையம்வாழுங் காளதேவி
கலவைநக ருறையுங் காரணியங் காளதேவி
நலமிகு முக்கல்நகர் நாயகியங் காளதேவி
குண்டு பெருமட்டூர்வாழுங் குண்டலியங் காளதேவி
அண்டர் புகழ்நல்லூரில் அமர்தவங் காளதேவி
புகழ்மேவு ராமநாத புரமமாங் காளதேவி
மகிழ்மேவு திருக்காஞ்சி மாநகராங் காளதேவி
கம்பாநதிக் கீழ்திசையிற் கண்மணியங் காளதேவி
சேம்படவர் வீதியிலே செழிப்புறுமங் காளதேவி
சக்ரதீர்த்த வடகரையிற் சமைந்திடுமங் காளதேவி
உக்ரமிகு வுடைய உத்திமியங் காளதேவி
சீலமிகுந் தாழனூர் சிறந்தமாங் காளதேவி
கோலமிகு மலையனூர் கொலுவமாங் காளதேவி
புற்றுகித் தான்விளங்கும் புகழுறுமங் காளதேவி
சித்தர் முனிவரெல்லாஞ் சேவிக்குமங் காளதேவி
விண்ணோர்க்கும் பாவனையாய் வீற்றிருக்குமங் காளதேவி
வெண்கதி ரொளிபோலே விளங்குமங் காளதேவி
ஆகூழியாய்ச் சுடலையிலே யமர்ந்தவங் காளதேவி
காகூழியாய்ச் சுடலையிலே களித்தவங் காளதேவி
உக்ரகோல கலியா யுலாவியவங் காளதேவி
அக்குமணித் தாவடங்க ளணியுமங் காளதேவி
கொத்துமுத்து பலகறையுங் கொக்கிறகுமங் காளதேவி
சித்தாங்குழை தோளணியுஞ் சிற்பரையங் காளதேவி
அங்கையின் மான்மழுவு மங்குசமங் காளதேவி
தங்கவாள் கழுதுடியுந் தாங்கியவங் காளதேவி

தென்னவன் மகளான திரிபுரையங் காளதேவி
அன்பாகக் கூடலர சாண்டருளங் காளதேவி
எத்திசையும் வெற்றிபெற்ற வீஸ்வரியங் காளதேவி
கொற்றவ ரெலாம்பணியக் கொலுவமரங் காளதேவி
கன்றேறு மீசனவர் கண்மணியங் காளதேவி
உன் றிருச் செவியிலோர் உபதேசமங் காளதேவி
செய்யநின் மனம்வெறுப்ச் சென்றதாலங் காளதேவி
பரதவர்குல மகளாய்ப் பாரினிலங் காளதேவி
உரமுடனே பிறவெனவே யுதித்தவங் காளதேவி
அண்டர்புகழ் கடம்பவனத் தருகனிலங் காளதேவி
தண்டுறையாம் பாக்கமெனுக் தலத்தினிலங் காளதேவி
புன்னைமரத் தடியிற் புதுமையாயங் காளதேவி
சின்னஞ்சிறு மகவாய்ச் சிருற்றவங் காளதேவி
பாதவர் கண்டுன்னைப் பட்சமுடனங் காளதேவி
விரதமுடன் ருன்வளர்த்த விமலியங் காளதேவி
வலையன்குல மகளாய் வளர்ந்தவங் காளதேவி
வலையனுய் வந்துவான் வதுவைசெய்யங் காளதேவி
பம்பை முழங்கவன்பர் பணிந்தேத்தவங் காளதேவி
செம்படவ ரிடாகற்றிச் சேவைதந்தவங் காளதேவி
தங்கச் சிலம்பு கொஞ்சத் தாளுடுமங் காளதேவி
வெங்கல மணிகள்கொஞ்ச வேல்விழியங் காளதேவி
ஆநந்தத் திருநடனம் ஆடிவருமங் காளதேவி
வானவரெலாம் பணிந்து வணங்கிவருமங் காளதேவி
ஆடுபன்றி கோழியுடன் ஆகுதிகொள்ளங் காளதேவி
பாடுமடி யாருக்கருள் பாலிக்குமங் காளதேவி
முப்பூஜை கொண்டவளே முத்திதருமங் காளதேவி
எப்போது மங்களமாய் இருக்குமங் காளதேவி
பாங்காகச் சாம்பலின்மேல் பள்ளிகொள் ளங்காளதேவி
ஓங்கார மாய்விளங்கும் உத்தமியங் காளதேவி
சிரமாலை பூண்டவளே சிவசித்தியங் காளதேவி
தாணியெல்லா மொளியாகித் தான்விளங்கங் காளதேவி
பூங்காவித் துகிலுடுத்தும் பூரணியங் காளதேவி
ஆங்கார ரீங்காரமா யமர்ந்தவங் காளதேவி
பாவாடை ராயன்வீர பத்திரரங் காளதேவி
தேவாதி தேவரெல்லாந் தெரிசிக்குமங் காளதேவி
கங்காள நாதரோடு கலந்தாடுமங் காளதேவி
பொங்மாயிக் கொலுவி பொருந்துமங் காளதேவி
கற்பூர தூபதீபங் காணுவீரங் காளதேவி
அற்புதமா மலர்தூவி அடிபணிந்தே னங்காளதேவி
பாலன் கோட்டையனிட பாடலுக் கங்காளதேவி

சிலமாய் வந்துநல்ல சீருளங் காளதேவி
புலித்தோலா மாசனத்திற் பொருந்துமம்மா வங்காளதேவி
மலிவான மான்றோலில் மருவிநிற்கு மங்காளதேவி
அரைநிணைப் பனம்மா வலங்கார வங்காளதேவி
கோருகின்ற வென்னுவிற் கொலுவிருப்பா யங்காளதேவி.

அங்காள பரமேஸ்வரி பாடல் முற்றிற்று.

---

உ

கன்னியம்மன் துணை.

## கன்னியம்மன் பாடல்.

### எழுசீர் ஆசிரிய விருத்தம்.

எண்ணரிய பற்பல வண்டகோ டிகளெலா
மெளிதில் படைத்திட்ட வீரி
விண்ணவர்க ளிந்திரன் தபோதனர்க
ளெஞ்ஞான்று விரும்பிதொழு தேத்துஞ்சூரி
அண்ணன் மாரெழுவரொடு பூதவே தாளமுன்
அடிபணிந் தாடகோரி
கண்மணி யலங்கார விண்மணிபோற் றுலங்கிவருங்
கன்னிகா தேவியுமையே.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

விண்ணவர் விரும்பி யேத்தும் விமலி யெண்டோளி நீலி
அண்ணமா ரெழுவர்சூழ வாள்பேர்கள் கொக்கரிக்க
விண்மணி போற் பல்லக்கில் விளங்கியே வந்தவீரி
கண்மணி யானஞான கன்னிகா தேவி போற்றி.

### துதிகவி.

உலகெலா நிறைந்தாய் போற்றி யுரககங்கணியே போற்றி
நிலவொளி வதனி போற்றி நிக்ரக னுக்கிரகி போற்றி
பலமிகு மண்ண மார்கள் படையுடை யவளே போற்றி
கலவை சார்தணியு மர்ர கன்னியே போற்றி போற்றி.

### இதுவுமது.

குங்கும வதனி போற்றி குண்டலி சத்தி போற்றி
மங்கள சொரூபி போற்றி மனோன்மணித் தாயே போற்றி
துங்கவெண் புரவிமீது துலங்கியே வருவாய் போற்றி
கங்கையி லாடுமர்ர கன்னியே போற்றி போற்றி.

அட தாளம்.

ஓம்பரம ஓம்பரம ஓம்பரம தஞ்சி
ஓம்பரம ஓம்பரம ரீம்பரம தஞ்சி
பூங்காவன பூங்காவன பூங்காவண மயிலே
பூங்காவன பூங்காவன பாங்கான குயிலே
மணிமந்ர மணிமந்ர மணிமந்ர பொருளே
மணிமந்ர மணிமந்ர மணிமந்ர வருளே.

பாடல்.

அந்தரத் துச்சியிலே யமர்ந்தாடுங் கன்னியம்மாள்
விந்தையாய் நீர்த்துறையில் விளையாடுங் கன்னியம்மாள்
பூங்கா வனங்களிலே புகழுறுங் கன்னியம்மாள்
பாங்கான குளக்கரையில் பரவிநிற்குங் கன்னியம்மாள்
மஞ்சள் வனந்தனிலே மருவிநிற்குங் கன்னியம்மாள்
இஞ்சி வனந்தனிலே யிசைந்திருக்குங் கன்னியம்மாள்
ஆற்றங்கரைகளிலே யமர்ந்திருக்குங் கன்னியம்மாள்
ஊற்றுக் குழியோரம் உவந்திருக்குங் கன்னியம்மாள்
தாழம் புதர்களிலே தழைத்திருக்குங் கன்னியம்மாள்
வாழை வனங்களிலே வாழ்ந்திருக்குங் கன்னியம்மாள்
வெங்கலக் கோட்டையில்வாழ் வேல்விழியே கன்னியம்மாள்
எங்குமலை சுனைகளிலும் எழுந்தருளுங் கன்னியம்மாள்
அற்புதமாய் கெங்கைநீர் ஆடிவருங் கன்னியம்மாள்
பொற்றொடி கலகலென்னப் பூக்கொய்யுங் கன்னியம்மாள்
பூதநாதன் சேவடியைப் பூஜிக்குங் கன்னியம்மாள்
மாதவத்தோர் பணிய மகிழ்ந்திருக்குங் கன்னியம்மாள்

முடுகு பாடல்.

சந்தனம் புனுகுசெழுஞ் சாந்தணியுங் கன்னியம்மாள்
அந்தமா யுலகமெங்கும் அமர்ந்திருக்குங் கன்னியம்மாள்
தம்பூரு வீணைகையிற் றரித்திருக்குங் கன்னியம்மாள்
கொம்பு தம்பட்டமுங் குலவவருங் கன்னியம்மாள்
வணங்கியடி தொழுவோர்க்கு வாக்களிக்குங் கன்னியம்மாள்
மணப்பாக்கத் தெல்லையிலே மகிழ்ந்திருக்குங் கன்னியம்மாள்
சிலாம்பாக்கத் தெல்லையிலே செழித்திருக்குங் கன்னியம்மாள்
நலமிகுங் கன்னிநகர் நடனமிடுங் கன்னியம்மாள்
வானவரெலாந் தொழுது வணங்குகின்ற கன்னியம்மாள்
நான்மறை புகழுங்காஞ்சி நகரமர்ந்த கன்னியம்மாள்
அகோரியென உலகமெங்கு மமர்ந்திருக்குங் கன்னியம்மாள்
சகோதரத் தீர்த்தக்கரை சதிராடுங் கன்னியம்மாள்
வெள்ளக்குளக் கரையில்வாழ் வேதாந்த கன்னியம்மாள்

உள்ளமிக மகிழ்ந்திருக்கும் முத்தமியே கன்னியம்மாள்
திருமலிந்து விளங்குஞ்சர்வ தீர்த்தம்வாழ் கன்னியம்மாள்
கருணையாய் வீற்றிருக்குங் காதலியே கன்னியம்மாள்
தஞ்சமென் றடுத்தவரைத் தற்காக்குங் கன்னியம்மாள்
பஞ்சவர்ண புரவியின்மேல் பவனிவருங் கன்னியம்மாள்
பூதகணம் விருதுகள் பிடித்துவரக் கன்னியம்மாள்
பாதமதில் வேதாளம் பணிந்தாடக் கன்னியம்மாள்
சூதான குறளிசாத்தி சூழ்ந்துவரக் கன்னியம்மாள்
வாதாடு முனிபடைகள் வழிவிலக்கக் கன்னியம்மாள்
இருளன் காட்டேரிமாட னிறிசியுங் கன்னியம்மாள்
கருப்பன் வீரப்பன்முதல் கைகூப்பக் கன்னியம்மாள்
வேட்டைநாய் சங்கலியும் வேல்வழியே கன்னியம்மாள்
கூட்டக்கார் கைபிடித்துக் குதித்துவரக் கன்னியம்மாள்
ஆனைகுதிரை படைகளுடன் ஆள்பெருங் கன்னியம்மாள்
சேனைகளு மொட்டைகளுஞ் செறிந்துவரக் கன்னியம்மாள்
உக்ரமக்ரவாள் பிடித்து உலாவிவருங் கன்னியம்மாள்
கொக்கரித்து யெத்திசையுங் கொலுவிருக்குங் கன்னியம்மாள்
சூராண்ண மாருடனே சூழ்ந்திருக்குங் கன்னியம்மாள்
வீராண்ண மாருடனே வீற்றிருக்குங் கன்னியம்மாள்
அபிஷேக வலங்கார மணிந்துகொள்ளுங் கன்னியம்மாள்
சுபகரமாய் விளங்குஞ் சுந்தரியே கன்னியம்மாள்
குருவேரிருவாக்ஷிதிரு கொன்றைரோஜா கன்னியம்மாள்
பரிமளங்கள் புனைந்திருக்கும் பத்தினியே கன்னியம்மாள்
பூவாடை யுடுத்திவரும் பூரணியே கன்னியம்மாள்
பாவாடை யுடுத்திவரும் பசுங்கிளியே கன்னியம்மாள்
மலர்மணங்கள் கமழ்ந்திருக்கும் மாதாவே கன்னியம்மாள்
அலங்கார மாயிருக்கும் ஆதிசத்தி கன்னியம்மாள்
பன்னீர் அத்தர்கஸ்தூரி பரிமளங்கள் கன்னியம்மாள்
நன்னயமா யணிந்திருக்கும் நாயகியே கன்னியம்மாள்
பச்சரிசி யவல்கடலை பயறுபொங்கல் கன்னியம்மாள்
கச்சூரி காயுடனே கனிவர்க்கங் கன்னியம்மாள்
சகலமு முட்கொள்ளுஞ் சங்கரியே கன்னியம்மாள்
அகிலமெலாம்புகழ வருள்புரியுங் கன்னியம்மாள்
இருபதடி வேங்கை யெழுந்தருளக் கன்னியம்மாள்
ஒரு அறுபதடிவேங்கை வுதும்பிவரக் கன்னியம்மாள்
அன்பரிடர் தீர்த்து ஆதரிக்குங் கன்னியம்மாள்
இன்பமா யிக்கொலுவி லெழுந்தருளுங் கன்னியம்மாள்
செப்பரிய வெழுவரொன்றாய்ச் சேர்ந்திருக்குங் கன்னியம்மாள்
இப்பதியி லன்புடனே இருந்தருள்வீர் கன்னியம்மாள்
கற்பூரத் தூபதீபங் காணுவீர் கன்னியம்மாள்

அற்புதமா மலர்தூவி அடிபணிந்தேன் கன்னியம்மாள்
பாலன் கோட்டையனிட பாடலுக்கு கன்னியம்மாள்
சீலமாய் வந்துநல்ல சீரருள்வீர் கன்னியம்மாள்
புலித்தோலா மாசனத்தில் பொருந்திருப்பீர் கன்னியம்மாள்
மலிவான மான்றோலில் மருவிநிற்பீர் கன்னியம்மாள்
ஆரைநினைப் பனம்மா அலங்கார கன்னியம்மாள்
கோருகின்ற வென்னாவில் கொலுவிருப்பாய் கன்னியம்மாள்.

கன்னியம்மன் பாடல் முற்றிற்று.

உ

ஸ்ரீ காளியம்மன் துணை.



## ஸ்ரீ காளியம்மன் பாடல்.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

ககனர்கள் தொழு திறைஞ்சுங் காஞ்சிமா நகரந் தன்னில்
சுகந்தரும் வலிதை ஞான சுந்தரி காமக் கண்ணி
திகழுறு பீடத் தஷ்ட திக்கிலும் வீற்றி ருக்கும்
பகவதி கௌரி துர்க்கை பதமலர் சிரமேற் கொள்வாம்.

இதுவுமது.

மலர்மகள்மருவுக்காஞ்சி மாநகர் தன்னி லென்றும்
வலம்புரிதவழும்வே கவதிவட புரத்திற் கோயிற்
றுலங்கவே வீற்றிருக்குஞ் சுந்தரி கரிக்கமர்ந்த
தலைமையாம் பத்ரகாளி தாளிணைவணங்கி வாழ்வாம்.

இதுவுமது.

மாமலிமிகுந்தகச்சி மாநகர்குணபாற் றன்னில்
பூமலிபடர்ந்தபொய்கை புள்ளினம் மருவுஞ்சோலை
தாமலி ஆலயத்திற் றுலக்கமாய் வீற்றிருக்கும்
மாபலி கொண்டகாளி மலரடி சிரமேற்கொள்வாம்.

இதுவுமது.

தலமெலாம் புகழும்பஞ்ச தலத்தினி லொன்றுயென்றும்
நலமிகுந்திலகுகாஞ்சி நகர்சர்வதீர்த்தத் தென்பால்
அலகிலாப்புகழ் கொள்க்ஷேத்தி ராங்கியென் றமரரேத்தக்
குலவிய துர்க்கைபொற்றாள் குறித்திடர் முறித்துவாழ்வாம்.

துதிகவி.

நாரணி வராகி போற்றி நான்மறை பொருளே போற்றி
பூரணி விமலி போற்றி புவன ரக்ஷகியே போற்றி
தாரணி யுலகீரேழுந் தந்துகாத் தவளே போற்றி
காரணி கௌரிபத்ர காளியே போற்றி போற்றி.

அடதாளம்.

காளிபத்ர காளிபத்ர காளிபத்ர காளி
காளிபத்ர காளிபத்ர காளி யெண்டோளி
பத்ரகாளி பத்ரகாளி பத்ரகாளி தேவி
பத்ரகாளி பத்ரகாளி சித்ரகாளி தேவி
ஓங்கார ஓங்கார ஓங்காரமாங் காளி
ஓங்கார ஓங்கார ரீங்காரமாங் காளி.

பாடல்

நான்மறையில் நடனமிடும் நாரணியே பத்ரகாளி
தானவரைச் சங்கரிக்கத் தானுதித்த பத்ரகாளி
ஆரணியாம் பார்வதியால் அவதரித்த பத்ரகாளி
கோரஞ்செய்த தாருகனைக் கொன்றவட பத்ரகாளி
அரனுடனே திருநடன மாடிய பத்ரகாளி
பரிவாய் வீரபத்திரற்குப் பாரியான பத்ரகாளி
வரையன் மகளுக்காக வாநதியை தடுத்த காளி
பிரளய சத்தியென்று பேர்கொண்ட பத்ரகாளி

முடுகு பாடல்.

பொல்லாத மகிடனுயிர் போக்கிய பத்ரகாளி
எல்லையெல்லாங் காவல்கொண் டிருக்கும் வடபத்ரகாளி
சூரருடலையெல்லாஞ் சூறையிட்ட பத்ரகாளி
வீரருடலை யெல்லாம் வெட்டிபலி யிட்டகாளி
நாரணிவராகி யென்று நாமங்கொண்ட பத்ரகாளி
பேரின்ப கௌரியென்று பேசும் வடபத்ரகாளி
எண்டோளியென்று நாமம் இலகுவட பத்ரகாளி
அண்டரிடர் தீர்த்தே யருள்புரியும் பத்ரகாளி
கருணையாய் ருத்ரகுரு கண்டத்தமர்ந்த காளி
பெருமையாய் மேருதனில் பேசும் வடபத்ரகாளி

இமையகேதாரந் தன்னில் இருக்கும்வட பத்ரகாளி
அமரர்புகழ்காசிநக ரமர்ந்த வடபத்ரகாளி
கார்தவழுந் திருவாலங் காடமர்ந்த பத்ரகாளி
ஏர்பரவுஞ் சிதம்பரத்தி லிருக்கும் வடபத்ரகாளி
கருதரியதிருவானைக் காவமர்ந்த பத்ரகாளி
திருமருவுகாளஸ்த்ரியில் திகழ்கின்ற பத்ரகாளி
விந்தைமிகு மைசூரில் விளங்குஞ் சாமுண்டிகாளி
அந்தமிகுந் தென்மதுரை யமர்ந்த வடபத்ரகாளி
கோலமிகுந்திருவருணை கொலுவமர்ந்த பத்ரகாளி
சீலமிகும்வாழைநகர் சிறந்தமர்ந்த பத்ரகாளி
வீசுபுகழ் காஞ்சிநகர் வீற்றிருக்கும் பத்ரகாளி
தேசுதிருவீதிபள்ளந் தேன்மொழியே பத்ரகாளி
நாமம் வேலாத்தாளென்னும் நாரணியே பத்ரகாளி
காமகோடிபீடத்தில் காவல்கொண்ட பத்ரகாளி
கச்சபேசர் ஆலயத்தில் களித்திருக்கும் பத்ரகாளி
உச்சிதபொன்னம்மையென்னு முவந்தருளும் பத்ரகாளி
வாமளிக்குங்கம்பாநதி வடபாலில் பத்ரகாளி
பிரளயசத்தியென்று பிரியங்கொண்ட பத்ரகாளி
சந்தவெளியாலயத்தில் சதிராடும் பத்ரகாளி
சுந்தரக்ஷேத்திராங்கியென்று சுருதிபுகழ் பத்ரகாளி
பேர்மேலபாளயம்வாழ் பெண்மணியே பத்ரகாளி
வீரமாங்காளியென்று விளம்பிவரும் பத்ரகாளி
திருவேகம்பன் வீதியிலே திகழ்ந்திருக்கும் பத்ரகாளி
அருமையா யரசுகாத்த அம்மணியே பத்ரகாளி
மாந்தளிர் மேனிவாய்ந்த மாதாவே பத்ரகாளி
தான்றோன்றி யம்மையென்ற தற்பரையே பத்ரகாளி
அஞ்சலென் றடுத்தவரை யாதரிக்கும் பத்ரகாளி
செஞ்சடைப் பிராட்டியென்னுஞ் சேல்விழியே பத்ரகாளி
கோனேரி குப்பமென்ற குணதிசையிற் பத்ரகாளி
தேன்மொழியே கோவிலாத்தாள் தேவியென்ற பத்ரகாளி
பஞ்சவர்ண கிளிகள்கொஞ்சும் பத்தினியே பத்ரகாளி
மஞ்சள்நதி வடகரையில் மருவிநிற்கும் பத்ரகாளி
மாசிலா மேனிவாய்ந்த மாதாவே பத்ரகாளி
வாசமிகும் வேகவதி வடபுரத்தில் பத்ரகாளி
நந்தவனங்கள் சூழ நாடியமர் பத்ரகாளி
சுந்தரமிகு மாலயத்தில் சூழ்ந்திருக்கும் பத்ரகாளி
நான்குபுறம் திருமதில்கள் நாயகியே பத்ரகாளி
வான்குலவுந் துவஜஸ்தம்பம் வளங்குலவும் பத்ரகாளி
முகில்தவழுங் கோபுரங்கள் முக்கனியே பத்ரகாளி
அகிலமெங்கும் புகழ்ந்தேத்து மாலயத்தில் பத்ரகாளி

பேர்கருக்கி லமர்ந்தாளென்னும் பெண்மணியே பத்ரகாளி
பார்முழுதும் பதியாகிப் பரவிவரும் பத்ரகாளி
கரிபரியு மெருமைக்கடாக் காவுகொண்ட பத்ரகாளி
பரிந்தாடு பன்றிகோழி பலிகொண்ட பத்ரகாளி
அருந்தவத் தோர்கள்போற்று மன்னையே பத்ரகாளி
பெரும்பூதப் படையுடனே பேய்கொடி யுடையகாளி
பிண்டியும் பாலமுடன் பிரம்மசூல முடையகாளி
தண்டுகதை வாளுடனே தனுவம்பு முடையகாளி
வட்டரிவா ளீட்டியுடன் வளைதடிகை யுடையகாளி
கட்டாரி கடகமுடன் கலைமழுகை யுடையகாளி
டக்கையுடன் பொற்பிரம்பு டமாக முடையகாளி
சுக்குமாந் தடியுடனே சுழல்பாச முடையகாளி
சங்குடனே பல்லயமுஞ் சக்கா முடையகாளி
தங்கவெறி யீட்டிவாங்கு தடமுசல முடையகாளி
நாலெட்டு வாயுதமும் நாலிருகை பிடித்தகாளி
வாலசாமுண்டி யென்று வழங்கிய பத்ரகாளி
உக்ரவீர சிங்கத்தின்மே லுலாவிவரும் பத்ரகாளி
கொக்கரித்துக் காவலர்கள் கொண்டாட மகிழ்ந்தகாளி
ஆளன்வீர பத்ரரொடு மமர்ந்துவரும் பத்ரகாளி
கேள்வனுடன் கோலங்கொண்ட கீர்த்திவட பத்ரகாளி
சந்ததமும் நற்காக்ஷி தானளிப்பீர் பத்ரகாளி
விந்தையாயிக் கொலுவில் வீற்றிருப்பீர் பத்ரகாளி
கற்பூர தூபதீபங் காணுவீர் பத்ரகாளி
அற்புதமா மலர்தூவி யடிபணிந்தேன் பத்ரகாளி
பாலன் கோட்டையனிட பாடலுக்கு பத்ரகாளி
சீலமாய் வந்துநல்ல சீருள்வீர் பத்ரகாளி
ஆரைநினைப்ப னம்மா அலங்கார பத்ரகாளி
கோருகின்ற வென்னுவில் கொலுவிருப்பாய் பத்ரகாளி.

காளியம்மன் பாடல் முற்றிற்று.

உ

மாரியம்மன் துணை.



## மாரியம்மன் பாடல்.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

பூதரந் தன்னின் முன்னான் புங்கவ ரிடுக்கண் டீர
வேதனூ லியற்று மந்தர வேள்வியி லுதித்து வந்தே
காதக வைசூரன் றன் கடுஞ்சிரங் கொய்து காத்த
வேதநாயகியாஞ்சந்த வெளி யம்மை மலர்த்தாள் போற்றி.

### இதுவுமது.

பூதலந்தனிற் சிறந்த புண்ணிய புரிகளேழில்
மாதவருறையுங் காஞ்சி மாநகர் தன்னின்மிக்க
தீதகல்கின்றசர்வ தீர்த்தத்தின் தென்பால் வைகும்
வேதநாயகியாஞ் சந்தவெளி யம்மை மலர்த்தாள் போற்றி.

### இதுவுமது.

மாதரி வீரிஞான மனோன்மணி ரேணு காம்பாள்
ஆதரி வைய மேழும் அளித்தருள் செய்யுஞ் சத்தி
மாதவர் முனிவரேத்த மன்னுபொன் மாரியென்றும்
வேதனை யகற்றுஞ்சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி.

### வேறு.

அந்தமிகு வேப்பிலைபொற் காகமதி லலங்கரித்தே யடியா ரெல்லாம்
தொந்த முடன் கூத்தாடித் தோத்தரித்து நின்றாளைத் தொழுது போற்ற
விந்தையுட னெழுந்தருளிக் காஞ்சிநகர் வீதியெல்லாம் விழைந்து சூழ்ந்து
வந்தருள்செய் சந்தவெளி யம்மைமலர்த் திருவடியை வணங்கி வாழ்வாம்.

### இதுவுமது.

கார்வளர் சோலைசூழுங் காஞ்சிமா நகரந்தன்னில்
சீர்வளரறத்தின் மிக்க செல்வியன் றெருவிற்றாய
ஆர்வமாய் கோயில்கொண்டே யடியவர்க்கருள் செய்கின்ற
ஏர்பரஞ்சோதி யம்மை யிணையடி இறைஞ்சி வாழ்வாம்.

### கலி விருத்தம்.

அன்னமாடு மகன் றடக் கஞ்சமும்
பொன்னினுற் செய்து பொலிந்துறு மாளியுஞ்
சொன்ன நன்வளந் தோன்றிடுங் காஞ்சியில்
மன்னி வாழ்ந்திடு மாமக மாரியே.

### அடதாளம்.

மாரிமக மாரிமக மாரிமக மாரி
மாரிமக மாரிமக மாரியுப காரி
மழுமகுட மழுமகுட மழுமகுட மாரி
மழுமகுட மழுமகுட அழஸ்மகுட வீரி
சந்தவெளி சந்தவெளி சந்தவெளி தாயே
சந்தவெளி சந்தவெளி சிந்தை மகிழ்வாயே.

### பாடல்.

உலகெலாந் தான்விளங்கு முத்தமியே மாரியம்மாள்
மலருறையுஞ் சடைநாக மதிவதன மாரியம்மாள்
எங்கும் புகழ்படைத்த ஈஸ்வரியே மாரியம்மாள்
திங்களொளி வதனத் திரிபுரையே மாரியம்மாள்
செங்குமுத வாயுடைய சேல்விழியே மாரியம்மாள்
சங்கு கழுத்தியரே சங்கிரியே மாரியம்மாள்
பின்னல் சடையுடைய பூங்கொடியே மாரியம்மாள்
மின்ன லிடையுடைய மெல்லியரே மாரியம்மாள்
வர்ண வுடையுடைய வடிவழகி மாரியம்மாள்
அன்ன நடையுடைய அருங்கிளியே மாரியம்மாள்
பதும மலர்ப்பாதப் பைங்கொடியே மாரியம்மாள்
கதலித் தொடையுடைய கற்பகமே மாரியம்மாள்
காம்பணி தோளுடைய கட்டழகி மாரியம்மாள்
பாம்பணி பூண்டவளே பத்தினியே மாரியம்மாள்
வேம்படியி லமர்ந்துமே விளையாடு மாரியம்மாள்
சாம்ராணி வாசகியே சாம்பவியே மாரியம்மாள்

## முடுகுபாடல்.

உம்பரிட ரகன்றிடவே யுத்தமியே மாரியம்மாள்
அம்புஜன்செய் மாமகத்தி லவதரித்த மாரியம்மாள்
வடுகிமுக் கண்ணியென்று வந்துதித்த மாரியம்மாள்
கொடியவை சூரனொடு கோறல்செய்த மாரியம்மாள்
வைசூரன் றன்னுயிரை வாங்கிய மாரியம்மாள்
வைசூரி யெனவழங்கும் வாழ்வரசே மாரியம்மாள்
பார்த்தாங்கு சேஷனிட பாலகியே மாரியம்மாள்
பேர்நாக வல்லியென்று பேசிய மாரியம்மாள்
விந்தையாய் வந்துதித்து விளங்கிய மாரியம்மாள்
பந்தந்தரு பிருகுரிஷி பாரியான மாரியம்மாள்
பேரும்பிர பலமழகும் பெருமையுறு மாரியம்மாள்
வாரணஞ்சூ ழுலகமெங்கும் வழங்கிவா மாரியம்மாள்
அந்நாளுன் கற்புறுதி யரிந்திடவே மாரியம்மாள்
மன்னுபரன் விதியும் மாயவனும் மாரியம்மாள்
உருக்கரந்த யதிதிகளாய் உந்தனிடம் மாரியம்மாள்
திருவாண பிக்ஷைகேட்க நீயறிந்து மாரியம்மாள்
மூவரையும் புதல்வராக்கி முலைகொடுத்த மாரியம்மாள்
ஆவலுடன் நிஜசொரூப மாகியவர் மாரியம்மாள்
என்னவரம் வேண்டுங்கே ளென்றிடவு மாரியம்மாள்
உன்றிரு வயிற்றிலவர் உகந்திருந்து மாரியம்மாள்
சேயராய்ப் பிறப்பீரென்று செப்பவுந்தான் மாரியம்மாள்
ஆயன்பின் னுதிப்பானென்று அானுரைத்து மாரியம்மாள்
தம்மைமதி யாமல்முலை தந்ததினுல் மாரியம்மாள்
உம்மழகு மாறவென்று உரைத்தேக மாரியம்மாள்
தீர்த்தமாடி வந்துரிஷி தேவியுனை மாரியம்மாள்
பார்த்தவுரு மாரியதைப் பகுத்தரிந்து மாரியம்மாள்
திருஜெனனஞ் செய்யவென்று திகழ்முனிவர் மாரியம்மாள்
அருளுமொழி கேட்டுன்ற னகமகிழ்ந்து மாரியம்மாள்
பேர்பெருக வேண்டுமென்று பெண்மணியே மாரியம்மாள்
காரணமா யுருவத்தைக் கரைந்துறைந்து மாரியம்மாள்
தேன்சொரியு மலையாள தேசத்தில் மாரியம்மாள்
மான்சிங்கம் வாழ்வனத்தில் மகிமையாய் மாரியம்மாள்
உடும்புவாழ் புற்றுக்குள் உற்பவித்த மாரியம்மாள்
திடமிகுங் குழந்தையாகத் திகழ்ந்திருந்த மாரியம்மாள்
வேடனுல் வெளியாகி வேந்தனிடம் மாரியம்மாள்
பாடகந் தண்டைகொஞ்ச பயின்றிருந்த மாரியம்மாள்
பெருமை மிகவுடைய பெண்மணியே மாரியம்மாள்
வருமாராஜன் றன்மனையில் வளர்ந்திருந்த மாரியம்மாள்
தேடரிய சமதக்கினி தேவியான மாரியம்மாள்

ஆடாவிற் ருன்றுயிலு மாயனே மாரியம்மாள்
புத்திரனுய்ப் பெற்றுரிஷி பூஜைக்கு மாரியம்மாள்
எத்தினமும் சென்றுஜல மெடுத்துவரும் மாரியம்மாள்
கற்பின் பெருமையினுற் கட்டழகி மாரியம்மாள்
செப்புகுடம் போல்மணலைச் செய்துநிதம் மாரியம்மாள்
புனல்திரட்டி வந்துபூஜை புரியத்தந்து மாரியம்மாள்
மனமகிழ்ந்து வாழ்நாளில் மாதாவே மாரியம்மாள்
ஓர்பகல் நதியருகில் உத்தமியே மாரியம்மாள்
நீர்திரட்டச் சென்றிருக்க நீள்விசும்பில் மாரியம்மாள்
உருவிலிபோல் காந்தருவன் உலாவிவர மாரியம்மாள்
திருநதியில் அவன்வனப்புத் திகழ்ந்திடவே மாரியம்மாள்
கண்டவுடன் இவ்விதம் கட்டழகன் மாரியம்மாள்
உண்டோதா னென்றுசொல்லி யுன்மனதில் மாரியம்மாள்
நினைந்துதலை நிமிராமல் நீர்திரட்ட மாரியம்மாள்
தினையளவு நீர்காத்தில் திரளாமல் மாரியம்மாள்
கங்கை யொதுங்குகின்ற காரணத்தால் மாரியம்மாள்
சங்கையுற்று நீயிருக்கச் சமதக்கினி மாரியம்மாள்
கற்பழிந்தா யென்றுணர்ந்து கடுஞ்சினமாய் மாரியம்மாள்
நற்பாசு ராமனிடம் நவன்றிட மாரியம்மாள்
உடைவாள் பிடித்துமைந்தன் ஓடிவர மாரியம்மாள்
கடைக்கண்ணுற் பார்த்துமனக் கலக்கங்கொண்டு மாரியம்மாள்
ஒண்டவிட மில்லாமல் உத்தமியே மாரியம்மாள்
அண்டி மதங்கையெனும் அரக்கியினுல் மாரியம்மாள்
அநந்த நூருயிரம்பேர் அரக்கர்கள் மாரியம்மாள்
சினந்துமே யவரவர்கள் செறிந்தெதிர்க்க மாரியம்மாள்
பேர்மதங்கை யென்றுரைக்கும் பெண்ணரசால் மாரியம்மாள்
போர்புரிந்து அரக்கரெல்லாம் போய்மடிய மாரியம்மாள்
அரக்கி மதங்கியவள் அமர்புரிந்து மாரியம்மாள்
இரக்க மில்லாமலங்கு எதிர்த்துநிற்க மாரியம்மாள்
கண்டங்கு பாசுராமன் கண்சிவந்து மாரியம்மாள்
துண்டுரெண்டாய் விழச்சிரசைத் துணிந்திடவும் மாரியம்மாள்
வெட்டத்தலை கொடுக்க வெட்டியபின் மாரியம்மாள்
ஒட்டும்படி செய்துமைந்தன் உனையெழுப்ப மாரியம்மாள்
அரக்கியுடலில் சிரம் அமர்ந்ததினுல் மாரியம்மாள்
சிரசே பிரதானமென்று செகத்தின்கண் மாரியம்மாள்
பதியா யமர்ந்தருள் பாலிக்கு மாரியம்மாள்
விதிமாலிந்திரர் முதலோர் வேண்டித்தொழு மாரியம்மாள்
எக்கால தேவியான யீஸ்வரியே மாரியம்மாள்
அக்கினி சொரூபியான ஆதிசத்தி மாரியம்மாள்
கண்ணுயிரம் படைத்த காரணியே மாரியம்மாள்

வண்ணூர கந்தனிலே வளந்திருந்த மாரியம்மாள்
பொன்வரை தன்னிலேதான் பொலிவுற்ற மாரியம்மாள்
மன்னு கயிலாயமலை மருவிநிற்கும் மாரியம்மாள்
இமையமலை மீதமர்ந்த யீஸ்வரியே மாரியம்மாள்
சமையபுரத் தெல்லையிலே சதுர்பெற்ற மாரியம்மாள்
வளமிருங் கன்னபுரம் வந்தமர்ந்த மாரியம்மாள்
களக்கமகற்று மூற்றுக் காடமர்ந்த மாரியம்மாள்
பார்புகழும் படவேடு பதியமர்ந்த மாரியம்மாள்
பேர்பெரிய பாளையத்தில் பெருமையுற்ற மாரியம்மாள்
வீராணத் தெல்லையிலே வீற்றிருக்கும் மாரியம்மாள்
சீரான துலுக்காணஞ் சீர்பெற்ற மாரியம்மாள்
புதுவை நகரமர்ந்த பூங்கொடியே மாரியம்மாள்
சதுர்பெற்ற செங்கழுநீர் சங்கரியே மாரியம்மாள்
கடும்பாடி யெல்லையிலே காவல்கொண்ட மாரியம்மாள்
இடும்பா வனந்தனிலே எழுந்தருளு மாரியம்மாள்
முத்துப்போட்டு முத்திறக்கு முக்கனியே மாரியம்மாள்
சித்துவிளை யாடிவருஞ் சிவசக்தி மாரியம்மாள்
நாட்டமா யுலகமெங்கும் நடனமிடு மாரியம்மாள்
கோட்டையம்மை யென்றுபெயர் கொண்டமக மாரியம்மாள்
மார்கட்டி லமர்ந்திருக்கும் மாதாதண்டு மாரியம்மாள்
தேர்மீது யெழுந்தருளும் தெய்வமக மாரியம்மாள்
பன்னுமறை துதிகாஞ்சிப் பதியமரு மாரியம்மாள்
பொன்னேரி கரைதனிலே பொருந்திநிற்கு மாரியம்மாள்
அன்னைவடி வழகியான ஆதிசத்தி மாரியம்மாள்
மன்னுபரஞ் சோதியான மாதாவே மாரியம்மாள்
வேகவதி வடபுறத்தில் வேல்விழியே மாரியம்மாள்
நாகமணி படவேடு நாயகியே மாரியம்மாள்
தேசம்புகழ் சர்வதீர்த்தத் தென்றிசையில் மாரியம்மாள்
வாசமிகு மாலயத்தில் வாழ்ந்திருக்கும் மாரியம்மாள்
சுற்றுத் திருமதில்கள் சூழ்ந்திருக்கும் மாரியம்மாள்
சித்ரமிகுங் கோபுரங்கள் சிறுற்ற மாரியம்மாள்
பக்கமெங்கு மண்டபங்கள் பதிந்திருக்கும் மாரியம்மாள்
உக்ரபலி பீடமுதல் உயர்ந்திருக்கு மாரியம்மாள்
விந்தையுறு மூலஸ்த்தானம் விளக்கமுறு மாரியம்மாள்
சுந்த்ரகமல பீடந்தனில் சூழ்ந்திருக்கு மாரியம்மாள்
அந்தமிகுஞ் துவஜஸ்தம்பம் அமர்ந்திருக்கு மாரியம்மாள்
சந்ததமு நற்காக்ஷி தானளிக்கு மாரியம்மாள்
மாஞ்சோலை சூழ்திருக்க மருவிநிற்கு மாரியம்மாள்
பூஞ்சோலை சூழ்ந்திருக்க புகழ்ந்திருக்கு மாரியம்மாள்
வந்தடியார் தொழுதேத்த வரமளிக்கு மாரியம்மாள்

அந்தமிகுஞ் சந்தவேளி அம்மையென்ற மாரிம்மாள்
அடிமேலுந் திடைமேலு மணிமேலு மாரியம்மாள்
முடிமேலு மடிமேலும் முகந்தனிலு மாரியம்மாள்
மார்மேலுந் தோள்மேலும் மணியாரவம் மாரியம்மாள்
ஆர்பரித்து விளையாட அகமகிழும் மாரியம்மாள்
காரிருள் குழலுடைய கன்னிமக மாரியம்மாள்
தேரிலகப்படாமல் கார்த்த தேவிமக மாரியம்மாள்
காலைமாலை உச்சிமூன்று காலத்திலு மாரியம்மாள்
சூலைநோய் வாராமற்கார்ப்பாய் சுந்தரியே மாரியம்மாள்
பேர்கோடி தெய்வமென்று பெண்மணியே மாரியம்மாள்
ஊர்கூடிப் பொங்கலிட்டு உனைத்தொழுவே மாரியம்மாள்
ஒற்றைச் சடலாட உத்தமியே மாரியம்மாள்
கற்றவர்கள் தொழுதேத்துங் காரணியே மாரியம்மாள்
அஞ்சு கரகமம்மா ஆரணங்கே மாரியம்மாள்
கொஞ்சிவிளை யாடிவரக் கோலங்கொண்ட மாரியம்மாள்
கொடிபறக்கச் சடலாடக் குடைகவிய மாரியம்மாள்
படியாளு முடிமன்னர் பணிந்தேத்த மாரியம்மாள்
கொக்கரித்துப் பூதபடை கொலுவமர மாரியம்மாள்
விக்ரம வாளேந்தி விளையாடு மாரியம்மாள்
காவலர்கள் கொக்கரிக்கக் கருணைசெய்யு மாரியம்மாள்
சேவகர்கள் ஆர்ப்பரிக்கச் ஜெயம்அருளு மாரியம்மாள்
பரிவாரமுடன் கூடிப் பதியமரும் மாரியம்மாள்
அரியாசனத்தின் மீது அமர்ந்தருள்வாய் மாரியம்மாள்
கற்பூர தூபதீபங் காணுவீர் மாரியம்மாள்
அற்புதமா மலர்தூவி யடிபணிந்தேன் மாரியம்மாள்
பாலன் கோட்டையனிட பாடலுக்கு மாரியம்மாள்
சீலமாய் வந்துநல்ல சீரருள்வீர் மாரியம்மாள்
புலித்தோலா மாசனத்தில் பொருந்துவீர் மாரியம்மாள்
மலிவான மான்றோலில் மருவிநிற்பீர் மாரியம்மாள்
ஆரை நினைப்பனம்மா ஆலங்கார மாரியம்மாள்
கோருகின்ற வென்னுவில் கொலுவிருப்பாய் மாரியம்மாள்.

மாரியம்மன் பாடல் முற்றிற்று.

உ

துரௌபதையம்மன் துணை.



## துரௌபதை யம்மன் பாடல்.

### எழுசீர் ஆசிரிய விருத்தம்.

செய்யவள்போல் துருபதன்செய் வேள்விதனில் மகவாகி செயமிகுந்த
ஐவருக்குந் தேவியென்றே யடியவர்க ளிடாகற்றி யவனிமீது
வைபவஞ்சேர் எழில்வன்னி வசந்தமெனுந் திருக்கோலம் வாய்க்கப்பெற்ற
மைவிழியாள் துரௌபதைபொன் மலரடியையெந்நாளும் மனத்துள்வைப்பாம்.

### இதுவுமது.

நற்றவருறையுங் காஞ்சி நகர்திருவோண காந்தன்
பொற்றளிவடபால் தன்னில் பொன்மக ளெனவே தூய
விற்பன ரைவரோடு வீற்றிருந் தருள்பாஞ்சாலி
அற்புத கமலபாத மனுதினந் துதிசெய்வோமே.

### காசி காண்டம் இதுவுமது.

சுருகுழவிபிறை யலங்கலெம்மா னருளால் குந்திவயற்
றுனுய்செல்வம் தழைத்தோங்க வைவர்பிறந்தாருங் கவர்க்குத்
தாரோர்மனையாய் பாஞ்சாலன் புதல்வியாகித் தழன்மகத்திற்
மீனுர்தங்கட் டுரோபதையும் மின்னுக்கொடிபோல் வந்துதித்தாள்.

### இதுவுமது.

அந்தணர் குலத்தில்வந்தோ னசிலோமன் றலைவிழாமல்
சந்தமா ரிடகறத்தால் தாங்கிவாள் வலக்கைகொண்டோன்
மந்திரித் தலைமைபூண்டோன் மறையெலாமுணர்ந் தோனைச்
சுந்தர போதராஜன் நமக்கொரு துணைவனுமால்.

### அடதாளம்.

குந்திமரு குந்திமரு குந்திமரு மகளே
குந்திமரு குந்திமரு மூந்திமரு மகளே

சந்த்ரகுல சந்த்ரகுல சந்த்ரகுல விளக்கே
சந்த்ரகுல சந்த்ரகுல சந்த்ரகுல விளக்கே
மதிரூபமா மதிரூபமா மதிரூபமா மயிலே
மதிரூபமா மதிரூபமா மதிரூபமாங் குயிலே.

பாடல்.

ஆதி பராபரையே அபிஷேக துரோபதாம்பாள்
சோதி பராபரையே சொல்லரிய துரோபதாம்பாள்
விந்தைமிகுஞ் சந்த்ரகுலம் விளங்கவந்த துரோபதாம்பாள்
ஐந்தாம்வேத மெனவிளங்க அவதரித்து துரோபதாம்பாள்
துருபதன் மாமகத்தில் துலங்கிய துரோபதாம்பாள்
பரிவாயாக சேனனிடம் பயின்றிருந்த துரோபதாம்பாள்
தாணிபாரந் தீர்க்கவந்த தையலே துரோபதாம்பாள்
திருமகள்போல் வளர்ந்த திருந்திழையே துரோபதாம்பாள்
துஷ்டத்துய் மன்றங்கையாய்த் துலங்கிய துரோபதாம்பாள்
அஷ்டவைஸ் சரியமுள்ள அம்மணியே துரோபதாம்பாள்

மூடுத பாடல்.

தனுவளைத்த பற்குணற்குத் தாரமாந் துரோபதாம்பாள்
மனுதவரு தைவருக்கு மங்கையான துரோபதாம்பாள்
கோலமிகு மிந்த்ரபிரஸ்தம் கொலுவமர்ந்த துரோபதாம்பாள்
ஞாலம்புகழ் இராஜசுயாகம் நடத்திவைத்த துரோபதாம்பாள்
தூரியன்பெரு வாழ்வொழிக்கத் தோன்றிய துரோபதாம்பாள்
கரியமனப் பிதாவோலை கண்டைவர் துரோபதாம்பாள்
ஐவர்களத் திசுகர் அழைக்கச்சென்ற துரோபதாம்பாள்
தையல் காந்தாரியிடந் தானிருந்த துரோபதாம்பாள்
சூதாலைவரைச் செயித்துச் சுயோதனன் துரோபதாம்பாள்
மாதாவென் றுன்றனையே மதியாமல் துரோபதாம்பாள்
துற்சாதனன் றன்னுலுன் றுகிலுரியத் துரோபதாம்பாள்
கற்சித்துப் பற்கடித்துக் கண்சிவந்து துரோபதாம்பாள்
காவாயரி நந்தாவென்று கருதிய துரோபதாம்பாள்
தேவாவரி கிருஷ்ணவென்று தேடிய துரோபதாம்பாள்
போரு போருகத்துகில் பொருந்திவரத் துரோபதாம்பாள்
பாருலகில் சேலைபல பாவிவரத் துரோபதாம்பாள்
வேணுநாதன் றுணைகொண்டு வேல்விழியே துரோபதாம்பாள்
நாணங்கொண்டு துரியன்மனம் நடுங்கிடவே துரோபதாம்பாள்
கொக்கரித்து பெருஞ்சபதங் கோரிய துரோபதாம்பாள்
தக்கவைவ ரோடுவனந் தான்சென்ற துரோபதாம்பாள்
கந்தமலர்க் குழல்விரித்துக் காடுறைந்த துரோபதாம்பாள்
வந்தகீம் மீசனுயிர் வதையச்செய்த துரோபதாம்பாள்
வனவாசம் பன்னிரண்டு வருடமுந் துரோபதாம்பாள்

கனமிகுங் காடுகளில் கழித்திருந்து துரோபதாம்பாள்
பார்புகழும் விராடபுரம் பரிந்துவந்தே துரோபதாம்பாள்
பேர்மறைவாய் ஓராண்டு பெண்மணியே துரோபதாம்பாள்
சுதட்சணு தேவியிடஞ் சுந்தரியே துரோபதாம்பாள்
அதிஷ்டவச மாகவேதான் அமர்ந்திருந்த துரோபதாம்பாள்
பரதகண்ட மெங்கும்புகழ் பத்தினியே துரோபதாம்பாள்
விரதசாரணி யென்றே விளங்கிய துரோபதாம்பாள்
கீசக னுயிர்போக்கிக் கீர்த்திகொண்ட துரோபதாம்பாள்
மாச்சரியங் கொண்டவரை மாயச்செய்த துரோபதாம்பாள்
வனங்கடந்து நகரடைந்த வஞ்சியரே துரோபதாம்பாள்
சினங்கொண்டு துரியன்மீது சிதரணைத் துரோபதாம்பாள்
தூதனுப்பிச் சமருக்குத் தொடங்கிய துரோபதாம்பாள்
சூதுசெய்த துரியனுயிர் சூறையிடத் துரோபதாம்பாள்
ஐவருக்கும் பலந்தந்தே யனுப்பிய துரோபதாம்பாள்
பையரவக் கொடியோனிட படையெதிர்க்க துரோபதாம்பாள்
பஞ்சவரற் பற்பல படைகளையுந் துரோபதாம்பாள்
செஞ்சுடர்முன் இமம்போலச் சிதறடித்து துரோபதாம்பாள்
கல்நெஞ்சத் துரியனுயிர் கவர்ந்திட்ட துரோபதாம்பாள்
தொல்லுலகாசை விட்டுத் தொலையத்துரியன் துரோபதாம்பாள்
படுகளங்கள் சோதித்த பத்தினியே துரோபதாம்பாள்
கொடுதுரியன்மாளக்கூந்தல்கொண்டையிட்ட துரோபதாம்பாள்
பெருமைமிகு மைவருக்கும் பேரளித்த துரோபதாம்பாள்
குருக்ஷேத்ர பூமியிலே குதித்தெழுந்த துரோபதாம்பாள்
மன்னவ ரைவர்களும் மாதாவே துரோபதாம்பாள்
நன்மையா யரசுசெய்து நாடாண்டு துரோபதாம்பாள்
மகாவிந்தஞ் சேர்ந்தபின்பு மாதாவே துரோபதாம்பாள்
சகாயஞ்செய்த பாண்டவர்தஞ் சந்ததியில் துரோதாம்பாள்
பற்குனன்றன் புத்திரரின் பௌத்திரர்கள் துரோபதாம்பாள்
நற்குணமா யரசாளும் நாட்களிலே துரோபதாம்பாள்
ஒன்பதாம் தலைமுறையி லுத்தமியே துரோபதாம்பாள்
அன்புடனே சுனிதிமன்னன் அரசாளத் துரோபதாம்பாள்
மந்திரி போதராஜன் மருங்கிருக்கத் துரோபதாம்பாள்
தந்திர அல்லுராஜன் தானிருக்கத் துரோபதாம்பாள்
ரதகஜ துரகங்களும் ரக்ஷிகியே துரோபதாம்பாள்
பதாதிமுத லனந்தவித படைகளுடன் துரோபதாம்பாள்
பலமன்னர் பணிந்தேத்த பத்தினியே துரோபதாம்பாள்
உலகாண்டு வருகையிலே உத்தமியே துரோபதாம்பாள்
அந்தாத்தி லசரீரிதா னலங்கார துரோபதாம்பாள்
பந்தமுடன் தானுரைக்க பத்தினியே துரோபதாம்பாள்
அஸ்திநாபுர மழியுமென்று அம்மணியே துரோபதாம்பாள்

உத்தர வினுண்மைதனை உத்தமியே துரோபதாம்பாள்
கரிந்துமனங் கலங்கிக் காவலனுந் துரோபதாம்பாள்
தெரியத்தெக் கணத்தானந்த தேசத்தை துரோபதாம்பாள்
கைப்பற்றி யாசாளுநங் காலத்திற் துரோபதாம்பாள்
வைபவ மாயுலகாண்டு வருநாளிற் துரோபதாம்பாள்
கால வித்யாசத்தினல் கண்மணியே துரோபதாம்பாள்
கோலமுடி மன்னனேடு கோறல்செய்யத் துரோபதாம்பாள்
பழயநாள்பகை கொண்ட பகதத்தன் துரோபதாம்பாள்
வழியில்வந்த அசிலோமன் வஞ்சங்கொண்டு துரோபதாம்பாள்
பஞ்சவர் பகைவனென்று பட்டங் கொண்டு துரோபதாம்பாள்
கொஞ்சமு மிரக்கமில்லா கொடும்பாவி துரோபதாம்பாள்
ஐவரிட சந்ததியை யழிப்பனென்று துரோபதாம்பாள்
வயிரமாய் வந்தவனும் வாதுசெய்யத் துரோபதாம்பாள்
சுனிதன் மனங்கலங்கிச் சுந்தரியே துரோபதாம்பாள்
அனிதத்திற் கென்செய்வமென்று ஆகூழியே துரோபதாம்பாள்
அமர்புரியும் அசிலோமன் அழியானென்று துரோபதாம்பாள்
சமர்புரிந்து சுனிதனவன் சஞ்சலத்தாற் துரோபதாம்பாள்
இளைத்துமனது நொந்து எந்திழையே துரோபதாம்பாள்
களைத்து மனதுநொந்து காடுறைந்து துரோபதாம்பாள்
செஞ்சிநகர் வந்துமே செம்மலவன் துரோபதாம்பாள்
தஞ்சமென்றுமுனிவர்தங்கள் தாள்பணிந்து துரோபதாம்பாள்
அஞ்சலென யாசானுபை யாசனவர் துரோபதாம்பாள்
கஞ்சமலர் முகமலர்ந்து காவலனை துரோபதாம்பாள்
பயங்கொள்ள வேண்டாமென்ற பகர்ந்தவர்கள் துரோபதாம்பாள்
நயமுடனே தௌமியரை நன்கழைத்து துரோபதாம்பாள்
மூவருமாய் ஆலோசித்து முகமலர்ந்து துரோபதாம்பாள்
காவலனை யழைத்துக்கொண்டு கருணையுடன் துரோபதாம்பாள்
சதுர்முகனிடத்திற் சென்று சங்கரியே துரோபதாம்பாள்
பதுமத்தின் மீதமர்ந்த பங்கயனைத் துரோபதாம்பாள்
கண்டுஅடி பணிந்தவர்கள் கருத்தெல்லாந் துரோபதாம்பாள்
தண்டுளபன் மகனிடத்தில் தானுரைக்க துரோபதாம்பாள்
அல்லலது தீர்வதற்கு அம்புயனுந் துரோபதாம்பாள்
வல்ல அசிலோமனுயிர் வாங்குதற்குத் துரோபதாம்பாள்
உந்தனை கோரிவேள்வி யுறுதியாய்த் துரோபதாம்பாள்
செந்தழல் யாகஞ்செய்ய செப்பியவர் துரோபதாம்பாள்
நடவுமென விடைகொடுக்க நான்முகனுந் துரோபதாம்பாள்
அடவியில் வந்தவர்கள் ஆதிசத்தி துரோபதாம்பாள்
பலமுனிவர் புடைசூழப் பத்தினியே துரோபதாம்பாள்
அலங்கார யாககுண்டம் அவரமைத்து துரோபதாம்பாள்
அயன்விதித்த வீரசத்தி யாகமென்று துரோபதாம்பாள்

நயமுடனே செய்தபின்பு நாயகியே துரோபதாம்பாள்
உந்தனை யுச்சரித்து உத்தமியே துரோபதாம்பாள்
சிந்தனை செய்கையிலே சிரித்துவந்த துரோபதாம்பாள்
வைகாசி மாதத்திலே வளர்பிறையில் துரோபதாம்பாள்
வைபவ மிகுந்தசுக்ர வாரத்திலே துரோபதாம்பாள்
சண்டப்ர சண்டிசிவ சங்கரியே துரோபதாம்பாள்
அண்டர் முன்னேயவதரித்த ஆதிசத்தி துரோபதாம்பாள்
மன்னன் சுனிதன்நின் மலரடியைத் துரோபதாம்பாள்
அன்புடனே பணிந்தேத்த அலங்கார துரோபதாம்பாள்
மனுநெறி தவருத மன்னவன் துரோபதாம்பாள்
தனக்குவந்தகுறைகளெல்லாம் தானுரைக்கத்துரோபதாம்பாள்
அஞ்சாதே யென்றுசொல்லி ஆதரித்துத் துரோபதாம்பாள்
வஞ்சக னுடனேநீர் வாதுசெய்யத் துரோபதாம்பாள்
போர்புரிய அவனுதிரம் பொட்டளவும் துரோபதாம்பாள்
பாரில்விழ வொட்டாமல் பத்தினியே துரோபதாம்பாள்
செய்யும் படிக்குஒரு சேவகன் துரோபதாம்பாள்
வையகத்தி லுண்டோவெனும் வார்த்தைக்குத் துரோபதாம்பாள்
உண்டென்று போதராஜன் உனைப்பணியத் துரோபதாம்பாள்
கண்டுசந் தோஷித்துக் காதலாய்த் துரோபதாம்பாள்
பொல்லா அசி லோமனொடு போர்புரிந்து துரோபதாம்பாள்
மல்லாலவன் மடிய மாதாவே துரோபதாம்பாள்
மந்திரி போதராஜன் மறையவன் துரோபதாம்பாள்
தந்திரமா யிடதுகையில் தலையதனைத் துரோபதாம்பாள்
தாங்கிடவே ரத்தத்துளி தான்விழாமல் துரோபதாம்பாள்
ஓங்கார சொரூபியரே ஓம்நமோ துரோபதாம்பாள்
செஞ்சிப் பதிதனிலே சேவைதந்து துரோபதாம்பாள்
கொஞ்சியே யுலகமெங்கும் கோயில்கொண்ட துரோபதாம்பாள்
கலிமுதலில் அவதரித்த காரணியே துரோபதாம்பாள்
வலியுற்ற அசுரரெல்லாம் வதைசெய்த துரோபதாம்பாள்
பௌத்திரன் சுனிதன் றன்னால் பாரினில் துரோபதாம்பாள்
உபத்திரவ மொழிந்தபின்பு உத்தமியே துரோபதாம்பாள்
ஐவரிட தன்சிலையும் ஆலயமுந் துரோபதாம்பாள்
வையகத்தி லுன்றனையும் வாழ்வரசி துரோபதாம்பாள்
செய்துமன மகிழ்ந்து சேவித்துத் துரோபதாம்பாள்
ஒய்யார நெருப்புமிதி யுற்சவத்தைத் துரோபதாம்பாள்
நடத்தியே யுலகமெங்கும் நாயகியே துரோபதாம்பாள்
கடைத்தேற மார்க்கமெல்லாங் காரணியே துரோபதாம்பாள்
கற்பித்த படிசெய்தே காவலன் துரோபதாம்பாள்
அற்புதமாய்ப் பணிந்தேத்த அருள்புரியுந் துரோபதாம்பாள்
பாஞ்சாலன் தேசத்தில் பதியமர்ந்த துரோபதாம்பாள்

வாஞ்சையாய் அத்திநகர் வாழ்ந்திருந்த துரோபதாம்பாள்
விந்தைமிகு மலையாளம் வீற்றிருந்த துரோபதாம்பாள்
அந்தமிகு வனங்களெல்லாம் அமர்ந்திருந்த துரோபதாம்பாள்
புத்தூரி யமர்ந்திருக்கும் பூங்கொடியே துரோபதாம்பாள்
சித்தூரில் வாழ்கின்ற சிரோன்மணியே துரோபதாம்பாள்
பெருமையா யுலகமெல்லாம் பேசுகின்ற துரோபதாம்பாள்
சுருதிபுகழ் காஞ்சிநகர் சூழ்ந்திருக்குந் துரோபதாம்பாள்
தும்பைமலர் மாலையணி துரந்தரியே துரோபதாம்பாள்
அம்மங்கார் வீதியிலே அமர்ந்திருக்குந் துரோபதாம்பாள்
பாகுமொழியாளே நல்ல பத்தினியே துரோபதாம்பாள்
சேகுபேட்டை வீதியிலே செழித்தோங்குந் துரோபதாம்பாள்
பட்டவர்த் தனர்களெல்லாந் பணிந்தேத்துந் துரோபதாம்பாள்
செட்டிக் குளத்தெருவில் செழித்தோங்குந் துரோபதாம்பாள்
சிறப்புடனே வீற்றிருக்குஞ் செந்திருவே துரோபதாம்பாள்
அறப்பெருஞ் செல்விவீதி அமர்ந்திருக்குந் துரோபதாம்பாள்
நயமிகுந்த பஞ்சுபேட்டை நடுத்தெருவில் துரோபதாம்பாள்
ஜெயமிகுந்த வைவரோடு சேர்ந்தமர்ந்த துரோபதாம்பாள்
கோகுலர் கட்டுவித்த கோயில்தன்னில் துரோபதாம்பாள்
ஆகம முறைப்படியே அமர்ந்திருக்குந் துரோபதாம்பாள்
மாமலர் சோலைகளில் மருவிநிற்குந் துரோபதாம்பாள்
பூமலர் சோலைகளில் புகழ்ந்திருக்குந் துரோபதாம்பாள்
சுந்த்ரமிகுங் கோபுரங்கள் சூழ்ந்திருக்குந் துரோபதாம்பாள்
அந்தமிகுந் திருமதில்கள் அமர்ந்திருக்குந் துரோபதாம்பாள்
மங்குல்தவழ் துவஸ்தம்பம் மருவிநிற்குந் துரோபதாம்பாள்
சிங்கார பலிபீடஞ் சீருற்ற துரோபதாம்பாள்
அக்கினித் தேரேறிவரும் அலங்கார துரோபதாம்பாள்
உக்ரமந்த்ர வாளுடைய உத்தமியே துரோபதாம்பாள்
கந்தமலர் மணங்கமழுங் காரணியே துரோபதாம்பாள்
கொந்தங் கொடிகளுடன் கொலுவமர்ந்த துரோபதாம்பாள்
பண்டாரஞ் சாட்டியொடு பதிந்திருக்குந் துரோபதாம்பாள்
அண்டர்புக ழைவரொடும் அமர்ந்திருக்குந் துரோபதாம்பாள்
மாதவர்செய் மாமகத்தில் மருவிய துரோபதாம்பாள்
போதராஜன் புடைசூழப் பொருந்திருக்குந் துரோபதாம்பாள்
அல்லுராஜன் பணிந்தேத்த அமர்ந்திருக்குந் துரோபதாம்பாள்
எல்லையெல்லாங் காவலாக இருந்துவளர் துரோபதாம்பாள்
கருணை வைத்தன்பர்களைக் காத்திருக்குந் துரோபதாம்பாள்
பரிவாரமுடன் கூடிப் பதியமருந் துரோபதாம்பாள்
கற்பூர தூபதீபங் காணுவீர் துரோபதாம்பாள்
அற்புதமா மலர்தூவி அடிபணிந்தேன் துரோபதாம்பாள்
பாலன் கோட்டையனிட பாடலுக்குத் துரோபதாம்பாள்

சிலமாய் வந்துநல்ல சீருள்வீர் துரோபதாம்பாள்
புலித்தோலா மாசனத்தில் பொருந்துவீர் துரோபதாம்பாள்
மலிவான மான்றேலில் மருவிநிற்பீர் துரோபதாம்பாள்
ஆரைநினைப் பனமமா அலங்கார துரோபதாம்பாள்
கோருகின்ற வென்னுவில் கொலுவிருப்பீர் துரோபதாம்பாள்.

துரௌபதையம்மன் பாடல் முற்றிற்று.

உ



## பதியடுக்குப் பாடல்.

### வெண்பா.

திங்களணி சங்கரனுஞ் செங்கண்மால் நான்முகனுஞ்
செங்கனிவா யைங்கரனுஞ் செவ்வேளும்—மங்களஞ்சேர்
பார்ப்பதியுஞ் செந்திருவும் பாரதியும் வல்லபையுங்
கார்ப்பதியின் றன்மகளுங் காப்பு.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

செகத்தா னருளால் வந்து செனித்த மானிடர்க ளெல்லாம்
அகமகிழ்ந் துய்ய நாளும் அம்பிகை வாலை முக்கட்
பகவதி தன்னை வேண்டிப் பதியலங் கரித்துப் பூஜை
தகமையாய்ச் செய்யுங் காதை சாற்றவைங் கரன்றாள் காப்பே.

### இதுவுமது.

பரனேமன் றுதர்தேவி பார்வதி பச்சையம்மன்
வாரதி வேங்கையம்மன் வலம்புரி திகிரியேந்தும்
காதல னூர்யஸ்சுவாமி கமலையே பூங்குறத்தி
உரமத னுரிமுத்தாம் உயர்ரதிமுடி மான்றுமே.

### இதுவுமது.

கந்தன்பூங் குமரன்வள்ளி காத்தாயிதெய்வ யானை
விந்தைபூங்கனியாம் பிரம்மன் விதிசுக்மன் மலரின்மேவும்
நந்தணி வேணிதியான நாயகி கலைமடந்தை
இந்தவா றும்பரெல்லா மிருந்தனர் மறுபேர்பூண்டே.

இதுவுமது.

அலரவர் மறுபேர்கொண்டே யமர்ந்தன ரம்மையோடு
கவரிசாமரங் குடைகள் கவர்ந்திட வுலகமெங்குஞ்
சிவசிவாவென்றே யேத்துஞ் சிரொலிபொலிவுற் றோங்க
சுவவடிவானசத்தி நாரணி கழல்கள் போற்றி.

வசனம்.

ஸ்ரீமத் அகில கோடானுகோடி பிரமாண்டலங்களை யெல்லாம் சிருஷ்டிதிதி சம்மார திரோபானுக் கிரகங்களாகிய பஞ்ச கிருத்தியங் களைச் செய்து வரும் ஆதிபரமேஸ்வரர் பரமேஸ்வரியாகிய லலிதா சத்தி யென்னும் ஸ்ரீ காமாக்ஷி தேவியின் திருவருளைச் சிந்தித்துப் இப்பூவுலகின்கண் செனித்த ஆன்மகோடிகளெல்லாம் கடைத்தேறி உய்யும் பொருட்டு வருஷப்பிரதி வருஷம் ஒவ்வொரு வீதிகளிலும் வசிக்கும் பக்த சிரோன்மணிகள் ஷை பராசத்தி அம்சத்தில் வந் துதித்த தெய்வங்களைக் கோரி காய்ச்சல், குளிர், வாந்திபேதி, வை சூரி முதலிய துர்மரணம் நோவண்ணம் அவ்வவ்வீதிகளுக்குரிய தெய்வங்களைக்குறித்து வாவி,குளம்,தடாகம்முதலியதீர்த்தத்திற்குச் சென்று ஸ்நானஞ் செய்து செபதபங்களை முடித்து திருவிளக்கேற்றி மஞ்சளில் கணபதியை ஆவாகனஞ் செய்து மாவிலை, வேப்பிலை முத லிய பச்சிலைகளால் உருவகப்படுத்தி அலங்காரம் பொருந்திய எலு மிச்சம் பழத்தால் சிரசமைத்து வாசங்கமழும் ரோஜா முதலிய நறு மலர்களால் அலங்கரித்துச் சுகந்த கஸ்தூரி பரிமளாதிகளைத் தரித்து நூதனப் பட்டாடைகளை யுடுத்தி சந்தன குங்குமப் பொட்டுகளை யணிந்து பராசத்தியின் திருநாமங்களை யுச்சரித்து பொற்சிலம்பு உடுக்கை திருமணிகளை அசைத்து அற்புதமாக அன்பு ததும்ப அம் மன் பாடல்களைப்பாடி வெடி கொடிகளுடன் மேளதாள வாத்தியங் கள் முழங்க நகரப்பிரதக்ஷணஞ் செய்வித்து ஷை வீதிகளிலோ வீடு களிலோ அமைத்திருக்கும் புட்ப பந்தலில் அம்பாளை நிறுத்தி இரு மருங்கிலும் இரண்டு குடவிளக்குகளை அமைத்து அன்னபானுதி முதலிய சகல உபசாரங்களையும் செய்து நாள்தோறும் நித்தியோற் சவம், வாரோற்சவம், பஞ்சபக்ஷ பருவோற்சவம், மாதோற்சவம், பிரம்மோற்சவம் முதலியவைகள் செய்து அவாள் அவாள் சக்திக்குத் தக்கப்படி ஏகசக்தி, திரியாசக்தி பஞ்சசக்தி ஆலயங்களுக்குச் சென்று பொங்கல் நைவேத்திய அபிஷேக முதலிய ஆராதனைகளைச் செய்து மனம் திருப்தியடைந்து அவ்வவ் வீதிவாசிகளின் அபிப்ராயப் படி முதல் மாதத்திலோ, மூன்றும் மாதத்திலோ, ஐந்தாம் மாதத் திலோ பலவித அலங்கார கொட்டகையை நிறுவி திவ்வியமான வாழைகமுகு முதலியவைகளால் பதியலங்கரித்து மேற்கண்ட புட்ப பந்தலின் நடுவில் சபா மண்டபமாக நிறுவி மேற்சொன்ன கலசங் களைக் கொண்டு அம்மையப்பர் இருவர்களையும் அமர்த்தி தாம்பிர

கலசத்தில் விக்னேஸ்வரர் முதல் முப்பத்து முக்கோடி தேவர்களையும் ஆவாகனஞ்செய்து உச்சரித்து, தூபதீப நைவேத்தியம் சமர்ப்பித்து, தேங்காய், எலுமிச்சங்காய், கல்யாண பூசனிக்காய் பலி கொடுத்து ஆலஞ்சுழற்றி தேவர்களை உற்சாகப்படுத்திப் புலவர்களை நமஸ்கரித்து, சபையோர்களுக்கு வணக்கஞ் செய்து இப்பதியின்கண் அடியேன் சிற்றறிவுக் கெட்டியவரையில் சிலம்புக் கிசைந்த பாடலாகப் பாடத் துவக்கினோம். இதில் தப்புப்பிழைகளிருந்தபோதிலும் ஆய்ந்தறிவுற்ற பெரியோர்கள் திருத்திப் பொருள் கொள்ளுமாறு வேண்டுகிறோம் என்றவாறு.

### எண்சீர் ஆசிரிய விருத்தம்.

ஞாலமாய்ப் புனலாகிக் கனலுமாகி
நற்காலாய் நனிபெரிய ககனமாகி
மேலானபரவெளிப் பேரின்ப வீட்டின்
மேவிவிளை யாடுசிவ சத்தியாகி
மாலானசிவகாமி காமக் கோட்டி
மனோன்மணியே காமாட்சி மௌனசத்தி
பாலான நின்னுமைந்தன்னை யிந்நாள்
பணிந்தடியேன் பாடவருள் பாலிப்பாயே.

### அடதாளம்.

ஞானமணி ஞானமணி ஞானமணி மயிலே
ஞானமணி ஞானமணி மோனமணிக் குயிலே
சிவஞான சிவஞான சிவஞான சத்தி
சிவஞான சிவஞான தவமோன சத்தி
புவனபரா புவனபரா புவனபரா சத்தி
புவனபரா புவனபரா தபனபரா சத்தி.

## பாடல்.

விந்தைமிகும் பதியடுக்கு விளம்பிட நானன்புடனே
தந்திமுகத் தைங்கரனார் தாளடியை நமஸ்கரிப்பாம்
பந்தமுடன் பதியடுக்கைப் பாடுதற்குத் தரணியின்கண்
கந்தர் வள்ளிதெய்வானை கழலடியை நமஸ்கரிப்பாம்
அலங்கார பதியடுக்கை யம்புவியிற் பாடுதற்கு
மலருறையுங் கலைமகள்தன் மலரடியைத் தொழுதிடுவாம்.

### முடுகு பாடல்.

இமய வடகைலைதன்னில் எழுந்தருளித் தானிருக்கும்
உமையவளு மடியார்கள் உறுதியைத் தானறிந்து
அற்புத மிகும்பதியில் அருள்புரிய வேண்டுமென்று
கற்புடைய பார்வதியாள் கருத்தினிற் றானினைந்து

பவள விதழுடைய பாங்கியரைத் தானழைக்கத்
தவளமுத்துப் பல்லுடைய தாதிப்பெண்க ளோடிவந்து
நவகோண சக்கரத்துள் நடனமிடுங் கண்மணியைப்
புவனேஸ்வரி யடியைப் புகழ்ந்தார்கள் மிகவணங்கி
அலங்காரப் பொற்பீட மமைத்தா ருமையவட்கு
அலங்கார பீடத்தின்மே லமர்ந்து உமையவளும்
பொற்பாளை தன்னாலே பொருந்தவே பல்துலக்கி
அற்புதப் பொன்னோலையினால் அன்பாக நாவழித்துப்
பன்னீரால் வாய்முகமும் பரிசுத்த மாயலம்பி
அன்புடனே தீர்த்தங்கள் ஆடிடவே தானினைந்தாள்
பரிமள மிகுந்தயிலம் பாங்கியர்கள் கொண்டுவந்து
விரிமல ரணிகுழலில் விரைவுடனே தான்றடவி
காரிருட் குழலுடைய கௌரியரு மேதுசொல்வார்
ஏரிகுளம் மடுவில் இறங்கியே ஸ்நானஞ்செய்தால்
நீரலைகள் சீறிவரும் நீலவிழி மார்களென
அந்தமொழி யறிந்து அலங்காரத் தாதியர்கள்
கந்தமிகுஞ் சந்தனக் கட்டைகளை மெத்தவெட்டிப்
பந்திபந்தி யாகவேதான் பாரமலை போலடுக்கி
விந்தைமிகுங் குங்கும விறகிறைெடு நெய்சொரிந்து
செந்தழல் மிகவளர்த்துச் செப்பினார் உமையவட்குச்
சிந்தைமகிழ்ந்து அம்மை சிங்கார நடைநடந்து
வன்னிகனுக் காலளவில் வாய்முகமுஞ் சுத்திசெய்து
துன்னுந் துடையளவில் தும்பிமிகப் பாய்ந்து
அன்பாயிடை யளவில் அம்மானார் தானாடிப்
பொன்மார் பளவழலில் பொருந்தி மஞ்சள்நீராடிச்
செழிப்புள்ள அக்கினியில் சிரசளவு ஸ்நானஞ்செய்து
மழுவில்தலை முழுகியம்மன் மயிர்கோதி கொண்டையிட்டு
அணிந்திருந்த பூவாடை யக்ஷணமே தான்களைந்து
மணிமந்த்ர பட்டாடை மகிமையுடன் றானுடுத்துப்
பற்பல பொற்பணிகள் பாங்காகத் தான்றரித்துக்
கற்பகப் பூமலருங் கலவைநல்ல சாந்தணிந்து
கோலமஞ்சள் பூசிப்பஸ்பங் குங்குமப் பொட்டுமிட்டு
ஏலவார் குழலியரும் ஏகாந்த மாயிருந்து
பிரணவ மந்திரத்தைப் பிரியமுட னுச்சரித்து
அரகர சம்போவென்று ஈசனைத் தோத்திரித்துச்
ஜெபதப நேமநிஷ்டை சேல்விழியாள் தான்முடித்து
அபரூப பார்வதியாள் ஆன்பூஜை செய்வதற்குச்
சிந்தையில் தானினைந்து சேடியர்கள் புடைசூழ
வந்துமே தான்புகுந்தாள் வாசமலர் வனத்தில்
அரம்பையிலை பறித்து அலங்கார தொன்னைதைத்துச்

சரக்கொன்றை ரோஜாவாஞ் சம்பங்கி செங்குமுதம்
மந்தாரை கற்பகமும் மல்லிகை முல்லைகளும்
செந்தாழை செண்பகமுஞ் செவ்வலரி தும்பைகளும்
மருக்கொழுந்து இருவாக்ஷி மருவுசா புன்னைகளும்
குருவேர் கதிர்பச்சை கோங்கு மனோஞ்சிதமும்
சாமந்தி வெள்ளெருக்குச் சாதிமலர் செங்கமலம்
ஊமத்தைசெங்கழுநீ ருடன் வில்வம் பாதிரியும்
நந்தியா வட்டகொச்சி நறுமலரும் பச்சிலையும்
பந்தமாய்க் கொய்தார்கள் பாங்கியரும் அம்மையுடன்
இத்தனையுந் தான்பறித்து ஈஸ்வரியா ளேதுசெய்வாள்
அத்தன் பரமேஸ்வரனை யாராதிக்க வெண்டுமென்று
கீர்த்திமிகு மகமேரு கிரியின்கண் ஓர்மருங்கில்
சீர்பாவு மாகிழற்கீழ்ச் சிறந்தரத்ன மேடையின்மேல்
தாதியராற் பூஜைபேழை தருவித்துப் பார்வதியும்
ஜோதிலிங்கம் ஒன்றெடுத்துச் சொகுசாகத் தானமர்த்திப்
பேரான பிரணவத்தைப் பெருமையா யுச்சரித்துச்
சீரான பன்னீரால் சேவடியைத் தான்றுலக்கி
விந்தையுட னபிஷேகம் விதவித மாகச்செய்து
இந்த்ரவர்னப் பட்டாடை இடையதனிற் றன்சாத்திக்
கந்தமிகும் வெண்ணீறு களிப்பாகத் தான்பூசிச்
சந்தனங் கஸ்தூரியத்தர் சவ்வாது தான்றரித்து
வளமிகும் புனுகுசட்டம் வகைவகை யாகச்சாத்தி
அளவில்லாப் புட்பமெல்லாம அலங்காரமாய்ச் சொரிந்து
முப்பழமுஞ் சர்க்கரையும் மேன்மையுடன் தான்படைத்து
ஒப்பிலாத் தேங்காய்கள் உன்னதமா யுடைத்துக்
கற்பூர தூபதீபங் காணுமென்று தான்கொடுத்து
அற்புதமா மலர்தூவி யடி வணங்கித் தோத்திரித்து
வலமிட மாகவந்து வணங்கி யடிதொழுது
பலபல விதமாகப் பரமனைத் தோத்திரிக்கக்
கரியுரி போர்த்தவரே காமனைக் காய்ந்தவரே
திரிபுர மெரித்தவரே திங்களைத் தரித்தவரே
வானவர்கள் தொழுதேத்தும் மாலயனுக் கரியவரே
ஞானப்ர காசரான நாதரே வருகவென.

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

பொன்கிரி மாவின் கீழே பொருந்திய லிங்க மொன்று
அன்புட னிருவிப் பூஜை அகமகிழ்ந் துமையாள் செய்ய
நன்மையாய்ப் பரமன் றானும் நல் விடை மீதிலேறிக்
கன்னிப் பார்வதியாள் காணக் கடவுளும் வந்திட் டாரே.

### வசனம்.

ஸ்ரீ மகமேருபர்வதத்தில் அலங்காரம் பொருந்திய மறைமா விருக்ஷத்தின்கீழ் ஜெகமெலாமீன்றருளிய பார்வதி தேவியார் பூவுலகத்தில் பூஜை செய்தேத்தும் அடியார்களுக்கு அனுக்கிரகஞ் செய்ய வேண்டிச் சொர்னலிங்கத்தைச் ஸ்தாபித்து அன்பு ததும்ப சிவபூஜை செய்ய அக்காலத்தில் யாவராலும் காணுதற்கரிய சிவபெருமான் ரிஷபவாகன ரூடாய் பார்வதி முன்வந்து அருள் புரியும் கதையைச் சொல்லுவோம் என்றவாறு.

### பாடல்.

அம்பிகையாள் பூஜைக்கு அந்திவண்ணன் மனமகிழ்ந்து
உம்பர்கள் போற்றிசெய்ய ஓங்கு விடைமீதேறிப்
பூதப்படை சூழப் புரமூன் றெரித்தவரும்
வேதமா மாவடியில் விளங்கினார் அம்பிகைமுன்
காதலாய்ப் பார்வதியாள் கணவரடி பணிந்து
நாதநீ காத்திடென்று நமஸ்கரித்தாள் கைகூப்பி
கடுக்கை முடியோனுங் கண்டு மனமகிழ்ந்து
உடுக்கை யிடையுடைய உமையவளைத் தான்பார்த்து
என்னவரம் வேண்டுமென்று எந்தமைநீ பூஜைசெய்தாய்
பன்னுவாய் மாதேயெனப் பார்வதியாள் மனமகிழ்ந்து
அன்பர்செய் பூஜைமுகம் அருள்புரிய வேண்டுமென்னக்
கன்னி யுமையவளுங் கர்த்தருக்குத் தானுரைக்க
ஆகுக மாதேயென்று அக்ஷணமே நந்தியிடம்
நாகா பரணனவர் நவிலு மொழியறிந்து
குண்டோ தரற்குநந்தி கூறுமொழி தெரிந்து
தெண்டனிட்டுக் குண்டோதரன் தெரிவித்தான் வீரனுக்குச்
சக்ரேஸ் வரியான சாம்பவியைத் தோத்திரித்துக்
கொக்கரித்து வீரனவன் குதிரையின் மீதேறித்
தங்கத் தமுக்கடித்துத் தவளசங்கு தான்முழக்கி
வெங்கலக் கொம்பூதி விண்ணவர்க்குக் கூறலுற்றான்
முப்பத்து முக்கோடி முதலான தேவர்களும்
எப்போது மங்களமாய் இருக்கின்ற முனிவர்களும்
யாவர்களு மிதுதருணம் அதிதுரித மாகவேதான்
பூவுலகி லன்பரிட பூஜைமுகம் போவதற்குப்
பயணஞ்செய்ய வேண்டுமென்று பறையடித்தான் வீரனவன்
அயனெடுமா லிந்திரரும் அமரர்களுந் தாமறிந்து
சேதியறிந்து தேவர் செபதபங்கள் தாமுடித்து
நீதியறிந்து தேவர் நேமநிஷ்டை தாமுடித்துச்
சார்களெல்லா மவரவர்கள் சுதந்தர வாகனத்தில்
அரகரா சம்போ வென்று அனைவரு மேறலுற்றார்.

### தேவர்கள் வருகிற பாடல்.

அருசீர் ஆசிரிய விருத்தம்.

கலவை சாந்தணியும் ஞான கன்னி காமாக்ஷி யம்பாள்
நலமுட னடியார் செய்யும் நற்பூஜை தனக் கிறங்கி
உலகினி லும்பரெல்லாம் ஒருங்குடன் கூடி வந்தே
நிலவிய கதையை யிங்கே நிகழ்த்துவோ மன மகிழ்ந்தே.

இதுவுமது.

அபரூப காமாக்ஷிதேவி யருளுமுத்தாரவைக் கண்டு
தபசெப நேமநிஷ்டை சகலமுமுடித்துக் கொண்டு
சுபகர மாகநல்ல சொந்தவாகனத் தமர்ந்தே
உபவீத மார்பிலங்க உம்பர்கள் வருவார்தாமே.

வசனம்.

மலர் மணமும் கலவைச் சாந்து முதலிய நறு மணங் கமழும் ஞானவால புவனேஸ்வரியாகிய ஸ்ரீ காமாக்ஷிதேவி உத்தரவுக்கிணங்கி முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும், கின்னரர், கிம்புருடர், கருடகாந்தருவர், சித்த வித்யாதரர்கள், அஷ்டவசுக்கள், திசாபாலகர்கள், நவகோள்கள், சூர்ய சந்திரர்கள், ஆகாயவாணி, பூமாதேவி, நாகலோக கன்னியர்கள் முதல் சமஸ்த தேவ குழாங்களுடன் அவர் அவர்கள் வாகனங்களில் பொருந்தி வருகிற விதம் எப்படி என்றால்:—

அடதாளம்.

வாராரிதோ வாராரிதோ வாரார் தேவர் தேடி
வாராரிதோ வாராரிதோ சீரார் மூவர் கூடி.

பாடல்.

அத்திமுகத் தைங்கரற்கு ஆகுநல்ல வாகனமாம்
சித்திபுத்தி வல்லபைக்குஞ் சிங்கமுகப் பல்லக்காம்
வீரபத்ர தேவருக்கு விளங்குயாளி வாகனமாம்
பாரபத்ரகாளியர்க்குப் பகருஞ்சிங்க வாகனமாம்
முருகவே ளேறிவர முத்துமயில் வாகனமாம்
அருள்மிகுந்த வள்ளிதெய்வ யானையர்க்கோ புட்பரதம்

முடுகுபாடல்.

ஆரணம் புகழயனார் அப்பனுக்கோ வெண்கரியாம்
பூரணையும் புட்கலையும் பொருந்திவரச் சப்பரமாம்
லீலாவினோதன் காத்த லிங்கமெனுஞ் சுவாமியர்க்கு
கோலாகல மானபச்சைக் குதிரையெனும் வாகனமாம்
ஆரிய மாலையுகந் தழகியன்ன முத்துடனே

விரிகரப் பழகியர்க்கு விச்சித்திர கனகதண்டி
விமலன் விமலியர்க்கு வெள்விடையும் பல்லக்காம்
அமலியாங் கெங்கைக்கு அலங்கார புட்பரதம்
நாரணர்க்கும் லட்சுமிக்கும் நற்கருடன் பல்லக்காம்
ஆரணர்க்குஞ் சரஸ்வதிக்கும் அன்னமுஞ் சப்பரமாம்
அற்புத விந்திரர்க்கு அயிராவத வாகனமாம்
பொற்கொடியிந் ராணியர்க்குப் பொன்னூஞ்சல் மகமேராம்
பார்புகழும் ஆரிமுத்து பாலகர்க்கு அஞ்சுகமாம்
வார்முடியா லழகியர்க்கு வயிரத்தந்த பல்லக்காம்
காலனுக்குக் கோலமான கருங்கடா வாகனமாம்
மாலான சாமளா மங்கையர்க்கோ சூலவண்டி
புகழ்மேவுஞ் சித்திரா புத்திரர்க்கோ செப்புரதம்
மகிழ்மேவுங் குபேரர்க்கோ மணிப்புட்ப பல்லக்காம்
பேசரு நிருதியர்க்கோ பேயான வாகனமாம்
யீசான்ய மூர்த்தியர்க்கோ எழிலான வெள்ளெருதாம்
திருவக்னி தேவருக்குத் திகழுந்தகர் வாகனமாம்
வருணன் மகரமேற வாயுமான் மீதில்வர
ஆர்ப்பாட மாகமாரி யழகுவேம்பு ரதமேற
போர்பெருந் துர்க்கியர்கள் பொற்சிங்க ரதமேற
கன்னிமா ரெழுவர்களும் கரும்புரவி யேறிவர
அன்னநடை துரோபதையும் அக்கினித் தேரேறிவர
சிவகணமு முனிவர்களும் செறிந்துஇரு புறமும்வர
நவகோளும் வீரர்களும் நடந்துஇரு புறமும்வர
இருசுடருங் கொற்றவரும் ஏறிவரப் பொன்ரதமாம்
அருள்மிகுந்த புலவர்கட்கு ஆணிமுத்து பல்லக்காம்
வளமிகுந்த ஆகாய வாணியர்க்கோ சப்பரமாம்
களபமணி நாகலோகக் கன்னியர்க்கோ பல்லக்காம்
மதிமுகப் பூவாடையர்கள் மணிப் பல்லக்கேறிவர
முதலையின்மேல் வேதியர்கள் மூனிகுருக்க ளேறிவர
கலகலென்று யக்ஷர்கின்னர் காந்தருவர் சூழ்ந்துவர
நிலமங்கை நவரத்ன நீள்பல்லக் கேறிவர
அண்டரெல்லாம் மகமேரு வணிவணியா யேறிவர
குண்டோதா முனிகள் கோடிமல்லர் குடைகவிய
ஏழுமுனி ராக்ஷதரும் ஏறிவர வெண்புரவி
வாழுமுனி ராக்ஷதரும் வாளேந்திக் கொக்கரிக்க
முத்துக் குடைக்கவிய முரசுடங்கா ஆர்பரிக்க
சித்ரமிகு பொற்குடையுஞ் ஜெயச்சங்கு தான்முழங்க
நாலு குடைகளுடன் நூருயிரப் பொற்குடைகள்
கோலமிகு மாலவட்டம் கோடானு கோடிவீச
பொன்னுலக முனிவரெல்லாம் பூச்சக்ர குடைபிடிக்க

மின்னொளிபோ லிருபுறமும் மெல்லியர்கள் சூழ்ந்துவர
காடவிளக் கெரியக் கைபந்தம் நின்றெரிய
ஆடலா யேணிபந்தம் அமோகமாய்த் தானெரிய
அடுக்கு வெடியுடனே யதிர்வெடிகள் கிடுகிடென்ன
கிடுகுடவுல் பேரிபூரி கீதங்கள் படபடென்ன
விண்ணதிர பாணங்கள் விதவிதமாய்ச் ஜொலிக்க
வெண்கதிர்போல் மத்தாப்பு வெகுவித மாயெரிய
உன்னத நாகசுரம் ஊதிவரப் பலபலவாம்
துன்னுங்கோணக் கொம்புடனே துத்தாரி சின்னமூத
செப்பவொண்ணு வாத்தியங்கள் சேர்ந்துபல முழங்க
முப்பத் ரெண்டாயுதமும் முனிவீரர் ஏந்திவர
அஷ்டதிக்குப் பாலகர்கள் அங்கெங்கு மெச்சரிக்க
பக்ஷமாய்க் காந்தருவர் பாரிசாத மலர்தூவ
வேதியர்கள் மறையோத வித்வான்கள் பாடிவர
மாதுரம்பை யூர்வசியும் மாநடன மாடிவர
நாகலோக கன்னியர்கள் நற்றூப மேந்திவர
ஆகாய வீதியிலே யணியணியாய் ரதந்திரும்ப
வானமெங்கும் ரதந்திரும்பி வையகத்தைச் சூழ்ந்துவர
நான்குபக்கம் ரதந்திரும்பி நாடெங்குஞ் சூழ்ந்துவர.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

வானவ ரொருங்கு கூடி வருகின்று ரென்ற சேதி
தானவ சம்மாரி யான தற்பரி யுணர்ந்து நல்ல
ஞானமா மணங்கள் வீச நகரலங் காரஞ் செய்தே
ஆனன மலர்ந்தே யன்பா யழைத்தன ளமரர் தம்மை.

### வசனம்.

சொர்க்க லோகத்திலுள்ள சகல தேவர்களும் அவர் அவர்கள் வாகனத்தில் ஆரோகணித்து பூலோகத்திற்கு வருகிறார்களென்ற சங்கதியை யறிந்த, அசுர சம்மாரியான துர்க்கா பரமேஸ்வரியானவள் தனது பெரும்பூதப்படைகள் இருமருங்கிலுஞ் சூழ திருநகர் அலங்காரஞ் செய்து செங்கோலைக் கரத்திற் பிடித்து தேவர்களை எதிர்கொண்டழைக்கின்ற விதம் எப்படி யென்றால்:—

### அடதாளம்.

வடபத்ர வடபத்ர வடபத்ர காளி
வடபத்ர வடபத்ர திடபத்ர காளி
ரணவீர ரணவீர ரணவீர காளி
ரணவீர ரணவீர குணவீர காளி
தில்லைகாளி தில்லைகாளி தில்லைகாளி தேவி
தில்லைகாளி தில்லைகாளி எல்லைகாளி தேவி

## பாடல்.

பாருக்கதி காரியான பராக்ரம துர்க்காதேவி
ஊருக்கதி காரியான ஓங்கார துர்க்காதேவி
தேவர்வருஞ் சேதியெல்லாத் தெரிந்துமே துர்க்காதேவி
மாவிலை தோரணமும் மல்லிகைப்பூ பந்தல்களும்
வெட்டிவேர் பந்தல்களும் வெண்டாமைத் தோரணமும்
பட்டுகளாற் றோரணமும் பசும்வாழைப் பந்தல்களும்

## முடுகுபாடல்.

தங்கக் கூடாரங்களும் தாமரைப்பூ பந்தல்களும்
சிங்காரப் பீடங்களும் ஜெயச்சங்க நாதங்களும்
குலோப்புலஸ்தர் லாந்தர்களும் குடவிளக்கு தீபங்களும்
பலவர்ண கோலங்களும் பன்னீரத்தர் வாடைகளும்
சந்தனத்தால் கோலங்களும் சாம்ராணி வாடைகளும்
விந்தைமிகு காவலரால் வெகுவிதந் தாமமைத்து
எங்கும்புகழ்ச் சிங்காதம் ஏறியே யார்ப்பரித்து
மங்களமாய்ச் செங்கோலை மலர்க்கரத்திற் றன்பிடித்து
வெற்றியாய்ப் பேய்க்கணங்கள் விளையாடத் துர்க்காதேவி
பொற்கதவைத் தான்றிறந்து பூமலர்கள் கைபிடித்து
சுற்றிக்கதவைத் தான்றிறந்து சொர்ணமலர் கைபிடித்தே
அத்தைபார் வதியடியில் அர்ச்சித்து நமஸ்கரித்து
வாருமென்று துர்க்காதேவி வணங்கியே தானழைக்க
ஆர்ப்பாட்ட மாகவேதான் அம்பிகையுந் தேவருடன்
தெருவாசற் படியிலேதான் தோணியைத் தானிறுத்தி
பருவதம்போல் திசைபத்தும் படைபூதங் காவல்வைத்து
உள்வாசல் படிதனிலே ஒன்பது கோணமாக
கள்ளமில்லாத் துர்க்கிகளைக் காவலாய்த் தானமைத்து
விந்தைமிகு நற்றிரையை விடுங்களென்று கிருபைசெய்ய
அந்தமிகும் பார்வதியா ளடியிணையை நமஸ்கரித்து
திரையைத் திறந்தார்கள் தேவரெல்லாம் உள்நுழைந்தார்
பரையும் பரனரியும் பண்ணவருந் தானமர்ந்தார்
பொன்வாழைப் பூபதியில் பொருந்தினர் தேவரெல்லாம்
பன்னரிய நற்பதியில் பரவினர் முனிவரெல்லாம்
தங்கமலர் மேடையின்மேல் தங்கினர் தேவரெல்லாம்
சிங்காசனத்தின் மேல் சென்றிருந்தார் தேவரெல்லாம்
அவரவ ரிஷ்டப்படி ஆகுதி கொண்டிருந்தார்
சிவசிவா வென்றடியார் செப்பவருள் சுரந்தார்
கற்பூரந்தூபதீபங் கண்டு மனமகிழ்ந்தார்
அற்புதமா மலர்தூவி அடிபணிய புகழ்ந்திருந்தார்
பாலன் கோட்டையனிட பாடலுக்கு மனமகிழ்ந்தே
சீலமாய் வந்துநல்ல சீருள்வீர் தேவர்களே.

## நித்திரைச் செய்யும் பாடல்.

எங்கும் பரிபூரணமாய் யிருக்கின்ற தேவர்களே
மங்களமாய் யெந்நாளு மகிழ்ந்திருக்குந் தேவர்களே
அன்பான நற்பதியில் அமர்ந்துநித்ரை செய்திடுவீர்
இன்பமாய்ப் பொற்பதியி லிருந்துநித்ரை செய்திடுவீர்
சிங்கார பூபதியில் சிறந்துநித்ரை செய்திடுவீர்
தங்கம்போற் பூபதியில் தங்கிநித்ரை செய்திடுவீர்
காலையிற் றுயில்நீங்கிக் காக்ஷிமிகப் புரிந்திடுவீர்
கோலமா யிப்பதியில் கொலுவமர்ந்துநித்ரை செய்வீர்
பரிமளவாடை வீசப் பரிந்துநித்ரை செய்திடுவீர்
அரிவையர்கள் கவுரிவீச வசைந்துநித்ரை புரிந்திடுவீர்
குயில்கூவ விவ்விடத்தில் குலுங்கிநித்ரை செய்திடுவீர்
மயிலாட விம்மனையில் மகிழ்ந்துநித்ரை செய்திடுவீர்
கற்பூரந் தூபதீபங் கண்டுநித்ரை புரிந்திடுவீர்
அற்புதமா மலர்தூவி யடிபணிந்தேன் துயில்கொள்வீர்.

## எச்சரிக்கை பாடல்.

ஊர்காக்குந் துர்க்கியரே உத்தமியே யெச்சரிக்கை
பார்காக்குந் துர்க்கியரே பத்தினியே யெச்சரிக்கை
பூதப்படையாளே பூங்கொடியே யெச்சரிக்கை
வேதமுதலாளே வேல்விழியே யெச்சரிக்கை
சத்துருக்க ளணுகாமல் சங்கரிப்பா யெச்சரிக்கை
எத்திசையுங் காவலாக இருந்தருள்வா யெச்சரிக்கை
காவல் தவராமல் காத்தருள்வா யெச்சரிக்கை
பாவிக ளணுகாமல் பாதுகாப்பா யெச்சரிக்கை
பார்வதிதன் னருள்படியே பத்தினியே யெச்சரிக்கை
வார்கடல்சூ ழுலகமெல்லாம் வாசஞ்செய்வாய் யெச்சரிக்கை
கற்பூர தூபதீபங் கண்டமர்வாய் யெச்சரிக்கை
அற்புதமா மலர்தூவி யடிபணிந்தே னெச்சரிக்கை
சற்குண வல்லியரே சங்கரியே யெச்சரிக்கை
நற்குண லல்லியரே நாரணியே யெச்சரிக்கை.

## வந்தனஞ் செய்யும் பாடல்.

பதியமர்ந்த பலதேவர் பதுமமலர் தாள்சரணம்
சதுர்பெற்ற தேவர்கட்குச் சந்ததமு நான்சரணம்
மூவர்கட்கு மாதவமா முனிவர்கட்கு நான்சரணம்
தேவர்சித்தர் பக்தர்களின் திருவடிக்கு நான்சரணம்
அன்னை பார்வதியினிட வடியிணைக்கு நான் சரணம்
தின்னுங் கிராமதேவி துர்க்கிகட்கு நான்சரணம்

காவலர்கள் ஞானியர்கள் நல்லடிக்கு நான்சரணம்
பூவேந்தர் பூசுரர்கள் பொன்னடிக்கு நான்சரணம்
சரணஞ் சரணமம்மா சகலருக்கும் நான்சரணம்
கருணைவைத் தருள்புரிவாய் கைக்குழந்தை நான்சரணம்
குருபாதந் தண்டனிட்டேன் குழந்தை சிலம்பைவைத்தேன்
அருள்பாதந் தண்டனிட்டேன் அடியேன் சிலம்பைவைத்தேன்

## துயில் நீங்கும் பாடல்.

பொற்பதியில் நித்திரைமிகப் பொலிந்திருக்குந் தேவர்களே
கற்பூர வாடைகண்டு கண்விழிப்பீர் தேவர்களே
வெள்ளி முளைத்ததுகண் விழித்தருள்வீர் தேவர்களே
பள்ளியைவிட் டெழுந்திருந்து பதியமர்வீர் தேவர்களே
குயில்கூவ கண்விழித்துக் குலவுவீர் தேவர்களே
மயிலாட கண்விழித்து மருவுவீர் தேவர்களே
காலைசந்தி நேமநிஷ்டை கடன்முடித்து தேவர்களே
கோலமா யிப்பதியில் கொக்கரிப்பீர் தேவர்களே

## பதிகளைதல்.

## தேவர்கள் ஆலயம் போகிர பாடல்.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

கோலமா யன்பர் செய்யும் கொலுவினில் வீற் றிருந்த
மாலயன் இந்த்ரன் வானோர் மாமுனி யுரகர் சித்தர்
ஏலவார் குழலா ளம்பாள் இறைவனோ டெழுந்தே ஞான
ஆலயந் தன்னில் புக்கும் அக்கதை யுரை செய்வேனே.

### அடதாளம்.

போராரிதோ போராரிதோ போரார் தேவர் கூடி
போராரிதோ போராரிதோ சீரார் மூவர் நாடி.

### பாடல்.

வந்து பதியமர்ந்தீர் வாசமாய்க் கொலுவிருந்தீர்
விந்தையாய்க் கும்பத்தின்மேல் வீற்றிருந்து கொலுவமர்ந்தீர்
அன்பரிட பூஜைக்கு அதிக மனமகிழ்ந்தீர்
துன்பமெனும் பெருநோயைத் தொலைத்தே யருள்புரிந்தீர்
கொலுவிருந்த மாமனையில் குடிபோசம்பத் தாக்கிவைத்தீர்
கொலுவைவிட்டு அரண்மனைக்குக் கோலமா யெழுந்தருள்வீர்

### முடுகுபாடல்.

அரண்மனை போயமர அமரர்களே யெழுந்தருள்வீர்
திருமனை போயமரத் தேவர்களே யெழுந்தருள்வீர்
விந்தையுள்ள கலசம்விட்டு விண்ணவரே யெழுந்தருள்வீர்
அந்தமிகுங் கும்பம்விட்டு அன்புடனே யெழுந்தருள்வீர்

குடவிளக்கை விட்டுமல்லோ கோயிலுக்கு எழுந்தருள்வீர்
வெடிகொடிக ளார்ப்பரிக்க வேகமா யெழுந்தருள்வீர்
கஞ்சமலர்ப் பீடம்விட்டு கருணைசெய்து யெழுந்தருள்வீர்
மஞ்சள் நீராடியேதான் மாளிகைக்கு எழுந்தருள்வீர்
பலவர்ன ஆலஞ்சுற்ற பதியைவிட்டு எழுந்தருள்வீர்
கலகலென்று சிலம்புகொஞ்ச களிப்புடனே எழுந்தருள்வீர்
அன்பன் மொழிக்கிரங்கி யாவலுடன் றாமெழுந்தார்
பொன்னூஞ்சல் பதியைவிட்டுப் புறப்பட்டார் கும்பலாக
இந்தமனை வாழியென்று இமையவர்கள் தாமெழுந்தார்
வந்தமனை வாழியென்று வானவர்கள் தாமெழுந்தார்
அற்புதமா மனையைவிட்டு அனைவருந் தாமெழுந்தார்
பொற்கலசம் விட்டுமல்லோ பொருமையாத் தாமெழுந்தார்
ககன மதிரபேரி காவலர்கள் தாமடித்தார்
மகமேரிற் பலதேவர் மருவியே தாமெழுந்தார்
ஆனைமேலேறி தேவர் ஆர்ப்பரித்துத் தாமெழுந்தார்
சேனையிரு புறஞ்சூழச் சேவகர்கள் கொக்கரித்தார்
பல்லக்கிலேறி தேவர் பரிவாரமுட னெழுந்தார்
கல்லானை மீதேறிக் கர்ச்சித்துத் தாமெழுந்தார்
முப்பத்து முக்கோடி முதற்றேவர் தாமெழுந்தார்
இப்படியாய் வானவர்க ளெல்லோருந் தாமெழுந்தார்
அரண்மனை கடந்துமே யமரெல்லாந் தாமெழுந்தார்
தெருவாசல் கடந்துமே தேவரெல்லாந் தாமெழுந்தார்
இல்லறத்து தேவரெல்லாம் இருந்துவாழி யென்றுரைத்தே
எல்லவரு மக்களமா யெழுந்தருளி வருகலுற்றார்
ஆங்கார துர்க்கியரை யமரெல்லாந் தாம்பார்த்து
பாங்காய தேயமெல்லாம் பாதுகாப்பீ ரென்றுரைக்க
சித்தமென்று துர்க்காதேவி சேவித்து வழிவிடுத்தாள்
வெற்றியாய்ப் பூதகணம் விளையாட வழிவிடுத்தாள்
வைகைநீராடி தேவர் வாழும்பதி போயமர்ந்தார்
பொய்கை நீராடிதேவர் போயமர்ந்தார் தங்கள்பதி
மஞ்சள் நீராடியேதான் மாளிகைக்குப் போயமர்ந்தார்
கொஞ்சிவிளையாடி கோயிலுக்குப் போயமர்ந்தார்
கற்பூர தூபதீபங் கண்டுமே போயமர்ந்தார்
அற்புதமாமலர் தூவி யடிபணிய போயமர்ந்தார்
பாலன் கோட்டையனிட பாடலுக்கு மனமகிழ்ந்தே
ஞாலமெல்லாம் வாழியென்றே நற்கோயில் போயமர்ந்தார்
குருபாதந் தெண்டனிட்டேன் குழந்தை சிலம்பைவைத்தேன்
அருள்பாதந்தெண்டனிட்டேன் அடியேன்சிலம்பைவைத்தேன்.

பதியடுக்கு முற்றிற்று.

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

கடிமலர் கற்பகஞ் சேர் ககனர்க ளம்ம னோடு
படிதனி லன்ப ரேத்தும் பண்புறு மிடத் தமர்ந்தே
கொடிய வெவ்வினையை நீக்கிக் கோலமார் பூஜை கொண்டே
அடியவர்க் கருள்செய் தேவ ரவரவர் பதி சேர்ந்தாரே.

வசனம்.

இந்த விதமாக சர்வலோக சரணியாகியும் இமாஜல வர புத்திரியாகியும் லலிதாசத்தி யெனவிளங்கும் ஸ்ரீ காமாக்ஷிதேவியார் திருவாக்கினைக்கு இணங்கி முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் இருஷிகளும் மூவர் முதலிய யாவரும் பூலோகத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கின்ற சமஸ்தமான தேவர்களும் சிவசத்தியின் பதிமுகத்தில் வந்தமர்ந்து அடியவர்கள் செய்யும் பூஜையை யேற்றுக்கொண்டு அப்பதியில் சயனித்திருந்து மறுநாள் காலையிலெழுந்திருந்து காலை சந்தி நேமநிஷ்டைகளை முடித்துக்கொண்டு ஷை பதியில் அடியவர்கள் அனைவர்களுக்கும் அனுக்கிரகஞ் செய்து மஞ்சள் பரிமளாதி முதலிய வாசம் கமழும் வசந்த நீராடி சிவசத்தியின் உத்திரவுபடி அவரவர்கள் வாகனாதிகள் எழுந்தருளி தங்கள் தங்கள் இடத்திற்குச் சென்று வீற்றிருந்தார்கள் என்றவாறு. சுபம். மங்களம்.

---

உ

## பூவாடையம்மன் பாடல்.

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

மலர்மகள் போலே யென்றும் மாநிலந் தனில் விளங்கி
பலநிறம் வாய்ந்த பொற்பூம் பட்டாடை தனை யுடுத்தி
குலவிய மஞ்சள் சாந்து குங்கும மல ரணிந்தே
நலஞ்செய் பூவாடை யம்மன் நற்பத முடிமேற் கொள்வாம்.

அடதாளம்.

மலராடை மலராடை மலராடைக் காரி
மலராடை மலராடை கலராடை வீரி

பாடல்.

ஜோதிநீங்கிச் சாருருவாய் அமர்ந்த பூவாடை யம்மன்
தேவதை யாயுலகில் திகழும் பூவாடையம்மன்
மங்கல நாணோடிறந்து மருவும் பூவாடையம்மன்
குங்குமத் தோடிறந்து குலவும் பூவாடையம்மன்

மாமஞ்சள் மணங்கமழ மகிழும் பூவாடையம்மன்
சிவபெருமான் கட்டளையால் சீருறும் பூவாடையம்மன்
தவசத்தி கட்டளையால் தானமர் பூவாடையம்மன்
புவிமீது முன்னோர்கள் புகழும் பூவாடையம்மன்
கவிவாண ரெந்நாளுங் கருதும் பூவாடையம்மன்

முடுகு பாடல்.

துதிக்கத் தெய்வீகமாகித் துலங்கும் பூவாடையம்மன்
பதியாகி மனைகளிலே பரவும் பூவாடையம்மன்
இந்திரன் பதிதனிலே யிருக்கும் பூவாடையம்மன்
அந்தணன்றன் பதிதனிலே யமர்ந்த பூவாடையம்மன்
வைகுண்ட பதிதனிலே வாழும் பூவாடையம்மன்
கைலாய மாமலையில் களிக்கும் பூவாடையம்மன்
பொய்கைக் கரைதனிலே பொருந்தும் பூவாடையம்மன்
செய்யவள் போல்வளர்ந்து செழிக்கும் பூவாடையம்மன்
அலங்கார வனத்தில்விளை யாடும் பூவாடையம்மன்
குலுங்கியெழுந்து அன்பாய் கொஞ்சும் பூவாடையம்மன்
மஞ்சள்வர்ன சேலையணி மாதா பூவாடையம்மன்
பஞ்சவர்ன சேலையணி பத்தினி பூவாடையம்மன்
வட்டாரத் துள்ளிருந்து வளரும் பூவாடையம்மன்
எட்டுத்திக்குங் கீர்த்திப்பெற்றே யிருக்கும் பூவாடையம்மன்
பொற்பணி பூஷணங்கள் பொலிவுறும் பூவாடையம்மன்
அற்புத மாமலர்கள் அணியும் பூவாடையம்மன்
கஞ்ச மலர்வதனக் கன்னி பூவாடையம்மன்
அஞ்சுக மொழியுடைய அழகு பூவாடையம்மன்
திலர்த நுதலுடைய திருவே பூவாடையம்மன்
வலம்புரி கழுத்துடைய வனப்பே பூவாடையம்மன்
புழுகுபன்னீர் செஞ்சாந்து புனையும் பூவாடையம்மன்
மழுவொளி யாய்விளங்கும் மருவே பூவாடையம்மன்
விந்தையாயிக் கொலுவில் விளங்கும் பூவாடையம்மன்
அந்தமாயிக் கொலுவில் அமரும் பூவாடையம்மன்
கற்பூர தூபதீபங் காணும் பூவாடையம்மன்
அற்புதமா மலர்தூவி யடிபணிந்தோம் பூவாடையம்மன்
பாலன் கோட்டையனிட பாடலுக்குப் பூவாடையம்மன்
சீலமாய் வந்துநல்ல சீரருள் பூவாடையம்மன்
புலித்தோலாம் ஆசனத்தில் பொருந்தும் பூவாடையம்மன்
மலிவான மான்றோலில் மகிழ்ந்த பூவாடையம்மன்
ஆரைநினைப்ப னிங்கே அலங்கார பூவாடையம்மன்
கோருகின்ற வென்னுவில் கொலுவமர் பூவாடையம்மன்

பூவாடையம்மன் பாடல் முற்றிற்று.

உ



# இலட்சுமி என்கிற பூங்குறத்தி பாடல்.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

மன்னுறு குருவேர் தும்பை மருமலோ ரஞ்சிதத் தேன்
துன்கதிர் பச்சை ரோஜா துளசி செங்கழுநீர் புட்பம்
அன்புட னணிந்து கொண்டே யரிதிரு மார்பில் வாழுங்
கன்னிபொன் மகள்தன் பாதங் கைதொழு தேத்தி வாழ்வாம்.

### அடதாளம்.

திருமகளே திருமகளே திருமகளே வருவாய்
திருமகளோ திருமகளே திருவடியைத் தருவாய்

### பாடல்.

பாற்கடலில் அவதரித்த பத்தினியே பூங்குறமே
வேற்றுமை யில்லாத வேல்விழியே பூங்குறமே
வாசவனு மகபதிக்கு வாழ்வளித்த பூங்குறமே
மாசிலா நான்முகனை மகிழ்ந்தளித்த பூங்குறமே
மாயவன்றன் மார்புதனில் மருவிருக்கும் பூங்குறமே
தூயசீதா தேவியென்று துலங்கிய பூங்குறமே

### முடுகு பாடல்.

சத்யநெறி யோரிடத்தில் சார்ந்திருக்கும் பூங்குறமே
வெற்றியாய்த் தாமரையில் வீற்றிருக்கும் பூங்குறமே
பொய்ய ரிடந்தனிலே பொருந்திடாப் பூங்குறமே
மெய்ய ரிடந்தனிலே மேவிவளர் பூங்குறமே
ஆதிசிவன் தங்கையென வமர்ந்திருக்கும் பூங்குறமே
நீதிநெறியோ ரிடத்தில் நிலைத்திருக்கும் பூங்குறமே
நாகரீக மாமனையில் நாடிவளர் பூங்குறமே
ஆகம வேதங்களில் அமர்ந்தாடும் பூங்குறமே
கூவிளஞ் சோலையிலே குலவுகின்ற பூங்குறமே
ஆவுகளின் கூட்டங்களில் அமர்ந்திருக்கும் பூங்குறமே
அத்திமா னென்றுபெயர் அழைக்கப்பெற்ற பூங்குறமே
வெற்றிமா னென்றுபெயர் விளங்கிவரும் பூங்குறமே
மன்னரிட தோள்களிலே மகிழ்ந்தாடும் பூங்குறமே

பொன்மக ளென்றுபெயர் பொருந்திய பூங்குறமே
கற்புள்ள மடவாரிடம் கலந்திருக்கும் பூங்குறமே
அற்புத மானசம்பத் தளித்தருளும் பூங்குறமே
அண்டரெல்லாம் பணிந்தேத்த வருள்புரியும் பூங்குறமே
தொண்டரெல்லாந் தொழுதேத்த துணையிருக்கும் பூங்குறமே
உலகமெல்லாம் பரவியே ஒளிவிளங்கும்பூங்குறமே
நலமுள்ள யிக்கொலுவில் நாடியமர் பூங்குறமே
கற்பூர தூபதீபங் காணுமம்மா பூங்குறமே
அற்புதமா மலர்தூவி யடிபணிந்தேன் பூங்குறமே
பாலன் கோட்டையனிட பாடலுக்குப் பூங்குறமே
சீலமாய் வந்துநல்ல சீரருள்வீர் பூங்குறமே
புலித்தோலா மாசனத்தில் பொருந்துமம்மா பூங்குறமே
மலிவான மான்றோலில் மருவிநிற்பீர் பூங்குறமே
ஆரைநினைப்ப னம்மா அலங்கார பூங்குறமே
கோருகின்ற வென்னுவில் கொலுவிருப்பாய் பூங்குறமே.

பூங்குறம் பாடல் முற்றிற்று.

## கெங்கையம்மனென்கிற வேங்கையம்மன் பாடல்.

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

புவனமே ருலக மெல்லாம் புகழவே சூழ்ந் திருக்குந்
தவமுனி விண்ணோ ரெல்லாந் தாள் பணிந் தேத்துகின்ற
சிவன் சடை முடியினுளுஞ் சிறப்புடன் வீற்றிருந்தே
பவவினை யகற்று ஞான பகீரதி திருத்தாள் காப்பே.

அடதாளம்.

பாலகெங்கா பாலகெங்கா பாலகெங்கா தேவி
பாலகெங்கா பாலகெங்கா நீலகெங்கா தேவி
சிவகெங்கா சிவகெங்கா சிவகெங்கா தேவி
சிவகெங்கா சிவகெங்கா தவகெங்கா தேவி.

பாடல.

ஆதிசிவன் செஞ்சடையில் அமர்ந்திருக்கும் வேங்கையம்மாள்
சோதிசிவன்செஞ்சடையில் சொலித்திருக்கும்வேங்கையம்மாள்
பார்வதியின் திருகாத்தால் பரிவந்த வேங்கையம்மாள்
பாரினிடம் ஆராகி பயன்றுலந்த வேங்கையம்மாள்
சாகரமா யுலகில் சார்ந்திருக்கும் வேங்கையம்மாள்
தாகவெப்பந் தீர்த்துமே தற்காக்கும் வேங்கையம்மாள்

## மூடுத பாடல்.

ஓவென் றலைகளிலே வுவந்தாடும் வேங்கை யம்மாள்
ஆவென் றலைகடலில் அமர்ந்தாடும் வேங்கையம்மாள்
அண்ட சராசரமெல்லாம் அதிரவரும் வேங்கையம்மாள்
கொண்டல்மக மேருவெல்லாம் குலுங்கவரும் வேங்கையம்மாள்
பாவவினைக ளெல்லாம் பரிகரிக்கும் வேங்கையம்மாள்
மூவுலகத் தோருக்கும் முத்திதரும் வேங்கையம்மாள்
பகீரதியா ளென்றுபெயர் பற்றிய வேங்கையம்மாள்
சகல வுயிர்களிலுஞ் சார்ந்திருக்கும் வேங்கையம்மாள்
சரவணன் றனைவளர்த்த சங்கரியே வேங்கையம்மாள்
வாநதி பவானியென்று வாழ்ந்திடும் வேங்கையம்மாள்
பதியா யுலகமெல்லாம் பரவிய வேங்கையம்மாள்
நதியில் குழவியாகி நாடிவந்த வேங்கையம்மாள்
சீலமறை யோர்வீட்டில் சிறந்திருந்த வேங்கையம்மாள்
பாலகெங்கா தேவியென்று பயின்றிருந்த வேங்கையம்மாள்
அக்ரமங் களைத்திருத்த அவதரித்த வேங்கையம்மாள்
உக்ரசீல கெங்கையென்று உலாவிய வேங்கையம்மாள்
அந்திவண்ண ரோடுவிளை யாடிய வேங்கையம்மாள்
விந்தையா யிக்கொலுவில் விளங்கிவரும் வேங்கையம்மாள்
கற்பூர தூபதீபங் காணுவீர் வேங்கையம்மாள்
அற்புதமா மலர்தூவி அடிபணிந்தேன் வேங்கையம்மாள்
பாலன் கோட்டையனிட பாடலுக்கு வேங்கையம்மாள்
சீலமாய் வந்துநல்ல சீரருள்வீர் வேங்கையம்மாள்
புலித்தோலா மாசனத்தில் பொருந்துவீர் வேங்கையம்மாள்
மலிவான மான்றோலில் மகிழ்ந்திருப்பாய் வேங்கையம்மாள்
ஆரை நினைப்பனிங்கு அலங்கார வேங்கையம்மாள்
கோருகின்ற வென்னுவில் கொலுவிருப்பாய் வேங்கையம்மாள்.

வேங்கையம்மன் பாடல் முற்றிற்று.

---

## ரதிதேவி என்கிற முடிபாலழகியம்மன் பாடல்.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

கடல் தனில வதரித்த கண்மணி பஞ்ச பரணன்
இடந்தனில் வாழ்வு பெற்றே யிருந்தருள் புரியுந் தேவி
நடன சிங்காரி யென்ற நன்முடி யழகி யுன்றன்
அடியிணை பணிந்து போற்று மன்புதந் தாள்வா யம்மா.

### அடதாளம்.

மலர்கூந்தல் மலர்கூந்தல் மலர்கூந்த லழகி
மலர்கூந்தல் மலர்கூந்தல் கலர்கூந்த லழகி.

பாடல்.

அன்ன நடையுடைய வட்மைமுடி யழகியம்மாள்
கன்னல் மொழியுடைய கன்னிமுடி யழகியம்மாள்
கார்நிறக் குழலுடைய காந்திமுடி யழகியம்மாள்
ஆரிமுத்து தேவியாா யமர்ந்தமுடி யழகியம்மாள்
செங்கண்மால் மருகியென்றே செப்பும்முடி யழகியம்மாள்
சங்கரன் புதல்வியெனச் சார்ந்தமுடி யழகியம்மாள்

முடுதுபாடல்.

மங்கள மாயுலகில் மருவுமுடி யழகியம்மாள்
திங்கள் ரவிபோலுந் திகழுமுடி யழகியம்மாள்
துன்னும்பாற் கடல்தனிலே தோன்றுமுடி யழகியம்மாள்
அன்பரிடர் தீர்த்து அருளுமுடி யழகியம்மாள்
வேங்கையம்மை புத்ரியென விளங்குமுடி யழகியம்மாள்
பூங்குறத்தி மருகியெனப் புகழும்முடி யழகியம்மாள்
மன்மதன் மனேவியான மாதுமுடி யழகியம்மாள்
அன்பாக விக்கொலுவில் அமருமுடி யழகியம்மாள்
கற்பூர தூபதீபங் காணுமுடி யழகியம்மாள்
அற்புதமா மலாணிந்து அமருமுடி யழகியம்மாள்
பாலன் கோட்டையனிட பாடல்முடி யழகியம்மாள்
சீலமாய் வந்துநல்ல சேர்க்குமுடி யழகியம்மாள்
புலித்தோலா மாசனத்தில் பொருந்துமுடி யழகியம்மாள்
மலிவான மான்றோலில் மகிழுமுடி யழகியம்மாள்
ஆரை நினைப்பனிங்கே யானமுடி யழகியம்மாள்
கோருகின்ற ஞவில்குடி கொண்டமுடி யழகியம்மாள்

முடியாலழகி பாடல் முற்றிற்று.

---

## தெய்வானையம்மை என்கிற பூங்கன்னியம்மன் பாடல்.

துதி கவி.

தெய்வ குஞ்சரியெனுந் தேன்மொழி திருவடி
வையக மீதினில் வாழ்த்தி வணக்குவாம்.

அடதாளம்.

தேவகுஞ்சரி தேவகுஞ்சரி தேவகுஞ்சரி வாரும்
தேவகுஞ்சரி தேவகுஞ்சரி தேவியே கண்பாரும்

பாடல்.

அமார்முதல் முனிவரெல்லாம் அழகுபூங் கன்னியம்மாள்
குமாரிட தேவியென்று குதுகுலபூங் கன்னியம்மாள்

உன்னை பணிந்தேத்த உத்தமிபூங் கன்னியம்மாள்
அன்பரிட றகற்றி யருள்புரிபூங் கன்னியம்மாள்

முடுகுபாடல்.

தெய்வகுஞ்சரி யென்ற தேன்மொழிபூங் கன்னியம்மாள்
சைவர்கள் தொழுதேத்துஞ் சங்கரிபூங் கன்னியம்மாள்
வெள்ளையானை யிடம்பயின்ற வேல்விழிபூங் கன்னியம்மாள்
உள்ளமிக மகிழ்ந்து உலவும்பூங் கன்னியம்மாள்
பூர்வத்தில் மால்மகளாய் புகழ்ந்தபூங் கன்னியம்மாள்
ஆர்வமாயிக் கொலுவில் அமரும்பூங் கன்னியம்மாள்
கற்பூர தூபதீபங் காணும்பூங் கன்னியம்மாள்
அற்புதமா மலர்தூவி யடிபணிந்தேன்பூங் கன்னியம்மாள்
பாலன் கோட்டையனிட பாடல்பூங் கன்னியம்மாள்
சீலமாய் வந்துநல்ல சீரருள்பூங் கன்னியம்மாள்
புலித்தோலா மாசனத்தில் பொருந்தும்பூங் கன்னியம்மாள்
மலிவான மான்றோலில் மருவும்பூங் கன்னியம்மாள்
ஆரை நினைப்பனம்மா அழகுபூங் கன்னியம்மாள்
கோருகின்ற வென்னுவில் கொலுவிரும்பூங் கன்னியம்மாள்.

பூங்கன்னியம்மன் பாடல் முற்றிற்று.

---

## வள்ளியம்மன் என்கிற காத்தாயி அம்மன் பாடல்.

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

விந்தை மான்வயிற் றில்வந்து விளங்கிய வேடர் தம்மால்
சந்ததம் பயின்றே ஞான சண்முகன் றனை மணர்ந்து
அந்தபூங் கன்னி யோடே யழகு காத்தாயி யம்மாள்
சுந்தர கமல பாதஞ் சூடினேன் முடிமேற் றனே.

அடதாளம்.

ஞானவள்ளி ஞானவள்ளி ஞானவள்ளியம்மாள்
ஞானவள்ளி ஞானவள்ளி மோனவள்ளி யம்மாள்.

பாடல்.

கற்பகத் துக்காகவந்த கண்ணராற் காத்தாயியம்மாள்
அற்புதவி புர்தையிடம் அவதரித்த காத்தாயியம்மாள்
பேர்கன்னி குமரியென்று பேசுங் காத்தாயியம்மாள்
கார்த்திகேய ராறுமுகர்மேற் காதல்கொண்ட காத்தாயியம்மாள்
அறுமுகரை நோக்கிதவம் அன்பாய்செய்த காத்தாயியம்மாள்
அறுமுகனுர் சேவைகண்டு அகமகிழுங் காத்தாயியம்மாள்

முடுகுபாடல்.

உருகவுதக்கு மான்வயற்றில் உற்பவித்த காத்தாயியம்மாள்
பரிவாய்வள்ளிக குழிதனிலே பதிந்திருந்த காத்தாயியம்மாள்

வாசமாய் வேடரிடம் வளர்ந்த காத்தாயியம்மாள்
ஆசையாய்த் தினைப்புனத்தில் அமர்ந்த காத்தாயியம்மாள்
கற்பாணை மீதேறிக் கவுண்டெடுத்த காத்தாயியம்மாள்
அற்புதமா வாயாலோட்டி யாடிய காத்தாயியம்மாள்
வனத்தின்கண் அறுமுகனார் வரக்கண்ட காத்தாயியம்மாள்
மனமகிழ்ந்து தேனுத்தினை மாவுதந்த காத்தாயியம்மாள்
வேலவரை மாலையிட்டு விளங்கும் காத்தாயியம்மாள்
கோலமா யிப்பதியில் கொலுவிருப்பாய் காத்தாயியம்மாள்
கற்பூரதூபதீபங் காணுங் காத்தாயியம்மாள்
அற்புதமா மலர்தூவி யடிபணிந்தேன் காத்தாயியம்மாள்
பாலன் கோட்டையனிட பாடலுக்குக் காத்தாயியம்மாள்
சீலமாய் வந்துநல்ல சீரருள் காத்தாயியம்மாள்
புலித்தோலா மாசனத்திற் பொருந்துங் காத்தாயியம்மாள்
மலிவான மான்றோலில் மகிழுங் காத்தாயியம்மாள்
ஆரை நினைப்பனிங்கே யலங்கார காத்தாயியம்மாள்
கோருகின்ற வென்னாவில் கொலுவிருங் காத்தாயியம்மாள்

காத்தாயியம்மன் பாடல் முற்றிற்று.

## மன்மதன் என்கிற ஆரிமுத்து தேவர் பாடல்.

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

மலர்க்கணை கரத்திற் றாங்கி மந்த மாருதம் வான்வீச
அலர்கிளி வாக னத்தே யமர்ந்துமே மாதர் சூழ
கலமுறு ரதி மானோடு நடித்து வீற்றிருந்து நல்ல
கலராரி முத்துத் தேவர் தழலிணை தொழுது வாழ்வாம்.

அடதாளம்.

ரதிமன்மத ரதிமன்மத ரதிமன்மத ராஜா
ரதிமன்மத ரதிமன்மத பதிமன்மத ராஜா.

பாடல்.

சிங்காரம் பொருந்தியேதான் சிறந்திருக்கும் ஆரிமுத்தே
மங்கள காமமைந்த மகிமையுள்ள ஆரிமுத்தே
அச்சுதன் புத்ரனாக அவதரித்த ஆரிமுத்தே
பச்சையம்மன் மருகனெனப் பாவிவளர் ஆரிமுத்தே

முடுகுபாடல்.

மீனக் கொடியுடைய மேன்மையான ஆரிமுத்தே
வானவர்க் குதவிசெய்த வடிவழகா ஆரிமுத்தே
சித்தஜ னென்றுபெயர் செப்பவரும் ஆரிமுத்தே

அத்தன்மேற் கணைதொடுத்த அங்கஜனே ஆரிமுத்தே
கன்னிமுடி யாலழகி காதலனே ஆரிமுத்தே
நன்மையா யிக்கொலுவில் நடனமிடும் ஆரிமுத்தே
கற்பூர தூபதீங் காணுவீர் ஆரிமுத்தே
அற்புதமா மலர்தூவி யடிபணிந்தேன் ஆரிமுத்தே
பாலன் கோட்டையனிட பாடலுக்கு ஆரிமுத்தே
சீலமாய் வந்துநல்ல சீரருள்வா யாரிமுத்தே
புலித்தோலா மாசனத்தில் புகழ்ந்திருப்பா ஆரிமுத்தே
மலிவான மான்ரூவில் மருவிருப்பீர் ஆரிமுத்தே
ஆசை நினைப்பேனையா அலங்கார ஆரிமுத்தே
கோருகின்ற வென்னுவில் கொலுவிருப்பா யாரிமுத்தே.

ஆரிமுத்து தேவர் பாடல் முற்றிற்று.

---

## செஞ்சடை நாதரென்ற வீரபத்திரர் பாடல்.

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

அரனனல் உருவாய்த் தோன்றி யாயிர முகங்கள் துன்ன
கர மிரண் டாயிரத்திற் கத்திவாள் கதைவேல் மின்ன
உரமதிற் சிரத்தார் மன்னி யுக்ரமா யுலகி லோங்கும்
பரம் பொருள் வீரபத்ரர் பதமலர் பணிந்து வாழ்வாம்.

கடவுள் தோத்திரம்.

அடைக்தவி யுண்டிடு மமரரி யாவரும்
முடிந்திட வெருவியே முனிவர் வேதியர்
உடைந்திட மாமக மொடியத் தக்கணைத்
தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவாம்.

அடதாளம்.

தூயவீர தூயவீர தூயவீர பத்ரா
தூயவீர தூயவீர மாயவீரபத்ரா.

பாடல்.

அத்தன் அனலுருவாய் அவதரித்த வீரபத்ரா
தத்தளிக்க மண்ணும்விண்ணும் தானுதித்த வீரபத்ரா
நந்திகண்பன் பொன்னடியை நமஸ்கரித்த வீரபத்ரா
அந்திவண்ணன் மொழியறிந்து ஆர்ப்பரித்த வீரபத்ரா
பூதப்படை சூழ்ந்துவரப் போர்புரிந்த வீரபத்ரா
நாதகீத மோங்குந்தக்கன் நகரஞ்சென்ற வீரபத்ரா

### முடுகுபாடல்.

ஆங்கார தக்கன்வேள்வி யழியச்செய்த வீரபத்ரா
பாங்கான தேவர்களைப் பங்கஞ்செய்த வீரபத்ரா
கொக்கரித்துத் தக்கன்சிரம் கொய்தஉக்ர வீரபத்ரா
முக்கணனை நிந்தோர் முடிகள்கொய்த வீரபத்ரா
கலைக்கோட்டு முனிவர்சிரங் கண்டித்த வீரபத்ரா
அலைகடலுங் கொதியெழும்ப ஆர்ப்பரித்த வீரபத்ரா
கோபக் கனலாகிக் கொக்கரிக்கும் வீரபத்ரா
ஆபத்து என்றவரை யாதரிக்கும் வீரபத்ரா
ஈசனுல் தேவர்களை யெழுப்பிய வீரபத்ரா
பூஜைகள் பூண்டுலகில் பொருந்திய வீரபத்ரா
சர்வ ரக்ஷகரான சாமியே வீரபத்ரா
சரப பக்ஷியாகவந்த சமர்த்தரே வீரபத்ரா
தூயநர சிங்கத்தின் றோலுரித்த வீரபத்ரா
ஆயிர முகமுடைய வையனே வீரபத்ரா
காஞ்சிநகர் கவரைமடம் காதலித்த வீரபத்ரா
வாஞ்சையாள்வார் தீர்த்தக்கரை வாழுகின்ற வீரபத்ரா
நெல்லுகார வீதிதன்னில் நெடியவனுய் வீரபத்ரா
வல்லவர்கள் பணிந்தேத்த வாசஞ்செய்யும் வீரபத்ரா
வடபத்ர காளியோடு வாழுமுக்ர வீரபத்ரா
தடமுடைய விச்சயையில் தானமரும் வீரபத்ரா
கற்பூர தூபதீபங் காணுவீர் விரபத்ரா
அற்புதமா மலர்தூவி யடிபணிந்தேன் வீரபத்ரா
பாலன் கோட்டையனிட பாடலுக்கு வீரபத்ரா
சீலமாய் வந்துநல்ல சீரருள்வீர் வீரபத்ரா
ஆலைநினைப் பேணையா அலங்கார வீரபத்ரா
கோருகின்ற வென்னுவில் கொலுவிருப்பாய் வீரபத்ரா.

வீரபத்திர சுவாமி பாடல் முற்றிற்று.

---

## அரிகர தேவர் பாடல்.

### எண்சீர் ஆசிரிய விருத்தம்.

வாசமிகு மலர்த்துளப மாலை பூண்டு
வையகத்தில் மோகினியாய் வந்து தோன்றி
ஈசர்திரு வரம்பெற்ற பத்மா சூரன்
எரிந்தவிந்து மாய்ந்தபிற கின்ப மோங்க
நேசமாய்ச் சங்கரனை யிரு தயத்தி
னினைந்தரியு மானுமனை நேர்மை யாலே
பாசமாய் வந்த வரியர தேவன்றன்
பதுமமல ரடிக்கமலம் பணிந்து வாழ்வாம்.

அடதாளம்.

திகழரிஅர திகழரிஅர திகழரியா தேவா
திகழரியா திகழரியா புகழரியா தேவா.

பாடல்.

அரியா தேவனென்ற வாதியே யையனாரப்பா
மூாகரிப்பெண் வயிற்றுதித்த மூர்த்தியே யையனாரப்பா
அந்திவண்ணன் புத்திரனே ஆண்டவனே யையனாரப்பா
சுந்தா வதனஞான சொரூபனே யையனாரப்பா
வெண்கரியி லூர்ந்துவரும் வேதியனே யையனாரப்பா
பண்ணிசைக் குகந்தவனே பாஸ்கரனே யையனாரப்பா

முடுகுபாடல்.

மலர்மகள் மருவுங்காஞ்சி மாநகரி லையனாரப்பா
பலமிகுந்த பிள்ளையார் பாளயத்தி லையனாரப்பா
கோலமிகுஞ் சாலைவீதி கோயில்கொண்ட ஐயனாரப்பா
ஞாலம் புகழ்ந்தேத்தும் நாயகனே யையனாரப்பா
கண்டங் கரியவர்க்குக் கண்ணான வையனாரப்பா
மண்டல மெலாம்பதியாய் மருவிநிற்கு மையனாரப்பா
கந்தருக்குப் பின்பிறந்த கடவுளே யையனாரப்பா
இந்திரன் மனைவிதன்னை யிரட்சித்த வையனாரப்பா
வந்தவெஞ் சூருடன் வாதித்த வையனாரப்பா
குந்தாயுத முடைய குமானே யையனாரப்பா
சந்தனம் புனுகுசெழுஞ் சாந்தணியு மையனாரப்பா
மந்திர தந்திரத்தை மாயச்செய்த வையனாரப்பா
அலங்கார பூங்காவனியிட ஆளனே யையனாரப்பா
நலமுள்ள புட்கரணி நாதனே யையனாரப்பா
தேவிமா ரிருவருடன் தேவனே யையனாரப்பா
காவியுடை யுடுத்திவருங் கண்மணியே யையனாரப்பா
ஆள்பேர்கள் கொக்கரிக்க வதட்டிவரு மையனாரப்பா
வாள்வீரர் பணிந்தேத்த வாசஞ்செய்யு மையனாரப்பா
வேத வேதியர்களெல்லா வேதமோத வையனாரப்பா
பூதகணங்கள் வலம் புரிந்துவர வையனாரப்பா
சாத்தான் குறளிமுதல் சரணஞ்செய்ய வையனாரப்பா
ஆத்தாள்பா மேஸ்வரிதன் அருள்பெற்ற வையனாரப்பா
ஆரகேயூர மலர் அணிந்துவரு மையனாரப்பா
வீரமந்த்ர வாள்பிடித்து விளங்கிவரு மையனாரப்பா
உந்தனிட வைபவத்தை யுரைப்பதற்கு ஐயனாரப்பா
எந்தனு லாகுமோதான் எந்தையே யையனாரப்பா
வறுமையினால் மிகவாடி வருந்துகிறே னையனாரப்பா
குறைதவிர்த்தே யெனையாளுங் கோதிலா வையனாரப்பா

கற்பூர தூபதீபங் காணுவீ ரையனாரப்பா
அற்புதமா மலர்தூவி யடிபணிந்தே னையனாரப்பா
பாலன் கோட்டையனிட பாடலுக்கு ஐயனாரப்பா
சீலமாய் வந்துநல்ல சீரருள்வா யையனாரப்பா
புலித்தோலா மாசனத்தில் பொருந்துவீ ரையனாரப்பா
மலிவான மான்றேலில் மருவிநிற்பீர் ரையனாரப்பா
ஆரை நினைப்பனையா வலங்கார வையனாரப்பா
கோருகின்ற வென்னுவில் கொலுவிருப்பா யையனாரப்பா.

அரிகர தேவர் பாடல் முற்றிற்று.

## காத்தவராய சுவாமி பாடல்.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

நன்மலர் வனத்தைக் காக்க நம்பனு லவ தரித்தே
அன்னைபூ வனத்தைக் காத்தே யழகுறு தேவி நால்வர்
துன்னுவெம் பரியின் மீது துலங்கியே காத்த லிங்கம்
பொன்னடி தன்னை நாளு புரிந்துநாம் போற்றி வாழ்வாம்.

### அடதாளம்.

வனங்காத்த வனங்காத்த வனங்காத்த தங்கம்
வனங்காத்த வனங்காத்த புனங்காத்த லிங்கம்.

### பாடல்.

அம்மையப்ப ராலுதித்த அலங்கார காத்தலிங்கம்
உம்பர்புகழ் பூவனத்தில் உலாவிவருங் காத்தலிங்கம்
விந்தையாய் பூவனத்தில் வீற்றிருந்த காத்தலிங்கம்
கந்தமிகு மலர்வனத்தைக் காக்கவந்த காத்தலிங்கம்
கன்னியின் றுகிலாடை கண்டெடுத்த காத்தலிங்கம்
அன்பாயுலக மெங்கு மமர்ந்திருக்குங் காத்தலிங்கம்

### முடுகு பாடல்.

பஞ்சவர்ன புரவியேறி பவனிவருங் காத்தலிங்கம்
அஞ்சலென் றடுத்தவரை யாதரிக்குங் காத்தலிங்கம்
கழுவேறி பூஜைபூண்டு களித்திருக்குங் காத்தலிங்கம்
தொழுதவ ரிடர்நீக்கித் துணையிருக்குங் காத்தலிங்கம்
உக்ரமந்த்ர வாளுடைய வோங்கார காத்தலிங்கம்
கொக்கரித்தேவல் பில்லிகளைக் கொள்ளைகொண்ட காத்தலிங்கம்
ஆரிய மாலையொடு மமர்ந்திருக்குங் காத்தலிங்கம்
பேர்காப் பழகியொடு பேசிய காத்தலிங்கம்
அன்னமுத்து வந்தழகி யகமகிழுங் காத்தலிங்கம்

கன்னியர் நால்வருடன் கலந்திருக்குங் காத்தலிங்கம்
கற்பூர தூபதீபங் காணுவீர் காத்தலிங்கம்
அற்புதமா மலர்தூவி யடிபணிந்தேன் காத்தலிங்கம்
பாலன் கோட்டையனிட பாடலுக்குக் காத்தலிங்கம்
சீலமாய் வந்துநல்ல சீரருள்வீர் காத்தலிங்கம்
புலித்தோலா மாசனத்தில் பொருந்துவீர் காத்தலிங்கம்
மலிவான மான்றோலில் மகிழ்ந்திருப்பீர் காத்தலிங்கம்
ஆரை நினைப்பனையா அலங்கார காத்தலிங்கம்
கோருகின்ற வென்னுவில் கொலுவிருப்பாய் காத்தலிங்கம்.

காத்தவராய சுவாமி பாடல் முற்றிற்று.

---

## ஏழ்முனிவ ரென்கிற வாழ்முனிவர் பாடல்.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

பார்வதி யருளா லிந்த பார்தனில் வீர ரோடு
போர் புரிந்துலக மெல்லாம் புகழுறப் பொலிவுற் றோங்கி
தார்பெரு மார்பந் தாங்குந் தபமுனி யெழுவர் தாள்கள்
சீர்பெறச் சேவை செய்து சிந்தித்து வாழ்வோ யாமே.

### இதுவுமது.

செகம்புகழ் வசிஷ்டர்தாமுஞ் செம்முனி வடிவமானார்
சகசமாய்ப்பராசர் வந்தே சடாமுனியுருவங் கொண்டார்
முகமலர்வியாசர் தோன்றி முத்துமா முனியுமானார்
அகமகிழ் வியாக்ரபாதர் அருண்முனி லாடரானார்

### இதுவுமது.

அந்தமாந் ததீசி யென்பார் அவர்கரு முனியுமானார்
விந்தையாய் வேணுநாதர் விளங்குபூ முனியுமானார்
பந்தமாயகஸ்தியர் தோன்றி பகரும்வாழ் முனியாமென்றே
வந்தனரவர்கள் பாதம் வணங்கிநாந் துதிசெய்வேனே.

### அடதாளம்.

மாமுனிகள் மாமுனிகள் மாமுனிகள் வருவீர்
மாமுனிகள் மாமுனிகள் மலரடியைத் தருவீர்.

### பாடல்.

அண்டர்புகழ் செம்முனியே யலங்காரக் கருமுனியே
தொண்டர்தொழுந் தவமுனியே தூயவேத மாமுனியே
கோலலாட மாமுனியே கொக்கரிக்கும் பூமுனியே
சீலமாமறை புகழுஞ் சிங்கார வாழ்முனியே
வீரமந்த்ர வாள்பிடித்து வீற்றிருக்கும் வாழ்முனியே
பார்வதியா லவதரித்த பாங்கான வாழ்முனியே

முடுகுபாடல்.

ஆர்பரித்துக் கொக்கரித்து அதட்டிவந்த வாழ்முனியே
வீரரைப் போர்முகத்தில் வென்றஉக்ர வாழ்முனியே
ஏர்பாவு மீசாடி யேத்திதொழும் வாழ்முனியே
ஊரெங்கும் பதியாகி உலாவிவரும் வாழ்முனியே
வானத்தை யளாவியே வளர்ந்திருக்கும் வாழ்முனியே
ஞானாம்பிகை பாதம் நயந்துதொழும் வாழ்முனியே
பச்சையம்மன் சந்நிதியில் பாவித்தொழும் வாழ்முனியே
இச்சையாய் முன்பூசை யேற்றுக்கொள்ளும் வாழ்முனியே
மந்திர தந்திரத்தை மார்பிளந்த வாழ்முனியே
விந்தைமிகுஞ் சூனியத்தை விழவுதைத்த வாழ்முனியே
வாச மலரணிந்து வாழ்ந்திருக்கும் வாழ்முனியே
பூஜைகள் பூண்டுமே புகழ்ந்திருக்கும் வாழ்முனியே
கொச்சிமலை யாளமெல்லாங் கொள்ளைகொண்ட வாழ்முனியே
இச்சமயம் அடியார்முன் னெழுந்தருளும் வாழ்முனியே
கற்பூர தூபதீபங் காணுவீர் வாழ்முனியே
அற்புதமா மலர்தூவி யடிபணிந்தேன் வாழ்முனியே
பாலன் கோட்டையனிட பாடலுக்கு வாழ்முனியே
சீலமாய் வந்துநல்ல சீரருள்வீர் வாழ்முனியே
புலித்தோலா மாசனத்தில் புகழ்ந்திருப்பீர் வாழ்முனியே
மலிவான மான்றோலில் மகிழ்ந்திருப்பீர் வாழ்முனியே
ஆரை நினைப்பனையா அலங்கார வாழ்முனியே
கோருகின்ற வென்னுவில் கொலுவிருப்பாய் வாழ்முனியே

வாழ்முனிவர் பாடல் முற்றிற்று.

உக்ரவீரன் பாடல்.

வீராசஷ்த னென்றே விளக்கமுறு முக்ரவீரன்
போர்புரிந்து தோல்வியுற்ற போஜன்உக்ர வீரனவன்
கவால் தலையாரி கனத்தஉக்ர வீரனவன்
சேகவத் தலையாரி செம்மல்உக்ர வீரனவன்
கோட்டை தலையாரி கோலஉக்ர வீரனவன்
நாட்டு தலையாரி நல்லஉக்ர வீரனவன்
பூஜைகள் பூண்டுமே புழும்உக்ர வீரனவன்
ஆசையாய் வாழ்முனிமுன் அமர்ந்தஉக்ர வீரனவன்
கற்பூர தூபதீபங் காணுமுக்ர வீரனவன்
அற்புதமா யென்னாளும் அமரும்உக்ர வீரனவன்
புலித்தோலா மாசனத்தில் பொருந்துஉக்ர வீரனவன்
மலிவான மான்றோலில் மருவுமுக்ர வீரனவன்

உக்ரவீரன் பாடல் முற்றிற்று.

## மதுரை வீரர் பாடல்.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

ஆதவன் குலத்தில் வந்தே யரசன்றன் மகனாய்த் தோன்றி
காதல்சேர் பொம்மி மாதைக் கலந்தனைத் தன்பு கூர்ந்தே
மாதவ ருறையுந் தென்பால் மதுரைமா நகரில் வாழும்
நாதனும் மதுரை வீரன் நற்பத முடிமேற் கொள்வாம்.

### அடதாளம்.

மாமதுரை மாமதுரை மாமதுரை வீரா
மாமதுரை மாமதுரை பூமதுரை வீரா

### பாடல்.

காசிநகர் தனிலுதித்த கண்மணியே மதுரைவீரா
மாசிலாத் துளசிராஜன் மகனான மதுரைவீரா
கோலமாலை யுடன்பிறந்தே கோபங்கொண்ட மதுரைவீரா
சீலமுள்ள வனந்தனிலே சேர்ந்திருந்த மதுரைவீரா
ஐந்துதலை நாகத்தோடு மன்புகொண்ட மதுரைவீரா
விந்தையா யரவினோடும் விளையாடும் மதுரைவீரா

### முடுகுபாடல்.

மாதகிச் சின்னானிடம் மருவிருந்த மதுரைவீரா
காதலாய் பொம்மியரைக் கலந்தணைந்த மதுரைவீரா
பொம்மியரைச் சிறையெடுத்துப் போர்புரிந்த மதுரைவீரா
வெம்பிவந்த பொம்மணனை வெட்டிவிட்ட மதுரைவீரா
யார்புகழுந் திருச்சிராப் பள்ளிசென்ற மதுரைவீரா
பேர்பெரிய தென்மதுரை பேசுகின்ற மதுரைவீரா
கள்ளரிட கூட்டங்களை கருவறுத்த மதுரைவீரா
வெள்ளையரைச் சிறையெடுத்து வெட்டுண்ட மதுரைவீரா
அன்னை மீனாக்ஷியம்மை யருள்பெற்ற மதுரைவீரா
தன்னுந்தேவர் உருவாகித் தோன்றிய மதுரைவீரா
பஞ்சகல் யாணிமீது பவனிவரு மதுரைவீரா
அஞ்சலென் றடுத்தவரை யாதரிக்கு மதுரைவீரா
உக்ரமந்த்ர வாளுடைய வோங்கார மதுரைவீரா
கொக்கரித்து இச்சபையில் கொலுவமரு மதுரைவீரா
கற்பூர தூபதீபங் காணுமையா மதுரைவீரா
அற்புதமா மலர்தூவி யடிபணிந்தேன் மதுரைவீரா
பாலன் கோட்டையனிட பாடலுக்கு மதுரைவீரா
சீலமாய் வந்துநல்ல சீருள்வாய் மதுரைவீரா

புலித்தோலா மாசனத்தில் பொருந்துமையா மதுரைவீரா
மலிவான மான்றேவில் மருவுமையா மதுரைவீரா
ஆரை நினைப்பனையா அலங்கார மதுரைவீரா
கோருகின்ற வென்னுவில் கொலுவிருப்பீர் மதுரைவீரா.

மதுரை வீரர் பாடல் முற்றிற்று.

## ஸ்ரீ காமாக்ஷி துணை தேவர்கள் தீபவழைப்பு.

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

மாமணி குட விளக்கின் மருவிய தெய்வத் தேவி
பூமணி விளக்கிற் றேன்றிப் பொலிவுரு மொளியா யோங்க
தூமணி யன்பர் தங்கள் துகளறக் கிருபை செய்வாய்
பாமணி மாலே பூண்ட பார்வதி காமாக்ஷி தாயே.

அடதாளம்.

மணிவிளக்கிற் மணிவிளக்கிற் மணிவிளக்கில் நின்றே
மணிவிளக்கிற் மணிவிளக்கிற் மருவீரின்றே
பதிவிளக்கிற் பதிவிளக்கிற் பதிவிளக்கில் நின்று
பதிவிளக்கிற் பதிவிளக்கிற் பகருவீரின்று.

பாடல்.

விந்தையாய்ப் பூவிளக்கில் விளையாடுந் தேவதையே
அந்தமிகும் பூவிளக்கில் அமர்ந்தாடுந் தேவதையே
அலங்கார குடவிளக்கில் ஆர்ப்பரிப்பீர் தேவதையே
நலமுள்ள மணிவிளக்கில் நடனமிடுந் தேவதையே
வாசமாய்ப் பூவிளக்கில் வளர்ந்தாடுந் தேவதையே
ஊசிமுனைபோல் நிறுத்தி உலுக்கிவைப்பீர் தேவதையே

முடுகுபாடல்.

கருணையாய்க் குடவிளக்கில் கலந்தாடுந் தேவதையே
திருஅறுகுபோல் நிறுத்தி திகழ்ந்தாடுந் தேவதையே
சீறி யெழுந்திருந்து சீருள்வீர் தேவதையே
தூறி யெழுந்திருந்து துலங்குகின்ற தேவதையே
நீதியாய்ப் பூவிளக்கில் நின்றுடுந் தேவதையே
சோதியாய்ப் பூவிளக்கில் சுழன்றுடுந் தேவதையே
காற்றை நிறுத்தியருள் கடாக்ஷிப்பீர் தேவதையே
தோத்திரிக்கும் அடியார்முன் தோன்றுவீர் தேவதையே
குபுகுபென்று அனலெழுப்பிக் கொக்கரிப்பீர் தேவதையே
அபரூபமாய் விளக்கில் ஆடிடுவீர் தேவதையே

வன்னிச் சுடரெழுப்பி வாக்கருள்வீர் தேவதையே
ஒன்றிரண்டு மூன்றுதாம் ஒட்டுமனல் தேவதையே
இருப்பதுநீ மெய்யானால் எழுந்துநில்லாய் தேவதையே
வருவது மெய்யானால் வாக்களிப்பாய் தேவதையே
பெருங்காற்றுத் தனைநிறுத்தி பேசிடுவாய் தேவதையே
வருங்காற்றுத் தனைநிறுத்தி வசனிப்பீர் தேவதையே
பல்லிசொல்லும் பாவனைபோல் பகருவீர் தேவதையே
உல்லாச மாயெழுந்து உலுக்கிவைப்பீர் தேவதையே
படியோர்முன் னரைவாக்குப் பகராமல் தேவதையே
அடியார்முன் முழுவாக்கு அருள்செய்வீர் தேவதையே
முத்துச்சரம் போலனலைப் முடுக்குவீர் தேவதையே
கொத்துச்சரம் போலனலைக் கோர்த்தெழுப்புந் தேவதையே
செண்டுபோ லனலெழுப்பிச் சேதிசொல்வாய் தேவதையே
உண்டென்றால் மூன்றுசுடர் உதறிடுவாய் தேவதையே
வருவது இல்லையென்றால் வளைந்தாடாய் தேவதையே
பொருமையாய் மணிவிளக்கில் பொருந்திருப்பீர் தேவதையே
கற்பூர தூபதீபங் காணுவீர் தேவதையே
அற்புதமா மலர்தூவி யடிபணிந்தேன் தேவதையே
பாலன் கோட்டையனிட பாடலுக்குத் தேவதையே
சீலமாய் வந்துநல்ல சீருள்வீர் தேவதையே
புலித்தோலா மாசனத்தில் புகழ்ந்திருப்பீர் தேவதையே
மலிமான மான்றோலில் மகிழ்ந்திருப்பீர் தேவதையே
ஆரை நினைப்பனிங்கே யலங்காரதேவதையே
கோருகின்ற வென்னுவில் கொலுவிருப்பாய் தேவதையே.

ஸ்ரீ காமாக்ஷி தேவர்தீபம் பாடல் முற்றிற்று.

---

## அம்பாள் பகல் கும்ப பூஜை பாடல்.

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

உம்பர்கள் பலருஞ் சூழ வுன்மன மிக மகிழ்ந்தே
சம்ப்ரம மாக பூஜை சாம்பவி யேற்றுக் கொண்டு
நம்புமிவ் வடியார்க் கெல்லாம் நலமுற வரங்கள் தந்தே
செம்மையாய் வீற்றிருக் குஞ் செகத்தி ரக்ஷகியே போற்றி.

அடதாளம்.

கூழ்மோரு கூழ்மோரு கூழ்மோரு தயாராம்
கூழ்மோரு கூழ்மோரு கூழ்மோரு பயராம்

பாடல்.

மதுரமுள்ள கூழ்மோரு மனமகிழ்ந்து ஏற்வைகொள்வீர்
சதுருடனே கூழ்தயரு சம்ரமுட னேற்வைகொள்வீர்
அண்டாவில் கூழ்மோரு அடுக்கடுக்கா யேற்வைகொள்வீர்
குண்டானில் கூழ்தயராம் குடங்குடமா யேற்வைகொள்வீர்

முடுகு பாடல்.

உப்புஊர்க்காய் வெங்காயம் உதாபலி யேற்வைகொள்வீர்
செப்பு குடங்களிலே செந்தயரு ஏர்வைகொள்வீர்
இளநீரிரு மூன்றுகுடம் இஷ்டமுடன் னேற்வைகொள்வீர்
கனாதீர கரும்புரசம் காதலுட னேற்வைகொள்வீர்
பால்பொங்கல் பழங்களுடன் பலகாரம் மேற்வைகொள்வீர்
சால்சாலாய் அவல்கடலை சர்க்கரையு மேற்வைகொள்வீர்
கற்பூர தூபதீபங் கண்டுமே யேற்வைகொள்வீர்
அற்புதமா மலர்தூவி யடிபணிய ஏற்வைகொள்வீர்
பாலன் கோட்டையனிட பாடலுக்கு ஏற்வைகொள்வீர்
சீலமாய் வந்துநல்ல சீருளி யேற்வைகொள்வீர்

பகல் பூஜை முற்றிற்று.

---

## இரவு கும்பபூஜை பாடல்.

அடதாளம்.

சாதங்கறி சாதங்கறி சாதங்கறி யமது
சாதங்கறி சாதங்கறி போதங்கறி யமது.
பொங்கல்புளி பொங்கல்புளி பொங்கல் பயாமது
பொங்கல்புளி பொங்கல்புளி பொங்கல் தயிராமது.

பாடல்.

பொன்மலைபோ லன்னங்கள் பொருமையுட னேற்வைகொள்வீர்
மன்மலைபோ லன்னங்கள் மனமகிழ்ந் தேற்வைகொள்வீர்
அப்பமுடன் ஞேசைவடை யவல்கடலை யேற்வைகொள்வீர்
செப்பறிய வெள்ளுருண்டை செவ்விளநீர் ஏற்வைகொள்வீர்
மொச்சை துவரைகன்னல் முக்கனியு மேற்வைகொள்வீர்
இச்சையுள்ள தேங்காய்கள் இட்லியு மேற்வைகொள்வீர்

முடுகு பாடல்.

கச்சூரியு மாதுளமாங் கனிவகைகள் ஏற்வைகொள்வீர்
சாதங் கறிவகைகள் சம்ரமுடன் ஏற்வைகொள்வீர்
மோதகந் தேன்தினைமாவு முளகுவடை யேற்வைகொள்வீர்
பன்னீர் ஜிலேபிலட்டுப் பற்பியல்வா யேற்வைகொள்வீர்
உன்னத பாயாசமுடன் உளுந்துவடை ஏற்வைகொள்வீர்

பாற்பொங்கல் சர்க்கரையும் பலகாரம் ஏற்வைகொள்வீர்
பாற்றயிர் நெய்மோரு பானகமும் ஏற்வைகொள்வீர்
சந்தனங் கஸ்தூரியத்தர் சாந்துபன்னீர் அணிந்துகொள்வீர்
விந்தைமிகுந் தக்கோலம் விதம்விதமாய்த் தரித்துக்கொள்வீர்
அற்புதமாங் கும்பத்தின்மேல் அமர்ந்து கொலுவிருப்பீர்
பொற்சிம்மா சனத்தின்மேல் பொருந்திக் கொலுவிருப்பீர்
கற்பூர தூபதீபங் கண்டு கொலுவிருப்பீர்
அற்புதமா மலர்தூவி யடிபணிந்தேன் வீற்றிருப்பீர்
பாலன் கோட்டையனிட பாடலுக்கு மனமகிழ்வீர்
சீலமாய் வந்துநல்ல சீரருள்வீர் தேவதையே
புலித்தோலா மாசனத்தில் பொருந்திருப்பீர் தேவதையே
மலிவான மான்றோலில் மகிழ்ந்திருப்பீர் தேவதையே
ஆரை நினைப்பனிங்கே யலங்கார தேவதையே
கோருகின்ற வென்னுவில் கொலுவிருப்பாய் தேவதையே.

இரவு கும்ப பூஜை பாடல் முற்றிற்றி.

---

## ஆள்பேர்கள் பூஜை பாடல்.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

நூல் புகலா லயத்தை நட்பமாய்க் காவல் பூண்டு
மால்கொளு மாட்பே ராளர் மாமுனி யண்ணன் மார்கள்
கோல்காரர் கூட்டக் காரர் கோலமாம் புரவி யேறும்
வேல்வளர் வீரர் பூஜை விளம்புவேன் விளங்கத் தானே.

### அடதாளம்.

பால்பொங்கல் பால்பொங்கல் பழங்கள் பலகாரம்
பால்பொங்கல் பால்பொங்கல் பழங்கள் அலங்காரம்.

### பாடல்.

ஆள்பேராஞ் சேவகரே யரும்பூஜை யேற்வைகொள்வீர்
வாள்வீரர் சேவகரே வளர்பூஜை யேற்வைகொள்வீர்
காவற்கார் சேவகரே கனபூஜை யேற்வைகொள்வீர்
சேவலுடன் ஆடுபன்றி செழிப்புடனே யேற்வைகொள்வீர்
கள்ளு சாராயமுடன் கறிவகைகள் ஏற்வைகொள்வீர்
உள்ளமிக மகிழ்ந்து உக்ரமுடன் வீற்றிருப்பீர்
கற்பூர தூபதீபங் கண்டு கொலுவிருப்பீர்
அற்புதமா மலர்தூவி யடிபணிந்தே னமர்ந்திருப்பீர்.

## இதுவுமது.

அடதாளம்.

கோலமேஷ கோலமேஷ கோலகோழி யுடனே
கோலமேஷ கோலமேஷங் கொள்வீ ரன்புடனே
மயிடமிடப மயிடமிடப மயிடபலி யுண்டு
மயிடமிடப மயிடமிடப மாவின்பலி கொண்டு.

பாடல்.

முட்டைகறி ரொட்டிவடை முக்காவு மேற்வைகொள்வீர்
புட்டிபுட்டி யாய்ச்சரக்குப் பிராந்தியோயி னேற்வைகொள்வீர்
கட்டுக்கட்டாய்ச் சுருட்டுவெள்ளை கட்குடங்க ளேற்வைகொள்வீர்
தட்டுத்தட்டா யவல்கடலை லட்டுபூரி யேற்வைகொள்வீர்
ஆவலுட ஞடுபன்றி யணியணியா யேற்வைகொள்வீர்
சேவலுட னெருமைக்கடா செழிப்புட னேற்வைகொள்வீர்

முடுகு பாடல்.

வீசைவீசை யாகக்கெஞ்சா விருப்பமுட னேற்வைகொள்வீர்
ஆசைமிகும் பத்தாயு மபினிமாஜ்ஜிய மேற்வைகொள்வீர்
தேங்காயுடன் செவ்விளநீர் தேன்குழலு மேற்வைகொள்வீர்
மாங்கனியுங் கிச்சிலியு மாதுளமும் ஏற்வைகொள்வீர்
செங்கரும்பும் வேர்ப்பலாவுஞ் செவ்வாழை யேற்வைகொள்வீர்
மங்களமாய்த் தேனுந்தினை மாவுகளும் ஏற்வைகொள்வீர்
கற்கண்டு சர்க்கரையுங் கனிவகைகள் ஏற்வைகொள்வீர்
அற்புதசந் தனம்புனுகும் அத்தர்பன்னீ ரேற்வைகொள்வீர்
கோலமல்லி குருவேர்தாழை கொன்றைவில்வ மணிந்துகொள்வீர்
பால்பொங்கல் மதுபாணம் பாங்காக வேற்வைகொள்வீர்
கொக்கரித்துச் சகலபலி கொண்டு கொலுவிருப்பீர்
உக்ரமுடன் வேணபலி உண்டு கொலுவிருப்பீர்
கற்பூர தூபதீபங் கண்டுமே கொலுவிருப்பீர்
அற்புதமா மலர்தூவி யடிபணிந்தேன் வீற்றிருப்பீர்
பாலன் கோட்டையனிட பாடலுக்கு மனமகிழ்வீர்
சீலமாய் வந்துநல்ல சீரருள்வீர் தேவர்களே
புலித்தோலா மாசனத்தில் பொருந்திருப்பீர் தேவர்களே
மலிவான மான்றேவில் மருவிருப்பீர் தேவர்களே
ஆரை நினைப்பனிங்கே யலங்கார தேவர்களே
கோருகின்ற வென்னுவில் கொலுவிருப்பீர் தேவர்களே.

ஆன்பேர்சள் பூஜை பாடல் முற்றிற்று.

## ஆலஞ் சுற்றும் பாடல்.

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

கன்னிய ரால மேந்திக் காதலாய் மன மகிழ்ந்தே
பன்னுமங் கலங்கள் பாடிப் பகவதி தனக்குச் சுற்றி
யன்புடன் திருட்டி போக்கி யவரவர் துதிகள் செய்தே
நன்மையை யுரைப்ப தற்கு நாரணி கழல்கள் போற்றி.

அடதாளம்.

கன்னிபெண்கள் கன்னிபெண்கள் கன்னிபெண்கள் கூடி
கன்னிபெண்கள் கன்னிபெண்கள் காதலுடன் நாடி.

பாடல்.

முத்தாலே யாலத்தி மூன்றுலக்ஷம் பேரெடுத்தார்
சித்ரமிகு மாலத்தி சேடியர்கள் தாமெடுத்தார்
பலவர்ன வாலாத்தி பக்தரெல்லாந் தாமெடுத்தார்
கலருள்ள வாலத்தி கன்னியர்கள் தாமெடுத்தார்

முடுகுபாடல்.

செங்கமல பாதமதைச் சேவித்து சுற்றிவந்தார்
மங்களங்கள் தாம்பாடி மருவீயே சுற்றலுற்றார்
அற்பர்கள் கண்ணேறு அஞ்சியஞ்சி தானோட
கற்பூர வாலாத்தி கன்னியர்கள் தாமெடுத்தார்
விந்தையுள்ள வாலாத்தி விதம்வித மாகச்சுற்றி
பந்தமுடன் றேங்காய்கள் பலியிட்டுத் தோத்திரித்து
திருஷ்டி கழித்தார்கள் திகழ்தெருவிற் றூந்தெளித்தார்
அஷ்டா க்ஷரப்பொருளே யார்பரித்து வாருமென்றார்
பஞ்சாக்ஷரப் பொருளே பரிந்தோடி வாருமென்றார்
கொஞ்சி விளையாடி கோலமுடன் வாருமென்றார்

ஆலஞ் சுற்றும் பாடல் முற்றிற்று.

---

## பந்தடிப் பாடல்.

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

வாசமாய் நகலரைச் சுற்றி வந்தபின் அம்மை தானும்
பூசனை புரி யிடத்துப் புகமுட னமரு முன்பே
பாசமாய்க் கும்மி கொண்டான் பந்தடி முதலாய் பாட
ஈசன்றன் மகனைத் தோன்று மிபமுகன் கழல்கள் காப்பே.

176339

அடதாளம்.

பொற்சரிகை பொற்சரிகை பொற்சரிகை குலுங்க
பொற்சரிகை பொற்சரிகை நற்சரிகை துலுங்க.

பாடல்.

ஞாலம்புகழ் நகரைச்சுற்றி நாயகியாள் வருகலுற்ருள்
கோலமிகு நகரஞ்சுற்றிக் கோதிலாதாள் வருகலுற்ருள்
விந்தையுள்ள வீதியெல்லாம் விளையாடி வருகலுற்ருள்
அந்தமிகும் வீதியெல்லாம் அமர்ந்தாடி வருகலுற்ருள்
அன்ன நடைநடந்து அலங்காரமாய் வருகலுற்ருள்
சின்ன நடைநடந்து சிங்காரமாய் வருகலுற்ருள்

(R2-91)
N30

ம்ருதுபாடல்.

தங்கச்சரிகை குலுங்கவே தாவடமார்பிற் புரளவே
வங்கிசுருள் கொலுசுபீலி வச்சரபதக்க மின்னவே
சங்குநிகர் கழுத்தில்தங்கச் சரப்பளிகள் துன்னவே
பங்கயப்பொற் பாதந்தன்னில் பாடகந்தண்டை யசையவே
எங்கும்புகழ் தேவதைகள் எடுத்துஒருபங் தடித்தனர்
மங்களமாய் தேவதைகள் மருவியிருபங் தடித்தனர்
முத்துரத்ந வளைகளசைய மோகனுரங் குலுங்கவே
சித்ரகடக கங்கணங்கள் செங்கதிர்போற் ஜொலிக்கவே
பத்தரைமாற்றுப் பசும்பொன்மேனி பளபளென்று மின்னவே
ரத்நவொட்டி யாணம்புட்ப ராககம்மல் துன்னவே
வெற்றியான தேவதைகள் வீசிமூன்றுபங் தடித்தனர்
சித்தமகிழ்ந்து தேவதைகள் சீராய்நாலுபங் தடித்தனர்
அன்னம்வரால் அலவன்வாழை ஆல்மலையுங் குலுங்கவே
துன்னுஞ்சிங்கம் சங்குமதிரத் திங்கள்சேலுஞ் சிவக்கவே
மின்னுமேனி தன்னில்வேர்வை முத்துமுத்தாய் விளங்கவே
பின்னல்சடையில் சுரும்பினங்கள் பிரசமுண்டு பாடவே
இன்பமுள்ள தேவதைகள் எழிலாயைந்துபங் தடித்தனர்
அன்புமிகுந்து தேவதைகள் அழகாயாறுபங் தடித்தனர்
கந்தமலர்க் கூந்தலாடக் கனகமேரு குலுங்கவே
விந்தைமிகு மலர்மணங்கள் விளங்கியெங்கும் வீசவே
சந்தனங் கஸ்தூரிஅத்தர் சாந்துபன்னீர் வீசவே
சுந்தரமான சேடிமார்கள் சுற்றிபந்து பிடிக்கவே
அந்தமான தேவதைகள் ஆடிஏழுபங் தடித்தனர்
சிந்தைமகிழ்ந்து தேவதைகள் சீராயெட்டுப்பங் தடித்தனர்
தண்டைசுருள் கொலுசுபீலி தகதகென்று ஒலிக்கவே
வண்டையங்கா லாழிமிஞ்சி வளையலினங்கள் ஜொலிக்கவே
விண்டலமும் மண்டலமும் விளங்குமலைக ளதிரவே

வண்டதுண்ட பூதபேய்கள் வலம்புரிந்து ஓடவே.
தொண்டர்போற்றும் தேவதைகள் தொகுப்பாய்நவபர் தடித்தனர்
பண்டைமறைகள் பன்னுர்தேவர்கள் பாங்காய்பத்துபர் தடித்தனர்

## சாதா பாடல்.

### அடதாளம்.

அன்னநடை அன்னநடை அன்னநடை பெண்கள்
அன்னநடை அன்னநடை சின்னநடை பெண்கள்.

### பாடல்.

பந்தாட செண்டாட பாங்கிபெண்கள் கொண்டாட
விந்தையுள்ள சிலம்பாட வினைகளெல்லாம் பறந்தோட
வெங்கல பம்பையாட விதம்விதமாய் உடுக்கைபாட
சிங்கார மணிகளாட சேவித்து அன்பர்நாட
கஸ்தூரி மாலையாடக் கவுரியிரு மருங்கும்போட
அஸ்த கடகமாட ஆபாணங் குலுங்கியாட
சம்பங்கி மாலையாட சாம்ராணி தூபம்போட
பம்புபில்லி யேவலோட பாவலரைப் பணிந்துபாட
உஞ்சல் பதிகள்ஆட ஓங்காரமா மருளாட
தஞ்சமென்றே யுனைபாட தரித்திரங்கள் விட்டோட
கோலமிகும் பீடத்தின்மேல் கொக்கரித்து அமர்ந்தாட
பாலன் கோட்டையனிட பாடலுக்கு மகிழ்ந்தாட
கற்பூர தூபம்போட கலகலென்று சிலம்பாட
பொற்பதுமை போலாக பொருந்தியே தேவர்ஆட.

## தேவதையை யழைக்கும் பாடல்.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

கன்னிப் பெண் முடிகள் தேடிக் ககனர்கள் வாடை கொண்டு
அன்பர்கள் துயரந் தீர ஆவேச மாகி வந்து
இன்னவில் லாமற் காக்கு மீஸ்வரி காமாக்ஷி தேவி
பொன்னடி தன்னை நாளும் போற்றியே புகழ்ந்து வாழ்வாம்.

### அடதாளம்.

பூமுடிமேல் பூமுடிமேல் பூமுடிமேல் நாடி
பூமுடிமேல் பூமுடிமேல் பொருந்திவிளை யாடி

மாமுடிமேல் மாமுடிமேல் மாமுடிமேல் நாடி
மாமுடிமேல் மாமுடிமேல் மருவிவிளை யாடி
பெண்கள்முடி பெண்கள்முடி பெண்கள்முடி மீது
பெண்கள்முடி பெண்கள்முடி பேசுமிப் போது
புருடர்முடி புருடர்முடி புருடர்முடி மீதே
புருடர்முடி புருடர்முடி வருவீரிப் போதே
பாலர்முடி பாலர்முடி பாலர்முடி தேடி
பாலர்முடி பாலர்முடி கோலஞ்செய்வீ ராடி.

பாடல்.

பொன்மணியின் சிலம்பெடுத்து போற்றிசெய்தேன் தேவதையே
துன்னுமணி சிலம்பெடுத்து தோத்தரித்தேன் தேவதையே
பூஜைமுகந் தேடியேதான் பொருந்துவீர் தேவதையே
ஆசையுள்ள பூமுடிமேல் ஆடிடுவீர் தேவதையே
அன்பர்கள் பூமுடிமேல் அமர்ந்தாடுந் தேவதையே
இன்பமுள்ள பூமுடிமேல் இருந்தாடுந் தேவதையே
சுத்தமுள்ள பூமுடிமேல் சூழ்ந்தாடுந் தேவதையே
பக்தியுள்ள பூமுடிமேல் பதிந்தாடுந் தேவதையே
விந்தையுள்ள பூஜைமுகம் விளையாடுந் தேவதையே
அந்தமுள்ள பூஜைமுகம் அமர்ந்தாடுந் தேவதையே
காலைக் கொலுமுகத்தில் கருணைசெய்வீர் தேவதையே
மாலைக் கொலுமுகத்தில் மகிழ்ந்தாடுந் தேவதையே

முடுகுபாடல்.

கோலமாய்ப் பூமுடிமேல் கொஞ்சியாடுந் தேவதையே
கால்தரையில் பாவாமல் கதறச்செய்வாய் தேவதையே
அடியைப் புரளவைத்து ஆட்டிவைப்பாய் தேவதையே
முடியைக் குலுங்கவைத்து முடுக்கிடுவாய் தேவதையே
கொக்கரித்து பற்கடித்து கோலஞ்செய்வாய் தேவதையே
சக்கரம் போற்சுழன்று சதிராடுந் தேவதையே
வந்தேனிதோ வந்தேனென்று வாக்கருளுவீர் தேவதையே
தந்தேனருள் தந்தேனென்று தானுரைப்பீர் தேவதையே
விண்ணாகி மண்ணாகி விளங்குகின்ற தேவதையே
கண்ணாகிக் கருத்தாகி களிப்பருளுந் தேவதையே
அன்னையுநீ யப்பனுநீ அன்பருள்நீ தேவதையே
பொன்னுநீ பொருளுநீயே புரிந்தருள்வாய் தேவதையே
உற்றவருஞ் சுற்றமுநீ யுயிருநீ தேவதையே
சற்குருவு நேசமுநீ சகலமுநி தேவதையே
உன்னைவிட வேறுதுணை யுலகிலுண்டோ தேவதையே
இன்னமும்நீ வாராம லிருப்பதென்ன தேவதையே
எங்குமெள்ளி லெண்ணெயைப்போ லிருக்கின்ற தேவதையே

தங்கத் திருவடியைத் தான்பணிந்தேன் தேவதையே
ஆனந்தத் திருநடனம் மாடிடுவாய் தேவதையே
வானமொடு புவிசுழல வந்திடுவீர் தேவதையே
அடியரெல்லாங் கொண்டாட ஆடிடுவீர் தேவதையே
படியின்கண் அன்பர்பாட பரிந்தாடுந் தேவதையே
தங்கச்சிலம்பு கொஞ்சத் தாளுடுந் தேவதையே
வெங்கலம் பம்மைகொஞ்ச விளையாடுந் தேவதையே
சிங்கார வுடுக்கைபாடச் சிறந்தாடுந் தேவதையே
மங்களமாய் மணிகள்கொஞ்ச மகிழ்ந்தாடுந் தேவதையே
மந்திரவாள் கைபிடித்து மருவியாடுந் தேவதையே
சுந்தரப்பிரம் பெடுத்துச் சுழன்றுடுந் தேவதையே
தஞ்சமென்றே யுன்றன் திருத் தாள்பணிந்தேன் தேவதையே
கொஞ்சியே இச்சபையில் கொக்கரிப்பீர் தேவதையே
பித்தமயக்க மிட்டுப் பிரட்டிடுவீர் தேவதையே
புத்திமாருட்டஞ் செய்து புகழ்ந்தாடுந் தேவதையே
மருள்கொண்ட பூமுடிமேல் மகிழ்ந்தாடுந் தேவதையே
அருள்கொண்ட பூமுடிமேல் அமர்ந்தாடுந் தேவதையே
மலர்கூந்தல் தான்சுழல மருவியாடுந் தேவதையே
கலர்கூந்தல் தான்சுழல களித்தாடுந் தேவதையே
எல்லாமுன் செயலென்றே யிருக்கநான் தேவதையே
கல்நெஞ்ச மானதென்ன காரணமோ தேவதையே
பேசாமலிருப்ப தென்ன பேதமோ தேவதையே
பேசியினுல் வாய்முத்துப் போந்திடுமோ தேவதையே
பூஜைகள் குறைவாகிப் புரிந்திடினுங் தேவதையே
ஆசாரந் தவிர்ந்துநான் அழைத்திடினுந் தேவதையே
கருதவொண்ணு பலதிட்டுக் கலந்திடினுந் தேவதையே
தெரியா சிறுவன்மீது தென்புடனே தேவதையே
குற்றமனம் பொருத்துக் கொண்டுநீர் தேவதையே
அற்புதத் திருநடனம் ஆடிடுவீர் தேவதையே
வாடையது வாங்காமல் வாசஞ்செய்வீர் தேவதையே
நாடோர்கள் தான்புகழ நன்மைசெய்வீர் தேவதையே
ஆர்பரித்துக் கொக்கரித்து அமைசர்ந்தாடுந் தேவதையே
பாரெல்லாந் தத்தளிக்கப் பாவியாடுந் தேவதையே
உக்ரங்கள் மீறியேதான் ஓங்கியாடுந் தேவதையே
கொக்கரித்துக் கண்சிவந்து கூத்தாடுந்தேவதையே
படபடென்று பற்கடித்து பரிந்தாடுந் தேவதையே
தடதடென்று புவியதிர தாளுடுந் தேவதையே
பம்பரம்போற் சுழற்றி பறக்கவிடுந் தேவதையே
அம்பரந் தத்தளிக்க ஆடச்செய்வீர் தேவதையே
விழிகள் சிவந்திடவே விளங்கிடுவீர் தேவதையே

மொழிகள் புரளவைத்து முடுக்கிடுவீர் தேவதையே
சீறியெழுந்திருந்து சிறந்தாடுந் தேவதையே
தூறி யெழுந்திருந்து தும்சஞ்செய்வீர் தேவதையே
கோபக் கனலாகிக் கொக்கரிப்பீர் தேவதையே
ஆவேச மாகியேதான் ஆர்ப்பரிப்பீர் தேவதையே
சிந்தை மிகமகிழ்ந்து சீரருள்வீர் தேவதையே
வந்துவிளை யாடியேதான் வாக்களிப்பீர் தேவதையே
பரம்பரையாக பூஜை பரிந்துகொண்ட தேவதையே
நிரந்தரமாக பூஜை நேர்ந்துகொண்ட தேவதையே
அஞ்சலென வுமதடிக்கு ஆதரிப்பீர் தேவதையே
வஞ்சனைகள் செய்யாமல் வந்தருள்வீர் தேவதையே
எந்தத் திசைதனிலே இருந்தாலுந் தேவதையே
வந்துதவி இச்சமயம் வரமளிப்பீர் தேவதையே
பார்த்த முகங்களெல்லாம் பாங்கான தேவதையே
வேத்துமுக மாகவேதான் விட்டாயே தேவதையே
மனதுகருங்கல் லோதான் மகாவுக்ர தேவதையே
எனது முறையுஞ்செவிக்கு ஏறலையோ தேவதையே
என்னகுற்ற மென்மீது இருந்தாலுந் தேவதையே
துன்னுமிந்த பெருஞ்சபையில் தோன்றிடுவாய் தேவதையே
கற்பூர தூபதீபங் காணுவீர் தேவதையே
அற்புதமா மலர்தூவி யடிபணிந்தேன் தேவதையே
பாலன் கோட்டையனிட பாடலுக்கு தேவதையே
சீலமாய் வந்துநல்ல சீரருள்வீர் தேவதையே.

தேவதை யழைக்கும் பாடல் முற்றிற்று.

## தேவதைகளை கேட்கும் பாடல்.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

வளமிகுங் கன்னிப் பெண்கள் வளர்முடி வாடை கொண்டு
இளமையாம் பால ரென்னு மெண்ணிலாச் சிறுவர் மீது
உளமகிழ் வாடை பூண்டு உக்ரமாய் வந்தீர் கேட்கும்
வளமிது இன்ன தென்று வாய்மொழி வழங்கு வீரே.

### அடதாளம்.

வந்தீர்விளை வந்தீர்விளை வந்தீர்விளை யாடி
வந்தீர்விளை வந்தீர்விளை வாக்கருள்வீர் நாடி
இன்னபெயர் இன்னபெயர் இன்னபெய ரென்றே
இன்னபெயர் இன்னபெயர் எடுத்துரைப்பீர் ரின்றே.

பாடல்.

வந்தவ ராரோதான் வாக்களிப்பீர் தேவதையே
சுந்தா வாய்திறந்து சொல்லுவீர் தேவதையே
ஆரென் றுனையழைப்பேன் அலங்கார தேவதையே
பேரென்ன வென்றழைப்பேன் பேசிடுவீர் தேவதையே
நாமதேய மின்னதென்று நவிலுவீர் தேவதையே
க்ஷேமமாய் வாக்குரைத்துச் ஜெயமருள்வீர் தேவதையே
சினத்தையொரு பாலடக்கிச் சேதிசொல்வீர் தேவதையே
உனதுவாய் மொழியொன்றை யோதுவீர் தேவதையே
எனதுமொழி யுன்செவிக்கு எற்கிலையோ தேவதையே
நினதுவாய் திறந்தால்முத்து நிலம்விழுமோ தேவதையே
தொழுதேத்தும் பத்தரிட துயர்நீக்கி தேவதையே
எழுந்து விளையாடி யெடுத்துரைப்பீர் தேவதையே
பழுதொன்றும் வாருமல் பாதுகாப்பாய் தேவதையே
வழியின்ன தென்றன்பாய் வகுத்துரைப்பீர் தேவதையே
புவிமீது மாந்தர்தொழப் புகழருள்வாய் தேவதையே
அவரவர் நினைத்தபடி அருள்புரிவீர் தேவதையே
கற்பூர தூபதீபங் காணுவீர் தேவதையே
அற்புதமா மலர்தூவி யடிபணிந்தேன் தேவதையே

இதுவுமது.

அடதாளம்.

அடியார்கள் அடியார்கள் அடியார்கேட்கும் குறியை
அடியார்கள் அடியார்கள் அறிந்துரைப்பீர் நெறியை
என்னகுறி என்னகுறி இன்னகுறி என்றே
என்னகுறி என்னகுறி இயம்பிடுவீ ரின்றே.

பாடல்.

அன்பர்கள் கேட்குங்குறி யறிந்துரைப்பீர் தேவதையே
நன்பர்கள் கேட்குங்குறி நயந்துரைப்பீர் தேவதையே
நெஞ்சில் நினைத்தகுறி நீரறிவீர் தேவதையே
தஞ்சமென்று கேட்குங்குறி தானுரைப்பீர் தேவதையே
கன்மவினை தீர்த்துக் காத்தருள்வீர் தேவதையே
இன்ன தினியதென்று யியம்பிடுவீர் தேவதையே
உடம்பத்த நோய்களோதான் ஓதிடுவீர் தேவதையே
இடும்பினல் வந்தநோயோ இயம்பிடுவீர் தேவதையே
காற்றினல் வந்தநோயோ கண்டுரைப்பீர் தேவதையே
மாற்ருனல் வந்தநோயோ மகிழ்ந்துரைப்பீர் தேவதையே
பார்வையால் வந்தநோயோ பகர்ந்திடுவீர் தேவதையே
காரகத்தால் வந்தநோயோ கருதிபுகல் தேவதையே
ஆகுமாகா தென்றுமே அருளுவீர் தேவதையே

போகும் போகாதென்று புகன்றிடுவீர் தேவதையே
உள்ளது உள்ளபடி ஓதிடுவீர் தேவதையே
கள்ளங் கபடறிந்து கருணைசெய்வீர் தேவதையே
பொருளைபற்றி வந்தவரோ புதுமைபற்றி வந்தவரோ
அருளைபற்றி வந்தவரோ அவஸ்தைபற்றி வந்தவரோ
மாட்டைபற்றி வந்தவரோ மாற்றானைபற்றி வந்தவரோ
வீட்டைபற்றி வந்தவரோ வினைப்பற்றி வந்தவரோ
பெண்ணைபற்றி வந்தவரோ பொருளைபற்றி வந்தவரோ
மண்ணைபற்றி வந்தவரோ மைந்தனுக்காய் வந்தவரோ
பகையைப்பற்றி வந்தவரோ பகருவீர் தேவதையே
வகையின்ன விதமென்று வாக்களிப்பீர் தேவதையே

இதுவுமது.

அடதாளம்.

வந்ததுபோல் வந்ததுபோல் வந்ததுபோல் நின்றே
வந்ததுபோல் வந்ததுபோல் பந்தமுட னின்றே
சுடர்பழத்து சுடர்பழத்து சுடர்யழத்து நாடி
சுடர்பழத்து சுடர்பழத்து சுழண்றுவந்தீர் நாடி.

பாடல்.

வந்துவிளை யாடினீர்கள் வாக்களித்தீர் தேவதையே
வந்தாப்போல் நீரமர்ந்து வாடைகொள்வீர் தேவதையே
ஆட்டமதை நிறுத்தி யமர்ந்தருள்வீர் தேவதையே
போட்ட மயக்கம்நீக்கிப் பொருந்திருப்பீர் தேவதையே
பித்த மயக்கம்நீக்கி பிரியஞ்செய்வாய் தேவதையே
சித்தமகிழ்ந்து தொழச் சீரருள்வீர் தேவதையே
கற்பூர தூபதிபங் காணுவீர் தேவதையே
அற்புதமா மலர்தூவி யடிபணிந்தேன் தேவதையே
செந்தழற் பழத்துக்குச் சிறந்துவந்த தேவதையே
விந்தையனல் பழத்துக்கு விரும்பிவந்த தேவதையே
சுடர்பழ முட்கொண்டு சுகித்திருப்பீர் தேவதையே
இடர்தீர பொற்பழத்தை யேற்றுக்கொள்வீர் தேவதையே
பாலன் கோட்டையனிட பாடலுக்குத் தேவதையே
ஞாலமேற் றனமர்ந்து நன்மைசெய்வீர் தேவதையே.

தேவதைகளை கேழ்க்கும் பாடல் முற்றிற்று.

---

## வாடையிடும் பாடல்.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

மூவர்கள் முனிவர் மற்று முப்பத்துமுக் கோடி யென்னும்
தேவர்கள் திக்குப் பாலர் தேவிபார் மடந்தை கோன்கள்
காவலர் துர்க்கி வாணி கலைமகள் உமையாள் லட்மி
யேவரு மறிய வாடை யின்பமாய் வைத் தேனம்மா.

### அடதாளம்.

வாடைகொள்வீர் வாடைகொள்வீர் வாடைகொண் டிருப்பீர்
வாடைகொள்வீர் வாடைகொள்வீர் வாடைகண் டிருப்பீர்
மலர்முடிமேல் மலர்முடிமேல் மலர்வாடை கொண்டு
மலர்முடிமேல் மலர்முடிமேல் மருவுவீர் கண்டு.

### பாடல்.

விந்தையா யுலகமெங்கும் விளங்கிடுந் தேவதையே
சந்ததமு நற்காக்ஷி தந்தருள்வீர் தேவதையே
விக்கினரும் வீரபத்ரர் வேலவருந் தாமறிய
முக்கணரு நான்முகனும் முராகரியுந் தாமறிய
இந்திராதி தேவதைகள் எல்லவருந் தாமறிய
சந்திர சூரியர்கள் சகலருந் தாமறிய

### முடுகுபாடல்.

மான்மகளுந் தெய்வானை மலர்மகளுந் தாமறிய
வான்மகளும் புவிமாது வரைமகளுந் தாமறிய
கலைமகளும் இந்திராணி காளியருந் தாமறிய
அலைமகளுங் கன்னியர்க ளனைவோருந் தாமறிய
தாள்சிலம்புந் பொற்பிரம்புந் தலையில்வைத்தேன் தேவதையே
வாளுடுக்கை பம்பைமணி வைத்தேன்சிரந் தேவதையே
வைத்தசொரு வாடைகள் வாங்காமற் றேவதையே
வெற்றியாய்ப் பூமுடிமேல் வீற்றிருப்பீர் தேவதையே
ஆக்ஷியாய்ப் பூமுடிமே லமர்ந்திருப்பீர் தேவதையே
சூக்ஷியாய்ப் பூமுடிமேல் சூழ்ந்திருப்பீர் தேவதையே
நாடுவிட்டு நாட்டிலிவர் நடந்தாலுந் தேவதையே
வாடை தவராமல் வாசஞ்செய்வீர் தேவதையே
அல்லும் பகலுமாக அனுதினமுந் தேவதையே
வல்லமைகள் தந்துமே வாழ்வளிப்பாய் தேவதையே
எந்நாளு நீங்காமல் இருந்தருள்வீர் தேவதையே
பொன்னடியை நமஸ்கரித்தேன் பொருந்திருப்பீர் தேவதையே
பாலன் கோட்டையனிட பாடலுக்குத் தேவதையே
ஞாலமேல் வந்துநல்ல நன்மைசெய்வாய் தேவதையே
கற்பூர தூபதீபங் காணுவீர் தேவதையே
அற்புதமா மலர்தூவி யடிபணிந்தேன் தேவதையே

இதுவுமது.

ஐங்கரனும் வீரபத்ரன் அறுமுகனும் தாமறிய
சங்கரனு முரகரியுஞ் சதுர்முகனுந் தாமறிய
வானவர்க ளிந்திரனும் வயிரவருந் தாமறிய
பானுமதி நவகோள்கள் பஞ்சவர்கள் தாமறிய
மன்னுசிவை வல்லபையும் மான்மகளுந் தாமறிய
பொன்மகளுந் தெய்வானைப் புவிமகளுந் தாமறிய
மரைமகளுங் காளிமக மாரியருந் தாமறிய
வரநதியு மாகாய வாணியருந் தாமறிய
அனைவரு மறியவாடை யம்முடிமேல் வைத்தேனம்மா
துணையிருந்து காப்பையம்மா துய்யவொளி தேவதையே.
கற்பூர தூபதீபங் காண்பாய்நீ தேவதையே
அற்புதமா மலர்தூவி யடிபணிந்தேன் தேவதையே
பாலன் கோட்டையனிட பாடலுக்கு தேவதையே
சீலமாய் வந்துநல்ல சீரருள்வீர் தேவதையே.

வாடையிடும் பாடல் முற்றிற்று.

---

## பழ மழைப்பு பாடல்.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

மண்டலந் தன்னி லுள்ள மாந்தர்கள் வினைகள் நீங்க
தொண்டுசெய் துமையாள் பாதந் தோத்தரித் தேத்தி நன்றாய்க்
கொண்டுமா மலர் பழத்தைக் கோலமா முடிமேல் வைத்தேன்,
தெண்டனிட் டழைக்க வின்பந் தேக்கியே யருள் செய்வாயே.

அடதாளம்.

அற்புதமாய் அற்புதமாய் அற்புதமாய் வருவீர்
அற்புதமாய் அற்புதமாய் பொற்பழத்தை தருவீர்
எடுத்தெரிவீர் எடுத்தெரிவீர் எடுத்தெரிவீர் பழத்தை
எடுத்தெரிவீர் எடுத்தெரிவீர் கொடுத்தருள்வீர் பழத்தை
கோலமிகு கோலமிகு கோலமுடி மேலும்
கோலமிகு கோலமிகு சீலமடி மேலும்.

பாடல்.

பொன்மணியின் சிலம்பெடுத்துப் போற்றிசெய்தேன் தேவதையே
துன்னுமணிச் சிலம்பெடுத்துத் துதிக்கலுற்றேன் தேவதையே
அன்பரிட பூஜைமுகம் அமர்ந்திருப்பாய் தேவதையே
இன்பமுள்ள பூஜைமுகம் இருந்தருள்வாய் தேவதையே
வெற்றிதந்து பூஜைமுகம் வீற்றிருப்பாய் தேவதையே
சித்திதந்து பூஜைமுகம் சிறந்திருப்பாய் தேவதையே

## முடுகுபாடல்.

விந்தைமிகு முடியில்பழம் விளங்கவைத்தேன் தேவதையே
அந்தமிகும் முடியில்பழம் அன்பாய்வைத்தேன் தேவதையே
தங்கத்திரு முடியில்பழம் தாவிவைத்தேன் தேவதையே
இங்கிதமாய் மடியில்பழம் இட்டுவைத்தேன் தேவதையே
கோலமிகு முடியில்பழம் கொண்டுவைத்தேன் தேவதையே
ஞாலம்புகழ் மடியில்பழம் நாடிவைத்தேன் தேவதையே
கோலமிகும் பொற்பழத்தைக் கொடுத்தருள்வீர் தேவதையே
சீலமிகும் பொற்பழத்தை சிறந்தளிப்பீர் தேவதையே
இங்கிதமாம் பொற்பழத்தை யெடுத்தெறிவீர் தேவதையே
தங்கமுடிப் பொற்பழத்தைத் தானளிப்பீர் தேவதையே
அந்தமிகும் பொற்பழத்தை யளித்திடுவீர் தேவதையே
விந்தைமிகும் பொற்பழத்தை விழச்செய்வாய் தேவதையே
அன்பாக பழமளிப்பீர் அலங்கார தேவதையே
இன்பமாய்ப் பழமளிப்பீர் எங்கும்புகழ் தேவதையே
குலுக்கியே பழந்தருவாய் குதுகுலமாய் தேவதையே
உலுக்கியே பழந்தருவாய் ஓங்கார தேவதையே
பாலன்குரல் கேட்கலையோ பாங்கான தேவதையே
சீலன்குரல் கேட்கலையோ சிங்கார தேவதையே
கருணைசெய்யா திருப்பதென்ன காரணமோ தேவதையே
தருணம்வந்து காவாமனஸ் தாபமேனோ தேவதையே
ஆரியச் சிறுவருக்கு அருள்புரிவீர் தேவதையே
தெரியச் சிறுவருக்குத் தெளிவுரைப்பீர் தேவதையே
இந்தவிதம் நீயிருந்தால் என்னசெய்வேன் தேவதையே
சுந்தரப் பொற்பழத்தை சுறுக்காய்தாருந் தேவதையே
எத்தனை குற்றங்க ளிருந்தாலுந் தேவதையே
பக்தரிட குற்றமெல்லாம் பரிகரித்து தேவதையே
மைந்தரிட குற்றமெல்லாம் மனம்பொருத்துத் தேவதையே
இந்த சபையில்பழம் எடுத்தளிப்பாய் தேவதையே
பூமலர் குலுங்கப்பழம் புகழ்ந்தளிப்பீர் தேவதையே
மாமலர் குலுங்கப்பழம் மகிழ்ந்தளிப்பீர் தேவதையே
அருமலர் குலுங்கப்பழம் அளித்திடுவீர் தேவதையே
மருமலர் தான்குலுங்க மணிப்பழத்தை தேவதையே
தடையின்றி யிச்சபையில் தானளிப்பீர் தேவதையே
இடையூறு நேராமல் எடுத்தளிப்பீர் தேவதையே
அஞ்சலெனப் பழமனுப்பு மாண்மையுள்ள தேவதையே
தஞ்சமெனப் பழமனுப்பும் தாஷ்டீகத் தேவதையே
பார்த்தவர் பிரம்மிக்கப் பழமனுப்புந் தேவதையே
கீர்த்திமிகப் பெருகக் கிருபைசெய்வீர் தேவதையே
காற்ருக வந்துபழம் கடுகத்தள்ளுந் தேவதையே

தோற்றஞ்செய் தடியார்பங்கில் துணையிருப்பீர் தேவதையே
கற்பூர தூபதீபங் காணுவீர் தேவதையே
அற்புதமா மலர்தூவி யடிபணிந்தேன் தேவதையே
பாலன் கோட்டையனிட பாடலுக்குத் தேவதையே
சீலமாய் வந்துநல்ல சீரருள்வீர் தேவதையே
பாடலுக்கு மனமிரங்கி பழமளிப்பீர் தேவதையே
ஆடலாய் வந்தமரும் அலங்கார தேவதையே.

பழமழைப்பு பாடல் முற்றிற்று.

---

## பேய்முனிகள் அழைப்பு பாடல்.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

தலைவிரித் தாடிடும் பேய்பூத வேதாள தாஷ்டீகமான முனிகள்
வலையிலுற் றிட்டகான் மான்கன்று போலவேவர் தகப்பட்டு தங்கள்
நிலையதுகலங்கவே யபயமென் றலறியே நில்லாமல் பயந் தோடவே
கலைபுகழ் சிவசத்தியின் பாதந்தொழுதிடக் கருணை செய்தருள் வையம்மா.

### அடதாளம்.

மானங்கெட்ட மானங்கெட்ட மானமட பேய்கள்
மானங்கெட்ட மானங்கெட்ட ஈனமூட பேய்கள்
பேய்முனிகள் பேய்முனிகள் பேய்முனிக ளாட
பேய்முனிகள் பேய்முனிகள் வாயலரி ஓட.

### பாடல்.

பேயோ பிசாசமோதான் பிணந்தின்னு மிராக்ஷதனோ
நாயோ பெரும்பூதமோதான் நடுக்காட்டுக் கள்ளனோதான்
ஆலமரத் தடியில் அண்டியிருந்து வந்தவனோ
சீலமிகு நீர்த்துறையில் சிறிப் பிடித்தவனோ
வழிதப்பி வந்தவனோ வாதாடும் பேய்முனியோ
பழிதேடிக் கொண்டவனோ பார்ப்பாரப் பேய்முனியோ

### மூடுதுபாடல்.

வண்டத் துலுக்கனோதான் வாதாடுஞ் ஜோனகனோ
துண்ட மலையாளத் தோட்டியத்து பேய்களோதான்
மாச்சரிய முள்ளவனோ மராட்டியப் பேய்முனியோ
சாஸ்திரங் கற்றவனோ சன்னியாசி தவமுனியோ
துள்ளித் திரிகின்ற துஷ்டப்பேய் முனிகளோதான்
கள்ளன் கபடனோதான் கன்னடயப் பேய்முனியோ
பொல்லாத சூரனோதான் போர்க்கடங்காப் பேய்முனியோ
வல்லமை யுள்ளவனோ வழக்காடும் வண்டனோதான்
ஈனப் பறையனோதா னிழிகுலத்துச் சக்கிலியோ

மானங்கெட்ட பறையனேதான் மாடுதின்னுஞ் சக்கிலியோ
மந்திரங் கற்றவனே மல்லுக்கு வல்லவனே
தந்திர மறிந்தவனே தாஷ்டீக ராக்ஷதனே
அபயமபய மென்றே அபயக்குரல் போடச்செய்வாய்
உபயகுர லிட்டலறி ஓடச்செய்வாய் தேவதையே
குய்யோ முறையோவென்று கூச்சலிட செய்யுமிப்போ
அய்யோ சிவமேயென்று அழுதோட செய்யுமிப்போ
மூட்டாயா அக்கினியை முடுக்காயா செந்தனலை
ஆட்டாயா பம்பரம்போல் ஆர்க்கடங்கா தேவதையே
எட்டி யுதையாயா யிரடிவிழப் பாராயா
குட்டாயா தலைமேலே கொட்டாவிக் கொள்ளும்படி
நாலுமூலை ஓமகுண்டம் நடுவேகல்ல கனகசபை
கோலமுடி சுழன்றுமேதான் கொக்கரிக்க வேண்டுமிப்போ
ஓமகுண்டத் தீயாலே ஒடுக்காயா தேவதையே
நாமமின்ன தென்றுரைத்து நடனமிட வேண்டுமேதான்
எரியுதெரியு தென்று யெரித்தனலை மூட்டாயா
அரியா சனத்தின்மேல் அமர்ந்தருளும் தேவதையே
பற்றுது பற்றுதென்று பாரத்தணல் மூட்டாயா
உற்றதைச் சொல்லியேதான் ஓடிவிடச் செய்யாயா
அக்கினியால் கொளுத்தியல்லோ ஆணவத்தை யடக்காயா
திக்கென் றெரியவைத்து தீரத்தை வாங்காயா
வந்துவந்து நிற்பதென்ன வம்புகள் செய்வதென்ன
சிந்தை கலங்கவல்லோ சிதறச்செய்வாய் தேவதையே
வஞ்சனைக் காரனைத்தான் வாட்டுங்கள் தேவதையே
நெஞ்சை யிறுகக்கட்டி நெட்டுங்கள் தேவதையே
போரேன்போரே னென்றுயிவன் பொய்வார்த்தை கூறுவதேன்
தாருமா ராகவேதான் தந்திரங்கள் பேசுவதேன்
பேயைப் பெருக்கவைத்துப் பேசலாமோ தேவதையே
நாயை நடுவவைத்து நன்மையென்று பார்க்கலாமோ
வேதாளனை வேரறுத்து விளங்குவீர்ப் பூமுடிமேல்
பாதகனை பதக்கடித்துப் பரிந்திருப்பீர் பூமுடிமேல்
கண்டகனைக் கருவறுத்துக் களித்திருப்பீர் தேவதையே
சண்டாளனை சங்கரித்துச் சார்ந்திருப்பீர் பூமுடிமேல்
மந்திர வாள்களினால் மாறுங்கள் தேவதையே
சுந்தரப் பிரம்பெடுத்துச் சூடிடுவீர் தேவதையே
சூலத்தாற் குத்தியே சுழற்றுவீர் தேவதையே
வேலினாற் குத்தியேதான் வேதைசெய்வீர் தேவதையே
மயிரைப் பிடித்திழுத்து மாறுங்கள் தேவதையே
உயிரை மடியச்செய்து ஓட்டுங்கள் தேவதையே
கற்பூர தூபதீபங் காணுங்கள் தேவதையே

அற்புதமா மலர்தூவி யடிபணிந்தேன் தேவதையே
பாலன் கோட்டையனிட பாடலுக்குத் தேவதையே
சீலமாய் வந்துநல்ல சீரருள்வீர் தேவதையே

பேய்முனி பாடல் முற்றிற்று.

## பதியடுக்குச் சுருக்கம்.

### வெண்பா.

சீரார் கணபதியுஞ் சிங்கார வேலருமெம்
பேராயிர முடைய பெம்மானுங்—காரார்
குழலுமையுஞ் சைவக் குரவருமெஞ் ஞான்றுந்
தொழ வுரியா ரன்னோர் துணை.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

கோலமார் தேவ ரெல்லாங் கொடிமுடிக் கைலை தன்னின்
மாலய னிந்தி ராதி மாமுனி யுரகர் சித்தர்
ஆலமார் நீல கண்ட னம்பிகை சமேத னாக
ஞாலமேற் பதிய மர்ந்து நடித்திடுங் கதைசொல் வேனே.

### அடதாளம்.

வாரார்கள் வாரார்கள் வானவர்கள் கூடி
வாரார்கள் வாரார்கள் வையகத்தை நாடி.

### பாடல்.

மன்னுலகஞ் செழிக்கச்ஜெகன் மாதாவின் றிருவருளால்
அன்புடனே வானவர்கள் அலங்காரமாய் வருகலுற்றார்
வாராரிதோ வாராரிதோ வானவர்க ளெல்லவரும்
ஆராரிங்கே வாரார்கள் அம்பாள் திருக்கொலுவில்
சீரார் கணபதியுஞ் சித்திபுத்தி வல்லபையும்
வாரார்கள் பெருச்சாளி வாகனத்தின் மீதமர்ந்து
ஆயிரமுக முடைய வையன்வீர பத்திரரும்
மாயிரு ஞாலமீன்ற மாதுபத்ர காளியரும்
பன்னருஞ் சிரமாலை பளபளென்று தான்ஜொலிக்க
மன்னுமாளி சிங்கத்தின்மேல் மருவியே வந்தமர்ந்தார்
பரமகுரு வாய்விளங்கும் பாலசுப்ர மண்யருந்தான்
மரகதமா மயிலேறி மலர்வள்ளி தெய்வானை

இருமருங்கு மமர்ந்துவா எழிலான நவவீரர்
மருவிவரச் சிவகணங்கள் மத்தாப்புச் சோதியைப்போல்
விந்தையரி யாதேவர் விளங்கும்பூங் கருணியம்மாள்
அந்தமிகும் புட் கருணி யம்மையு மனமகிழ்ந்து
அஞ்சலஞ்ச லென்றவர்க்கு அபயாஸ்தந் தான்கொடுத்து
பஞ்சவர்னப் புரவியின்மேற் பாங்காக வந்தமர்ந்தார்
மன்னுங் காத்தவராயன் மலரணி காப்பழகி
அன்னமுத்து வந்தழகி யாரிய மாலையுடன்
நான்குதேவி மார்கள்சூழ நாயகனும் வருகலுற்றார்
வான்பரியின் மீதமர்ந்து வந்தமர்ந்தார் சுந்தரமாய்
வைரவர் சுணங்கனென்னும் வாகனத்தின் மீதமர்ந்து
வைரவி யுடன்கூடி வந்தமர்ந்தார் விந்தையுடன்
பரப்பிரம்ம மாய்விளங்கும் பரமசிவன் பார்வதியும்
வரநதியும் வேள்விடையாம் வாகனத்தின் மீதமர்ந்து
பஸ்பருத்தி ராக்ஷமுடன் பக்தர்கள் கோஷிக்க
விஸ்வபரப் பிரம்மமான விமலனும் பரமசிவன்
அறுபத்து மூவரென்னும் அடியார்கள் தொழுதுவர
நறுமலர் மாலையணி நால்வர்கள் பாடிவர
சிவசிவா வென்றுமே சித்தர்கள் சூழ்ந்துவர
அவனவளாய் விடையேறி யலங்காரமாய் வந்தமர்ந்தார்
செங்கண்மா லட்சுமியுஞ் ஜெயகருடன் மீதேறி
மங்களமாய் மாதவர்கள் மருவியிரு புறஞ்சூழ்ந்து
அரிகரி யென்றுமே யடியார்கள் கோஷிக்க
பரிவுடனே யாழ்வார்கள் பன்னிருவர் சூழ்ந்துவர
சங்கு சக்கரமுடனே சாரங்கந் தான்றுலங்க
தங்கக் கருடனேறித் தாங்கள்வந் தமர்ந்தார்கள்
சதுர்முகனு மன்னத்தின்மேற் சரஸ்வதியுடன்கூடி
மதுரமொழித் தவமுனிவர் மலர்மாரி சொரிந்துவர
சனகாதி முனிவரெல்லாஞ் சதுர்மறைக ளோதிவர
கனகவன்ன மீதுவந்தார் கலைமகளும் பிரம்மாவும்
இந்திரன்வெள் ளானையின்மே லிந்திராணி யுடன்கூடி
வந்தார்க ளிருபுறமும் வானவர்கள் சூழ்ந்துவர
சூரியருஞ் சந்திரருஞ் சூழக் கொலுவிருந்தார்
வீரியக் காந்தருவர் விளங்கக் கொலுவிருந்தார்
அஷ்டதிக்குப் பாலகர்க ளழகாக் கொலுவிருந்தார்
இஷ்டமுள்ள தேவமாதர் எல்லாங் கொலுவிருந்தார்
நவகோள்களி ருடிகளும் நமனுங் கொலுவிருந்தார்
குவலயம் புகழ்சித்திர குப்தருங் கொலுவிருந்தார்
ஆகாய வாணியுடன் அழகுபூமா தேவியரும்
நாககன்னி மார்களுட னற்கொலுவில் வந்தமர்ந்தார்

கரிபரியும் ரதங்களுடன் காலாள்கள் வந்தமர்ந்தார்
விரிகட லுலகிலுள்ள விண்ணவர்கள் வருகலுற்றார்
மனோன்மணியாம் பச்சையம்மாள் மன்னுத சுவாமியோடு
வினோதமிகும் வேங்கைமலை வீரியரும் வந்தமர்ந்தார்
ஆரிய சுவாமியுட னம்பாள்பூங் குரத்தியரும்
வீரிய மாகவேதான் விளங்கினர் கொலுமுகத்தில்
தழல்வடிவாய் விளங்குந் தனிக்குரு சுவாமிவந்தார்
அழகேச னமர்தவல்லி யானையின்மேல் வந்தமர்ந்தார்
காயத்ரிவிதி சூஷ்மனுமே கனத்தவன்ன மீதுவந்தார்
தூயதவ முனிவர் துலக்கமாய் வந்தமர்ந்தார்
பூங்குமரன் காத்தாயி பூங்கனி யம்மையோடு
பாங்கான மயிலேறிப் பரிவுடனே வந்தமர்ந்தார்
பஞ்சவர்ன கிளியின்மீது பாலராரி முத்துதேவர்
வஞ்சிமுடி யழகியுடன் வந்தமர்ந்தார் விக்தையுடன்
கரிமுனியுஞ் செம்முனியுங் காணரிய ஜாடாமுனியும்
அருந்தவ லாடமுனி யழகுமுத்துப் பூமுனியும்
வாழ்முனியு முக்ரவீரன் வனகன்னி தேவதையும்
எழு முனிவருடன் இமையவர்கள் வந்தமர்ந்தார்
அங்காள தேவிபெரி யாண்டவருங் கோலமாகக்
கங்காளந் தாம்புனைந்து காதலுடன் வந்தமர்ந்தார்
மன்னு பாவாடைராயன் மாமதுரை விரனுமே
அன்னைவெள்ளை பொம்மியம்மை யழகாக வந்தமர்ந்தார்
அம்பாள் பரமதஞ்சி யலங்கார கன்னியம்மாள்
தம்பூரு வீணையுடன் தாண்டவ மாடிக்கொண்டு
எழுவரன்ன மாருடனே யிணையிலா முனிக்கணங்கள்
குழுமியிரு புறஞ்சூழ்ந்து குதுகுலமாய் வந்தமர்ந்தார்
கனதுர்க்கி வடுகியம்மாள் காளிகா தேவியம்பாள்
அனவாத திருநடன மாடிவருங் காளியம்பாள்
மகிடசங் காரியம்மாள் மாதேவி காளியம்மாள்
ஒயிலான கணங்களுடன் உத்தமியாள் வந்தமர்ந்தாள்
வேம்புரத மேறிவரும் வேதாந்த மாரியம்மாள்
பாம்பா பரணம்பூண்ட பராசத்தி மாரியம்மாள்
ஆயிரங் கண்ணுடைய அலங்கார மாரியம்மாள்
ஞாயிறொளி போற்ஜொலிக்கும் நல்லமுத்து மாரியம்மாள்
வைசூர சம்மாரியென்று வழங்கிய மாரியம்மாள்
வையகத்தோ ரீடேற வந்தமர்ந்தாள் சேனையுடன்
அந்திவண்ண னருள்பெற்ற அம்மையாந் துரோபதாம்பாள்
செந்தழலிலவதரித்த செல்வியாந் துரோபதாம்பாள்
பஞ்சவர்கள் தேவியான பத்தினியாந் துரோபதாம்பாள்
கொஞ்சுங்கிளி மொழியாள் கோதிலாத் துரோபதாம்பாள்

வன்னியில் வந்துதித்த வனக்கிளி துரோபதாம்பாள்
மன்னன் துரியனுயிர் மாளவைத்த துரோபதாம்பாள்
அக்கினி தேரேறிவரும் அலங்கார துரோபதாம்பாள்
உக்ரமாய் வந்தமர்ந்தா ளுத்தமி துரோபதாம்பாள்
புட்பவனந்தனி லிருக்கும் புதுமலர்ப் பூவாடையம்மாள்
அட்சயமாய் வாழ்ந்திருக்கும் அழகு பூவாடையம்மாள்
கற்பக நாடுறைந்த கன்னி பூவாடையம்மாள்
விற்புருவந்தான் ஜொலிக்க விளங்கும் பூவாடையம்மாள்
பரிமளங்கள் தாம்புணைந்த பாவை பூவாடையம்மாள்
விரிமலரணியும் ரண வீரி பூவாடையம்மாள்
சந்தனங்கஸ்தூரி யத்தர் சாந்து வாசந்தான்கமழ
வந்துமே தானிறைந்தாள் வன்னி பூவாடையம்மாள்
முப்பத்து முக்கோடி முதலான தேவர்களும்
எப்போது மங்களமா யிருக்கின்ற முனிவர்களும்
நார்பத்தி யெண்ணாயிரம் நல்லரிஷித போதனரும்
பார்ப் பதியின்றன் னருளாற்பலகோடி தேவர்களும்
அற்புதமாய் வந்தமர்ந்தார் அமரர் குழாங்களுடன்
கற்பூர தூபதீபங் கண்டு கொலுவிருந்தார்
சாம்பிராணிவாடை கண்டு சமஸ்ததேவர் வந்தமர்ந்தார்
ஓம்பராசத்தி யென்று உச்சரித்துக் கைதொழுதார்
பாலன் கோட்டையனிட பாட லுக்கு மனமகிழ்ந்தே
சீலமாய் வந்துநல்ல சிந்தையுடன் வீற்றிருந்தார்
அன்பரிட பூஜைக்கு அருள்சுரந்து மனமகிழ்ந்தார்
இன்பமுள்ள விக்கொலுவி லிருந்தார்க ளெல்லோரும்
ஏழைமக்கள் பூஜணைக்கு இமையோ ர்களருள்சுரந்தார்
வாழ்வீர்களென்று சொல்லி வரமளித்தா ரடியவர்க்கே.

பதியடுக்குச் சருக்கம் முற்றிற்று.

## விபூதி தரும் பாடல்.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

வசியவோ நமசி வாயா வல்வினை தன்னை நீக்கிச்
சுசிகர மாக நாளுஞ் சுயம்புவே யுனைத் துதிக்கப்
பசிவினை முதலா நோய்கள் பறந்திட பஸ்பத் தாலே
வசிவசி நமசி வாயா வள்ளலே வரந்தந் தாள்வாய்.

### திருமூலர் மந்திரம்.

சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்கள்
சிவசிவ வென்ன தீவினை மாளுமே
சிவசிவ வென்ன தேவரு மாவர்
சிவசிவ வென்ன சிவகதி தானே.

### அடதாளம்.

சிவபஞ்ஜா சிவபஞ்ஜா சிவபஞ்ஜா க்ஷரமாம்
சிவபஞ்ஜா சிவபஞ்ஜா தவபஞ்ஜா க்ஷரமாம்
நவபஞ்ஜா நவபஞ்ஜா நவபஞ்ஜா க்ஷரமாம்
நவபஞ்ஜா நவபஞ்ஜா சிவபஞ்ஜா க்ஷரமாம்.

### பாடல்.

வாசமா யுலகமெங்கும் வாழ்ந்திருக்குந் தேவதையே
நேசமா யுன்னுமம் நிதநினைந்து தேவதையே
சுத்தமா யுன்கோயில் சுற்றியேதான் தேவதையே
பத்தியாய்த் திருவடியைப் பணிந்தவர்க்குத் தேவதையே
கரும வினையகற்றி காத்திடுவாய் தேவதையே
திருநீறு கொடுக்கவினை தீர்த்திடுவாய் தேவதையே
புத்திர பௌத்திரராய்வாழப் புகழருள்வீர் தேவதையே
சித்தமிக மகிழ்ந்துவாழ சிறப்பருள்வீர் தேவதையே
சென்ற விடங்களெல்லாஞ் செழிப்போங்க தேவதையே
நின்ற விடங்களெல்லாம் நீடிக்க தேவதையே
சிந்தையில் நினைந்தபடி சிறப்பருள்வீர் தேவதையே
செந்திருப் போல்வளர்ந்து செழிக்கச்செய்வாய் தேவதையே
சுற்றமு நேசமுந்தான் ஒற்றுமையாய் தேவதையே
வற்றுச் சமுத்திரம்போல் வாழச்செய்வீர் தேவதையே
ஆழிசூழ் பூவுலகில் ஆண்மையாய்த் தேவதையே
வாழிவாழி யென்றுமே வாக்கருள்வீர் தேவதையே

### இதுவுமது

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

கரியுரி யணிந்த முக்கட் கங்காள மணிந்த வீசன்
அரியய னிந்திரன் வானோ ரருந்தவர் முனிவர் சித்தர்
பரிவுட னணிந்து கொள்ளும் பஸ்ப பஞ்சா க்ஷரத்தை
விரிதரு மகிமை தன்னை விளம்புவேன் விளங்கத் தானே.

### திருமூலர் மந்திரம்.

அரகர வென்ன வரிய தொன்றில்லை
அரகர வென்ன வறிகிலர் மாந்தர்
அரகர வென்ன வமரரு மாவர்
அரகர வென்ன வரும் பிறப்பன்றே.

### அடதாளம்.

பஸ்பபஞ்ஜா பஸ்பபஞ்ஜா பஸ்பபஞ்ஜா க்ஷரமாம்
பஸ்பபஞ்ஜா பஸ்பபஞ்ஜா விஸ்வபஞ்ஜா க்ஷரமாம்
சத்திபஞ்ஜா சத்திபஞ்ஜா சத்திபஞ்ஜா க்ஷரமாம்
சத்திபஞ்ஜா சத்திபஞ்ஜா சுத்தபஞ்ஜா க்ஷரமாம்.

### பாடல்.

பஞ்சாக்ஷர மாகிப் பாவிவந்த வெண்ணீறு
அஞ்சலென் றடுத்தவரை யாதரிக்கும் வெண்ணீறு
அந்திவண்ணன் தேகமெல்லா மணிந்திருக்கும் வெண்ணீறு
சுந்தரவுமை மேனியெல்லாஞ் ஜொலித்திருக்கும் வெண்ணீறு
தந்திமுகன் வல்லபையுந் தாமணிந்த வெண்ணீறு
அந்தவீர பத்ரர்காளி யணிந்திருக்கும் வெண்ணீறு

### முடுகுபாடல்.

கந்தர் தெய்வானைவள்ளி களித்தணிந்த வெண்ணீறு
சந்திர சூரியர்கள் சார்ந்தணிந்த வெண்ணீறு
பங்கயன்மா லிந்திரனும் பணிந்தணிந்த வெண்ணீறு
எங்குஞ் சிவமயமா யிருக்கின்ற வெண்ணீறு
வானவரெல்லாந் தொழுது வணங்கியிடும் வெண்ணீறு
ஞானமுனி வரெல்லாம் நாடியிடும் வெண்ணீறு

காளகண்ட திருநேத்ரன் காடாக்ஷித்த வெண்ணீறு
காள பயிரவருங் கரிதியணி வெண்ணீறு
சீலஅரியர தேவன் சிறந்தணியும் வெண்ணீறு
கோல காத்தவராயன் கோரியணி வெண்ணீறு
அவரவர்கள் நினைந்தபடி யருள்புரியும் வெண்ணீறு
புவியோர்களீடேற புத்திரும் வெண்ணீறு
பஞ்ஜமா பாதகத்தைப் பரிகரிக்கும் வெண்ணீறு
வஞ்சனை பில்லிசூனியத்தை வதைசெய்த வெண்ணீறு
ஏவல்குறளி மந்திரத்தை எரித்திட்ட வெண்ணீறு
காவல்முனி பேய்களைக் கண்டித்த வெண்ணீறு
சித்தத்தில் நினைந்தபடி ஜெயமருளும் வெண்ணீறு
பக்தியாய்ப் பணிந்தவர்க்கு பதவிதரும் வெண்ணீறு
சிவசத்தி மகிமையினால் சீருற்ற வெண்ணீறு
தவசத்தி மகிமையினால் தான்விளங்கும் வெண்ணீறு
உலகத்து மாந்தரெல்லாம் ஓதியணி வெண்ணீறு
நலமுள்ள மாந்தரெல்லாம் நாடியணி வெண்ணீறு
கருவினையைத் தான்மாற்றுங் கண்ணுதலான் வெண்ணீறு
இருவினையைத் தான்மாற்றும் யீஸ்வரனார் வெண்ணீறு
திருவினையை நல்குநல்ல திருவேகம்பன் வெண்ணீறு
ஒருபொருளா யுலகமெங்கும் ஒளிவுற்ற வெண்ணீறு
சிவய நமாவென்று சிந்தித்திடும் வெண்ணீறு
தவமுதல்வ நீயென்றே தானணியும் வெண்ணீறு
ஓம்நமசி வாயமென்று ஓதியிடும் வெண்ணீறு
மாமறைக ளெஞ்ஞான்னும் மகிழ்ந்தணியும் வெண்ணீறு.
கற்பூர தூபதீபம் காணுமரன் வெண்ணீறு
அற்புதமா மலர்தூவி அடிபணிந்தேன் வெண்ணீறு
பாலன் கோட்டையனவன் பாடியணி வெண்ணீறு
சீலமாய் வந்துநல்ல சீரருளும் வெண்ணீறு

விபூதி தரும் பாடல் முற்றிற்று.

# பிரங்கிரிஷி ஏலப்பாட்டு.

## விநாயகர் துதி.

திருவளர்கைலைவாசன் திகழடிதொழுதிறைஞ்சி
யருள்வளரன்பான அருந்தவப்பிரங்கி வேதன்
தெருள்வளர்சரிதைதன்னைத் தெளிந்தேலப்பாட்டாய்ப்பாடத்
தருவளர்துதிக்கை ஞானத்தந்திமாமுகவன் காப்பே.

ஏலேலோ ஏலலிலோ

விந்தைமிகுகைலைதனில் விமலனுடன் பார்வதியுஞ்
சுந்தரமிகுமாலயனுஞ் சுரர்களொடுரிஷிகளிந்திரர்
கந்தர் வீரபத்ரர்சிவகணங்களுடன் கணபதியும்
அந்தமிகுநந்திமுதல் அடியர் புடைசூழ்ந்திருக்குந்

## முடுக்கு.

தருணமதில் பிரிங்கிரிஷி பரமனே என்று
தரிசனஞ் செய்துவரவேண்டு மென்றன்று
கருணைபுரியுந் திருக்கைலாயஞ் சென்று
கர்த்தனுடன் பார்வதியும் வீற்றிருக்கநின்று (1)

அம்மையைநீக்கியே அப்பனடி போற்றி
அலங்கார வண்டுவடிவமாய்த்தோற்றி
அம்மையு நாணமலர் கொண்டு தூற்றி
அரகரசிவசிவசம்போ வென்றேத்தி (2)

சுயவடிவாய் ரிஷிசோதி யைத்துதிக்கச்
சுரர்முனிவரர்களும் பிரம்மித்துமதிக்கக்
கயல்விழிமாதுமையாள் மனம்பதைக்கக்
கத்தர்முன்பிரங்கிதன் றசைதனையுதிர்க்க (3)

தசையற்ற பிரங்கியுந் தள்ளாடிநாணத்
தக்ஷணங்கால்மூன்று கோலொன்று காண
அசைவற்ற பிரங்கியும் ஆர்ப்பரித்துவேண
அலங்காரமாயீசன் அடியிணைகள்பேண (4)

அய்யருமகரிஷிக் கருளதுபுரிய
அரிஅயனிந்திர ரனைவருமறிய
மைவிழிமாதுமையாள் மனமெரிய
மாதவப்பிரிங்கிசெய் சூதுகள் தெரியப் (5)

பரமனை யுமையவள் பார்த்துமே அன்று
பகரரிய கோபக்குறியாக நின்று
பிராணேசா வும்முடைய வஞ்சங்களின்று
பிரம்மன்மால் காணவும் அறிந்தனனென்று (6)

அரியணைமீது நாமிருவருங்கூடி
அமர்ந்திடவரியய னமரருந்தேடிப்
பரிவுடன் றொழுதிடப் பிரங்கியுமோடிப்
பண்ணியவகைதனை பகருவீர்நாடி (7)

என்றிடவீசன் இறைவியைப்பார்த்து
இல்லற வாழ்க்கையோ ரிருகரஞ்சேர்த்து
அன்னையென்றுனைப் பணிவார் மனம்பூர்த்து
அருந்தபோதனர்களுன் னடிதொழார் வேர்த்து (8)

கன்னியே விபரங்கள் காணுவாய் என்று
கர்த்தனும் உரைத்திடக் கௌரியும் அன்று
மன்னுபரனிடப்பாகம் மாதுபெறவென்று
மனதினிலெண்ணிச்சில நாட்களுஞ்சென்று (9)

பஞ்சணையில் பரமனுடன் கொஞ்சியே தோற்றப்
பகலவனுதயமாய் அகமகிழ்ந்தேத்த
வஞ்சியும் அரனடி தஞ்சமென் றேத்த
வருங்கதிர் மதியிவர் யாரென்று சாற்ற (10)

ஆலமுண்ட மணிகண்டனுமன்றே
ஆதித்தன் சந்திரன் அருள்விழியென்றே
கோலமாயுரைத்தனன் கோட்டை யளன்றே
கோரி எலப்பாட்டாய்க் கூறினனின்றே (11)

(ஏலேலோ ஏலலிலோ.)



# நடராஜர் ஆனந்தக்களிப்பு.

ஆதி விருத்தம்.

தலம்புகழ் தில்லைமன்றுள் தாண்டவம் புரிந்தாட்கொள்ளும்
நிலவணி சடிலனான நிமலன்மேற் காதலாக
அலகிலாப் புகழ்மிகுந்த ஆனந்தக்களிப்பையானுந்
தலமிசைப் பாடஞானத் தந்திமாமுகவன் காப்பே.

### இதுவுமது.

மகபதி மலரோன்செங்கண் மான்முதல் ரிஷிகள் வானோர்
சகலரு மொடுங்குங்காலே சங்கரன் ருனேனன்று
சுகந்தர நடிப்பானெந்தை சுசானத்தின்மீது நின்றே
அகமகிழ்ந்தவன் பொற்பாத மஞ்சலித்தேத்தி வாழ்வாம்.

### இதுவுமது.

பஞ்சவர் தமக்குமேலாம் பராசத்தி சிவமிரண்டும்
கொஞ்சியே நடிக்குமோன கோலமா மயானந்தன்னில்
எஞ்சியே நிற்பானந்த வெளிற்பெரி யாண்டவன்றன்
தஞ்சமென் றடிபணிந்து தரிசித்து வணங்குவோமே.

### திருமூலர் மந்திரம்

ஒன்றிரண்டாட வேயொன்று முடனாட
ஒன்றினின் மூன்றாட வோரேழுமொத்தாட
ஒன்றினினாலாட வோரொன்பது முடனாட
மன்றினிலாடினான் மாணிக்கக்கூத்தே

சங்கர சங்கர சம்பு. சிவ—சங்கர சங்கர சங்கர சம்பு.

ஆண்டவர் தாண்டவமாட-இந்த அண்டாண்ட பிண்டாண்ட கோளமுமாட
மாண்டவர்தலை எலும்பாட-டக்கை-மான்மழுச் சதுர்ப்புஜ டமாகமாட
வெம்புலித்தோலிடையாடச்-சுரிகை-வேதன் கபாலமுஞ் சூலமுமாட
அம்புலிச்செஞ்சடையாட-மலர் ஆத்தியுங் கெங்கையுங் கொன்றையுமாடத்
தும்பையுங் காந்தையுமாடத்-திகழ்-துடியிடை பார்வதியம்மையுமாடக்
கிம்புரு கின்னரர்பாடக்-கெருட-கீர்த்திவித்தியாதர காந்தர்வராடத்
தும்புருநாரதர்பாட-மார்பிற்-றுலங்கியமுப்புரி நூலுமேயாட
அம்மையு மப்பனுமாட-முர-ஹரியாபுத்திர தேவருமாட
வெண்டையம் பொற்சிலம்பாட-வாச-வேண்ணீறு ருத்திராக்ஷ மாலையுமாட
அண்டர்கள் தெண்டனிட்டாடத்-திரு-ஆரகேயூர மாவமும்மாட
வெண்டலைமாலைகளாட-நாலு-வேதமுங் கீதமு நாதமும்பாட
எண்டிசைப்பாலருமாட-அய்யன்-ஏகாந்த சேவையை எவருங்கொண்டாடக்
கஜமுக வைங்கராடச்-சிவ-கணங்களுஞ் சுந்தரகந்தருமாடப்
பஜனை செய்தடியவர்பாட-அற்புதப்-பதஞ்சலி வியாக்ரம பாதருமாடத்
தத்திமி என்றய்யராட-அன்பர்-தரிசிக்க நான் முகன் தாளமும்போட
மத்தளமாலடித்தாட-அடியார்-மாமறை யோதியே தொழுதுகொண்டாடச்
சிற்றம்பலவனைப்பாட-எங்கள்-சிவகாமியம்மையும் அகமகிழ்ந்தாடப்
பொற்சபை ராஜருமாடத்-திருப்-பொலிந்திடு பூரணி புராதனியாடச் (சங்கர)

### ஆனந்த நடனமாவது.

சிவபெருமான் பதஞ்சலி வியாக்கிரமபாதர் முதலானோர் தரிசிக்க சிதம்பரத்திலே கனகசபையிலே விருதுபாடுவோர் தாளம் முழக்கவும் வாணன் குடாமுழா கொட்டவும் பிரமன் தாளம் போடவும் திருமால் மத்தளம் அடிக்கவும் திருகரத்துள்ளதமரும் ஆர்க்க பாம்புகள் இறைக்க மான்கதா கொன்றை

மாலையில்வண்டினமுரள பாலசந்திரன்அசைய கங்கை கோஷிக்க வேதச் சிலம்பொலிக்க முயலகனெளிய சிவகாமியம்மையார் அகமகிழ ஆடுந்திருகூத் தாம் என்றவாறு.

குடமுழா வாணனீ ராயிரங் கரங்கொண்டு குமு குமெனெவேமுழக்க
கொண்டலி னிறக்கடவுள் முழவொலி முழக்கவிரி கோகனக மாளிகை
நடமருவு கைத்தாள நற்றெருனி முழக்கவங் தமருகந் தொனி முழக்க [யினன்
தாரணி முழக்கமறை நூபுர முழக்கவிரு தாள்க டானம் முழக்க
வடனதி யிறைக்கமணி யரவுக ளிரைக்கவுமை யலற முயலக னெளிவுற
வாடக மணிச்சபையி னுடக மிழைத்துமைக் கன்புசெய் யின்ப வடிவோன்.
—திருப்போரூர் சன்னதி முறை.

தொந்தந் தொந்தோமென்றாடக்-காளி-சோராமனின்றுமே நேராகஆட
விந்தைபதமெடுத்தாடக்—காளி—வெட்கியே தலைகுனிந் துளமது வாட
பத்தருஞ் சித்தரும்பாட-வீர-பத்ரரும் வைரவருந்திருமாட
முத்தருமுனிவரும்பாட-மறை-முடிவில் விளங்கிய முதல்வனுமாட
வெங்கல பம்பைகள்பாட-ஆதி-வேதியன் வீரட்டகாசஞ்செய்தாடப்
பங்கயமலர்மகள்பாட-உமா-பார்வதி யானந்தக்கூத்துகளாட
மக்களங்கலைமகள்பாடத்-தேவ-மாதர்கள் சாமர தூபமும் போடச்
செங்கதிர் திங்களுமாட -முச்-ஜெகமெலாமாகா வென்றுமேபாடக்
கரிபுரிப்போர்வையுமாடக்-கங்—காளியுஞ் சுடலையில் களித்துமேயாடக்
அரி அயனிந்திராடத்-தில்லை-அந்தண ரறுபத்து மூவரும்பாட
உத்தமர் நால்வரும் பாட-ஐயன்-உக்ரமாய் மயானத்திற் கொக்கரித்தாடச்
சத்திகங்காளியுமாட-சிவ-சங்கர சாம்ப சதாசிவமாடக்
கோலாலகண்டனுமாடச்சேய்க்-கோட்டையன் றுதிபதங்கேட்டவர்தேட
ஞாலமேல் வினையெல்லாமோடத்—
தில்லை நடராஜ ஏருள்நமக் கென்றுங்கைகூடச்—சங்கர
சங்கர சங்கர சம்பு-சிவ-சங்கர சங்கர சங்கர சம்பு.

## சண்டதாண்டவமாவது.

சிவபெருமான் திருவாலங்காட்டிலே சுநந்தர் கார்க்கோடகர் என்னும் இருடிகள் தரிசிக்க வைரவமூர்த்தங் கொண்டு அபிநயம் நவரசம் விளங்க துத்த முதலாய சத்த சுரங்களோடு பாட்டொலிக்க கொக்கரை முதலிய பல வாத்தியங்கள் கோஷிக்க காளியுடனெ அவளகங்காரத்தை யடிக்கிய கூத்தாம் எனவே.

## திருவாலங்காட்டு புராணம்.

### அறுசீர்ஆசிரிய விருத்தம்.

இன்சுவை பொழியுஞ்சாய வபிநயமிலங்க செவ்வாய்
புன்சிறுமுறுவல் பூப்பப் புராண வானந்தம் பூரித்
தன்புறு மவையோருள்ள மயிர்தர வியங்கட்கேற்ப
வின்படு நடனங்காளி யோடான் விளைத்தவேலை

# ஆனந்தக் களிப்பு.

## துதி விருத்தம்.

ஆரணன் மாலுந்தேடி அரியொணு வாதியான
பூரணன் தில்லைமன்றுட் புனிதமாய் நடஞ்செய்கின்ற
காரணந் தனையானந்தக் களிப்பின்ப மருந்தாய்ப்பாட
வாரண முகத்தோனுன வல்லபை கணேசன் காப்பே.

## இதுவுமது.

கல்லாலமர்ந்து நான்மறையாறங்க முணர்ந்து கலக்கமறு
வல்லார் நால்வர் மனஞ்சோர வாக்குஞ் சோரப் பூரணமாய்
எல்லாமாகியல்லவுமா யிருந்திருந்த படிகாணச்
சொல்லாயன்றித் தோன்றியதை தொழிலாற்று தியாற்றுன்னுவமே.

## இதுவுமது.

ஐவர்கள் தமக்குமேலா மருட்சத்தி சிவமிரண்டும்
வையக மொடுங்குங்காலை வந்தருள் புரிவாள்வேண்டி
மெய்யகச் சுடலைமீது மேவியே நடிப்பானெங்கோன்
ஐயனு மாண்டவன்தன் னடியிணை தொழுதுவாழ்வாம்.

## இதுவுமது.

கஞ்சனுந் திருமாலிந்ரன் ககனர்கள் முனிவர் காலன்
துஞ்சினுரென்ற காலந் தூயதாம் பிர்மமொன்றே.
எஞ்சிய முக்கண்மூர்த்தி யெரித்தந்த சுசானமீது
கொஞ்சியே நடிப்பானந்தக் கோலத்தைக் கூறுவோமே.

சங்கர சங்கர சம்பு. சிவ சங்கர சங்கர சங்கர—சம்பு.

அருமை மருந்திம்மருந்து-மூர-அரியயன் தேடி யறியாமருந்து
பெருமைபெருந்து மருந்து-என்றும்- பேசருஞானப் பிரகாசமருந்து
முச்சுடரானமருந்து—மறை—முடிவில் விளங்கிய மூலமருந்து
நச்சரவணியுமருந்து—மெயஞ்—ஞானியர் நாடித்தொழச்செய் மருந்து
சிற்சபையாடுமருந்து—திகழ்-சித்தர்கள் முத்தர்கள் சேவைசெய்மருந்து
பொற்சபையாடுமருந்து—புன்னகைப்—பொறியால் முப்புரம் பொடிசெய்மருந்து
இருவினையகற்றுமருந்து—எழி-லிந்திராதிதேவருக் கெட்டாமருந்து
கருணைபுரியுமருந்து-பத்திர-காளியோடாடியகைலை மருந்து
கரியுரிபோர்த்தமருந்து—கொடுங்—காலனைக் காலாலுதைத்த மருந்து
நரிபரியாக்குமருந்து—சுக—ஞானதிவாகர மோன மருந்து
கல்லாலமர்ந்த மருந்து—அன்று—காமனைக் கண்ணுலெரித்த மருந்து
எல்லா முணர்ந்த மருந்து—எழி-லேகாந்த மாக விருக்கு மருந்து
அருவுருவில்லா மருந்து—உமை—அம்மைக்குப்பாகமளித்த மருந்து

கருவினைமாற்று மருந்து-கையில்-கலைமழுக்கழுவாள் காட்டு மருந்து
வசிவசியென்ற மருந்தா-ராஜ-வல்லாளன் மகவாக வந்தமருந்து
சுசிகரமான மருந்து-திகழ்-சுத்தசைதன்னிய சூட்ம மருந்து
வசிகரமானமருந்து-தாருக-வனரிஷிகள் நிதம் வணங்கும் மருந்து
பசிவினையகற்றும் மருந்து—ஞான—பஞ்சாக்கரமாய்ப் பரவும் மருந்து
மூவுருவான மருந்து—மோன—முடிவில் விளங்கிய மூக்கண் மருந்து
யாவுந்தானான மருந்து-உமையோ-டானந்தத்தாண்டவ மாடுமருந்து சங்கர

### வசனம்.

சிவபெருமான், பாலசந்திரன், கங்கை, கொன்றை முதலியன விளங்குஞ்-செஞ்சடாமுடியையும்-ஐந்துதிருமுகங்களையும்-பத்துத்திருக்கரங்களையும் திரு நேத்திரங்களையும், ஏக தேகத்தையும், இரு திருவடிகளையும், உடையவராய்-சூலம், மான், மழு-வாள், அக்கினி-வச்சிரம்-நாகம், பாசம், அங்குசம்-கண்டாமணி நீலோத்பலம் பரிவட்டம் மாதுளம்பழம் மாத்திரைக்கோல் ஆதியன வற்றை-தரித்தவராய்-வரதாபயமுடையவராய்-தெளிபளிங்கு வடிவினராய் இருப்பர், பரபிரம்ம பரவஸ்துவாகிய சிவபெருமான், இவற்றை கொண்டமைதம்பயன் கருதியன்று, எற்றுக்கனின் ஆன்மாக்கள், அஞ்ஞானமேலிட்டானே-நாமே பிரமமென அகங்கரித்தாழாது உண்மையை யறிந்து, தம்மையே பதியெனக் கண்டு, சார்ந்துய்யக்கொண்ட பெருங்கருணைத் திறனேயாம்—சிலவிடங்களிலே சிவபெருமான் ஸ்ரீபாதத்திலே நகாரமும், திருவுந்தியிலே மகாரமும், திருத்தோளிலே சிகாரமும், திருமுகத்திலே வகாரமும், திருமுடியிலே யகாரமுமாக தூல பஞ்சாக்ஷரமும், டமருகந் தாங்கும் திருக்கரத்திலே சிகாரமும், வீசுந் திருக்கரத்திலே வகாரமும், அபய திருக்கரத்திலே யகாரமும், அக்கினி யேந்துந் திருக்கரத்திலே நகாரமும், முயலகனை யூன்றிய ஸ்ரீபாதத்திலே மகாரமும், சூக்கும பஞ்சாக்ஷரமும், முறையே பொருந்தி வடிவு கொண்டு அனவரத்திருத்தாண்டவஞ் செய்தருளுவார்—எனவுங் கூறுகிற்கும்.

## உண்மை விளக்கம்.

### வெண்பா.

ஆடும்படிக்கேனல் லம்பலத்தா ணையனே
நாடுந்திருவடியிலே நகரங்-கூடு
மகாரமுதாம் வளர் தோள் சிகரங்
பகருமு கம்வா முடியப்பார்.

இதுவுமது.

சேர்க்குந் துடிசிகரஞ் சிக்கனவா வீசகர
மார்க்கும் யகர அபயகரம்-பார்க்கி லிறைக்
கங்கிநகரமடிக்கீழ் முயலகனுர்
தங்கு மகர மதுதான்

ஜீவசஞ்சீவி மருந்து-இந்த-ஜெகமெலாம் படைத்தளித்தழிக்கு மருந்து
பாவ விமோச மருந்து-சதாப்-பங்கயன் மாலும் பணியுமருந்து
ஆலமருந்து மருந்து-அன்ப-ரறுபத்து மூவருக்கான மருந்து
கோலம் பொருந்தும் மருந்து-நால்வர்-கோரியபடியே கூட்டும் மருந்து
அயன் சிரங் கொய்த மருந்து-தச-அவதார நிக்ரஹ அனுக்கிரஹ மருந்து
வயப்புலி யுரித்த மருந்து-தூய-வானவர் தானவர் வணங்கு மருந்து
அரிசாப மொழித்த மருந்து-அன்-றூழிதிருமாலுக் களித்த மருந்து
திரிக்கால த்யான மருந்து-பொல்லாத்-தீங்குசெய்வோரை தீயாக்கு மருந்து
அடியார்க் கெளிதாமருந்து-தில்லை-அந்தணர் கண்டு களிக்குமருந்து
படியெலாம் புகழு மருந்து-குருவாய்ப்-பஞ்சகிருத்திய நடத்து மருந்து
சிவயநமவென்ற மருந்து-அன்பர்-சித்தத்தில் நித்தமுந் தித்திக்கு மருந்து
பவரோக மகற்று மருந்து-வாசிப்-பரிமீதிலேறியே பவனிசெய் மருந்து
அவனவனான மருந்து-சமத்-தாடிய ஆனந்த அற்புதமருந்து
நவவடிவான மருந்து-திரு-நாதாந்த வேதாந்த நல்ல மருந்து
தற்பரமான மருந்து-தக்கன்-தலைக்குத் தகர்த்தலை யமைத்த மருந்து
சிற்பரமான மருந்து-ராஜ-சிவயோகிகட்குச் சிறந்த மருந்து
சொச்சொருபமான மருந்து-தீய-சோக மோகந் துடைக்கு மருந்து
அற்புதானந்த மருந்து-வாசி-அடயோகிகட்கு முள்ளான மருந்து
ஆரியர்க் குகந்த மருந்து-தில்லை-அம்பலத்தாடிய ஆதிமருந்து.
கோரிய வரந்தரு மருந்து-சேய்-கோட்டையன் கொடுவினை யோட்டுமருந்து
சங்கர சங்கர சம்பு-சிவ-சங்கர சங்கர சங்கர சம்பு.

வசனம்.

பிரமன் முதலிய தேவர்களை யெல்லாம் எமது சிவபெருமான் திருட்டித்து அழிக்கின்ற சம்ஹார காலத்தில் அப்பெருந் தேவர்களது என்புமாலைகளையும் சிரமாலைகளையும் அணிந்து அவர்களது சரீரத்தை சூலத்தின் முனையாற் குத்திக்கொண்டு, தமது நெற்றியில் விளங்குகின்ற அக்கினியாகிய கண்ணினால் உற்றுப் பார்த்து, அச்சரீரங்களைச் சாம்பலாக்கி, தன்னை யடைந்து யாவ

ரும் உஜ்ஜீவிக்கும்படி அத்தானனத்தைத் தமது திருமேனிமீது பூசுவார் என்பது. இதனை தக்ஷகாண்டம்.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

வேதன்மால் முதலோரை நம்பன் விதித்தழித்திடும் பொழுதெல்
தீதிலங்கவ ரென்பணிந்து சிரங்கள் கேசமணிந்து நீள் [லாங்
கோதிலா தொளிர்சூல மீதுடல் கொண்டு நீறது கண்டுபின்
மீதுபூசு மியாவ ருந்தனை மெவி யுய்திட வேண்டியே

—என்னும் செய்யுளால் காண்க.

### திருவாசகம்

நங்காயி தென்னதவ னரம் போடெலும்பணிந்து
கங்காளந் தோண்மேலே காதலித்தான் காணேடி
கங்காளமா மாகேள் காலாந்தரத் திருவர்.
தங்காலஞ் செய்யத் தரித்தனன் காண்சாழலோ

—என்றபடியே

சர்வ சங்கார காலத்தில் பிரமா விஷ்ணுக்கள் இறக்க அவர்களது என்புகளைச் சிவபெருமான் தமது திருத்தோளின்மீது மாலையாக தரிப்பர்; ஆதலால் கங்காள நாதரென்று பெயர் பெருவர். கங்காளம்—தசை கழிந்த முழுவெலும்பு.

### வசனம்.

பரமபதியாகிய சிவபெருமான் சர்வ சம்மார காலத்தில் சகல ஜீவ கோடிகளையும் சர்வ லோகங்களையும் சங்கரித்தருளுவார். அப்போது யனைத்துஞ் சுடலையாயாய்விடும். அத்தகைய மகா மசானத்தின்கண் அவ்வெம் பெருமான் தானே முதற் பெருங் கடவுளென்பதும் தனக்கு மேலொரு கட வுளின்றென்பதும் யான் பரம் யான் பரம் என்றிறுமாப் பெய்தியுழலும், மாயன் முதலிய யாவரும் இடையே இறந்தொழியும் பசுப்பிராணிகளேயா மென்ப தும், தானே முதலும் முடிவுமில்லாத முன்னைப் பழம்பொருட்கு முன்னை பழம் பொருளாயுள்ளவ ரென்பதும், தன்னை யடைந்து வழிபாடு செய்யும் மெய்யன்பரே மீளா முத்தி பெற்றுய்வாரென்பதும், நிலைநிறுத்துவான் வேண் டித் தாண்டவம் புரிந்தருளுவர். அக்காரணத்தால் ஈமத்தாடி சுடலையாடி முதலிய பல பரியாய நாமங்கள் வழங்குமென்பதாம்,

இதனைக் கந்தபுராணம்.

கடல்விட நுகர்ந்த தொல்லைக் கடவுள் பின்னழிக்குங்காலை
யுடலுயி ரகிலம் யாவு மொடிங்கிய விடம தன்றோ
சுடலைய தாகு மெந்தச் சுடலை காணணைய சோதி
நடநவில் கின்ற வெல்லை நாடருந்த கமைத் தஃதே.

## காஞ்சி புராணம்.

சங்கேந்து மலர்க்குடங்கைப் புத்தேளும் மறைக்கோவுந் தழல்கால் சூல
மங்கேந்துமம் மானுந்தத்தமது தொழிற்றலைநின் ருற்றச் செய்தோர்
பங்கேந்து பெருமாட்டி விழிகளிப்ப விருமுனிவர் பணிந்து போற்ற
கொங்கேந்து மணிமன்றுள் குனித்தருளும் பெரும்வாழ்வைக் குறித்து
[வாழ்வாம்.

## காசி புராணம்

சாற்று மூலக மெவற்றிநிற்கும் தானேயாகி யினி தமைத்தல்
போற்றியளித்தல் துடைத்த லென்னப் புகலு மறிய முத்தொழிலு
மாற்றுமொருவன் னெவன் சிவனும் மவனே மொழிந் தத்துவமென்
றேற்று மறைகளோருநான்கின் முதலாம்வேத மிசைந் ததுவே.

---

எற்றினேறிச் சடைத் தாங்கி ஈமத்தாடி போடி பூசிக்
காற்றனுகறுங் கறை மிடற்ற கவைஞ வரவக் கச்சசைதுப்
போற்றுங்கணங்கட் கொரு முதலாய் பூவை பாகம் பிரியாதோன்
றோற்றுதெவற்கு முள் ளுயிருய் நின்றவாறென் சொல் வீரால்.

## வாழ்த்து.

வரங்களார் கைலைவாழும் வள்ளலாற் கோல்கால் கொண்ட
பிரங்கிமா தவத்தோன்வாழி பெரிதுல குயிர்களெல்லாம்
சிரங்களால் வணங்கி வாழ்த்தித் திரமுரத்தில்லையம்பொன்
அரங்கமேலாடுகின்ற வருமருந் தென்றும் வாழி

உ

வெற்றிவேலுற்ற துணை.



# ஸ்ரீ வள்ளிமலை சுப்ரமண்யக் கடவுள் திருவிளையாடற் சிந்து.

## ஸ்ரீ கந்தபுராணம் தட்சகாண்டம்.

### வசனம்.

தக்ஷனுக்கு புதல்வியாய்ப் பிறந்த இறைவி அவ்வுருவத்தோ டிருக்க விருப்பமில்லாமல் பார்வதியாகப் பிறந்து வளருகையில் காசிப முனிவனுக்கு மாயையினிடம் சூரபத்மன் சிங்கமுகன் தாருக னென்ற மூவர்தோன்றிச் சிவபெருமானை நோக்கித் தவம்புரிந்து பெருஞ்செல்வம் பெற்றனராக அவருள் சூரபத்மன் மகேந்திர நகரத் தில் வீற்றிருந்து தனது கொடுங்கோலால் ஆயிரத்தெட்டண்டங்களை அடக்கி ஆண்டு வந்தான். அப்போது கையிலாயத்தில் ஜனகர் முத லிய நால்வருக்குங் கல்லாலின்கீழ்த் தன் மோன நிலையால் தத்துவத் தைச் சிவபெருமான் உபதேசிக்கையில் சூரபத்மன் மிகவும் கொடுமை செய்து தேவர்களிர்ச் சிலரைச் சிறை செய்து வருத்த இந்திரன் முதலியோர் மறைந்து உறைபவராகிப் பிரம்மதேவனுக்கு இறைவன் நிலையைத் தெரிவிக்க அப்பிரம்மன் மன்மதனைச் செலுத்த அவன் சிவனது நெற்றிக் கண்ணினால் நீராக, பின்பு பிரம்மன் முதலி

யோர் வணங்கித் துதித்ததினுல் சிவபெருமான் மோன நிலையைவிட்டு பார்வதியை மணக்குமாறுவந்து சேருகையில் பாரத்தினுல் தாழ்ந்திட்ட வடதிசை உயருமாறு அகத்தியரைத் தென்திசைக்கனுப்பிப் பார்வதியைமணம்புரிந்து மன்மதனையும் உயிர்ப்பித்தான். பின்புசிவன் திருக்கயிலாயத்தில் யோகபோகங்களை உயிர்கட்கு அருள் செய்த வண்ணம் முன்போலவே அமர்ந்திருந்து தனது நெற்றிக் கண்ணில் குமாரக் கடவுளை அவதரிப்பித்து அவனுக்கு உதவித் தலைவராக வீரவாகு முதலிய நவ வீரரையும் யிலக்கத்தவரையும் இறைவியின் கால் சிலம்பிற் சிதரின மணிகளால் தோன்றுவித்தான். பின்பு குழந்தையான முருகக்கடவுள் அற்புதமாகிய திருவிளையாடல்களைச் செய்து நாரதர் செய்த யாகத்திற் பிறந்த ஆட்டுக் கடாவை வாகனமாகக் கொண்டு பிரணவார்த்தமறியாது திகைத்த பிரம்மனைக் குட்டிச்சிறையிலிட்டு அவனது படைப்புத் தொழில் நடத்தி பின்பு இறைவன் வேண்ட அவனுக்கு ஆசிரியனுகிப் பிரணவப் பொருளை உபதேசித்து அகத்தியறுக்கு வேதாகமங்களின் முடிவான பொருளை உபதேசித்து பின்பு சூரபதுமன் முதலியோரைக்கொன்று தேவர்கள் துன்பத்தை போக்கு வாயென்று இறைவன்கூற அப்பாமன் மொழிப்படியே முதலில் தாரகனைக்கொன்று மேறுமலையை யடைந்து பிரமன் முதலியோர் செய்த பூசனையையேற்றுத் தென்றிசையை நோக்கி தலயாத்திரை நடந்து திருச்சேய்ஞ்சலூற் பெருமானை பூசித்து பாசுபதம் பெற்று செந்திற்பதியை யடைந்து வியாழபகவானருளால் சூரபன்மன் வரலாற் முழுவதையும் அறிந்து பின்பு சூரபதுமன் கிளைஞ்சர் முதலியோரைக்கொன்று அவனையும் மார்பைப் பிளந்து நிற்க அவன் மயிலாகவும் சேவலாகவும் உருக்கொண்டுவர மயிலை வாகனமாகவும் சேவலைக் கொடியாகவும் கொண்டருளி செந்தலிற் சிலநாள் தங்கி பின்பு திருப்பரங்குன்றமடைந்து அங்குத் தெய்வயானையை மணந்து முன்பு சரவணப் பொய்கையில் மீனுயிருந்து தனதருளால் சாபம் நீங்கி தன் கட்டளையால் அப்பதியில் வந்திருந்த பராசர புத்திரர் அறுவருக்கும் வேதாகம முடிவை யுணர்த்தி இந்திரனை முன்போலவிண்ணிற்குடியேற்றி தான் தேவசேனுபதியென்னும் பெயர்புனைந்து தெய்வயானையோடு கயிலையையடைந்து இறைவனை வணங்கி கந்தகிரியை சேர்ந்தானென்பது.—என்றவாறு.

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

காஞ்சிபுரம்

நிச்சல. இராமாநந்த சுவாமிகள்

அடியார்களில் ஒருவராகிய பிள்ளையார்பாளயம்

வித்வான். ம. திருவேங்கிட முதலியாரவர்களால்

இயற்றிய

## வெண்பா.

வானமரும் வள்ளிமலை வாழ்குமா வேண்மணந்த
மானமரும் வள்ளியம்மை வண்சரிதந்—தானமரும்
பாட்டைய மின்றிப் பகர்ந்தனன்பல் லோர்க்குமொரு
கோட்டைய னென்பான் குறித்து.

## காப்பு வெண்பா.

திருமாலும் வள்ளிமலை சேர்சுப்ர மண்ய
பெருமான் விளையாட்டைப் பேசத்—தருமாலும்
பங்கயனும் போற்றும் பரமனுமை பெற்றுதவு
மங்காநல் யானை யருள்.

## பதினான்குசீர் ஆசிரிய விருத்தம்.

விரிஞ்சனரிமகபதி சுரர்முனிவ ருறகர்துதி
விளங்குவட கைலைய ரசின்
விழிகளிலழற்பொறிக ளாரெழுந் துலகெலாம்
விரியவுஞ் சூரபன்மன்
அரிமுகன்றாருகன் உறமிகுமவுணர்கள்
அலரவுமமரர் முதலோர்
அரகரவோம் நமசி வாயமென்றோதியே
அஞ்சலிகள் செய்துநிற்க
பரிபூரணன்னழற் பொறிகளையழைத்தடற்
பவனன்றீயிரு வர்தம்மாற்

பகிரதியில் விடச்சென்று சாவணப்பொய்கையிற்
பாலராய்த்திகழ அறுமீன்
சுரிகுழன்மடவார்கள் முலையமுதமுண்டருள்
சுரந்த மெஞ்ஞானகுருவே
சுத்தசைதன்யபா வஸ்துவே யெனையாண்ட
சுப்ரமண்யக் கடவுளே.

## இராகம்-நாதநாமகிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

ஜெகத்தோரேவாரீர் - ஸ்ரீ வள்ளிவரைநாதன்
மகத்துவம்பாரீர்.

அனுபல்லவி.

மகபதியின்மரு-மகனெனமருவிய
குகன்றிருவடிபணிந்-தகமகிழ்ந்துய்ந்திடச் (ஜெ)

சரணங்கள்.

முன்னாளினிற்சூர-பன்மன்றுருகன்சிங் க
முகன்பானுகோப-னகமகிழ்ந்துபொங் க
பன்னாளிமையவ-ரின்னலினுற்பங் கப்
படமுடியாப்பெரு-மிடாகன்றிடத்திங் க
ளணிந்திடுநாதன்-பூதரந்தனிற்சென்று
பணிந்தனன்வேதன்.
முதலிந்திரர்சுரர்-கதறிமுறை யிட
முக்கண்மூர்த்தியுமிகத்-தக்ககிருபையுட
னுதலழற்பொறியா-றுதிர்த்துப்பொலிந்திட
நுண்ணிடையுடையக்ரி-பெண்பயந்தோடிட
விந்தையாய்ப்பாதச்-சிலம்பினினவமணி
சிந்திடமாத
ராகினரொன்பர்விர-காக்கினியாலந்த
ரங்கமறிந்தீசர்-சங்கற்பத்தாற்பந்த
மாகிக்கருவுற்றுரு-வாகிச்ஜனித்துவந்தே
மானிகர்நவ-வீரரைத்தான்றந்த
காரிகையார்கள்-வெயர்வையிலக்கங்கு
மாரரைத்தேர்கள்

நிகரெனத்தந்தனர்-சகலபுவனமும்
நின்றழற்பொறியினுற்-குன்றமவுனமும்
அகலவவுணரெனு-மிகலோர்கவனமும்
அடங்கிடவம்புலி-ஒடுங்கத்தபனனும்
திசைதடுமாற-வேதன்மாவிந்திர
ரசைந்துமேசோர
பரிபூரணனழற்-பொறியையழைத்தனர்
பாங்குடன்பவனன்றீத்-தாங்கவளித்தனர்
அரியகரத்தினிற்-பரிந்தெடுத்தேகினர்
அனலாற்றலானடுங்கிப்-புனலில் விடுத்தனர்
வரநதியன்று-சரவண தடத்தினில்
விரைவுடன்சென்று
சேர்த்தனநாண்மலர்-பூர்த்தனவெனவாறு
சேயராயொளிதிகழ்-நாயிருமெனக்கூறு
கார்த்திகைமாதர்முலை-நேர்த்தியாய்த்தருஞ்சீரு
கௌரியின்சேர்க்கையாற்-சௌரியமாய்நேரு
ஓராறுமுகமும்-திருமேனியொன்ருக
வீராறுகாமும்
பொருந்தினர்முனிபுத்ரர்-வருந்தியேமீனுரு
போக்கியேமுன்னுரு-வாக்கினன்சற்குரு
அருந்தவர்பரங்குன்றி-விருப்பீருமக்கு மரு
ளளிப்பனெனவிடை-யளித்தனனெழிற்றிருத்
தையலர்பொருந்தி-மாதவஞ்செய்தனர்
அய்யனை வருந்தி
மணமுடிந்திடவென்று-கணங்குழையமுதவல்லி
மாந்தளிர்மேனிவாய்ந்த-சாந்தணிசுந்தரவல்லி
மணங்கமழிருவர்முன்-னிணங்கிக்குமான்புல்லி
மருவியவுமைமணம்-புரிவோம்பின்னென்றுசொல்லி
வாக்களித்தய்யன்-சரவணதடத்தினை
நோக்கினன் மெய்யன்
திருமுலைப்பால்தந்த-திருந்திழையறுவருக்கும்
திருவடியிறைஞ்சிடு-மிருடிமுனிவருக்கும்
கருணைசெய்தன்னசாவா-மருந்துண்டவருக்கும்
கந்தாசண்முகாவென்று-சிந்தைசெய்யன்பருக்கும்

வாமதுதந்து-வெள்ளியங்கிரியினி
லூரமுடன்வந்து
தவவீரருடன்லட்சத்-தவருடன்கூடினர்
நாட்டமாய்மேருவி லாட்டங்களாடினர்
தவறுதனினைந்துதேவர்-கவலையுற்றெதிர்த்தனர்
தருணம்விசுவரூப-தரிசனங்கொடுத்தனர்
நவிவதுநீங்க-நாரதமுனிவரால்
பொலிவதுவோங்க
ஆகண்டலன்முதலோர்-தேகப்பாவசமாய்
ஆடினர் பாடிமலர்-சூடினின்றனர்நிசமாய்
ஏகதேவசுதன்வை-போகமிவ்விதமாய்
இருப்பதறியாமனத்-திருளினுலதமாய்
போவதொழிந்து-வாழ்தோம் வாழ்தோமென்று
யாவருமொழிந்து
சென்றனர் ஸ்ரீகந்த-குன்றினைத்தேடியே
சேந்தனுக்துணைவரும்-பாந்தமாய்நாடியே
நின்றுநாரதர்செய்த-வன்னியிற்றோன்றியே
நிகரற்றச்செருக்குற்ற-தகர்தனை யூன்றியே
அகந்தனைப்போக்கி-கைலைமால்வரையெழின்
முகப்பினைநோக்கி
ஞானப்பிரகாசனும்-மோனர்கள்நேசனும்
நான்மறைமுதல்வனும்-வானவர்தலைவனும்
தீனதயாளனும்-தானவர்காலனும்
திருவிளையாடல்செய்-திருந்தன்னபாலனும்
ஜெகத்தோரேவாரீர்-ஸ்ரீ வள்ளிவரைநாதன்
மகத்துவம்பாரீர்.

# மிட்டாய் வர்ணமெட்டு.

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

மாயையின் வலியோனுகி-மான்முதலோரை வென்றே
யாயிரத்தோரெட்டண்ட-மாசுசெய்துக நூற்றெட்டுக்
காயமதழிவின்றுங்கித்-கடவுளர்க் கலக்கன்செய்ந
தியசூர் முதலைச்செற்ற-குமரன்றாள் சென்னிணவைப்பாம்.

விந்தைமிகுகைலைதன்னிற்-விநாயகற்குத்தானிளயக்
கந்தர்நவவீரரோடு-காதலுடன் வீற்றிருக்க (1)
வானவர் முனிவர்சித்தர்-வந்தடிதொழுதிறைஞ்சி
மோனகுருநாதாவென்று-மொழிந்ததுமே ஆவலுடன் (2)
சென்றிருக்கநான்முகனுஞ்-சேவைசெய்யாமல்நிதம்
குன்றைவில்லிகழலடியை-குதூகுலமாய்ப்பணிந்து (3)
வருவதறிந்தொருநாள்-வன்னெஞ்சக்கஞ்சன்றனை
ஒருமொழியின்பொருளதனை-யோதுமெனத்தான்பிரண்டு (4)
பிரணவப்பொருளுரையா-பிரமனைச்சிறையில்வைத்து
சரவணபவகுகனுஞ்-சண்முகனுஞ்சிருட்டித்தொழிற் (5)
செய்திருக்கவிண்டுமுதற்-சென்றானடியிறைஞ்ச
ஐமுகன்றனுஞ்ஞுவண்ணம்-அந்தணனைச் சிறைவிடுத்து (6)
அரன்றனக்குப்பிரணவ-அர்த்தத்தைத் தானுரைத்துக்
குரவனுக்கருள்புரிந்து-கும்பமுனிவருக்கும் (7)
தத்துவோபதேசஞ்செய்து-சண்முகனுந்தானிருக்க
வெற்றியுடையசத்தி-வேல்முதலாமஸ்திரமுஞ் (8)
சேனைகளுங்கைக்கொண்டு-சேனுலகோரிடாகற்ற
யானைமுகன்றனக்கிளைய-வருமுகனேநீசென்று (9)
அரக்கரைத்தானழித்து-ஆற்றலுடன்குழந்தாய்
வரக்கடவாயென்றீசர்-வாழ்த்தினாரம்மையுடன் (10)
அவ்வண்ணஞ்செய்வேனென்று-அம்மையம்பனடிபணிந்து
செவ்வேளறு முகனுஞ்-சேனையுடன்றானெழுந்து (11)
தாணிதனிற் வந்துகிர-வுஞ்சனோடுதாரகனை
யாரைநொடியிலழித்துமய்ய-னழுகுதேவகிரியின்கண் (12)
ணெழுந்தருளிமறுநாளி-லெழிற்சேய்ஞ்ச லூர்க்குவந்து
முழுதற்கடவுளான முக்கண்ணரைப் பூசைசெய்து (13)
அந்தமிகும்பாசுப-தாஸ்திரந் தான்பெற்று
விந்தைதரும் பரங்குன்றில்-விளக்கிமுனிமக்களுக்கு (14)
முன்சொன்ன மொழிப்படியே-முருகய்யன் கிருபைசெய்து
சென்றுதிருச்செந்தூர்-க்ஷேத்திரத்திற்வீற்றிருந்தார் (15)
அங்கமார்குருவந்து-அசுரேந்ரன்வரலாற்றை
சங்கையறத்தான்புகன்று-சண்முகனடிதொழுதார் (16)

அம்மொழியைச்செவிகளிலுற்-றருள்கூர்ந்துவீரவாகுத்
தம்பியைத்தானழைத்து-தட்சணஞ் சூரனிடஞ் (17)

சென்றரசுமனைவிமக்கள்-செழித்திருக்கவேண்டுமாகில்
இன்றமரர் சிறையைவிடுத்-திருப்பாயெனவோதுமென்றும் (18)

இன்றேல்பத்துநாளையி-லெழுந்தருளிநாமேவந்து
கொன்றிடுவோமென்றுநீர்-கூறுவாயெனவதனைச் (19)

சிரசாகத்தான்வகித்து-சீருருமகேந்திரபுரி
விரைவாகச்சென்றங்கு-விரட்டவந்தசூரர்களை (20)

மாய்த்தரண்களையழித்து-மகபதியின் மைந்தனுக்கு
வாய்த்தசிறைச்சாலையிடம்-வந்துமிகு சேதிசொல்லி (21)

விந்தைகொலுமண்டபத்திற்-விளங்குசூரபத்மன் முன்னே
வந்தொரு சேதிதன்னை-வாகையுடன்றானுரைக்க (22)

கேளாமற்மீளியாய்-கெர்வித்துச்சூரபன்மன்
ஏளனங்கள்மிகப்பேசி-யேவலாளர்தமையழைத்துச் (23)

சிறைபடுத்துவீர்களெனச்-சினங்கொண்டு சூரனுமே
யறைந்திடவேவந்தெதிர்த்த-வசுரர்களனைவரையுங் (24)

கொன்றுவச்சிரவாகுவையுங்-குடியேற்றிநமனுலக
மன்றுவீரவாகுதேவ-ரழகுதிருச்செந்தூர்வந்தார் (25)

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

---

புங்கவரிடுங்கண்டீரப் புகழரன் கண்ணிற்றோன்றித்
தங்கவந்துலகிற் றென்பாற் சலநிதிமேற்போய் வாழுந்
துங்கவா ளவுணச்சூரன் றுணியுட லழித்திட்டேந்துஞ்
செங்கைச் சிங்காரவேலன் றிருவடி கமலம் போற்றி.

### ஷை வர்ணமெட்டு.

மகேந்திரப்புரியிற்சூரன்-மகன்மடிந்தானென்றறிந்தே
யகோரமாய்த்தானழுதா-னமைச்சர்கள்தான்றேற்றத் (26)

தெளிவடைந்தவீரவாகு-தேவராற்றுனழிந்த
வளமிகுநகரமெல்லாம்-வண்மையுடன்புதுப்பித்துக் (27)

கார்த்திகேயனிருப்பிடத்தை-கண்டொற்றராற்றெறிந்துப்
போர்செய்யவேண்டுமென-பொலிவுற்றுசூரபன்மன் (28)

ஒருநாளிரவிற்றம்பி-யுடன்சேனாதிபதிகளொடு
யிருந்துமந்திராலோசனை-யெக்களிப்பாச்செய்ய லுற்றூர் (29)

தம்பிசிங்கமுகனுமப்போ-தகாதகாரியமிதென்ன
வெம்பியேசூரபன்மன்-வெறுத்துவீண்வாதமான (30)

வீரவார்த்தைதனையறிந்து-வினையின்படிநடக்குமென்றே
தீரஞ்செய்துதானிருந்தான்-திருச்செந்தூரிலன்று (31)

வந்தவீரவாகுதேவர்-வார்த்தையெல்லாந்தான்கேட்டுக்
கந்தர்சேனசையினயமுடன்-கடல்நடுவிற்றன்ஜொலித்தேப் (32)

புகழோங்குமகேந்திர-புரியதனில்வந்தேயய்யன்
மகத்தானயேமகூட-மலையிற்படைவகுத்திருந்தார் (33)

சூரபத்மன்றனறிந்து-சுதன்பானுகோபனையே
வீரமுடன்போர்புரிய-விடுத்தான்வெகுசேனைசூழ (34)

வந்துநவவீரரொடும் வாதுசெய்துபானுகோபன்
செந்தழற்பொறிபறக்கச்-சீறிவிழிச்சிவந்து (35)

போர்புரியுமாற்றலற்றுப்-போய்மறைந்துசூரன்சுதன்
கார்மாயவஸ்திரத்தாற்-கட்டி விட்டுச்சென்றனன்காண் (36)

குமாகுருதானறிந்து-குலவுஞானஸ்திரத்தால்
கவளிகரப்படுத்திக்-களிக்கச்செய்தார் துணைவர்களை (37)

பின்புசூரன்றம்பிர்யகள்—பிள்ளைகளாமசுரேந்திரன்
இன்னல்செய்யுமதிசூர—னிருவர்களுஞ்சேனைசூழ (38)

வந்துயுத்தம்புரியவீர-வாகவருமுக்கிரனும்
கொந்துமடியச்செய்தார்-நோடிக்குளனவோர்களையும் (39)

நாற்றிசைநடுங்கச்சூரல்-நால்வகைசேனைசூழ
ஆற்றலொடுவந்தெதிர்ந்தே-யறுமுகனற்படைகளெல்லா (40)

மாய்ந்திடவீராயுதனுய்-மறைந்துநின்றசூரபன்மன்
வாய்த்தவுத்தரவின்படி-வந்தெதிர்த்தேயக்கினிமுகன் (41)

தனவசப்பட்டிருந்த-தையல்காளிதேவிதன்னை
இன்னற்செய்துவருவாயென்-றேவிவிடவீரவாகு (42)

தேவராற்காந்தணிந்து-தேவிகாளியோடிப்போகக்
கூவியேயக்கினிமுகன்-குதித்தெழுந்தானவனுடனே (43)

தருமகோபனென்றுமொரு-தளகர்த்தன்சூரன்மந்திரி
இருமாந்துவந்தெதிர்த்த-வெழிலுருபானுகோபன் (44)

பலவிதமாய்ப்போர்புரியப்-பார்த்துவீரவாகுதேவர்
அலகழித்துவானுலக-மனுப்பினுர்சூரன்சுதன் (45)
இரணியன்வந்துசம-ரிட்டெதிரேசிற்காமற்
பரவையினிலொளித்தான்மறு-படியுமே சூரன்மக்கள் (46)
மூவாயிரம் பேர்கள்-முனைமுகத்தில் வந்தெதிர்த்து
கூவாமலங்கிலக்கங்-குமரரால் தான்மடிந்தார் (47)
உக்கிரங்கொண்டு சிங்கமுக-ஞேடி வீரவாகுமுகத்
றக்கவரை சமறிற்பின்-தள்ளியே சண்முகன்முன் (48)
னெதிர்த்து வீரவாதம்-பேசி யெந்தன் குருநாதரிடக்
கதிர்வேலாற் சிங்கமுகன்-கற்பக நாடுறைந்தான் (49)
பார்த்து சூரபத்மனுமே-பலவிதங்களாய்ப் புலம்பி
வேர்த்து விடாய்த்து மன-வேதைநீங்கித் தானெழுந்தே (50)
யிந்த்ரஞால ரதத்தின்மே-லேறியே யார்ப்பரித்து
மந்திர கணைகளெல்லாம்-மனதார கைக்கொண்டு (51)
ஆயிரத்தெட்டண்டத்தி-லடர்ந்திருக்குஞ் சேனையெல்லாம்
மாயமா யொருநொடியின்-மறுவிப்புடை சூழ்ந்துவர (52)
வீராவேசத்தினெடு-விண்ணவர் நடுக்கமுற
சூரன் மாயப்போர் புரிய-சுப்ரமண்யமூர்த்தியுந்தான் (53)
உரமிகுந்த சண்டையாவு-மொழிய வுண்மை வடிவங்காட்டிப்
பரமன்மகன் நிற்கச்சூரன்-பார்த்துமே மனங்களித்து (54)
அறிவை மாயை மறைத்தவினு-லசுரன் பின்னும் போர்புரிந்து
பொறிகலங்கி சேனையாவும்-போயொழிந்தே நடுக்கடலின் (55)
மாமரவுருவங் கொண்டு-மறைந்து நிற்கும் வஞ்சகனை
சோமசேகர சுதன்றன்-சோதித்திருக்கரத்தி (56)
லிருக்கும வேலாயுதத்தை-யேவயிருகூருக்கி
யுருக்கமுட னமலன்மைந்த-னொளிர்கரத்திற் வந்ததுகாண் (57)

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

முப்புர மெரியெழ முகிழ்ந்த வெண்ணகை
அப்பனுக் கருண்மொழி யளித்த வண்ணலை
ஒப்பருங் குருமுனிக் கோதுசெந் தமிழ்ச்
சுப்பிரமணியரைத்-தொழுது போற்றுவாம்

மிட்டாய வர்ணமெட்டு.

செருக்குற்ற சூரபத்மன்-சேவலு மயிலுமாக
வுருக்கொண்டு வந்தெதிர்த்தா-னும்பர்கள் திகிலடைய (58)

வந்த மயில் வாகனமாய்-வான்கோழி கொடியுமாக
விந்தையாய் கொண்டருளி-விளங்கினர் சுப்ரமண்யம் (59)

பார்த்திருந்த சூரன்பாரி-பதுமகோமளை யென்பாளும்
வேர்த்து விடாய்த்துயிரை-விட்டாள் பிரிவாற்றாது (60)

கடலின் முன்னொளித்திருந்த-கனகன் சுக்கிரன் சொற்படி நீர்க்
கடனாற்றித் தானிருந்தான்-களத்தினிடை மாய்ந்தவர்க்கே (61)

சயந்தன் முதல் தேவர்களை-சாவணோற்பவ முருகர்
நயமுடனே சிறையை நீக்கி-நற்சேவை தந்தனர்காண் (62)

ஜெயஜெய வென்றமரர்-சேனைசூழத் திருச்செந்தூரில்
விஜயஞ் செய்து சிற்சிலநாள்-விளங்கு திருப்பாங்குன்றில் (63)

வந்து தெய்வயானையினை-வதுவை செய்து வானுலகு
அந்தமாயேகி யிந்திர-னரசாள முடி சூட்டி (64)

ஜெகம்புகழுங் கைலாயஞ்-சேர்ந்தம்மையப்பனடி
அகமகிழ்ந்து பணிந்தவர்க-ளாசீர்வதிக்கப் பெற்று (65)

வளமிருந்த கந்தகிரி-வந்துதெய்வயானையுடன்
உளமகிழ்ந்துவீற்றிருந்தார்-உம்பர்கள் தொழுதேத்த (66)

குன்றுதோராடிய-குமாரகுரு வொருசமயஞ்
சென்று திருத்தணிகை-க்ஷேத்திரத்திற் றனிருந்தார் (67)

அவ்விடத்தி னாதனு-ரம்மை வள்ளி வரலாற்றைச்
செவ்வையாய்த்தான்புகன்று-செவ்வேளடி தொழுதார் (68)

கேட்டருளி மால் கொண்டு-கேளியாய் குமரேசர்
ஓட்டமு நடையுமாக-வேடியம்மை யிருக்குமிடஞ் (69)

சென்று பல லீலை காட்டிச்-சேயிழையை மயங்கச் செய்து
முன்னவனான யானை-முகனருளாற் வசப்படுத்தி (70)

காந்தருவ மணம் புரிந்து கானவர்கள் குறை யகற்றிச்
சாந்தணியும் வள்ளிதன்னை சண்முகனும் வதுவை செய்து (71)

மஞ்சு தவழும் வள்ளி மலையினி லிருவர்களுங்
கொஞ்சி விளையாடி கோலமுடன் தணிகை வெற்பில் (72)

வந்து சிலபோதிருந் த-வணர்ந்த கிரியடைந்து
[illegible] தெய்வயானை-யம்மை யூடலை யொழித்து (73)
பொருந்தினர் யாவருமே-போற்றி மோட்ச மடையும்படி
சுருதி முடிவாயிலகுஞ்-சுப்ரமண்ய மூர்த்தியுந்தான் (74)
அகத்தி யனற்கீரரெழி-லருணகிரியார் முதலாய்ப்
புகழும் வள்ளிவரைநாதன்-பூங்கழலடிபணிவோம் (75)
ஜெகந்தனிலே கோட்டையன்-செப்பினேன் மனமகிழ்ந்து
சுகமுடனே யாவர்களுஞ்-சுப்ரமண்யமூர்த்தி யுடன் (76)
தேவிமாரிருவரையுந்-தேடிநமஸ்காரஞ் செய்து
பூவுலகிலன்பரெலாம்-புகழுடனே வாழ்ந்திருப்பீர் (77)

## ஸ்ரீ தெய்வயானை வள்ளியம்மை ஜனனம்.

### வசனம்.

எப்படி யென்றால்—பூர்வத்தில் திருமாலின் புத்திரிகளாகத் தோன்றிய அமுதவல்லி, சுந்திரவல்லி யென்ற இருவரும் முருகக் கடவுளை மணந்துக் கொள்ளும் பொருட்டுச் சரவண பொய்கையில் அருந்தவங்கள் செய்ய முருகக் கடவுள் அவர்கள் தவத்துக்கு உவந்து அங்கு வந்து சேர்ந்து 'அமுதவல்லி! நீ-வானுலகில் இந்திரனை அடைந்தும்; சுந்தரி! நீ பூமியில் ஒரு முனிவனுக்கு புத்திரியாக பிறந்து வேடரைச் சார்ந்து விளங்குக.' நாம் நுமது கருத்தை நிறைவேற்றுவோம், என்று சொல்லிச் சென்றனர். அந்த மொழிப் படியே அமுதவல்லி வானுகத்தை யடைந்து ஐராவதமெனுந் தெய்வ யானையால் தேவேந்திரனிடத்துச் சேர்ந்து தெய்வயானை யென்று பெயர் பெற்று அத்தேவேந்திரனால் வளர்க்கப்பட்டு முருகக்கடவுளை மணர்ந்தாள். மற்றொருத்தியாகிய சுந்தரியோ அக்கினி பிரவேசஞ் செய்து தன் உடம்பை ஒழித்துச் சூக்ஷ்ம சரீரத்துடனே மேற்பாடி யூறையடுத்த ஒரு மலையில் தவஞ் செய்துக்கொண்டிருந்தனள். அங்கே முன்னமே பெருந்தவம் புரிந்துக் கொண்டிருந்த சிவமுனி யென்பவன் அழகிய ஒரு பெண்மான் தம் முன்னே வர அதனைக்கண்டு காதல் கொண்டு கண்ணினால் நோக்கவே அந்தப் பெண்மான் கருவுற, அந்த கருப்பத்திலே அந்தச் சுந்தரி புகுந்து, கருவுயர்க்குங் காலத்து அந்த மானினால் வள்ளிக்கிழங்கு அகிழ்ந்தெடுத்த பள்ளத்தில் மானிடப் பெண் வடிவத்துடனே கருவுயர்க்கப்பட்டு பிறந்தனள். தனக்கு பல புத்திரரிருந்தும் ஒரு புத்திரி யில்லாமையால் குறைக்கொண்டு அந்த மலையில் வாழும் வேடர் வேந்தனாகிய நம்பி யென்பான் அந்தப் பெண் மகவைக் கண்டு கடவுள் நமது கருத்தை முற்றுவிக்க புரிந்த திருவருட் பயன் என்று கருதி எடுத்து தன் மனைவியின் கையில் கொடுத்து நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்த்தனர் என்றவாறு.

# வள்ளியம்மை சிந்து.

### கணபதி காப்பு.

செயந்தருஞ் சீரூர் தன்னிற் செந்திருப் போல்வளர்ந்து
நயமுடன்பனிரண்டாண்டி னற்றினைப் புனத்தைக்காத்தே
பயனடைந்திட்டவள்ளிப் பாவையின் சரிதை தன்னை
ஒயிலுடனொண்டிச் சிந்தா யோதவைங்கரன்றாள் காப்பே.

### நொண்டிச்சிந்து.

திருவள ருலகினரே-கேளீர் திருத்தணிகைப்பதி முருகனருள்
பெருகச் சிறந்தவனும்-சிற்றூர்-பிரபலம்வாய்ந்தவேல் நம்பிராஜன்
வனசரகுலதிலகன்-தன்-வாழ்க்கைத் துணைவி நங்கை மோகினியும்
மனமொத்துத்தானிருந்தே-யேழு-மைந்தரைப் பெற்றுப்பின் மாதுநல்லாள்
தீராப்பெருங்குறையாய்-தனக்குத்-திகழும் பெண்மகவொன் றில்லையென
மாரா கவலையுடன்-நங்கை-மகிழ்நனொடுஞ் சொலி மலைமுருகன்
தாளைமன திருத்தி-விரதந்-தவராமலிருவருந் தானிருக்கும்
நாளையிலற்புதமாய்-ஆதி-நாரணன்வேள்வி மலைச்சாரலிலே
முன்வர் தாம்வணங்குஞ்-சிவ-முநிவராயோகநிஷ்டை செய்திருக்க
புன்னகையுடன் லட்சுமி-அங்கு-புள்ளிமானாகவுந் துள்ளிவர
காதலாலம் மானை-முனிவர்-கண்டு கலந்திட கருத்திரண்டு
போதரைநொடிதனிலே-வனத்திற்-போயோடிப்பொலிவுற்றுப் பூரணமாய்த்
தவமுனிவரர் கருப்பம்-மிரவு-தங்காதெனுமொழி தனக்கிணங்கி
குவளைவிழிமட மான்—வள்ளிக்-குழியினிற் குழந்தையையீன்றேக
நற்றவமகிமையினாற்-வேல்-நம்பியுங் குழந்தையைக் கண்டெடுத்தே
யற்புதமாய் வளர்த்து வள்ளி-யம்மையென்றழகிய பேரமைத்து
நங்கைமோகினியும்-தன்-நலிவெலா நீங்கியே மனமகிழ்ந்து
சிங்காரமிகச்செய்து-மகவை-சித்திரக்கிளியென வைத்திருந்தார் (தந்)

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

சீதரன் வள்ளிவெற்பிற் சிவமுனியாகிப்பன்னாள்
மாதவ இயற்றமங்கை மானுருக்கொண்டுதோற்றிக்
காதலாலம்மானோடு கலத்தலாற்கருக்கொண்டன்றாள்
ஆதலாற்பின்னர்வேட ரவ்வழிவருகலுற்றார்.

## இதுவுமது.

கண்டனனம்பிமன்னன் காதலாயணைத்தெடுத்தே
அண்டர்கள்பாவைதானோ வற்புதமென்னென்பேனிம்
மண்டலந்தன்னில்வந்தே மகவினை தந்ததாரோ
கண்டிலேனம்மாவென்று கருதியேசிறார்போந்தான்.

## சிந்து.

நம்பியின் புத்திரர்கள்-காட்டின்-நற்றினை விரைத்துப் பயிர்செய்து
செம்மையாய்க்கதிர் முற்றும்-நாளிற்-சேர்ந்துமே பட்சிகள் கொய்தலினால்
இக்கவரோடித்தாய்-தந்தைய-ரிடம் வந்துபுகன்று விடைகொண்டு
தங்கையை யண்ணன்மா-ரன்று-தாவியேயழைத்தேகித் தினை புனத்திற்
சேடியர் புடைசூழ-விடுத்து சென்றபின் பற்பலபாவையெல்லாம்
ஓடியேவந்தனுக-கவண்விட்-டோட்டினலாலோலமாலமெனுந்
தருணத்தினாதருங்-குகனைத்-தரிசிக்கவவ்வழியாகவந்து
குரற்றொனிதனையறிந்து-மடவார்-குலவுபரணெதிர்குறித்துசென்று
பார்த்து விழிபூர்த்து-நல்ல-பாக்கியவதியிவள் சிலாக்யமுடன்
கார்த்திகேயருக்குத்-தகுங்-கண்மணியாமிந்தப்பெண்ணரசி
யென்றுமேயம்மையரை-முனிவ-ரெழிலுடனுரைத்தேயாசிகூறி
அன்று தாய்தந்தை குலம்-ஊர்பே-ரிவையாலறிந்து தம்பேர் புகன்று
சுந்தரமடமயிலே-சிவ-சுப்பிரமணியரை மணஞ்செய்து
விந்தையாய் தானிருப்பா-யென்று-விள்ளவும் வள்ளியுஞ்சேடியரும்
தெரியாமைதன்னாலே-இவர்-திப்பிரமைகொண்டுறைத்தாரெனவே
பரியாசமிகச்செய்ய-வுற்றுப் பார்த்தேவள்ளிப் பசுங்கிளியை
எதிரினிற்றுணைத்து-படத்தி-லெழுதியேதணிகைப் பதியிற்வந்து
கதிர்வேன்முருகையன்-பொன்னங்-கழல்பணிந்தெழுந்துகளிகூர்ந்து
வந்ததோர் நாரதரும்-வள்ளி-வளமையுமிளமையும் வாய்மையுமே
சுந்தரமாயுறைத்துப்-படத்தைச்-சுருதிபுகழ் குகனிடங்கொடுத்தார்
கண்டுமால்கொண்டு-படத்தை-கட்டித் தழுவி முத்தமிட்டார் (தந்)

## அறுசீர் ஆசிரிய விருத்தம்.

வானவர் வணங்குங் கந்த வரைதனை விட்டு நீங்கி
தேனமர் மொழியாள் வள்ளி தேவியட் கருளும் வண்ணஞ்
ஞானமார் தணிகை வெற்பில் நாயகனமர்ந்த காலை
வான னுடதளினின்று வந்தனன் முனிவ னம்மா.

### இதுவுமது.

கந்தவேள் தனைப் பணியக் கருதினா ரதமன்றோடி
வந்தனன் வழியில் நல்ல வனிதையின் குரலறிந்தே
செந்திரு வென்பாளிந்த ஜெகத்தினி லிவட்கொப்பாமோ
எந்தவாறென்றே யின்னா ளெழில்தனைச் சொல்வதம்மா.

### வசனம்.

எப்படி என்றால் வளம் பொருந்திய வள்ளிமலையிலே நம்பி யென்னும் வேடுவ வேந்தனாற் கண்டெடுத்து வளர்க்கப்பட்ட, வள்ளி - 12 வயசு கழிந்து திருமணப் பருவத்தை அடைந்தனர் — வேடுவர் பருவம் வாய்ந்த சிறு பெண்களைத் தினைபுனத்திலே காவல் வைக்கும் முறைப்படியே வள்ளியின் தாய் தந்தையராகிய பெற்றோர்களும், அந்த வள்ளிக்குத் தக்க பருவம் வந்ததால் தினைப்புனங் காக்குமாறு ஏற்படுத்தினர். அவள் காவல் காக்கும் புனத்தின் தினையை கவர்ந்துண்ணுமாறு குறிஞ்சி நிலமாகிய அந்த மலையிடத்து வாழுங் கிளி முதலிய பரவைகளும், யானை முதலிய விலங்குகளும், வந்ததன்றி ஏனைய நிலத்துப் புள்ளும் விலங்குகளுமாகிய—அன்றில்—குயில், எருமை, சிறுமான் முதலியனவும் வந்தன. குரவர் சமைத்த பரணையிலிருந்து வள்ளியம்மை தட்டை முதலிய கருவிகளைக்கொண்டு கிளி முதலிய பறவைகள் அத்தினைப்புனத்தை கிட்டவும் முடியாதபடி ஓட்டினள். வள்ளியம்மை புனங் காத்துக்கொண்டிருந்த காலத்து அவளுக்கு திருவருள் புரியுமாறு முருகக் கடவுள் கந்த மலையை விட்டு தான் மாத்திரம் தனியே வந்து தணிகை மலையில் தங்கினரென்க.

வள்ளியம்மையை மணந்துகொள்ளவேணுமெனும் திருவுள கருத்தோடு முருகக் கடவுள் வள்ளியம்மை யிருக்குமிடத்துக்கு சமீபமான இடத்திலிருக்குந் தணிகை மலையை சேர்ந்து வீற்றிருந்தாரென்க.

அப்போது நாரத முனிவன் பூமியில் வந்திறங்கி முருகக் கடவுளை தரிசிக்கவேண்டுமென்று அவாவுடையவராய் வரும் வழியில் 'ஆலோலம்! ஆலோலம்!' என்ற சப்தத்தை அறிந்து குரல் தொனியின் முழக்கம் அதிசயிக்கத்தக்கதென்று, அவ்விடம் சென்று, அழகைக் கண்டு சந்தோஷித்து, அம்மையைப் பார்த்து அவள் வரலாறு முழுதும் தெரிந்துகொண்டு, அம்மையே! சர்வலோக ரக்ஷகனாகிய முருகக் கடவுளை மணஞ் செய்துக்கொள்வாயென்று வாழ்த்தி, அவள் உருவத்தை படத்தில் சித்தரித்து, அவ்விடத்தை விட்டு தணிகைமலையில் வந்து குமரேசரை தரிசித்து பன்முறை வணங்கித்தொழுது தான் வரும் வழியில் கண்ட அதிசயத்தை புகழ்ந்து சித்திரப் படத்தைக் கொடுத்து 'ஓம் சரவண பவனே ஷண்முகனே! இந்த அழகு வாய்ந்த ஸ்திரீ ரத்னத்தை எந்த உலகிலும் கண்டதுமில்லை பார்த்ததுங் கிடையாது. இந்த அம்மையாருடைய எழிலை சொல்வதற்கு என்னாலும் என்போன்றவர்களாலும் அரிது என்றால் தாங்களே நேரில் சென்று கண்டால் உண்மை தெரியவரும். அந்த அம்மாளுடைய பேரழகை என்னென்று சொல்வது!' அந்த அம்மாள் லக்ஷ்மியைவிட அழகு படைத்தவள் என்பதை தெரிவித்த நாரத முனிவரது சொல்லை அங்கீகரித்து, அம்முனிவனுக்கு விடைகொடுத் தனுப்பியபின் காம நோய்கொண்ட முருகக் கடவுள் அவ்வள்ளியம்மையினிடத்து செல்லும் கருத்துடன் செட்டி வேடம் கொள்ள விரும்பினார் என்றவாறு.

## ஏலப்பாட்டு.

### துதி விருத்தம்.

தலமெலாம் புகழ்ந்து போற்றுஞ் சண்முகன் றணிகைவெற்பன்
னலகிலா புகழ்கொள் வள்ளி யம்மை மேற் காதலாகி
யிலகுபொன் வளையல் விற்ற வெழிற்கதை தன்னையிங்காள்
நலமுட னேலப் பாட்டாய் நவில வைங்கரன்றாள் காப்பே.

### ஓடம்.

செந்திருவாமான் வயிற்றிற் செல்விழியாஞ் சுந்ரவல்லி
வந்துதித்து வேடரிடம் வள்ளியெனப் பெயரெடுத்து
விந்தைமிகுந் தினைப்புனத்தில் வீற்றிருக்கும் வேளையிலே
கந்தரெழி லாதரால் காதல்கொண்டு வள்ளியின்மேல்

### முடுக்கு.

வர்த்தகர்போலவே வந்தனான்று
வாகாய்த்தினைப்புனந் தேடியே சென்று
பர்த்தாவுக்கேற்ற பாவையர் நன்று
பாங்குடன்றும்பூணும் வளையல்களென்று. (1)

வாங்குவாருண்டோ வகைவகையாக
வளையல்கள்பச்சிலை மஞ்சளுமாக
காங்கேயனென் றிரு காத்தினிலாக
கங்கணம்வங்கியும் பூணுவீர்போக. (2)

பாக்கியமான பலனைப் பெறுவீர்
பாங்கியுந்தலைவியுமாக வருவீர்
சீக்கிரமென்று செப்பிவேன் முருகன்
செல்வதுபோனடித்தார் மான்மருகன். (3)

விந்தையாய்பிரமவேணியுஞ் சென்று
விளம்பினள்வள்ளிக் கருகினின்று
சந்தோஷம் வர்த்தகன் றனையழையென்று
சாற்றுமொழிப் படியழைத்தனளின்று. (4)

புன்னகைகொண்டுடல் பூரித்துமேருகன்
புனத்தினிற்பாங்கிபின் பாகச்சிவன்மகன்
சென்றனன் தகதகவென சரவணபவன்
செந்திருமான் மகனேரினிற்சண்முகன். (5)

ரத்தினகம்பளந் தன்னைவிரித்து
ராசிராசியாக சரக்கைப் பிரித்து
வைத்தனன் முத்துவைடூரியநிறுத்து
வந்துடன் வாங்குவீரென்று குறித்து. (6)

பார்த்தந்தவள்ளியும் பாண்டனைவிட்டு
பாடகந்தண்டை சதங்கைபொன்மெட்டு
ஆர்த்திடவந்தனள பரஞ்சிப்பட்டு
அணிந்தசிற்றிடையினி லொட்டியாணமிட்டு. (7)

நிலவொளிவதனமு மலர்விழிபூர்த்து
நின்றனளழகினிற் மதன்ரதிதோர்த்து
கலங்கினன் குமரனுங் காதலால்வேர்த்து
கண்ஜாடைக்காட்டிக் கன்னியும் பார்த்து. (8)

எந்தவூர்வர்த்தக னிங்குவந்தீர்காண்
என்னென்னவளையல்கள் கொண்டுவந்தீர்காண்
இந்தநற்றினைப்புனந் தன்னிலெவர்காண்
இவ்வளையல்வாங்குவீ ரென்றுவந்தீர்காண். (9)

பகருவீரென்றிடப் பயந்தவர்போலே
பசபசவென்று பரவைமுன்னாலே
மகபதியின்மருமகன் மய்யலாலே
மகிழ்ந்துறையாடுவன் வள்ளியின்பாலே. (10)

சொல்லுவேன்கேள் திருத்தணிகையென்னூரு
சுப்ரமண்யசெட்டியென் றழைப்பாரென்பேரு
அல்லும் பகலும் மிவ்வழியாய்சிற்றூரு
அழகான திருவலம் மேல்பாடிநேரு. (11)

வருவதுபோவது வர்த்தகத்தாலே
வளையல்களணிந்து கொளென்கரத்தாலே
திருமகள் கடாட்சம் பெருகுமென்மேலே
திருத்தணிகைகுகனிருப்பா னுன்பாலே (ஏலேலோ) (12)

விருத்தம்.

வேதமுடிவாய் விளங்கும் வேன்முருகன் கானகத்தில்
காதல்தருந்தினைப்புனத்திற்-கடைபரப்பி வர்த்தகனாய்
மாதரசிமான்களும் மனமுருகும்படியாகப்
பூதலத்தில்வளையலிட புதுமைகளைப் புகலுற்றான்

## முடுக்கு.

பார்மின்மாதாகாள் பம்பாய்வளையல்
பாமசிவசெட்டிமகன் செய்திடும் வளையல்
வார்கடலுலகுவிலே வாங்கும் வளையல்
வைச்சிரவைடூரியம் வைத்திழைத்தவளையல். (1)

பளப்பளப்புள்ள பட்டுவளையல்
பன்னருமேகவர்ன்ன வளையல்
வளமிகுந்திலகு வாழைப்பூவளையல்
வரைராஜபுத்திரி சுதன் தரும்வளையல் (2)

ஜிலிஜிலிப்பான ஜெகதாவளையல்
சிந்தாமணிகாமதேன் போலுள்ள வளையல்
வலுவின்மிகுந்திலகு வயிரவளையல்
வர்ன்னவர்ன்னமான ரோஜவளையல் (3)

அலங்கார மாமபாஞ்சிவளையல்
அன்னமயில் குயிலமைந்தவளையல்
கலகலென்றொலிக்கும் கற்பகவளையல்
காந்திமிகுந்திடு மாந்தளிர்வளையல் (4)

பஞ்சவர்ன்னவளையலிது பாவற்காய் வளையல்
பார்த்தவர்கண்களைப் பறித்திடும் வளையல்
தஞ்சாவூர்வளையலிது தாழம்பூ வளையல்
தரித்தவர்க்கு புத்ரசந்தானந்தரும் வளையல் (5)

சாதாவளையலிது சர்தார் வளையல்
சந்ரகாந்தகற்களினாற் செய்த வளையல்
ஊதாவளையலீ தொய்யார வளையல்
உத்தமஸ்ரீகளுக் குகந்த வளையல் (6)

நல்லநல்லவளையலிது நற்பவளவளையல்
நாணயம்வாய்ந்திலகு நாகரத்ன வளையல்
கல்கத்தாவளையலிது கல்லிழைத்த வளையல்
கல்யாணமாதர் கண்டணியும் வளையல் (7)

வில்வெட்டு வளையலிது விசித்திர வளையல்
விதவிதமான கொத்துவளையல்
மல்லிகைப்பூவளையலிது மகிழம்பூ வளையல்
மாகதம்வைத்திழைத்த மத்தாப்புவளையல் (8)

அரம்பாஸ்திரிகளணியும் வளையல்
அருந்ததிமதன் ரதிக்கான வளையல்
சுரகதிகரமதிற் ஜொலிக்கும் வளையல்
சுந்தரகலைமக டரிக்கும் வளையல் (9)

மலர்மகள் கரமதின்மருவும் வளையல்
மலைமகளென்றுய் மகிழும்வளையல்
நிலமகள் கரமதினிலவுவளையல்
நீலவர்ன்னமாக நிற்கும் வளையல் (10)

சொல்லுவேன்கேளிது சொர்னகாந்திவளையல்
சோகமுமோகமும் போகந்தரும்வளையல்
உல்லாசவளையலிது ஊசிகாந்த வளையல்
உம்மைரிநம்மையு முறவாக்கும் வளையல் (11)

கருநிறவளையலிது கண்ணுடிவளையல்
கல்யாணஞ் செய்துவைக்குங் காஞ்சிபுரி வளையல்
சரிகை வளையலிது ஜமேதார் வளையல்
சரவணேற்பவ குகசண்முகன்வளையல் ஏலேலோ. (12)

## விருத்தம்.

வனத்திற் கிளியோட்டு கின்றவள்ளியற்கு வளையலிட
இனத்தையுமே விதவிதமா யியம்பிடவு மேந்திழையாள்
புனத்திலுள்ள திணைகொடுத்தாற் பூட்டுவீரோவளையலென்ன
மனத்தின்படியாகவேணு மணிவளையல் போட்டிடுவோம்.

## முடுக்கு.

என்றதொரு வார்த்தையை ஏந்திழையறிந்து
யீந்தனள் கரத்தை யெழின்மனம் விரிந்து
குன்றுதோராடுங் குகநகைபுரிந்து
குரவள்ளி கரத்தைப் பிடித்தனன் பரிந்து. (1)

முத்துவளையிலவன் மோகன வளையல்
முழுநீலம் பச்சை வைடூரிய வளையல்
ரத்னவளையல் புஷ்பராக வளையல்
ரஞ்சிதமிகு மபாஞ்சி வளையல். (2)

வங்கியுங் கங்கணந் தங்ககொலுசு
வகைவகையான வளையிற்றிலுசு
பங்கையமலர் விழிப் பாவையின்மனசு
பரிவுறக் காலிற் பாடகஞ் சுருள் கொலுசு, (3)

பொற்சுட்டி நத்துப் புலாக்கு குழன்மாட்டிப்
பூவாரம் வளையல் பல பூணூரம் பூட்டிக்
கொற்றவர் நற்றவர் பணிந்திடு மேட்டி
கொடுத்திடு செந்தினை யென்றுகை நீட்டி. (4)

மஞ்சளுநம் பச்சிலை குங்கும மெடுத்தான்
மணங்கமழ் பாக்குடன் வெற்றிலை மடித்தான்
வஞ்சியே பெற்றுக்கொளென்றுமே கொடுத்தான்
வள்ளியும் வாங்கியே தினைக்கதிரொடித்தாள். (5)

வடிவேன் முருகனை வர்ணித்து வள்ளி
வளமுற்றிலகு நற்றினைகளைக் கிள்ளி
மடியினிற் கட்டியே மான்போலத் துள்ளி
மாதுமே யீந்தனள் காதலாலள்ளி (6)

தந்திட வர்த்தகன் தானுமே பெற்றுத்
தையலின் மதிமுகந் தன்னையே யுற்றுத்
பைங் கொடியே நாமிருவருஞ் சற்றுப்
பரவசமாய் விளையாடுவோ முற்றுக் (7)

கொவ்வைக் கனியிதழ் கோதிடத்தாவென
குதுகுலமாகவே கூடலாம் வாவென
செவ்விழியலெழச் சீரிநின் ருவென
செட்டி நின்செய்கை கெட்டது போவென (8)

நல்லதுன்றனை நான் மணம்புரிய
நாடியே வந்தன னுற்றிசையரிய
வெல்லாஞ் சிவன் செயலென்றுமே தெரிய
விருகாத்திடை வளையிட்டன னுரிய (9)

மனைவியே யென்று மால்கொண்டு வேலன்
மன்ருடி மன்ருடி மலைமகள் பாலன்
தினைப்புனந்தன்னிற் றீனதயாளன்
திருவிளையாடல் செய்திருந்தன சீலன் (10)

அவ்வேளை வள்ளிதன்னண்ணமா ரோடி
அதட்டியே வந்தனரவ்விடந்தேடி
செவ்வே ளறுமுகச் செட்டியுமோடி
செய்துருக்காந்தனன் செய்கையை நாடி (11)

அதிசயித்திருந்தனள் வள்ளியு நின்றே
யண்ணன்மார் தருநல் லருங்கனி தின்றே
கதிர்வேன் முருகன் கழற்றுணை யென்றே
கருதியே கோட்டையன் கழறினேன் நன்றே ஏலேலோ (12)

## அறுசீர் ஆசிரிய விருத்தம்.

கோலமாந்தினைப்புனத்தே கோதிலாவள்ளியம்மன்
ஞாலமேற்கவணெடுத்து நற்றினைகவராவண்ணம்
ஆலோலமாலோவென்றே யஞ்சுகப்பறவையெல்லாஞ்
சீலமாயோட்டும்விந்தை செப்பவைங்கரன்றாள்காப்பே.

## நொண்டிச்சிந்து.

சுந்தரமான்மகளுஞ்-சிவ-சுப்பிரமணியனைச்சிந்தித்து — பந்த
மாய்த்தினைப்புனத்தே — யெழிற்-பரணின்மேற்பாங்கிமார்தாமுமாக
அந்தமாய் வீற்றிருந்து-பட்சிக—ளனுகாம லனுதினங்காத்துவந்து
செந்திருப் போல் வளர்ந்து-நற் — க்ஷேமமாயிருந்திடுநாளையிலே—
வேலனும் வளையல் விற்று—திகழ்-வேடனாய் வந்தொருபாவினின்று
கோலமிகும்வள்ளி-மனக்-கோரிக்கைதனை யறிந்திடவென்று-புனத்
திற்பறவைகளை-வந்து-புகும்படி செய்தனன் மாய்கையினாற்-வனத்திற்
பறவைக-ளோடி —வளைந்தனன்லட்சாதிலட்சம் வந்து - அழித்திடத்
தினைப்புனத்தை - சேடிய - றறிந்து தலைவி தனக்கறைய-விழியழற்
பொறி பறக்கச்—சீறி-விசித்திர கவண் பொற் குண்டெடுத்து - விறு
விறுவிறுவென்று—சுழட்டி-விட்டெறிந்தாள் பறவைகள் பட்டுவிழ
கிறுகிறுகிறுவென்று-சுழன்று-கீச்சுகீச்செனக்கூச்சலிட—ஆலோலோ
லோலோவென்று—வள்ளி - யம்மையும் உண்டையில் தானெடுத்து
கோலமாய்க் குண்டெடுத்து-குறித்துக்-கூக்குரலிட் டாயலோட்ட
லுற்றாள்-கருநாரை கவுதாரி-நீர்க்-காக்கை கழுகுகளாலோலோ-பெரு
நாரைச் சாதகப்புள்-சிச்சிலிப்-பேசரும் பொய்யாப்புள்ளாலோலோ-
கருடன் பருந்து புறா-வண்டங் - காக்கைகேகயங்கொக்காலோலோ-

குருதுகோழிகிளி, ஊர்க், குருவிசக்கரவாகங்களாலோலோ, மாடப் புரு மீன்கொத்தி, செம், மைனுநிலாமுகியாலோலோ, காடைநாகண வாய்ப்புள், வெண், காற்பாவை மணிப்புரு ஆலோலோ, ஆடுமயிலி னங்கா,ளுள்ளா, ளுந்தைவெண்ணுரைகளாலோலோ,பாடுங்குயிலினங் காள், ருஜாளி,பஞ்சவர்ணக்கிளிகளாலோலோ, அன்னப்பறவைகளா, செம்பொத், மன்றில் கூகைகளாலோலோ, சின்னப் பறவைகளா நல்ல, சிவல் சிட்டுக்குருவிகளாலோலோ, கானுங்கோழிகளா, புனத் தைக், கண்ணெடுத்துப்பாராதீராலோலோ, வானம்பாடிகளா, தினை, வனத் தையனுகாதீராலோலோ, யென்றுமே வள்ளியரும், சேடிய, ரெவர்களும் நாற்புறமாய்க் குவிந்து, சென்று விறுவிறென்று, புனத் தில், சோமலடித்தனர் பறவைகளை, காலற்றுச்சிரகற்று, நற், கழுத் தற்றுவிழுந்தனசிலபறவை, வாலற்றுவயிறற்று, நல், வாயற்றுவிழுந் தன பலபறவை, குண்டுக்குமுன்னாக, தப்பி, குதித்தோடிசென்றன பலபறவை, தெண்டநிட்டுக்கந்தருக்கு, வோடி, தெரிவிக்கச்சென் றன சிலபறவை, வண்டுவிழிவள்ளி, சமர்த்தை, வர்ணித்துச்சென் றன பலபறவை, கண்டுகுகவேடன், இந்த, கன்னியர்சமர்த்தை யறி யவென்று, பட்டுப்போனபட்சியுயிர், பெற்றுப், பாங்தோடிச்சென் றன மாய்கையினுர், விட்டுப்போனபட்சியெல்லாம், வந்து விளைந்தன மறுபடி தினைப்புனத்தி, விதுவென்ன விந்தையென்றே யம்மை, யிருதயந்தனின் முருகனை நினைந்தே, குதுகுலமாகவேதான், சேடி யர்க், கூவியேதினைப் புனந்தனைச் சுற்றி, வருகயின் மிருகமெலாம், கும்பாய், வளைந்தன வொலிந்துமே தினைப்புனத்திற், பருவ வய துடைய, பெண்கள், பார்த்துப்பிரமித்துப் பயமடைந்தார் தனனம் தனதனனம்.

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

விந்தை கானவனுய்த் தோன்றி வில்லம்பு காத்தி லேந்தி
மந்தமா ருதப்போற் குன்றி மாலையுந் தோளிற் பூண்டே
கந்தமா மிடையிற் காவிக் கச்சையுங் கழலைக் காலில்
அந்தமா யணிந்து வந்த வற்புத மென்னென் போமே.

வசனம்

விச்சித்திரம் பொருந்திய வேடுவனுய், காலில் கழலையும், இடை யிற் கச்சையும், தோளிற் குன்றிமாலை முதலியவற்றையும் பூண்டு,

அம்பேற்றிய வில்லைக் கையிற் கொண்டு, நீண்ட உருவத்தைத்தாங்கி முருகக் கடவுள், இங்ஙனமான எயினர் கோலத்துடனே வள்ளிக்கு முன் தோன்றினர் என்றவாறு.

சிந்து.

சுரிகுழன்மடவாள்முன், றணிகைச், சுப்ரமண்யவேடனுந் தினைப்புனத்திற், வரிசிலை தடக்கடரத்தி, லேந்தி, வளைத்தனனொலித் திட மிருகமெலாங், கூவியேயோடிடுமா, மிகு, குரும்பாடுவெள்ளாடு குராங்குபன்றி, தாவியேகுதித்திடுமாம், செம்மறி, தகர்பெருச்சாளி மரைகிரிமுயல், அரிணஞ்சார்த்தூலங், கோ, ளரியாளிசிருத்தைநாவி ப்பிள்ளை, கரிபரியெருதெருமை, கோவேறு, கழுதைகடம்பைகாடி நரி-பதுங்கியே நின்றிடுமாம், முட், பன்றியும் செந்நாய் நீர்நாய் கள், ஒதுங்கியேசென்றிடுமாம், பசு, ஒட்டகம்புல்வாய்பூனைமூஞ்சூர், கவிரிபிடிகாட்டெருமை, யெலி, கத்தூரிபிள்ளைகாரெலிகழுதை, யவிர் மணிதனுசுவொலியுங், கணைக, ளாற்றலுமிருகவெர்ச்சனையுங், குதலை மொழிவள்ளி, வில்லின், குணத்தொனியோசையுங்கூர்ங்கணைக, ளதிர் ஙியும்பாங்கிப்பெண்க, ளொருபா, லதட்டியடித்திடும் மாண்மைகளும், சகிக்கமுடியாமற், மிருகஞ், சஞ்சலபட்டிடைந்தோடிடுமாந், திகில டைந்துப் புள்ளினங்கள், திக்குத், திசைதெரியாமற் விழித்திடுமாம் அல்லோலமாகவேதான், புனத்தில், அம்புகள்மலைகள்போல்குவிந் திடுமாம், மெல்லாங்குகவேடன், கன், டெழிலுறுவள்ளியின்மனங் கவர, வேணவதிசயங்கள், விளைத்து, வேடனுமானைமறைத்தான் றாத்தி, காணவுங்கிடையாமன், மெத்தக், கவலையால்வருந்திநிற்பவர் போற்-பெண்களைத்தான்பார்த்தே, ஐயன், பேசுவார்பிரமைக்கொண் டவர்போலக், கண்ணுக்கினியப்பெண்காள், மான், கன்றையொன் றிங்கு வரக்கண்டீர்களா, விலையிலாத்தினமா, மதனை, வித்தையா யின்றுநான்விரும்பிவந்தேன், அலையச்செய்தெனைவிடுத்தே, வும்மிட மகப்பட்டிருக்கு தென்றறிந்துகொண்டேன் உள்ளபடியெனக்கத னைத், தந்தே, யுதவுவீறுத்தமஸ்திரிகளெனக், கள்ளனிவனென் றுணர்ந்து, பெண்கள், கண்டுனீயார் காணிவ்வனத்தே, யுத்திரவில் லாமல், வந்தே, யுளர்கின்றாய்வாயில் வந்தவழியாகப், பித்தம் பிடித் தவனே, நின், புரட்டெல்லாமறிவோஞ் சென்றிடுவாய், சென்றிடத் தான்வந்தே, னுங்கள், சேவகத்திறமையுஞ்செருக்குகளும், நின்றிடு மென்றெண்ணி, நீங்கள் நினைத்தபடியெல்லாம்பினத்துகிறீர், ருங்க

ளிற்றலைவியெவ, ளவ, னுருதியும் வண்மையுமிப்போழுதே, பங்கப் படச்செய்திடுவே, யென்னப், பகர்ந்திடவள்ளியுந்தானெழுந்து, தப் பிலிவேடுவனே, யிங்குத், தாருமாறான வார்த்தையெல்லாஞ், செப்பு வதெதற்காக, னீ, செல்லடாநில்லாமலிக்கணமே, யிக்கணமுன்றனை யே, சேர, வெண்ணிவந்தேனடிக்கண்மணியே, பக்குவமாகவிப்போ, வொத்துப், பாணின்மேலேறி வளையாடிடுவோஞ், சற்றேதயைச் செய்வா, யென்னச், சண்முகனுரைத்திடச்சரிசரியென், றுற்றுற்று தான்பார்த்து, வள்ளியு, மோடிநீசெல்லடாயண்ணன்மார், ஆக்கிர மித்துத்தான்வருவா, ரவர்கள், ளம்புக்கிறையாக்கியழியச்செய்வார், போக்கிரிதனவேடா, சொன்னேன், போயோடிப்பிழையடா புனத் தைவிட்டே, யக்கிரமமழித்துவிடும், மென்ன, றறிவையுமு ரைத்தி டுஞ்சமையத்திலே, புக்ரமாய்வேடுவர்க, ளங், கோடியேவந்தனரு மைமகனும், வேங்கையாமாறு, னதனை, வேடுவர்கண்டுடன்வெட்டு தற்குப், பாங்குடன்வருகையிலே, கௌளியும், பலுக்கினதான் மிகப் பரிவுகொண்டு. தனனம்—தனதனனம்.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

செந்தினைவனத்தில்வள்ளி சேடியருடனே கூடி
அந்தமாம்பறவைவந்தங் கணுகிடாவண்ணங்காத்தே
பந்தமாயிருக்குநாளிற் பன்னிருதடந்தோளெந்தை
வந்தனன்வேடனாக வனிதையரஞ்சும்வண்ணம்.

### சிந்து.

நிழலாயிருக்குதென்று, வள்ளி, நினைவையுங் கண்டண்ணமா ரேகக், குழகன்மறுபடியும், மங்கு-குதுகுலமாய் வனவேட்டுவனாய் வள்ளி வள்ளியென்று, நாடி, வருவதை சேடியருடனறிந்து, புள்ளி மயிலேறும், யெங்கள், புண்ணியனே யுனையானம்பினனே, தொந்த மாம்வேடனாரோ, யென்னைத், தொடர்ந்துமே வருகிறானென்னசெய் வேன், கந்தனேயிவ்வேளை, யேழையைக், காத்தருள்வாயெனக் கழல் பணிந்தே, னாடிசேடிமாரே, யிங்கே, யழையுங்களென்னண்ணன் மாரையுமேப், பாடியெனைநோக்கி, யிதோ, பதுங்கியே வருகிறான் காமியிவன், ஜாலங்கள் கற்றவனோ, மெத்த, சாமார்த்தியகாரனோ

ஞனறியேன், வேலவன்கிருபையாலே, யிவனை, வெல்லுவேன்பாரி தோகிலெடுத்தே, வாருங்களடியென்ற, வேளையில், வள்ளியை யண்ணன்மார்தான் பார்க்கச்,சீருடன்வருகையிலே,அதை, சிந்தித்து வள்ளியுந்நான் பார்த்து-கடந்துநீபோடாவென, வேடன், காதலால் கண்ணுற்று கானவர்கள் - தொடர்ந்திதோவாராரென்றே, சைவத் துறவியாய் வேடமது தான்தரித்து-நரைத்த கிழவனைப்போல், வழியில், நடித்தனன் வேடுவர திசயிக்க-வரைநிகர்மல்புயத்து, வேல்நம்பி, வனசார்கண்டு மனமகிழ-சரவணபவஞான சிவ, சண்முகன் திருவிளையாடல்களைப்-பரவை சூழுலகுதன்னிற்-கோட்டையன்-பாடினேன் நொண்டிச்சிந்தாமெனவே.

தனனந்தன தனனம்.

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

படியனில் மிகுந்தசைவ பண்டாரக் கிழவனாக
வடிவதுகொண்டு வேடர் வரும்வழிதன்னிற் சென்று
தடிதனையூன்றி மான்றோல் தற்பையாசனத்தினோடு
நடித்தன னன்பர்காண நான்மறை புகழுமோலோன்

வசனம்.

எப்படியென்றால் அந்தவள்ளியம்மையானவள் புனத்தைவிட்டு ஓடிப்போ என்றவார்த்தையை கேட்டவுடனே, வேடர்வருகிறாரென்பதையறிந்த முருக கடவுள் மகிழ்ச்சியடைந்து பெரும்புகழைத்தருகின்ற கிழச்சைவத்துறவியின் வேடத்தைபூண்டு அதாவது காவிகாம்பா தண்டுகமண்டல ருத்திராட்சத்தாவட விபூதிடஞ்சாக்ஷா தூளினத்தோடு சடைமுடிதரித்து மார்பினிற் பூநூலிலக இடையிற் மான்றோலும் கையிற் ஜெபமாலையும் தற்பாசான முடையவராய் கோலையூன்றித் தள்ளாடி தத்தளித்து மெத்தமெலிந்தவர்போல் வேடர்வரும் வழியில்நடிக்க அவர்கள் யாவருங்கண்டு பரமானந்தத்தில் மூழ்கிநமஸ்கரிக்க பெரியார் பஞ்சாக்ஷாத்தை கொடுத்து ஆசீர்வதிக்க சந்தோஷித்து சுவாமிகாள் நீர்எவ்விடத்திலிருந்து எவ்விடஞ் செல்கிறீர் உமது நாமதேயம்யாது ஊர்பேரென்னவென்று கேட்க அதற்குநாமிருப்பதுகைலாயம்கந்தமலை நமதுபேர் கடம்ப பண்டாரம் கந்தபண்டாரமென்பார்கள் தேசசஞ்சாரமாக தீர்த்தமாடிக்கொண்டு கன்னியாகுமரிவரையில் போகவந்தோமென, யாவரும் வியர்ந்து ஒருமித்து சுவாமி இந்த தள்ளாதவயதில் அதிக கஷ்டத்தூடனே

செல்கின்றீர் சிரமபரிகாரநிமித்தம் எம்மிடஞ் சிலபோதிருந்து பின் செல்வீர் வாரும் சுவாமியென அதற்கு அப்பா அன்பர்களே யெனக் கொரு விரதமுண்டு அவ்விரதங்கெடாமல்நடத்த உம்மால் முடியுமா வென்று யோசியுங்கள் அதாவது நான் தங்கவேண்டுமானால், தனித்த வனத்தில் பாளையமைத்துக்கொண்டு யெழிலுடைய சிறுபெண்ணைத் தொண்டுசெய்யக் கிடைக்குமானால் தங்குவதற்குத் தடையில்லையென சுவாமி யிதொரு பெரியகாரியமல்ல உமதுகருத்துப்படியே நடக்கும் வாருஞ் சுவாமியென் றழைத்துக்கொண்டு வள்ளியம்மையிருக்கும் தினைபுனத்தில் பெரியாரை யிருக்கச்செய்து அவ்வம்மையை நமஸ்கரிக்கச்செய்து அவரால் விபூதியென்ற ஐஸ்வரியத்தை கொடுத்து ஆசீர்வதித்த பின்பு வேடர்கள் வள்ளியம்மையை பார்த்து அம்மா இவரோ மகான். சகலமுந்தெரிந்த பெரியவர் இவருக்கு விரதமுண்டு. இவரிடத்தில் வயது முதிர்ந்த ஸ்திரீ புருஷர்கள் வரலாகாது நின் பாங்கிமார்களும் நெருங்கலாகாது. அவர் சம்மதம்போல் நீயே தனியாயிருந்து அவர் பூசாகயிங்கரியங்களுக்கு வேண்டிய வஸ்துவை சேகரித்து கொடுத்து கொண்டு மகாஜாக்கிறதையாக தொண்டு செய்வாயென்று புத்திமதிப் புகன்று சுவாமியை பார்த்து நமஸ்கரித்து தங்கள் தங்கள் பதிபோய் சேர்ந்தனரென்றவாறு.

அறுசீர் ஆசிரியவிருத்தம்.

வானவர்தொழுதுபோற்றும் வள்ளிமால்வரையில்வந்த
ஞானநாயகனும்வேலன் னயகிவள்ளிமுன்பாய்த்
தீனரட்சகனாய்த்தோன்றித் திருவிளையாடல்செய்த
மோனமாங்கும்மிதன்னை மொழியவைங்கரன்றுள்காப்பே.

## கும்மிப்பாடல்.

தலம்புகழ்வள்ளி வரைதனிலுறையுஞ்
சண்முகன்மேற் கும்மி பாடுதற்கு
நலந்தருஞ் சித்திவிநாயக னற்புத
கனிமலரடி நற்றுணையே. (1)

மைவிழிவள்ளிமடமானை முன்னம்
மருவிமுருகன் மணஞ்செய்த
வைபவந்தன்னைப் பாடக் கலைமகள்
வனசமலரடி நற்றுணையே. (2)

செய்யவளுறையும் வேள்விமாமலைச்
சேர்ந்ததோர் மேற்பாடி கான்கத்தி
லொய்யாரமானின் வயிற்றினில் வள்ளியு
முற்பவமாகினளற்புதமாய். (3)

வனசரர்கண்டு மகிழ்ந்தெடுத்தேகியெ
வளர்பிறைபோலவே தான்வளர்த்து
தினப்புனந்தன்னிற் குலமுறை போலவே
திருத்திமையாளை விடுத்தேக (4)

கோலமயிலேறும் வேலவனைநிதங்
கோரியேசேடியர் தம்முடனே
யாலோலோலோவென்றதட்டியேவள்ளி
யம்மையும்பறவையை யோட்டுகையிற் (5)

குரற்றொனி கேட்டுமே னாதனரோடிக்
குலவுபரணெதிராக நின்று
விரைவுடன் வள்ளியைப் போலொரு படத்திற்
விநயமா யெழுதியே தணிகைவந்து (6)

செந்துவர்வாயுமை மைந்தன் றிருவடி
சேவித்து சித்திர பொற்படத்தை
தந்துமே விந்தையாய் வள்ளியின் சேதியைத்
தந்திர னாதருரைத்தேக (7)

நான்மறை புகழும் வேலவனும் வள்ளி
நாயகி தன்னை மிகவிரும்பி
வான்றவழ்த் தினைப்புனத்தினிற் செட்டியாய்
வந்துமே வாகையாய் வளையல் விற்று (8)

வேடனாய் வேங்கை மரமாகி மறு
படியும் வேடனாய்த் தானேகி
யாடல் பலசெய்தடவிதனிற் மா
யாண்டியாய் வேடர் வரும் வழியில் (9)

காலோடு கால்பின்னிக் கோலூன்றி நெடுங்
காலங்கண்ட கூன் கிழவனை போல்
நாலுக்கு நாயகனாகிய வேலனும்
நடிக்கவே வேடுவர் தாங்கண்டே. (10)

யாவரும் பெரியோ னடியைத் தொழுதுமே
யஞ்சலி செய்துமே யுபசரித்து
தேவரீரிந்த வயதினிலே யெந்த
தேயத்தை நாடியே செல்ல வந்தீர் (11)

இருக்கு மூன்னுரே துபேரோ தகனை
யேழையடியார் மனமகிழ
அருளுவீரென்று வணங்கிடப்புகி
யாண்டவனென் குருநாதனுமே. (12)

வடவரை முதலெத் தடவரைகளினு
வாசஸ்தலமாக வீற்றிருபேன்
கடம்பவனமலர்க் கந்தனென்றெண்பெயர்
கற்றோருரைப்பது கானவரே (13)

ஆவலாய் கன்னியாகுமரிதீர்த்த
மாடிட விவ்வழியாகவின்னாள்
போவதென வனவேடர்கள்யாவரும்
பொருந்துவீரிவ்விடஞ்சிலகாலம். (14)

அய்யனேசிவனடியாரேவும
தாஞ்ஞையின்வண்ணமுந் தொண்டுசெய்வோம்
துய்யனேகிருபைசெய்வாயென்னத்
துதிக்கவேடர்களாண்டியுமே. (15)

விரதமொன்றுண்டு நான்சொல்லுவேன் கேளுங்கள்
இருத்தரில் ஸ்ரீபுருஷரென்னிடத்தே
வரவும்போகவுமாகாது நல்ல
வனப்பில்மிகுந்த வனிதையாக. (16)

விளமையாம்பாலிகை யன்றியேமற்றவ
ரென்னிடம்வந்துமே தீண்டலாகா
வுளப்பிடியிவ்வாறு தொண்டுசெய்வதற்
குதவுமோவுங்களாற்கானவரே. (17)

யுதவுமுதவு மெங்களிடத்தினி
லுற்றிடுநற்றிருமங்கையைப்போல்
பதவிசுவாய்ந்தச்சிறுபகவென்றுப்
பருவமதடைந்திருக்குதய்யா (18)

தேடக்கிடையாத ரத்தினமாமதை
தேய்வீகமாகவுங்கண்டெடுத்தே
நாடிவளர்த்துக் குலமுறைபோலவே
நல்லத்தினைப்புனங்காவல் வைத்தோம். (19)

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

வள்ளிமானென்ற பெண்ணின் வனமதுயெங்கே என்ன
புள்ளிமானீன்ற கன்றின் புனமதோ தோற்றுதய்யா
மெள்ளென நடந்துவாறும் மெய்யனே போவோமென்ன
வள்ளலுமகிழ்ந்தேயன்று வள்ளியினருகிற் சேர்ந்தார்.

கும்மி.

எதிரிற்றினைப்புனந்தோற்றுதுபாரிதோ
யேகுவோம்வாருங்கள் சுவாமியென
கதிர்வேன் முருகப்பண்டாரமங்கேயன்று
கானவர்பின்பாகத்தினைப்புனத்திற். (20)

சென்றனன்வேடுவர் வள்ளியையழைத்துமே
சேவைசெய்வாய் மஹராணிவரெனதன்
முன்னவர்மொழிப்படி வள்ளியுமாண்டவர்
முளரிமலரடித்தான் தொழுதே. (21)

பத்தியாயெழுந்து நிற்கவொருபுரம்
பார்த்து மனமகிழ்வெய்தியப்போ
வுத்தமியாமிந்தப்பெண் மடமானுக்
குடனேவிவாகம் நடக்குமென. (22)

செவ்வேளறு முகன்சாட்சியாகநான்
செப்பியவார்த்தைகள் தப்பாது
ஒவ்வுமுங்கள் கருத்ததுபோலவு
முதவுவள்விரதம் பலித்திடுமே (23)

தூயக்குமரித்தீர்த்தம் போம்வரைத்
துணைவியிவளேதான் தகுமெனக்கு
நேயமாயிங்கனஞ்சிலநாள் தங்கியே
நேத்தியாய்ச்செல்லுவேன் வள்ளியற்கு (24)

நன்மதிபண்முறைசொல்லுவீ ரெனவே
நயந்துமேவேடுவர் வள்ளியற்கு
யின்னவர்கருத்தின்படி தவராம
லினிமையாய்த்தொண்டு நீசெய்திடுவாய் (25)

வள்ளியேகேளம்மா விரதமவர்க்குண்டு
வயதுமுதிர்ந்தோர் வந்தனுகலாகா
கிள்ளைமொழியே னின்சேடிமார்களுங்
கிட்டநெருங்கவு மாகாதே. (26)

ஒருத்தி நீ தனியாயிருந்து மவர்மனத்
துற்றபடியேவல் செய்திடுவாய்
பெருத்தவிஷய மிகு ஜாக்கிரதையென்று
பேசியே வேடர் மறைந்த பின்பு. (27)

யாரடி பாங்கிமார்களே யிந்த
வழக்குத்தினைப் புனந்தனைக்காத்து
சீர்பெறச் செய்வீர்களென்ன வவரேகச்
சிவனடியார் திருவடிதொழுதே. (28)

யெங்கள்குலதெய்வம் போன்றவரேயும
திஷ்டப்படி தொண்டு செய்திடுவேன்
சங்கரனடியாராகிய யென்குரு
சுவாமியே சாற்றிவீரெனக்கேட்குந். (29)

தருணத்திற் வள்ளியை மார்போடணைக்கத்
தாவுங்கிழவனைத் தான்பார்த்து
அருந்தவப்பெரியோய் யார்காணீரிந்த
வடுக்காத காரியஞ் செய்யவந்தீர். (30)

நல்லது எந்தையரிடத்துமே நீர்
நண்ணியது மிதற்காகவோ தான்
நில்லாமல் நடவு நடவுமென வள்ளி
நிரண்யமரிந்துமே யாண்டியரும். (31)

முன்னையணைந்திட நானுமே இந்த
ஒவ்வாவயதிலும் நினைப்பேனோ
யென்ன விபரீதம் நினைத்தா யென்மே
லேந்திழையே வள்ளி நாயகியே. (32)

குலவவுங் கோரவு கூடவுமே நல்லக்
குமரன் வயதினி வில்லாமல்
நிலவுவொளி வதன மின்னுளே யிப்போ
நினைப்பேனோ நீதான் கூறிடுவாய். (33)

யென்று ஜெகஜ்ஜாலவித்தை படித்தய்ய
னேந்திழை வள்ளியின் குறையகற்றி
யன்றவள் மென்கர ரேகையும் பார்த்துமே
யரிவையே யுனக்கொரு மாப்பிள்ளையும். (34)

கண்முன்னிருக்கின்ற னுன்னை மணஞ்செய்ய
கண்டதுண்டோ வள்ளி நாயகியே
விண்ணவர் வணங்குங் கழலுடையான்மிகு
வீரபராக்கிரமந் தானுடையான். (35)

வடிவில் குமரன் மலையில் வளர்பவன்
வந்து வதுவை புரிந்திடுவான்
கொடியிடையே யென்றறைந்து பசியின்
கொடுமையால் மெத்த மெலிந்தவர்போல் (36)

கண்களிருண்டு நாவாண்டு மெத்தக்
களையாய் வள்ளியின்மேற்புரண்டு
யெண்ணிய யெண்ணம் பூர்த்தியதாகவே
யேந்திழை வள்ளியு மிகநம்பி (37)

கிழவர் பசியைத்தீர்ப்பதற்கு நல்ல
கிழங்குடன் பால்பழ மில்லையென
ஒழுங்குடன் தேன் தினைமாவையுருட்டியே
உண்ணுங்கள் சுவாமி யெனக்கொடுத்தாள். (38)

கொடுத்த மாப்பலகாரத்தை யுண்டவர்
கோழைக்காட்டியே மாரீசமாய்
படுத்துக் கெக்கன விக்கியே குறவர்
பாவையை யருகினிற்றானழைத்து. (39)

தாகந்தணியவே தண்ணீர் தாவெனத்
தையலுகையைமிகப்பிசைந்து
யேகுவோம்சுனைக்கு வாருமய்யாவென்
றிருவருமாகவேதானடந்தார். (40)

வனந்தினிலெந்த மிருகத்தினுலிந்த
வஞ்சிபயமடைந்திடுவாளென்று
மனதினிலெண்ணியே வள்ளிதன்னுளந்த
மர்ம்மறிந்துமே சுனைதனில்நீர். (41)

அருந்தியேதாகந்தணிந்தது போலவே
யாசை யாய்வள்ளியையணைவதற்கு
கருதியழைக்க விணங்காமலந்தக்
காதலியேகத்தன் முன்னவனை. (42)

விருத்தம்.

தந்திமாமுகனேயென்றன் தமையனேயிந்தவேளை
வந்துநீயுதவிசெய்வாய் வனத்தில் வெள்ளானையாக
பைந்தொடியென்னைச்சேரும்-படிக்கு நீவருவாயென்ன
வந்தனன்யானையாகி மண்ணும்விண்ணுஞ்சத்தானே.

தோத்திரஞ்செய்திடவனத்திடையானையாய்த்
தோன்றியே கணபதியோடிவா
பார்த்தந்தவள்ளியும் பயந்து திரும்பியே
பாண்டாரக்கிழவரிடத்தில் வந்து (43)

ஆண்டாரேயென்குருசுவாமியரேயிதோ
யானைதுரத்திவருகுதுநீர்
வேண்டியப்படியே நடந்திடுவேனிவ்
வேளையிலென்றனை காத்திடுவாய். (44)

அருகினெருங்கி வருகுதய்யா யென்ற
னுவியுஞ்சோர்ந்துபோகுதய்யா
முருகன்சாட்சியா யுன்மனப்படியே
முற்றும்கடப்பேனெனச் சேர்த்துக் (45)

கட்டித்தழுவினள் கிழவர்மகிழ்ந்திடக்
காணுமலானையுந்தான்மறைய
விட்டதுபயமென்றுமே வள்ளியும்
விருத்தரையேமாற்றிதானேகுஞ். (46)

சமயத்திற்சண்முகன் றமயனை நினைந்திடத்
தாவியே யானையுஞ் சீரிவாக்
குமரியுமிதென்ன விந்தையென்றே மனங்
குன்றிநடுங்கியே ஓடிவந்தே. (47)

யங்கு பெரியோனடி தொழுதேயும
தாஞ்சைன்படியே நடப்பேனெனச்
சங்கையறவே சண்முகன் சாட்சியாய்ச்
சத்தியஞ்செய்துமே தான்கொடுக்க (48)

ஆறுசீர் ஆசிரிய விருத்தம்.

முகங்களோராறுமாக முன்னான்கு கரங்களாகிச்
சுகந்தருவடிவமொன்ருய்ச் சுந்தரமயிலும் வேலும்
அகமகிழ்ந்திலகவந்தே யரிவையின்கையைப் பற்றிக்
ககனர்களுறையும்நல்ல கடிகாவில் நின்றனனே.

வசனம்.

எப்படியென்ருல் ஆறுமுகமும் பன்னிரண்டு திருக்கைகளு முடைய தனது நிசவடிவத்தோடு முருகக்கடவுள் வெளிப்படையாக வள்ளியம்மைக்கு காட்சி கொடுத்தருளினு ரென்றவாறு.

கும்மி.

சாலவுந் தந்தி இடைந்திடவுஞ்சிவ
சண்முகனுஞ் சுயரூபமாக
கோலமாய் வள்ளிமுன் ருேன்றியே சேவை
கொடுத்தனன் காந்தருவ மணம்புரிந்தே. (49)
சேடிமார் வள்ளியின் குறியையறிந்துமே
செப்பென பன்முறை தான்கேட்க
நாடியே குமாரகுருபரனிவ் வாரு
நடத்தினனென்றுமே தான் புகன்ருள். (50)
நற்றவ மகிமை யென்றுமே வள்ளி
நாயகி தன்னைப் புகழ்ந்திருக்க
முற்றுந்தினை கனைக் கொய்துமே வேடர்கள்
முளரிமலர் விழி வள்ளியரை. (51)
பாங்கியர் சூழ்ந்திட அழைத்துமே சிற்றூர்ப்
பதியினிற் விடுத்துமே தானிருக்க
காங்கேயனென் குருநாதனுமப்போ
காதலால் வள்ளியைத்தான்தேடி. (52)
வந்து யிரவினிற் வேடுவர் குடிசையில்
வள்ளியைக் கண்டெடுத் தேகியய்யன்

சுந்தரமிருந்திடும் வேள்விமலையெழிற்
சுனைசாவிற் வைத்தனன் வந்தெதிர்த்தக் (53)
கானவர் தொழுதிடக்கருணை புரிந்தய்யன்
காதலி வள்ளியை வதுவை செய்தே
வானவர் புகழும் வள்ளிமலைதனில்
வைபவமாகவே வீற்றிருந்தார். (54)
குதுகுலமாகவேவதுவை முடிந்தபின்
குமரனும்வள்ளியும் மனமகிழ்ந்தே
அதிசயமாகவே தணிகைவரைதனி
லமர்ந்தனரென்றே அடியுங்கடி (55)
வெற்பில்சிறந்த தணிகை வரைதனை
வேதங்கள்நான்குமே ஓதுமென்றால்
அற்புதந்தன்னை யிவ்வாறெனவே
யாவர் உறைப்ப தென்றடியுங்கடி (56)
அகத்தியர்கீரர் அருணகிரிமுத
லடியவர்யாவரும் போற்றிசெய்யும்
மகத்துவமிருந்த தணிகைமாமலை
மன்னனைபாடி யடியுங்கடி (57)

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

செம்பவளவிழிவள்ளி சேயிழைத் தான்மணந்து
நம்பியெனுமன்னனுக்கு நற்கருணை தான்நல்கி
தும்பிமுகன்றனக்கிளைய துணைவன்திருத் தணிகைவரைச்
சம்பரமொடுசென்றமர்ந்தான் சாத்திரம் புகழுமேலோன்

வசனம்.

எப்படியென்றால் முருகக்கடவுளின் நிஜவடிவத்தை கண்ட வள்ளியம்மை முதலில் வணங்கித் துதித்து பின்பு ஆச்சரியமும் அச்சமும் ஒருங்கு தோன்றக் குவித்த கையுடனே உடல் நடு நடுங்கி வியர்க்க மிக்க பக்த்தியோடு ஒன்றுகூறலாயினள். முருகக்கடவுள் வேண்டியபோதே அவர்கருத்தின்படி நடக்க இசையாமையால் வள்ளியம்மை தன்னை கோடியாளென்று பழித்துக்கூறினள். இயற்கைப் புணர்ச்சிநிகழ்ந்த பின்பு வள்ளி தினைப்புனத்தைச்சேர விழிசிவத்தல் வாய்வெளுத்தல் உடல்வியர்த்தல் முதலிய குறிகளால் புணர்ச்சி நேர்ந்ததைபுணர்ந்த தோழி வள்ளியைவினவ அவளும் அத்தோழி

யைக்கடிந்துவிட்டுப் பிறகு இருவரும் தினைக்காவலிலிருக்கையில்
இதுதான் எற்றசமயம் என்று கருதிய முருகக்கடவுள் யானெய்த
வேழம் இங்கே வந்ததுண்டோ என்று வினவி கொண்டுவந்துசேர
பிறகு பாங்கியற்கூட்டம் நிகழ்ந்தது. அப்பால் தினைமுதிரவே குறவர்
தினையையரிந்துவிட்டதனால் வள்ளியம்மைதோழியுடனே சீறூரிற்
சிறுகுரும்பையிற் சேர்ந்தனள். பிறகு ஒருகால் முருகக்கடவுள்
இரவுக்குறியில் பாங்கியால் தலைவி வள்ளியம்மையை யெதிர்ப்பட்டு
உடன் கொண்டு சென்று ஒரு கடிகாவில் புக்கிருக்க விடிந்ததும்
தம்மகள் காணாததைக்கண்டு அவளைகவர்ந்த கள்வனைத்தேடியழிக்கு
மாறு எயினர்தலைவன் தனது கூட்டத்தாரோடு போர்க்கு சித்த
னாய் புறப்பட்டு ஒருகாவில் தம்மகளை கவர்ந்து செல்பவன் இருப்பது
கண்டு அந்தகாவை முற்றுகை செய்தனன். அப்போது நடுநடுங்கிய
வள்ளியை முருகக்கடவுள் தேற்றி தனது கொடிச்சேவலால் எதிர்த்
தோர் யாவரையுங் கொல்விக்க பிறகு நாரதமுனிவன் தோன்றி கிளை
ஞரைக் கொன்றிட்டு மாதைக்கொண்டு செல்லுதல் முறையன்று
என்றுகூற, வள்ளியைக்கொண்டே யாவரையும் உயிர்ப்பித்து முருகக்
கடவுள் அவ்வெயினர்கட்கு தனது நிசவடிவத்தைக் காட்டினன்
அப்போது எயினர் எங்களறிவையை நகையால் வெளவி நாங்களும்
உணராவண்ணம் நம் பெருங்காவம் னீங்கி "எங்கிவட் கொணர்ந்தாய்
எந்தாய் இன்னிசைச்சீறூர்க்கு எகி தீங்கனல் சான்றுவேட்டுச்செல்
லுதிர் என்றார்". அந்த முருகக்கக்கடவுளும் அதனாற் உடன்பட எயி
னர்தம் மூர்சேர்ந்து சிறு குடியிலுள்ளோர்க்கு கந்தன் நமது மாதை
கவர்ந்தனன். நமது சொல்லால் மணஞ்செய்து கொள்ள வந்தனன்
என்று செய்தி தெரிவித்தனர். தங்கள் குலத்துப் பெண்ணை வேறொரு
வன் கவர்ந்து சென்றதினால் தங்களையவமதித்ததாக எற்படுதலால்
சினமும் நாணமும் வேட்டுவப்பெண்ணை முருகக்கடவுள் விரும்பி
மணந்ததினால் அந்த முருகக்கடவுளோடு தமக்குச்சம்மந்தம் எற்பட்
டதை பற்றி மகிழ்ச்சியும் எயினர்க்குத் தோன்றினதாம். தனது
திருமணத்திக்கு வந்த தந்தை தாயார் தண்ணளி புரிந்திருப்பதை
யும் மற்றுமுள்ளதேவர் வணங்கியேத்தி அஞ்சலிபுரிந்து நிற்பதையும்
கண்ட முருகவேள் அந்தவேடுவர்க்கு தெரியாமலே அவருக்கு
முறையே வணங்குதலையும் நிரம்பத்திருவருள்புரிதலையும்செய்தனன்.
தேவர்களின் செயலாதலால் சீறூரார் உணராவண்ணம் நிகழ்ந்தது
வேட்டுவர்தலைவன் மணமக்களை தன் வீட்டிற்கு இட்டுக்கொண்டு

போய்முறைப்படி புலித்தோலின்மீதுஉட்காரவைத்துமுருகக்கடவுளது வலக்கைமேல் வள்ளியம்மையின் வலக்கையை வைத்து இவளை காப்பாற்றுக என்று சொல்லித் தாரைவார்த்து கொடுத்து வள்ளி யம்மையை முருகக்கடவுள் மணக்கின்ற திருக்கோலத்தை தரிசித்து யான்இருகண்களையும் படைத்த பயன் முழுவதையும் இன்று ஒருங் கேபெற்றே னென்று சொல்லி பெருமகிழ்ச்சியை யடைந்தான். அவனுடைய மகிழ்ச்சியை யளவிட்டு சொல்லுதல் எவர்க்கும் இயலா தென்பதாம் குறவர்தம் குரிசலாகிய நம்பி வேட்டுவன் சிந்தித்த வண்ணம் முருகக்கடவுளும் வள்ளியம்மையும் விருந்துண்டு கடா க்ஷித்து அங்குள்ளவர்கள் யாவருக்கும் விடைகொடுத்து சகலவைப வத்துடனே வள்ளியம்மையுடன் வள்ளிமலையை விட்டுடெழுந்த ருளி-யாவராலும் புகழ்ந்து போற்றும் தருத்தணிகை வரையிற் வீற் றிருந்தாரென்றவாறு.

## கும்மி.

பாவையே பூவுலகெங்கெங்குமோடிப்
பார்த்தாலும் வள்ளிவரைநாதன்
சேவைக்கு நிகராகாதென்றுச்
செப்பியே கும்மியடியுங்கடி. (58)
முத்தமிழ்வாணர்கள் முளரிமலரடி
முடிவணங்கி நிதம்போற்றி செய்தே
குற்றங்குறை பொருத்தாட் கொள்வீரென்று
கூறியே கும்மியடியுங்கடி. (59)
மஞ்சுதவழ் வள்ளி மாமலைதன்னிற்
மாதமும் மாரியுந்தான் பொழிந்து
கொஞ்சியேவாழி யென்றுமே கோட்டையன்
கோரினேனென்றுமே அடியுங்கடி. (60)

வாழ்த்து

வாழியொன் பான்மெய்வீரர் வாழிலட்சங்குமாரர்
வாழிபாரிட வீராசர் வாழித்திண் பூதவெள்ளம்
வாழிசிங் காரவேலன் வாழிசீ ருபயமாதர்
வாழிமாமயில்வேல்சேவல் வாழிநீற்றின்பவாழ்வே.

முற்றிற்று.

உ

ஓம்.

சிவசத்திமயம்.

ஸ்ரீ காமாக்ஷி சஹாயம்.



காஞ்சிபுரம்

# ஸ்ரீ காமாக்ஷியம்மை அகவல்.

சிறப்புப்பாயிரம்.

காஞ்சிபுரம் பச்சையப்ப முதலியார்
கலாசாலைத்தலைமை தமிழ் பண்டிதர்
தில்லைவிடங்கன்
வெண்பாப்புலி ம-ா-ா-ஸ்ரீ
தி. சு. வேலுசாமிப்பிள்ளையவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

அகவற்பாக்காமாட்சி யம்மை களி கூற
அகவற்பாமாலையணிந்தான்—அகவற்பாம்
பொய்ப்புலவரேக்கருப்பப் பூங்கச்சிகோட்டையனை
மெய்ப்புலமைமேதா வியன்.

காஞ்சீபுரம்

நிச்சல—இராமாநந்த சுவாமிகள் அடியவர்களில் ஒருவராகிய
பிள்ளையார் பாளையம்,

## வித்வான் ம. திருவேங்கிட முதலியாரியற்றிய

நேரிசைவெண்பா.

காமாட்சியம்மை களிப்பைத்தருங்காஞ்சிக்
காமாட்சியம்மை கழலிணைக்—காமாம்
அகவற்பாமாலை யணிந்தனன் கோட்டையன்
அகவற்பா மாலை யறிந்து.




காப்பு.

நேரிசை வெண்பா.

திருக்காமக்கோட்டத் திருக்கிழமையைப்பாடிக்
கருக்காமக் கோட்டங்கழிப்பான்—இருக்காமக்
கோட்டத்தில் வாழ்வான் குறித்துக்கொடுத்தவொரு
கோட்டத்தனன்பு கொடுக்கும்.

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

ஜெகத்திருள் நீக்குங்காஞ்சி க்ஷேத்திரந்தன்னிலென்றும்
மகத்துவ மிகுந்த சக்தி மனோன்மணி காமாக்ஷி தன்மேற்
அகத்திருளகலும் வண்ணம்—அகவற்பா மாலையோத
முகத்திரு ளகற்றுமானை முளரிமா மலர்தாள் காப்பே.

## அகவல்.

ஓம் நமோபகவதி உத்தமி கௌரி
சாம்பவி மனோன்மணி சங்கரி பயங்கரி
வெண்டலைமாலி விமலியெண்டோளி
அண்டர்கள் போற்று மாதிகங்காளி
விக்ரமரூபி வேதன் கபாலி
உக்ரகோலாகலி ஒளிர்மலைநீலி
பஞ்சாட்சாத்தி பரப்பிரம்மசொரூபி
எஞ்சாக்கரத்தி இன்பத்தாண்டவி
பிரணவசொரூபம் பெற்றிடும்வீரி
சாணும்புயத்தி சர்வசம்மாரி
மூவருருவாய் மோனமுடிவாய்
யாவுந்தானா யிமையந்தவடிவாய்ப்
புராதனமாகப் பொருந்தியபொருளே
பராபரமான பளிங்கொளியாளே
அகிலாண்டகோடி யாவுமளித்துச்
சகலவுயிரினுஞ் சகலீ கரித்து
விண்மணிபோலே விளங்கியதாயே
கண்மணியாளே கருணைசெய்வாயே
வேதமுதலில் விளங்கியவீரி
மாதவர் போற்றும் மகிடசம்மாரி
திரிகோணத்தி தேவிமனோன் மணி
அரியசனந்தி அன்ன பூரணி
தத்துவப்பொருளாய்த் தழைத்தநன் மணி
அத்திமுகவனை யளித்தகண் மணி
சிறுவிதிமகவாய்ச் சிறந்தசிவ மணி
உறுதணிமுதலா யோங்குந்தவமணி
வரைமகளெனவே வளர்ந்தநவ மணி
பரையெனநாமம் பகர்ந்தவர்பவப்பிணி
அகற்றியாட்கொள்ளும் மற்புதஒளியே
சகமுழுதன்பர் சாற்றிடுந்தெளிவே
இருண்டகுழலு மெழில்மணிமுடியும்
உருண்டசடையு மூரகபூஷணமும்
திங்களைநிகர்த்த திருமுகத்தொளியும்

பங்கயக்கண்ணும் படர்ந்த நெற்றியும்
துங்கப்பொற்பட்டமுந் துலங்குபுண்டரமும்
செங்கனிவாயுஞ் சிலைநுதனுசியுங்
குலவியமகர குண்டலச்செவியும்
வலம்புரிக்கழுத்தும் வச்சிரத்தோளும்
அகன்றமார்பும் மழகியவயறும்
நிகண்டகாமும் நீலமேனியும்
வஞ்சியிடையும் வர்னபட்டுடையும்
செஞ்சீறடியுஞ் செம்பொற்சிலம்பும்
வெண்டயம்பீலி விரல்மோதிரமுந்
தண்டையுஞ் சதங்கையுந் தங்கக்கொலுசும்
ரத்தினமிழைத்த ரவையொட்டியாணமும்
பத்தரைமாற்றுப் பசும்பொற்கச்சும்
நத்துமூக்குத்தியும் நவமணித்தாலியுஞ்
சித்திரமிலகுஞ் செம்பொற்கிளியும்
வங்கிப்பொற்றொடியும் வாகுவலயமுந்
தங்கக்கடகமுந் தடப்புயகீர்த்தியும்
ஆரகேயூரமும் மரவகங்கணமுந்
தாரகைபோன்ற தாழ்வடமாலையும்
சந்தனம் புனுகு சாந்துபன்னீரும்
விந்தைசேர் குங்குமம் விளங்குசவ்வாதும்
மந்தாரை புன்னை மனோரஞ்சிதமுஞ்
செந்தாழை ரோஜா செண்பகமலருங்
குருவேர்தும்பை கொங்கு மல்லிகையும்
மருவிருவாக்ஷி மலர் பாரிஜாதமும்
அலரியம்புஜம் அறுகுவில்வமும்
கலவைச்சாந்துங் கற்பகமலரும்
அணிந்தமேனியு மங்குசபாசமும்
மணிமந்த்ரவாளும் மான்மழுகடகமும்
டக்கைபல்லயம் டமாகசூலமும்
சக்கரமீட்டி சங்குகேடயமும்
பிண்டிடால்சூரி பிரமகபாலமும்
தெண்டாயுதமுந் திகழவச்ராயுதமும்
கட்டாரியம்பும் கண்டகோடாலியும்

பட்டாக்கத்தியும் பரிசமும் வில்லும்
வேத்திரப்படையும் வேலாயுதமும்
மாத்திரைக்கோலும் மணிஜெபமாலையும்
பட்டயந்தண்டு பாலமுசலமும்
வெட்டரிவாளும் விளக்குதோமரமுங்
குந்தாயுதமுங் கோளரிதுவசமும்
விந்தையாத்தரித்து விளங்குமெண்கரமும்
வீரவாவேசமும் விபூதிருத்ராட்சமும்
ஆரவாரமும் அகோரபார்வையும்
புயவலிமிகுந்த பூதகணங்களும்
வயிரவாஷ்ட வசுதிசைபாலரும்
இயக்கர் விஞ்சைய ரிருடிமாதவரும்
பயிரவிநின்கழல் பணிந்துகொண்டாடவும்
வண்மையாய்ச்சிங்க வாகனமேரி
வெண்குடைகவிய விளங்கியவீரி
குடமுழாக்கிடுகு கொக்கரைபேரி
தடாரிகின்னரி தவண்டைமல்லாரி
தம்புருவீணை தாளமத்தளமும்
பம்பைகாகளம் பஞ்சகாதமுஞ்
சகலவாத்தியச் சங்கீதமேளமும்
முகில்கெர்ச்சனையின் முழக்கம்போலும்
வெகுவிதகோஷ்ட வெடிமத்தாப்பும்
திகுதிகுவென்னுந் தீபச்சோதியும்
பற்பலவர்ண பாணங்களெரிய
அற்புதப்பொன்மல ரமரர்கள்சொரிய
கணிகையர்நடிக்க கவரிகள்வீச
மணிமுடிசொலிக்க மாமறைபேச
விதிமகபதியும் வியாசபராசருங்
கதிர்மதிசமதக் கினிகௌசிகரும்
வதிஷ்டநாரத திரு வாசகாசிபருந்
ததீசிகும்பகௌ தமர்வான் மீகருஞ்
உரகர் தயித்திய ருடுக்களசுரரும
சுரர்ராக்கதருஞ் சூழ்பைசாசரும்
புகழ்கின்னரர்கிம் புருடர்கருடரும்

மகுடமன்னரும் மண்டலத்தோர்களும்
தேடிநின் பாதமெ தரிசனஞ்செய்ய
ஓடிநீவருவா யுலகங்களுய்ய
பகவதிகௌரி பரமகல்யாணி
சகலவேத சாஸ்திரபுராணி
மித்துருபாலி மிருதுபாஷணி
சத்துருவிநாசனி சர்வபூஷணி
ஆவேஸ் ஆவேஸ் அகோரருத்திரி
ராவேராவே ரணவீரபத்திரி
அண்டரண்ட மடங்கலுமதிர
கண்டகிரகங் கதறிப்பதர
வாதுகள் புரியும் வஞ்சகமுனியுஞ்
சூதுகள்பேசுஞ் சுடுகொள்ளிப்பேயும்
இருளன்கருப்ப னிரிசிவீரனும்
குரளிமாடன் குட்டிச்சாத்தனும்
ஏவல்கிரகமு மெதிரிபார்வையுங்
காவல் பூதமுங் கள்ளப்பிசாசும்
பில்லிசூனியப் பிரமாட்சசமுஞ்
சல்லியந்தொட்டியஞ் சத்துருபகையும்
யோகினியோகினி முனிகாட்டேரியுஞ்
சாகினிடாகினி சர்வகிரகமும்
உந்தம்பேர்சொல்ல ஒடுங்கிநடுங்கி
வந்தனம்புரிந்து வாய்கையடங்கி
விடுவிடுவிடுவென வீரிட்டோடிட
கெடுகெடுகெடுகெடு கெர்ப்பக்கலங்கிட
பிடிபிடிபிடிபிடி பிதிர்கலங்கிட
அடியடி அடியடி அலறியோடிட
வெங்கையடப்பான் விதும்புகோமாரி
கக்குவாய்விக்கல் கட்டிவைசூரி
மாந்தைசுரமும் மண்டைகுடைச்சலும்
வாந்திபுமேக வட்டையரையாப்பும்
கசுசன்னிமுகசன்னி சூதகசன்னியும்
மகோதரம்பாண்டு மார்நோய்கிரந்தியும்
தீம்புகள்செய்யுந் திருடர்பாதையும்

பாம்புதேள்பூரான் பலகடிவிஷமும்
ஜாலமெட்சணி சகலகிரகமும்
பாலகிரகமும் பலவிததோஷமும்
அகிலத்திலுள்ள அனந்தபிணிகளும்
சகலபாவமும் சகலபீடையும்
பரிகரிபரிகரி பஞ்சாட்சரத்தால்
எரிஎரிஎரிஎரி ஏகாட்சரத்தால்
சுந்தரிபக்தகா சூரசம்மாரி
அந்தரிசிந்தத் தவர்க்கருள்வீரி
சிவசிவசிவசிவ சிவசங்கரியே
நவவடிவான நாயணியே
ஆதியனாதியு மந்தமுநீயே
சோதிச்சுடராய்ச் சூழ்ந்தவள்நீயே
நவ்வுமவ்வுமாய் நடிப்பவள்நீயே
சிவ்வுவவ்வுமாய்ச் சேர்ந்தவள்நீயே
யவ்வுமுவ்வுமா யமர்ந்தவள்நீயே
உவ்வு அவ்வுமாய் உதித்தவள்நீயே
விந்துநாதமாய் விளங்குவைநீயே
தந்தைதாயுமாய்த் தழைத்தவள்நீயே
இடைபிங்கலையி லிருப்பவள்நீயே
கடைசுழிமுனையில் கலப்பவள்நீயே
முச்சுடராகி முளைத்தவள்நீயே
உச்சிக்குவெளியி லுலவுவள்நீயே
மூலத்தில்நின்ற முதல்வியுநீயே
ஜாலங்கள்புரியுஞ் சமர்த்தியுநீயே
ஓரெழுத்தான ஒளிவெளிநீயே
யீரெழுத்தான யீஸ்வரிநீயே
மூவெழுத்தான முக்கண்ணிநீயே
நாலெழுத்தான நாயகிநீயே
அஞ்செழுத்தான அம்மணிநீயே
பஞ்சகிருத்தியம் படைத்தவள்நீயே
ஐவராங்கர்த்தருக் கன்னையும்நீயே
ஐயாறுமூவே மூட்சரிநீயே
ஊமையெழுத்தோ டொத்தவள்நீயே

ஆமையுருவா யமர்ந்தவள்நீயே
அருவுருவான அற்புதம்நீயே
குருவாய்விளங்குங் கோலமுநீயே
சின்மயமாகச் செறிந்தவணீயே
தன்மயமாகத் தனித்தவணீயே
வேதாந்தமான விளைவும்நீயே
நாதாந்தமான நவரசம்நீயே
வேற்றுமையில்லா வித்தகிநீயே
நாற்பத்துமுக்கோண நாயகிநீயே
பரியாய்முச்சந்திப் பாச்சலும்நீயே
துரியாதீதத் தோற்றமும்நீயே
அரனொடு அரியா யமர்ந்தவள்நீயே
பரனொடுபரையாய்ப் பதிந்தவள்நீயே
மோனபாத்திர முடிவும்நீயே
ஞானக்ஷேத்திர நவநீதநீயே
நடுநிலையான நாயகம்நீயே
கொடுவினைமாற்றுங் குண்டலிநீயே
சுத்தசிவத்தில் ஜொலித்தவள்நீயே
சத்திசிவமாய்ச் சார்ந்தவள்நீயே
சுகசொரூப சூட்சியுநீயே
அகண்டபூரண மானவள்நீயே
வேலனையீன்ற விளக்கொளிநீயே
வாலைதிருமகள் வாணியுநீயே
கன்னிகையாஞ்சிவ காமியுநீயே
அன்னையாம்வடி வம்மையுநீயே
ஆட்சிநீலாய தாட்சியுநீயே
சூட்சிசிவகம லாட்சியுநீயே
காரணியாமீ னாட்சியுநீயே
ஆரணியாம்விசா லாட்சியுநீயே
கன்ன்னிகள்பத்ர காளியுநீயே
மன்னுந்துர்க்கி மாரியுநீயே
எந்திரவித்தைக ளெல்லாநீயே
மந்திரசொரூப மவுலியுநீயே
மாயகுண்டலி மனோன்மணிநீயே

ஆயிரநாம மானவள்நீயே
அனந்தவடிவா யமைந்தவள் நீயே
மனம்வாக்குக்கெட்டா மகமாயிநீயே
சர்வசம்மார சத்தியுநீயே
சர்வா னுக்கிரக சமர்த்தியுநீயே
என் னுளமதனி லிருப்பவள்நீயே
மன் னுயிர்க்குயிராய் மருவியதாயே
ஆம்ஊமென்ற அகாரரூபி
ஒம்ரீமென்ற உகாரசொரூபி
சிங்கிலி வங்வங் சிவயநம
வங்கிலி சிங்சிங் வயநமசி
யங்கிலி உங்உங் யநமசிவ
நங்கிலி யங்யங் நமசிவய
மங்கிலி றீங்றீங் மசிவயந
உங்கிலி அங்அங் ஓம்நமசிவய
வசிய வசியசிவ வசியவேகாட்சரி
வசிய வசியசிவ வசியதிரியாட்சரி
வசிய வசியசிவ வசியபஞ்சாட்சரி
வசிய வசியசிவ வசியசடாட்சரி
வசிய வசியசிவ வசியவஷ்டாட்சரி
வசிய வசியசிவ வசியபீஜாட்சரி
வசிய வசியசிவ வசியபுவனேஸ்வரி
வசிய வசியசிவ வசியராஜேஸ்வரி
வசிய வசிய வையுங்கிலியும்
வசிய வசிய வளர்மெய்ச்சவ்வும்
ஓங்கிலிறீ மோவெழுத்தாளே
றீங்கிலி அஃஹ ரியெழுத்தாளே
அகிலாண்டவல்லி அம்பிகையாளே
மகிமைசேர்கச்சி மாநகராளே
கனகம்பொழிதிருக் காமக்கோட்டத்தி
மனங்கவர் காயத்திரி மாமண்டபத்தி
ஓங்காரகோணத் தொளிர்பத்மாஜனத்தி
நீங்காதநீல நிறத்தி சதுர்புஜத்தி
காணறும்பிலா காசபீடத்தி

சேனுயர் துவஜ சிகர கோபுரத்தி
தகவுறுதர்மசந் தான ஸ்தம்பத்தி
திகழறத்திபஞ்ச தீர்த்தபூதத்தி
வெற்றிஸ்தம்பம் விளங்குமாலயத்தி
பற்றற்றவர்பணிபொற்பதத்தி
தலம்புகழ்சங்கரா சாரியரென்றும்
வலம்புரிந்தேத்தி வண்மையாயின்றும்
ஒருபுடைமருவ உளமகிழ்நீலி
திருமகள் கலைமகள் தினந்தொழுஞ்சூலி
காமக்கண்ணி கவுரிகமலாட்சி
தாமதமின்றித் தந்தருள் காட்சி
கருவாயன்னையின் கர்ப்பத்திருந்து
உருவாய்ப் புவியி லுதித்துவளர்ந்து
தையலர்வலையிற் றயங்கிவிழுந்து
பொய்ம்மொழிச்சூது பொருமைமிகுந்து
வறுமையெனுநோய் வந்துபுகுந்து
உறுதியிலென்னுட லுலர்ந்துமெலிந்து
பூனைவாய்ப்படு பூங்கிளிபோலும்
மா நிலந்தன்னில் மைந்தன்மென்மேலும்
ஆதாவின்றி அம்மணியுன்றன்
பாதகமலம் பணிந்தனனென்றன்
வேதனை தீர்த்திவ் வேளைவந்தாதரி
மாதரிவீரி மசானருத்திரி
சிறுவன் கோட்டையன் செப்பிய அகவல்
பெறுதிமென்மேலும் பேசுமிந்நிலத்தில்
சகலறும்படித்துச் சந்தோஷமுற்றுச்
சகலசித்தியுஞ் சத்தியும்பெற்று
பக்குவமாகநின் பதமலர்போற்ற
சக்ரேஸ்வரிநீ சந்ததந்தோற்ற
போற்றிபோற்றி பொன்னடிபோற்றி
யேத்தியேத்தி யிணையடியேத்தி
காத்தருள் காமாக்ஷிநின் கழலடிபோற்றி

## ஸ்ரீசக்தி எந்திரப் பெருமை.

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

ஆதியிற் றுருவா சர்க்கிங் கம்பிகை யுபதே சித்த
சோதி ஸ்ரீவித்தை யென்றுஞ் சொல்பிர்ம்ம வித்தை யென்றும்
நீதியா யுணர்ந்த மேலோர் நிலையறிந் தேத்து ஞான
மாதிரு கழலை யென்றும் மறவாமற் றுதிசெய் வோமே
சுருதியின் முடிவா மென்றுஞ் சூக்ஷமாம் ரகசிய மென்றும்
கருதுபூ பிரஸ்த மென்றுங் காணருமேரு வென்றுந்
திருவருள் தருநாற் பத்துத் திகழுமுக் கோண மென்னும்
பெரும்பொருள் அறிந்தோரெல்லாம் பேசுவார்மற்றோர்பேசார்.

சற்குணர் புகழுஞ் சங்ராச் சாரிய ரவர்கள் சொன்ன
அற்புத மிகுந்த சவுந்ரிய லகரி தன்னைப் பன்னாள்
கற்றுணர் முதியோர் சொல்வர் கண்ணிருந் தறிய வொண்ணு
அற்பர்க ளறியா ரென்றே யறைந்தன ரறிஞர் தாமே.



நாற்பத்து முக்கோண யெந்திரம்.

கலிவிருத்தம்,

ஐயெட்டு மூன்று மாம்பெரு மெந்திரம்
வையந் தன்னில் வழியுணர் பூஜனை

செய்பவர் நெஞ்சந் தேருமை தோன்றியே
கைவல்ய மாகக் கருணை செய்வாளே.

வசனம்.

எப்படி யென்றால் ஞானசாகரமாகிய பெரும்பொருளைத் தரக்கூடிய ஸ்ரீவித்தை என்று சொல்லப்படும் வித்தையை ஆதியில் அம்பாளால் தன் பக்த சிரோன்மணியாகிய துருவாச மஹரிஷிக்கு உபதேசிக்கப்பட்டு பிரம்மவித்தை யென்று சொல்லப்பட்ட ரகசிய மானதும் வேத முடிவானதும் நாமரூபங்களுக்கு பின்னமாயும், அபின்னமாயும், குணங்குறி செயலற்றதாயும், நித்தியானந்த போத மாயும், விளங்கிய ஸ்ரீ வித்தையை இச்சித்து ஆச்சாரிய சுவாமிக ளாகிய சங்கரர் அம்பாள் திருவருளை அனுஷ்டித்து தன் வடிவிலே எதார்த்த ரூபமாய் தோற்றக்கண்டு களிப்புற்று பேரின்ப சாகரமா கிய புணரியில் மூழ்கி அனுபூதியான ஸ்ரீ சவுந்திரி யலகரி யென்னும் நூலை இயற்றி யருளினர் அந்நூலில் ஸ்ரீ வித்தையென்றும் நாற் பத்து முக்கோண மென்றும், பூப்பிரஸ்த மென்றும், மேரு பிரஸ்த மென்றும், சொல்லியருளிய இந்த எந்திரத்தின் தாத்பர்யத்தைக் கற்றறிந்து கண்டுணர்ந்த பெரியார்க ளல்லது மற்றவர்களால் சொல் லுதல் கூடாதென்பதா மென்றவாறு.

வாழ்த்து

வாழி மான் முதல் வானவர் வாழியே
வாழி மாதுகாமாட்சியார் வாழியே
வாழி மாமகள்பாமகள் வாழியே
வாழி மாநில மாதவம் வாழியே.

உ

சந்தவெளியம்மன் துணை.



# சந்தவெளியம்மன்
## சரித்திர விளக்கம்.

காஞ்சிபுரம் பச்சையப்பன் கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்புலவர்
வெண்பாப்புலி தி. சு. வேலுசாமிப்பிள்ளை அவர்கள்

இயற்றிய
நேரிசை வெண்பா.

ஆளியம்மை கச்சிக் கணியம்மை சந்த
வெளியம்மை வெம்மை விலக்குவாட்—கெளியெம்மைக்
காப்பாற்றுவாட்குப்பாக் கழறினான் கோட்டையன்
ஆப்பாவி னன்கிங் கறிந்து.

காஞ்சிபுரம் பிள்ளையார் பாளையம்
வித்வான் மணி திருவேங்கட முதலியார்

இயற்றிய
நேரிசை வெண்பா.

சந்தவெளி யம்மன் சரிதை விளக்க முரைச்
சிந்தைமகிழ் செந்தமிழாற் செப்பினான்—அந்தமிகும்
பாட்டைய னம்மைமலர்ப் பாதம் பணிகருத்தன்
கோட்டைய னல்ல குணன்.

## கணபதி காப்பு.

### எழுசீர் ஆசிரிய விருத்தம்.

திருந்திழை தாங்கு கொங்கையந் தழும்புந்
திகழ்மணிக் கைவளைச் சுவடுந்
தருந்திரு மலராள் வாழ்த்துமா ருயிரின்
றலைவிமென் றகரநீள் கூந்தன்
முருந்திள நகையாள் கூறனைக் கன்பின்
முதிர்சந்த வெளிமினைப் பாடப்
பொருந்திய வொருகோட்டைய னற்பவளப்
பொருப்புநின் றுதவிசெய் திடுமே.

## சந்தான கணபதி துதி.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

கடிமலர்ச் சோலை சூழுங் காஞ்சிமா நகரின் மிக்கக்
குடிவள நிறைந்த வெள்ளைக் குளத்தெரு வதனிற் றூய
வடிவுள சித்தி புத்தி வல்லபையோ டெந் நாளும்
அடியவர்க் கருள் சந்தான வைங்கரன் மலர்த்தாள் காப்பே.

## சுப்பிரமணியர் துதி.

திருவளர் காஞ்சிவைப்பிற் றினந்தொழுதேத்துகின்ற
தருவளர் குமரகோட்டந் தனிலுறைகந்தவேளின்
அருகினிற்றிகழுவள்ளி யம்மை தெய்வானையென்பார்
மருமல ரடியையென்றும் மறவாமற்றுதி செய்வோமே.

## சந்திரமௌலி ஈஸ்வரர் துதி.

மந்திர முனிவர் வானோர் மாலயன் றொழுதி றைஞ்சக்
கந்தனைத் தந்த ஞானக் கடவுளே காஞ்சி தன்னில்
இந்துபுட் காணி தீரத் திருந்தருள் புரியு மூர்த்தி
சந்திர மௌலி நாதன் சரணபங் கயத்தாள் காப்பாம்.

## விஷ்ணு துதி.

புராதனமாய்விளங்கும் புண்ணியக்ஷேத்ரமான
தராதலம்புகழுங்காஞ்சி தனிலுறைதேவதேவன்
பராபரவஸ்துவான பாண்டவர்தூதனெங்கோன்
முராரி தன்கமலபாத முளரியைவணங்குவோமே.

### க்ஷேத்ராங்கி யென்னுந் துர்க்கா துதி.

வானவர்வணங்குங்காஞ்சி வளநகர் சர்வதீர்த்தந்
தேனமர்சோலைசூழுந் தென்புரம்வைகுந்தேவி
ஞானநாயகியாங்காளி நற்க்ஷேத்திராங்கிதன்னைக்
கானஞ்செய்தெந்தநாளுங் களிப்புடன் வணக்கஞ்செய்வாம்.

### சந்தவெளி யம்மன் துதி.

பூதலந் தனிற் சிறந்த புண்ணிய புரிக ளேழின்
மாதவ ருறையுங் காஞ்சி மாநகர் தன்னின் மிக்க
தீதகல் கின்ற சர்வ தீர்த்தத்தின் றென்பால் வைகும்
வேதநா யகியாஞ் சந்தவெளியம்மை மலர்த்தாள் போற்றி.

### ஸ்ரீ பார்ப்பனத்தி யம்பாள் துதி.

சுந்தர மிகுந்த காஞ்சித் தொன்னக ரோங்கி வாழுஞ்
சந்த்ரபுட் கரணி வாவி சார்ந்திடுங் கோயி றன்னில்
இந்திரன் முனிவர் வானோ ரினிதுகை தொழுதி றைஞ்சும்
மந்த்ரபார்ப் பனத்தி யம்மை மலரடி போற்றி செய்வாம்.

### காத்தவராய சுவாமி துதி.

ஆரிய மாலை யணிகரப் பழகி யன்னமுத் தூகந்த பேரழகி
பாரியை யாகி பரிந்துவந் திரண்டு பாரிசந் தனில்வளர் பானே
வேரிய மலர்ப்பூங் காவினைக் காக்கும் வேந்தனே காத்தவ ராயா
கோரிய வெங்கள்றுறைதவிர்த்தாளுங் குறைகழற்கன்பு செய்குவமே.

வாசமாம்மலர்வனத்தை வளமுடன்காக்கவேண்டி
ஈசனாருளினாலே இன்பமாய்வந்துதித்த
பாசமாய்க்காத்தலிங்கம் பாரியர் நால்வரோடும்
வாசமாமவன்பொற்பாதம் வணங்கிநாமேற்றுவோமே.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

வானவர்க டொழுதிறைஞ்ச நான்முகன்செய்
வேள்விதனில் வந்து முன்னாள்
தானவனும் வைசூரன் றன்னுயிரை
மாய்த்துலகந் தழைக்கச் செய்தே
ஞானமணங் கமழ்வடுகி நாகவல்லி
ரேணுகையா ளென்னு நாமம்
ஆனசிவ சந்த வெளியம்மை திருச்
சரிதமதை யறைகு வோமால்.

## அறுசீர் ஆசிரிய விருத்தம்.

மன்னுபொன் னகரத் துற்ற மன்னரை மதியா னாகித்
தென்றிசை மேவி வாழுந் தீரன்வை சூர னென்பான்
பன்னரு மகுட மின்னப் பார்முழு தாளும் போது
வென்றவ ரேத்துஞ் சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (1)

முன்னொரு காலந் தன்னின் முகுந்தனோ டிந்த்ரன் வானோர்
அன்ன வாகனன்மற் றேனோ ரவுணனால் மனது வெம்பி
என்னினிச் செய்வ தென்றே யேகினர் கைலைக் காங்கே
வென்றவ ரேத்துஞ்சந்த வெளியம்மை மலர்த்தாள்போற்றி (2)

அன்றர னடிப ணிந்தே யம்பிகை பாகா வெம்மை
இன்றுநீ காப்பாயென்றே யிறைஞ்சிக்கை தொழுதுநிற்ப
நன்றுநீ ரஞ்ச லஞ்சல் நாமுமைக் காப்போ மென்று
வென்றவ ரேத்துஞ் சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (3)

கன்னியின் வதனந் தன்னைக் கண்ணுத லுற்று நோக்க
அன்னையு மனம கிழ்ந்தே யந்தணன் றன்னைப் பார்த்தே
இன்றுபொன் வரையில் வேள்வி யின்பமாய்ச் செய்வீர் பின்னும்
வென்றவ ரேத்துஞ் சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (4)

சாலெரி மந்த்ர வேள்விச் சடங்கினைச் செய்வீ ராகில்
சீலமா யெங்கூ றொன்று சிற்சத்தி யாகத் தோன்றி
கோலவை சூரன் றன்னைக் கொன்றுமைக் காக்கு மென்றாள்
வேலயில் விழியாஞ் சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (5)

சுந்தரி நுங்கூ றொன்றே சூரனைச் செயிக்கு மென்றாய்
இந்திரன் முனி வரானு மிருடிக டேவ ரானுஞ்
செந்திருக் கேள்வ னானுஞ் செயம்பெற முடியா தம்மா
வெந்திறல் வாய்ந்த சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (6)

எப்படி செயிப்பீ ரென்றே யிறைவியைத் தேவர் கேட்க
ஒப்பிலா யாகந் தன்னி லுதிக்கும்பெண் மணியுங் கட்குச்
செப்புவாள் கேட்பீ ரென்னச் சேவித்துத் தேவர் செல்வார்
வெப்பத்தைத் தணித்த சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (7)

மேருவின் வடபா கத்தின் மேலவர் விரைந்து சென்று
கோரிய படியே யாக குண்டந்தா னொன்ற மைத்து
வீரியை நினைந்து வேள்வி விளங்கவே செய்ய லுற்றார்
வேரிய மலர்ப்பூஞ் சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (8)

செய்திடும் வேள்வி தன்னிற் செங்கதிர் கோடி கூடித்
துய்யவெஞ் சிங்கத் தின்மேற் றுலங்கவே வந்த சத்தி
செய்யவ ணீயே யென்று சேவைசெய் தமர ரேத்த
வெய்யவன் புகழுஞ் சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (9)

செய்யதா மரையோ னன்பாய்ச் சேவித்து வணங்கி யேத்திப்
பொய்யன்வை சூா னுவீ போக்குவ தெவ்வா றென்னப்
பையரா வணிந்த ஞான பரப்பிர்ம சொரூபி யன்றே
வெய்யவன் புகழுஞ் சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (10)

பன்னரும் விஸ்வ ரூபம் பாரண்ட கோள மட்டுஞ்
சென்றது திசைக ளெட்டுஞ் செறீந்தது கிரிகள் யாவும்
நின்றன ளொருத்தியாக நிருதர்கண் மனங்க லங்க
வென்றவ ரேத்துஞ் சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி. (11)

அம்மையின் றிருநா மங்க ளாயிர மாகப் பாடிச்
செம்மைசேர் வடுகி யென்றே செப்பியே தேவ ரேத்த
அம்மையுஞ் சிங்கத் தின்மே லமர்ந்தனள் முன்போ லாக
வெம்மையைத் தணிக்குஞ் சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி

முந்திய வுருவ மாக முனிவர்வா னவர்கள் சூழ
விந்தைவேம் படியின் கீழே விளங்கினள் விளங்கு மந்தச்
சுந்தரி யமர்ந்த சேதி சூரன்றன் தூதர் கண்டார்
வெந்திறல் வாய்ந்தசந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (13)

கன்னெஞ்சத் தூதர்வந்து ககனர்கள் செய்கையாவும்
மன்னன்வைசூரன்றன்பான் மருவியேபுகன்றான்றேன்
தென்றிசைதன்னைவிட்டுத் தேர்மிசைவருவதானன்
வென்றவரேத்துஞ் சந்தவெளியம்மைமலர்த்தாள் போற்றி. (14)

வந்தன னவுண னங்கு வடதிசை தன்னை நாடிச்
செந்தழல் விழிகள் சிந்தச் சேனையார்ப் பரித்துச் சூழ
மந்திரிமார்களோடு மகமேரு மலையைச்சேர்ந்தான்
வெந்திறல்வாய்ந்தசந்த வெளியம்மை மலர்த்தாள்போற்றி. (15)

விந்தையா யவுணரோடே விண்ணவர் சமரஞ்செய்ய
அந்தவைசூரன்கண்டங் காக்ரமித் தகிலமஞ்ச
இந்திரன் முதலாந் தேவ ரென்பவர்க் கிடுக்கண் செய்தான்
வெந்திறல் வாய்ந்த சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி. (16)

வெருண்டுளம் பொங்க வம்மை வேதன்மா லிந்திரன் காண
அகந்தையா யங்கு நின்ற வவுணன்றன் சேனை யோடே
ககனர்கள் யுத்தஞ் செய்வார் காலன்வை சூர னோடு
வெகுசமர் செய்வாள் சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (17)

பற்பல வவுணர் தங்கள் படையெலா மாள வைத்துக்
குற்றவை சூரன் சென்னி கொய்தன ளம்மை யாங்கு
பற்றறு முனிவர் தேவர் பார்த்துமா மலர் சொரிந்தார்
வெற்றியைப் படைத்த சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (18)

பூதாந் தன்னின் முன்னாள் புங்கவரி டுக்கண் டீர
வேதனா வியற்று மந்த்ர வேள்வியி லுதித்து வந்தே
காதக வைசூரன்றன் கடுஞ் சிரங் கொய்து காத்த
வேத நாயகியாஞ் சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (19)

பூதலந் தாங்குமாதி புயங்கன் றன் மகளாய்த் தோன்றி
மாதவப் பிறகு வேதன் மனைவியாய் மூவர் தம்மைத்
தீதகல் குழவி யாக்கித் திருமுலைப் பால ளித்த
வேத நாயகியாஞ் சந்த வெளிபம்மை மலர்த்தாள் போற்றி (20)

எங்குமேபுகழ் மிகுந்த எழிற்மலையாளந் தன்னிற்
சிங்கமுங் காடிவேங்கை சிறுத்தை களுறை வனத்திற்
தங்கமாமுடும்புற்றிற் றழுவிய குழவியானாய்
வெங்கயம் போன்ற சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (21)

அன்னகருறை பூவேடன் அடவியிற் சென்று வேட்டை
ஒன்றுமே கிடைத்திடாம லுடும் புவாழ் புற்றைக் கெல்லி
அன்றுநீன் னுற்பவத்தை யறிந்துமே யறைபலுற்றான்
வென்றவரேத்துஞ் சந்த வெளிபம்மை மலர்த்தாள் போற்றி (22)

கொற்றவனுணர்ந்து நல்ல கொலுமுகம் விட்டெழுந்தே
நற்குணமந்திரிமார்கள் நால்வகைச் சேனைச் சூழ
விற்பனன் வனத்திற்வந்தே விந்தையைக் காணலுற்றான்
வெற்புயிர் குயத்தாள் சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (23)

அற்புதந்தன்னைக் கண்டே அந்தணர் அருகிற் சூழக்
கற்பக நிழலில் வாழுங் கன்னிகை தானோ வென்றும்
கொற்றவன் மிகமகிழ்ந்தே கோதிலாத லங்கரித்தான்
வெற்புறுங் தோளி சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (24)

அருகினில் நிறைந்திருக்கும் அந்தணர் நூலைப் பார்த்து
திருவுறு வாஙித் தோன்றுந் தேவி ரேணுகையாளென்றே
மருவிய நாமஞ் சூட்டி மங்களாசனங்கள் செய்தார்
வெரிமல ரணியுஞ் சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (25)

மன்னரே உரைப்போம்தேவ மாமுனிதங்கிட் கிந்த
கன்னிகை தனைக் கொடுத்தே கல்யாணஞ் செய்து வைப்பீர்
இந்நிலமுனிவர்கட்டுகு மீதுலுமுதவா தென்பார்
வென்றவரேத்துஞ் சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (26)

செப்பியவார்த்தை கேட்டே சேல்விழிமகளை நல்ல
ஒப்பிலாப் பல்லக்கேற்றி ஊர்வலமாக வந்தே
கப்பிய திரிஷ்டி போக்கிக் கடிமனை தன்னிற் புக்க
வெப்பத்தைத்தணித்த சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி(27)

கிரிநகர்வரும ராஜன் கிரகத்திலின்ப மோங்கிப்
பரிவுடன் வளரும் நாளிற் பார்த்திபன் தேவிகர்பத்
தரியவாண் மகளைப் பெற்றே அழகுடன் வாழும் நாளில்
விரிமலரணியுஞ் சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (28)

வாதனும் பித்தன் சேத்மன் வளர்போத ராஜனோடு
காதலாய் நாலுமைந்தர் களிப்புடன் பயிலுங்காலை
சாதன மிகுந்தோரான சமதமா முனியங்குற்றார்
வேதனை யகற்றுஞ் சந்த வெள்ளியம்மை மலர்த்தாள் போற்றி (29)

அம்முனிவார்க்கே நல்ல அழகு ரேணுகை யாடன்னைச்
செம்மை சேர்திருமணந்தான் செய்துமே முடிந்தபின்னர்
அம்மையும் முனிவரோடும ஆசிரமஞ் சேர்ந்தார்நன்றே
வெம்மை யைதணிந்த சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (30)

பந்தமாய முனையாற்றின் பக்கலில் வந்தேயன்னார்
அந்தமாய்ப்பர்ன்னசாலை அகமகிழ்ந்தமைத்து நன்றே
விந்தையாய்ப் பூசை செய்து விளங்கிய காலந்தன்னில்
வெந்திறல் வாய்ந்த சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (31)

புற்றினின் மகவாய் வந்து பூதலத் தரசன் றன்னால்
நற்றிரு மங்கை போலே நாயகி வளரு நாளிற்
பற்றறு சமுத வேதன் பாரி யென்றொருவரும் போற்ற
வெற்றியைப் படைத்த சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி(32)

புங்கவ ரிடுக்கண் டீரப் புதல்வனுய் மாயன் றன்னை
அங்கயற் கண்ணி யம்மை யளித்தலும் ஆளனுக் காய்ச்
சங்கை யில்லாம னித்தஞ் ஜலமதைத் திரட்டி வந்த
வெங்கயம் போன்ற சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (33)

மாயிரு ஞாலந் தன்னின் மாமுனி பூஜை செய்யத்
தூயமா நதிக்குச் சென்று துகளற மணற் குடத்தில்
நேயமாய்த் தோயந் தன்னை நேர்த்தியாய்த் திரட்டி வந்த
வேயுறு தோளி சந்த வெளியம்மை மலர்தாள் போற்றி (34)

ஓர்பகல் நதிக்குச் சென்றே யுதகத்தைத் திரட்டுங் காலை
ஆர்வமா யமர்காந் தர்வ னந்தரந் தன்னி னிற்க
நீர்தனி லவன் வனப்பு நிகழ்தலு மதனைக் கண்ட
வேர்மல ரணியுஞ் சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (35)

கந்தர்வன் சாயல் கண்ட காரணந் தன்னாற் கங்கை
நிந்தையாய்த் திரண்டி டாம னிற்றலு மனது வெம்பி
அந்தணன் வாக்கா லன்னை யருஞ்சிர மகனாற் கொய்ய
வெந்திறல் வாய்ந்த சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (36)

அந்தணன் தேவி கற்பு வழிந்தன ளென்று வந்த
நிந்தையை மகன் றனக்குநிகழ்த்தலும் வெகுண்டு சீறிச்
சுந்தா வுடைவா ளேந்திச் சுதனவன் வரவு கண்டே
வெந்திறல் வாய்ந்த சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (37)

நானில நடுங்க வோடி நங்கையாள் தஞ்ச மென்ன
வானில மதங்கி வந்தே வஞ்சிநீ யஞ்சே லென்னத்
தேனினு மொழியாள் மைந்தன் றிகழமர் புரியச் செய்த
வேனிலா விளங்குஞ் சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (38)

அரக்கியின் சேனை யாவு மழிந்தபின் னமர் களத்தில்
இரக்க மில்லாம னின்றே யிருந்து போர் புரியுங்காலை
அரக்கியின் சிரமுநல்ல வன்னை நின் சிரமுந் தந்தாய்
விருக்கல ரணியுஞ் சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (39)

கொய்தபின் றந்தை பக்கங் கோபமுந் தணிந்து மைந்தன்
அய்யனே யரக்கியோ டென் னன்னையி னுயிர்தா வென்ன
மெய்ம்முனி யருள மைந்தன் மேவிச்சென் றெழுப்ப வந்தே
வெய்வன் புகழுஞ் சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (40)

அன்னையின் மேனி தன்னி லரக்கியின் சிரசமைத்து
மன்னுநின் முடியை யந்த மதங்கியி னுடலில் வைத்தும்
முன்னவ னருளால் மாரி முடிந்திடப் புலன்க ளைந்தும்
வென்றவர் புகழுஞ் சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (41)

திருவுரு மாறிநின்ற தீங்கினை யுணர்ந்தே யந்த
பெரு மிடர் நீங்குதற்குப் பேசியே யிருவரோடும்
இருடி யி னடியைப் போற்றி யெம்மையுங் காப்பீ ரென்றே
வெருவிட வந்த சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (42)

பங்கஜவதனி கேளாய் பரன் செயல் பழியொன் றில்லை
எங்கணுந் தெய்வமாகி யெக்கலா தேவி யென்றெ
மங்கையா மதங்கி மைந்தர் மருவிநீ வாழ்வா யென்றார்
வெங்கயமான சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (43)

அந்தமா மேனிதன்னி லானன முயர்ந்த தென்றே
விந்தையா யுலக மெங்கும் விண்ணவர் தொழ விளங்கிப்
பந்தமாய்ப் பணிந்த பேர்க்குப் பாக்கியந் தந்து நாளும்
வெந்திறல் வாய்ந்த சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (44)

அம்மை நின்னடி தொழாத வசடர்க ளாக்கை தன்னில்
வெம்மையு நளிரும் வேதி வேதையுங் குரூரம் வாய்ந்த
அம்மைகள் வார்க்கச் செய்தே யடக்கிபாட் கொண்டெந் நாளும்
வெம்மையைத் தணிக்குஞ் சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி

நேத்திர மிழந்த பேர்கள் நேரினி லுன்னைக் கண்டு (45)
தோத்திரஞ் செய்வா ராகிற் தொல்வினை தனை யகற்றிக்
காத்திர மாகவே தான் கண்ணொளி தந்து காக்கும்
வேத்திர முடைய சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (46)

ஆதியாய் முதலுகத்தி லவதரித் திட்டசத்தி
கோதிலாக் குணத்தி வீரி குமரி கங்காளி யம்பா
நீதியாய் நெறியுமாகி நின்றவர் நினைந்து போற்றும்
வேதியர் வணக்குஞ் சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (47)

வேப்பிலை முதலா யுள்ள வேண்டிய புட்பம் சாத்திக்
கூப்பிக்கை தொழுதி றைஞ்சிக் குறைதனைப் புகலு வோரைக்
காப்பதே கடமை யென்று கங்கணங் கட்டிக் கொண்டே
வேப்பிலை யணியுஞ் சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (48)

ஆர்கலி சூழு மிந்த வம்புவி தன்னி லுள்ளோர்
பேர்கோடி தெய்வ மென்று பெரிதுகந் தபிஷேகித்து
ஊர்கூடிப் பொங்கல் செய்தே யுந்தனைத் தொழுவா ரம்மா
வேர்மல ரணியுஞ் சந்த வெளியம்மை மலர்த்தாள் பொற்றி (49)

மகத்துவ மிகுந்த காந்தி மகானவர் வார்த்தை போலச்
செகத்தினீர் கேண்மின் கேண்மின் செல்வமுஞ் சீரு முண்டாம்
அகத்தினி னீநானென்னு மஞ்ஞான மகன்று போக
வெகு விதமான சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (50)

ஞாயிரு திங்கள் போலே நகரெலாம் விளங்குகின்ற
மாயகுண்டலியே யம்பா மைந்தன் கோட்டையன் சொன்ன
தூய தோத்திரத்தைப் பாடி துதித்தவர் நீடி வாழ்க
வேயுறு தோளி சந்த வெளியம்மை மலர்த்தாள் போற்றி (51)

வன்னியி லுதித்தாய் போற்றி வடுகி முக்கண்ணி போற்றி
பன்னகா பாணி போற்றி பரப்பிர்ம சொரூபி போற்றி
என்னிடர கற்றியாளு மெக்கலா தேவி போற்றி
வென்றவர் வணங்குஞ் சந்த வெளியம்மை போற்றி போற்றி. (52)

வெண்பா.

சந்ததமு நற்காட்சி தானளித்தே சந்த வெளிச்
சிந்திடா மேல்வீட்டில் சேர்ப்பாளே—இந்த
நவராத்திரிக் கொலுவை நன்மையுடன் காணத்
தவறுது வந்தோரைத் தான்.

இம்மை மறுமை யிரண்டிற்கும் புண்ணியநந்
தம்மையளித்தருளுஞ் சந்த வெளி—அம்மைக்கிங்
ஆருத்தரா வுற்சவஞ் செய் தன்பாற்றெரிசியுங்கள்
சீருற்று வாழ்வீற் செழித்து.

## ஸ்ரீ சந்தவெளியம்மை பதிகம்.

காப்பு.

நேரிசை வெண்பா.

முந்த வெளியேனை முழுதும் பொறுத்தாண்ட
சந்த வெளியம்மை தனைப்பாடி—எந்தவெளி
சென்றாலுங்காக்குந் திறங்காத்தவராயன்
நின்றாலுங்காக்கும் நினைந்து.

பதினான்கு சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்,

மங்குல்நிகர் கூந்தலிற் றங்குமலர் மணமுநவ மணிமுடிச்சடை நாகமும்-மதியொளிவதனமுஞ் சிலைநுதற்புருவமு மலர்விழிப்பார்வை யழகும், குங்குமத்திலதமணி நெற்றியிற்பட்டமுங் குமுதவாயமுத மொழியுங்-குலவுமிருசெவிதனி லிலகுபொன்னோலையுங் கொப்பு குழன்மாட்டிமுருகும், வங்கியுங்கடகங் கணமணிக்கைளு வாரணி மார்பினழகும்-வர்னபட்டாடையும் இடையி லொட்டியாணமும் வனசமலர்ப்பாதமழகுஞ்-சங்கரி நின்பெருமையிங் கொருவராலுமே சாற்றவரிதாகுமம்மா, சந்ததமுநற் காட்சிதந்தருள்க கச்சிநகர்ச் சந்த வெளி மகமாரியே. (1)

விந்தையாய்ப்புற்றினின் மகவாகவந்துநீவி ளையாடிவீற்றிருந் தாய்-வேடன் கண்டுரைத்தபின்றேடிவந் தெடுத்தகிரிவேந்தனிடமே வளர்ந்தாய், பந்தமாய்ச்சமதக்னி பாரியாளென்றுபெயர் பரவும் வாழ்ந்திருந்தாய்-பாரெலாமோரடியளந்த நெடுமாலினைப் பாலனாயீன் றெடுத்தாய், வந்தமாரிந்திரன் மாந்தர்மாதவரெலாம் வணங்கவுமருள் சுரந்தாய்-வஞ்சகப்பேய்பூத மஞ்சிநின்றுனதடி வலம்வந்து தொழ விடுத்தாய், சந்தனக்குங்கும கதம்பகஸ்தூரிசெஞ் சாந்தமணி சர் வேஸ்வரி சந்ததமுநற்காட்சி தந்தருள்க கச்சிநகர்ச் சந்தவெளி மக மாரியே. (2)

மன்னுயிர்க்குயிரான வன்னைகாமாட்சிநீ மதுரைமீனாட்சிநீயே, மாயாவினோதிநீ ரேணுகாதேவிநீ மங்கைசிவகாமிநீயே, அன்னபூ ரணிவிசா லாட்சிகமலாட்சிநீ அருணாசவல்லிநீயே, அங்காளதேவிநீ கங்காளரூபிநீ, ஆதிசிவசக்திநீயே, கன்னிகாதேவிநீ பொன்மகள் வாணிநீ கௌரிமுக்கண்ணிநீயே, காளிப்பிடாரிவே தாளிவைசூரிநீ கனதுர்க்கிவடிகிநீயே, ஜன்மவினைமாற்றுசின் னம்மை யெல்லமைநீ

சர்வவியாபகியுநீயே, சந்ததமுநற்காட்சி தந்தருள்க கச்சிநகர்ச் சந்தவெளி மகமாரியே. (3)

வித்தகிநினதடிமை சற்றுமதின் மண்டபம் விளங்குமணி மேடையழகும்-விஞ்சுபலிபீடத்து மஞ்சுநற்கோபுர விஸ்தாரவாயி லழகும்,-சித்ரநவரத்நங்கள் வைத்திழைத்திலகுபொற் சிம்மாசனத்தி னழகும்,-சிங்கார கொலுகூட மெங்கும்பிரகாசமாய்ச் செறிந்த தீபத் தினழகும்-பத்தரொடுசித்தர்க ளெண்டிசாமன்னரும் பரிந்து தொழு திடுவிந்தையும், பற்பலவிருட்சமுங் கற்பகச்சோலைகள் பாவுமாலயத் தினொளியும், சத்தமிடு பூதங்க ணிர்த்தித்துவாழ்த்துமுன் சம்பிரம மென்ன சொல்வேன், சந்ததமுநற்காட்சி தந்தருள்க கச்சிநகர்ச் சந்தவெளி மகமாரியே. (4)

பகாரியசம்யபுர முற்றுக்காடாம்பெரிய பாளையங் கன்னபுரமும் படவேடுமலையாளஞ்செஞ்சி வீராணநற் பத்திமிகுமாரியூரும், அக வினையகற்றிடும் பிலாம்பேடு துலுக்காண மம்மணி கொலுவிருந்தாய் அலங்காரமாகிய வேம்புரதமேறிவிளை யாடிவந்தருள்சுரந்தாய், தக தகென மத்தாப்புதிவட்டி தழலெழத் தமருகந்தாளமுழவுந்-தம் பூருவிணையுங் கொம்புதம்பட்டமும் டவுல்முரசொலிசெய்யவே, சக லரும்புகழ்சர்வ தீர்த்ததென் பாரிசஞ் சங்கரிநீயமர்ந்தாய்-சந்ததமு நற்காட்சி தந்தருள்க கச்சிநகர்ச் சந்தவெளிமகமாரியே. (5)

இந்நிலந்தாங்கரவின் மகவாகிமுன்னாளி விறைவிநீ வந்துதித்தாய் இளம்பிறைபோலவே சந்ததம்வளர்ந்துதா னெழினாச வல்லியென் னும், உன்னதப்பெயர்கொண்டு பிருகுமாமுனிவருக் குயர்ந்தநற்பாரி யாகி-உத்தமியெவ்வுலகு மெத்தநின்கீர்த்திக ளோங்கியே வாழ்ந் திருந்தாய், அந்நாளிலுன்மகிமை யறியநிருவணாரா யானரியயன் மூவரும், அவனிதனிலுறுமாறி நினதுமாமனை தன்னி லமுதளித்தரு ளுமெனவே, தன்னிகரின் மூவர்வாய் மொழியமுதமுண்டுமுலை தரு மமுதளித்ததாயே, சந்ததமுநகற்காட்சி தந்தருள்க கச்சிநகர்ச்சந்த வெளி மகமாரியே. (6)

இருகரத்திடையமுத மேந்தியமூவர்பா லீய்ந்திடவந்தபோதில் இடையாடையில்லாம லெங்கண்முன்னாகவந் திருந்தமுதளியு மென் னக், கருதுமொழிகண்டுனது மெய்த்தவக் கணவர்பாற் கற்புறு !தியா லக்கணங்-காணரிய மூவரைப்பாலகராக்கிநற் கனமுலைப்பாலளித்த,

பெருமையையறிந்தக மகிழ்ந்தவம்மூவரும்பெரிது முன்னுருவடையவே, பேசருந்தெய்வமே பாரிலுன்கீர்த்தியைப் பேசவு மொருவர்தாமோ, சர்வேஸ்வரியுனது மலரடிதொழுமடிமை சஞ்சல மகற்றியருள்வாய், சந்ததமுநற்காட்சி தந்தருள் க கச்சிநகர்ச் சந்தவெளி மகமாரியே. (7)

செஞ்சரணமீதினிற் கொஞ்சுஞ்சதங்கையுஞ் சிலம்பிநொலிகலகலென்னச்-சித்ரபட்டாடையும் ரத்னவொட்டியாணமுஞ் சிற்றிடைபளபளென்னக், கஞ்சமென் முகத்திலணி வெண்ணீறு துன்னவிருகயல்விழிக்கருணைமன்ன, கச்சணியுமார்பினில் வச்சிரப்பதக்கமுங்கழுத்தினிற்றாலிமின்ன, மஞ்சுநிகர்கூந்தலிற் செஞ்சுடர்போலவே மணிமகுட மொளிசெய்யவே-மகரகுண்டலமுமிருகாதினிற்றகதகென மகிழ்ந்தாடு மெண்டோளியே, சஞ்சலமதெளியேனை வந்தனுகாமலே சங்கரி கிருபைசெய்வாய், சந்ததமுநற்காட்சிதந்தருள்க கச்சிநகர்ச்சந்தவெளி மகமாரியே. (8)

ஆதியாஞ்சத்தியென் றோதியே பொன்மல ரமார்கள்சொரிந்துவரவே, அம்புவில்லேந்தியே கும்பலாய்ச்சேவக ரார்ப்பரித்தோடிவரவே, வேதியர்கள் நான்மறை யோதிடமாதர்கள் விந்தையாய்நடித்துவரவே, வேற்படைமன்னர்கள் நாற்படையாளர்கள் விருதுகள்பிடித்துவரவே, தாதிமார் புடைசூழ பூதவேதாளமுன் றுள்பணிந்தாடிவரவே, தகதகென வேம்பாதமேறி விளையாடிவருந்தற்பரியகோரிவீரி-ஜாதிமலர்கொண்டுநிதமருச் சிக்குமுனதடிமை சஞ்சலமகற்றியருள்வாய், சந்ததமுநற்காட்சி தந்தருள்க கச்சிநகர்ச்சந்தவெளிமகமாரியே. (9)

சங்கரிபயங்கரி மங்களகுணாகரி சாம்புயத்திவீரி - சாம்பவிமனோன்மணி பாம்பாபரணமணிசச்சிதானந்தகௌரி, எங்கும்பிரகாசமாய்த் தங்கும்பராபரி யிமயவர் முநிவர்முதலோர், எத்துமிகுசிங்காரி யேழையற்குபகாரி இலகியஞானவாரி, அங்கையிற்றிரிசூலம் மந்ரவாளேந்திவிளையாடிவரு சக்ரேஸ்வரி, ஆதிசிவசத்தியே விபூதிருத்ராட்சியே அடியனிடரகற்றியாள்வாய், சங்கீதமேளமுந் தாளமுமுழங்கவே சதிருடன்வீதிவருவாய், சந்ததமுநற்காட்சி தந்தருள்க கச்சிநகர்ச் சந்தவெளிமகமாரியே' (10)

கலிசூழமுலகினி னிலையானதெய்வமே கருதுமாகடலமுதமே கண்குருடு செவிடுமை புண்பாண்டுரோகமுங் கக்குவாய்மாரடைப்பும், வலிவிக்கல்முக்கலும் பக்கப்பிளவுதலை வலிமகோதரங்கிரந்தி - வாந்தி குளிர்பேதிசுர மாந்தைசுகஜன் னியும் வாதமுகஜன்னி முதலாய், நலி வந்தபேர்களுன் னாலயம்வலம்வரின் ஞாயிறைக்கண்டவிமமாய், நடுங் கிப்பறந்தோட வடுமையென்கொடுநோயை நாரணியகற்றுதற்குச் சலிப்பாயிருப்பதுன்னெஞ்சமதில் வஞ்சமோ சங்கரிகருணைசெய்வாய் சந்ததமுநற்காட்சிதந்தருள்க கச்சிநகர்ச்சந்தவெளி மகமாரியே. (11)

வெண்பா.

சந்தவெளி யம்மை சரண்புகுந்தார் யாரேனும்
பந்தவெளி செய்தே பகைவெல்வார்—சிந்தை
மலங்களறுத் தின்ப மயமாக்கு விக்கு
நலங்களருள் காஞ்சிநகர்.

நேரிசை வெண்பா.

இமையா விழிமடவா ரேத்துதிருக் காஞ்சி
யுமையா டவந்தான மோங்கி—யிமையாள
முந்தவளித் தாயே முறையே நிறைந்து வளர்
சந்தவெளித் தாயே சரண்.

ஸ்ரீ சந்தவெளியம்மன் குறவஞ்சி.

அகிலமெலாம் புகழ்படைத்த அம்மைமகமாரி
அற்புதத்தைச் செப்புவதற் கருளுறுமோங்காரி

முகினிகருங் குழலுடையாள் முளரிமலர் விழியாள்
முகமிந்து வாய்கனி முருந்திள நகையாள்

மலரேறுஞ் சடைநாக மழுமகுட முடியாள்
மருவுமிரு செவியினவ மணிகுழைக ளுடையாள்

தலமெலா மதிக்குந் தங்கத்தாலி மிடறுடையாள்
தாரகைக ணிகாரந் தரித்தவுர முடையாள்

வேயுறு தோளுடையாள் வேற்புருவ முடையாள்
வேதச்சிலம் பொலிக்குந் திருத்தாள் துவருடையாள்

மாயிரு ஞாலமீன்ற மணிவயி றுடையாள்
மந்திரவாள் சூலமேந்து மலர்க்கர முடையாள்

அருணிறைந்த மனதுடையா ளழகுசிற் றிடையாள்
அரம்பையுறுந் துடையா ளபாஞ்சிப்பட் டுடையாள்

திருவுருவி லாவா பரணந்திக ழுடையாள்
திருநீறு குங்கும திலர்தபொட் டுடையாள்

சந்தனம் புனுகு செழுஞ் சாந்தணியு நீலி
சந்தவெளி யம்மை சிவசங்கரி கபாலி

வந்தனஞ் செய்தமரர் வணங்குந்திரி சூலி
வையமேழு முய்பவந்த வாமியனுகூலி

## வாழ்த்து.

வாழி யந்தமலை மகள் வாழியே
வாழி கந்தமலர் மகள் வாழியே
வாழி விந்தைய ருண்மகள் வாழியே
வாழி சந்தவெளி யம்மை வாழியே.

உ



# திருப்பதி ஸ்ரீ வெங்கடேச பெருமாள் பதிகம்.

வேண்பா.

பொன்னார் வடமலைமேற் போற்று வெங்கடேசனடி
மன்னார்பதிகம் மகிழ்ந்துரைக்க—என்னாளும்
வந்தவினை யகற்றும் வாரணத்தின் மாமுகனார்க்
கந்தமலர் சேவடியே காப்பு.

சுந்ரமிகு செங்கமல வுந்தியிற்பிரமனைச் சோதியாய்த்தந்ததேவா சுத்தனே நித்தனே தத்துவப் பொருளான சுகுணனேதேவதேவா அந்தமாயுரமதிற் செந்திருவை வைத்துவளாரிகரிதேவதேவா, அச்சுதாநச்சரவினிச்சையாய்த்துயில் கின்ற ஆதியே தேவதேவா, கந்தமிகுபைந்துளபமாலிகா பரணமுங் கவுத்துவமணிந்ததேவா, கண்ணினொளியான மணிவண்ணனே யண்ணலே கருணைக்கடலானதேவா, வந்தனஞ் செய்தமரர்சந்ததந் தொழுதேத்தவந் தருள்புரிந்ததேவா, வடவரையினடநமிடு கடவுளே யெனையாளும் வடவெங்கடேச முகிலே (1)

அலங்காரமச்சமாய்ச் சோமுகனைச் சலதியிலழித்துயிர் மாய்த்த தேவா, அருமறைகடமை விதிக்களித்துமே யன்னாளிலன்புடன் காத்ததேவா, தலமதிற்கூர்மமாய் மாமலையை வாரியிற் றாங்கியே நின்றதேவா, தந்ரமாயிந்ராதி தேவருக்கமிர்தமது தந்தருள்புரிந்த தேவா, பலமிகுமிரணியாக்கதன்றனை யேனமாய்ப்பாய்ந்துமே கொன்றதேவா, பரிவாகக்கோட்டினாற்ற ரணியைவிரித்துமே பண்டு போலளித்ததேவா, வலம்புரிதிகிரியொடுவாள் கெதைசாரங்கம் வளர் காத்தேந்து தேவா, வடவரையினடநமிடு கடவுளேயெனையாளும் வடவெங்கடேசமுகிலே. (2)

அண்டபகிரண்ட பிரமாண்ட கோளங்களு மதிர்ந்திட வந்த தேவா, அகோர நரசிங்கமாய்த் தகதகெனத் தூணினிலார் பரித் தெழுந்த தேவா, கண்டுதானிரணியன் மண்டியிட்டெதிர்ந்திடக் கர்ச்சித்தடித்ததேவா, கரங்களா லுரமதைப்பிளந்து மேகுடன் மாலை களிப்புடன் றரித்ததேவா, எண்டிசை புகழும் பிரசண்டகோதண்ட னேயே காந்தமான தேவா, எந்தல்மிகு பிரகலாதாழ்வார்க் கந்நாட் சேவை இன்பமாய்த் தந்ததேவா, வண்டுமலர் கொண்டுவிடு பண்டு மதனற்றந்த வாழ்வே வைகுண்டதேவா, வடவரையி னடநமிடு கட வுளே யெனையாளும் வடவெங்கடேச முகிலே. (3)

மாமேவு காசீபர் மைந்தனுப்த் தோன்றிய மாதவா தேவதேவா, மவுலிமாபலியிடம் மூவடி மண்டானமாகவே பெற்றதேவா, பூமேவு முலகெலா மோரடி யளந்த பரிபூரணமானதேவா, புண்யமாபலி மணிமுடிமீது திருவடி பொருந்தவே வைத்த தேவா, சோமசுந்தர வதன சாமளவர்ணனே சோதியே யாதிதேவா; சொல் பரசுராம னுக் கார்த்த வீரியன்றனைத் துணித்திட்ட தேவதேவா, வாமனே யாயிர நாமனே யாழ்வார்கள் வணங்கிடுந் தேவதேவா, வடவரையி னடநமிடு கடவுளே யெனையாளும் வடவெங்கடேச முகிலே (4)

கருணைமிகு தசாதர் கௌசலைசுதனான கடவுளே தேவதேவா, கௌசிகமுனிவரொடு சென்றுதா டகைசிரங்கணைவிட்டறுத்ததேவா, மருமலரடியினிற் சிலைதனை வருகையின் மங்கையா யளித்த தேவா, மகிமையாய் ஜனகமா மன்னவன்பாற் சென்று மருவிய தேவதேவா, பெருமை மிகு மேருகிரியென வொத்தனுவையிருபிளவாய் முரித்த தேவா, பெண்மணிச் சீதையை மணந்துமெ யாவர்க்கும் பேரருள் புரிந்த தேவா, வருகையி லெதிர்பரசு ராமாரும்பறித்துமே வந்தருள் சுரந்ததேவா, வடவரையி னடநமிடு கடவுளே யெனையாளும் வட வெங்கடேச முகிலே. (5)

இன்னறருங்கை கையான் மரவுரிதரித்து வனமிளவலொடு சென்ற தேவா, இறைவி ஜானகியுடன் குகனுக்கு நற்சேவை யின்பமாய்த் தந்த தேவா, பொன்னணிகவர் சித்ரகூட மதிற் கொலுவாகப் பொ ருந்திய தேவதேவா, பொறைமிகும் பாதர்தங் குறைதீரப் பாதுகை புதுமையாய்த் தந்ததேவா. அன்று தண்டக வனமணுகியே விரா தனையழித்துயிர் மாய்த்த தேவா, அஞ்சலெனு மிருடியர்க் கருள் செய்து பஞ்சவடிவமர்ந்து கொலுவிருந்த தேவா, வன்னெஞ்ச சூர்ப்

பதகையெனும் வனிதைதன்னை மூன்றுக்கினை வகுத்த தேவா, வடவரையி னடனமிடு கடவுளே யெனையாளும் வடவெங்கடேச முகிலே.

பிரபலகர திரிசிரனுயிர் மாய்த்த பரப்பிரம்மமே தேவதேவா, பின்னுமையான மாரீசனைக் கொன்றுயிர் பிரித்திட்ட தேவதேவா, பரமபதஞ் சடாயுவுக் கருளியேகவந்தனிருபடர் கரமறுத்த தேவா, பதிதந்து சபரிக்கு சுக்ரீவனோடு நட்பாகிய தேவதேவா, உரமிகு வாலியை மாய்த்தனு மத்தரா லுண்மையை யறிந்ததேவா, உத்தம விபீஷணர்க் கருள் தந்து கடலிலணை யொளிவா யமைத்த தேவா, வரமிகு மிராவண கும்பகர்ணாதிகளை வதைத்த ஸ்ரீராம தேவா, வடவரையி னடனமிடு கடவுளே யெனையாளும் வட வெங்கடேச முகிலே. (7)

வீரனே ரோகணி குமாரனே பலபத்ர விமலனே தேவதேவா, விந்தைமிகு வசுதேவர் தேவகி மைந்தனாய் விளங்கிய தேவதேவா, தீரனே சத்ருசங்காரனே யன்பர் தொழு தேத்தியதேவதேவா, தேசுபெரு நந்தகோபன்றனது மனையினிற் றிரமாயிருந்த தேவா, பூரணஞான வொளிவான பரமானந்த புனிதனே தேவதேவா, பூதனை பிருண்டுயிர் போக்கி சகடருள பூக்தாள்களாற் றேய்த்த தேவா, வாரணி பொதுவியர்களோடு விளையாடி வளர் வரதனே தேவதேவா, வட்வரையி னடனமிடு கடவுளே யெனையாளும் வடவெங்கடேச முகிலே. (8)

காயாம்பு வண்ணனே தாயாம சோதையாற் கட்டுண்ட தேவதேவா, ககன முகடுறு மகிழ்மரங்கள் சாய்த்தே பொதுவர் களித்திடச் செய்த தேவா, மாயாவினோதனே காளிங்கன் முடிமீது மன்னிய தேவதேவா, மாதவா சீதரா தாமோதரா மதுசூதனா தேவதேவா, தூயானகோவுகட் காகவே கிரிதனைத் தூக்கிப் பிடித்த தேவா, துயர் செய்தேனு கனசுரகேசி பிரலம்பனுயிர் துடித்திட மாய்த்த தேவா, வாயார வெண்ணையை யுண்டவா கோவியர்கள் வஸ்திரங் கவர்ந்த தேவா, வடவரையி னடனமிடு கடவுளே யெனையாளும் வட வெங்கடேச முகிலே. (9)

கொற்றமுறு கம்சன் சிசுபாலன் மதுகயி டவரைக் கோறல்புரிந்த தேவா, கோதை திரௌபதை சபையின் மாதவா வெனத் துகில் கொடுத்து ரட்சித்த தேவா, அற்றமா முனிவரின் னருள் பெரும்

பாண்டவர்க் கன்று தூதான தேவா, அரவகேதன னீடு நிலவரையி னின்றவரை யழித்துயிர் பிரித்த தேவா, பற்றாாதி கிரியாற் பார்த் தீபன் போரினிற் பரிதியை மறைத்த தேவா, பார்த்தசாரதியான கீர்த்தியே ஸ்ரீ கிருஷ்ண பகவனே தேவதேவா, வற்றாத கருணைவா ரிதியெனுங் கற்கியாம் வள்ளலே தேவதேவா, வடவரையி னடந மிடு கடவுளே யெனையாளும் வடவெங்கடேச முகிலே. (10)

கோலமிகு கரியாதி மூலமென் றோலமிடக் குறைதவிர்த்திட்ட தேவா, கோதிலா கருடன்மேற் சோதியாய்ப் பவனிவருங் கோவிந்த தேவ தேவா, வேலையிற் றுயினீல வர்ணனே பாலனென் வினைதனை யகற்றுந் தேவா, வேதமாய்க் கீதமாய் நாதமாய்ப் பூதமாய் விளங் கிய தேவதேவா. ஞாலமதையுண்டவா வலர்மேலு மங்கை மகிழ் நாயகா தேவதேவா, நாரணா ஞானபரிபூரணா சகஸ்த்ரதள நயனனே தேவதேவா, வாலை புவனேஸ்வரி சகோதரா ஜனார்த்தனா வனமாலி வாசுதேவா, வடவரையி னடநமிடு கடவுளே யெனையாளும் வட வெங்கிடேச முகிலே. (11)

ஆகமப் பொருளே போற்றி யகிலமுண் டவனே போற்றி
ஏகநாயகனே போற்றி இரண்ய சம்மாரா போற்றி
பாகனாய் ரதம் விடுத்தே பாரதம் முடித்தாய் போற்றி
நாகமேற் றுயலும் ஸ்ரீமன் நாரணா போற்றி போற்றி. (1)

ஜானகி சமேதா போற்றி சர்வ ரட்சகனே போற்றி
கானகஞ் சென்றாய் போற்றி கரிமுகில் வண்ணா போற்றி
ஊனமா மரக்கர் சென்னி யுருண்டிட வென்றாய் போற்றி
ஞானமா முனிவரேற்றும் நாரணா போற்றி போற்றி. (2)

முரகரி முகுந்தா போற்றி மூவுலகளந்தாய் போற்றி
மாவுரி தரித்தாய் போற்றி மலைதனை யெடுத்தாய் போற்றி
காதிரி சிரர்கள் நெஞ்சங் கலங்கிட வதைத்தாய் போற்றி
நரஹரி பத்மநாபா நாரணா போற்றி போற்றி. (3)

கஞ்சனை வதைத்தாய் போற்றி காமனை ஈன்றாய் போற்றி
பஞ்சவர் தூதா போற்றி பரபிரம்ம சொரூபா போற்றி
அஞ்சனை தன்மைந்தனுக் கருள் புரிந்தவனே போற்றி
நஞ்சின் மேற்றடித்த பாதா நாரணா போற்றி போற்றி. (4)

செந்திரு மார்பா போற்றி செகத் ரட்சகனே போற்றி
தந்தியை காத்தாய் போற்றி தகுபஞ்சாயுதனே போற்றி
பந்தமாம் வினையகற்றி பாதுகாப்பவனே போற்றி
நந்தகோ விந்தா ஸ்ரீமன் நாராணா போற்றி போற்றி. (5)

---

## வாழ்த்து.

சீலமாமின் றிகழ்திரு வெங்கடம்
நீலமேகம் நிறைந்த வுயிர்ப் பயிர்
தால மோங்கத் தனதருளே மழை
போலமேவிப் பொழிந்து பொலிகவே,

இதுவுமது.

வாழி வையகம் வானகம் வாழியே
வாழி செய்யமின் மாதருள் வாழியே
வாழி மெய்யினர் மன்னறம் வாழியே
வாழி வெங்கட மாமுகில் வாழியே.

உ

ஓம் சிவசத்திமயம்.



# ஸ்ரீ பார்வதியம்மன் பதிகம்.

## விநாயகர் துதி.

அறுசீர் ஆசிரியவிருத்தம்.

மாதவர் வணங்கும் ஞான மனோன்மணி பார்வதியாடன் மேற்
காதலாய் பதிகம்பத்துங் கழல்பணிந் தோத நல்லச்
சாதனந்தந்தார் விகட சக்ரவைங்கரனார் சுந்தரந்
பாதா தாமரை யெந்நாளும் பணிந்து நாம் துதிசெய்வோமே.

ஷை விருத்தம்.

திரைகடலுலக மெங்குந் தினத் தொழுதேத்து கின்ற
வரைமகளாய் விளங்கும் வாலை முக்கண்ணி நீலி
மறைநான்கு புகன்று போற்று மனோன்மணி காமக்கண்ணிப்
பரையெனவளர்ந்தஞான பார்வதி தாயே போற்றி.

மங்களஞ் சிறந்த சிவசங்கரி சாம்பவி மகாராஜ ராஜேஸ்வரி,
மனம் வாக்குக் கெட்டாத மணிமந்த்ர பிரணவி மகிமைமிகு கிருபா
கரி, அங்கிங்கு மெங்குமாய்த் தங்கு பரிபூரணி யாயி மகமாயி வீரி,
ஆனந்த தாண்டவி யகிலாண்ட நாயகி யஞ்செழுத்தான முதல்வி,
குங்குமவ சந்தமணி சிங்காரிே யலவார் குழலி, நீலாய தாட்சி கோ
கர்ன நாயகி யாகம வேதங்கள் கொண்டாடு கிரி சுந்தரி, பங்கஜ தள
நேத்ரி கங்காளி பயிரவி பரம கல்யாணி கௌரி படியின் கண்ணடி
யவர்களிடர் தீர நடனமிடும் பார்வதி யம்மை யுமையே. (1)

வாசமிகு கைலாச வீசரிடம் விட்டுமே வண்மையுறு காசிநகரில்
வந்துநா லெட்டறம் வளர்த்துமேகச்சியில் வளர்கம்பைமா நிழற்கீழ்,
ஆசையொடு பூசைதவ மியற்றியே கம்பரி னருள் பெற்று வாழைநக

ரில், அன்புடன் சிவபூஜைமுடித்துமே யிடப்பாக மருணையில் பெற்ற சத்தி, தேசபுகழ் நாககிரி யொற்றியூர் கழுக்குன்று திருமுல்லை வாயில் நல்லூர், திருமயிலை சீர்காழி திருநாகை வெய்யாரு திருப் பெருந் துறையு முறையூர், பாசவினை யகற்று திருவாரூர் சிதம்பரம் பதிமதுரை காளத்தியும், படியின் கண்ணடி யவர்களிடர் தீர நடன மிடும பார்வதியம்மை யுமையே. (2)

மங்கை சிவகாமிநீ யெங்கும் பிரகாசிநீ மதுரை மீனாட்சி நீயே, மந்த்ரவா ளேந்திவரு சந்த்ர சேகரியுநீ மங்கை வடிவம்மைநீயே, திங்களொளி வதனிநீ சிங்கார சொரூபிநீ தேவி காமாட்சிநீயே, திரி புர சுந்தரியுநி திகழ் விசாலாட்சிநீ திருமலரி லாட்சிநீயே சங்கரன் பங்கிநீ செங்கண்மால் தங்கைநீ சாற்றவருமாயை நீயே, சத்திநீ முத்திநீ சர்வ சம்மாரிநீ சகல ரட்சகியும் நீயே, பங்கயக் கண்ணிநீ சிங்க வாகனத்திநீ பரம கல்யாணிநீயே, படியின் கண்ணடி யவர்க ளிடர் தீர நடனமிடும் பார்வதியம்மை யுமையே. (3)

விந்தைமிகு காசிபர் வால்மீகர் கௌதமர் வியாசரொடு வசிஷ்ட ரொருபால், விஸ்வாமித்திரர் சுகர் நாரத ரகத்தியர் விளங்கு துருவாச ரொருபால், ஐந்தரு நிழலில் வாழிந்த்ர ரொடு நான்முக னமரர் மாதவர்க ளொருபால், அலங்கார மலர்மகள் கங்கைசதி திருமக ளழகு நிலமங்கை யொருபால், கந்தமணி யிந்த்ராணி மகமாரி வட பத்ரகாளி பேய்படைக ளொருபால், கருணை செய்தரு ளென்ன உனது திருவடி தொழுது கைகூப்பி வணங்கி நிற்கப், பந்தமுடன் வந்தருள் தந்திடுஞ் சிவசத்தி பரம கல்யாணி கௌரி, படியின் கண்ணடி யவர்களிடர் தீர் நடனமிடும் பார்வதியம்மை யுமையே. (4)

தும்பிமுகன் றனையீன்ற வம்மை காமாக்ஷியே துய்ய வொளி வான வடிவே, தொண்டர் மாதவ ரோடு மண்டர் தொழுதேத்தி டித் துலங்கிய ஞான வடிவே, கம்பையமா வடியின்க ணம்பனே கம்ப ரொடு கலந்தாடுங் கருணை வடிவே, காமகோட்டி யென் றுனது நாமமது விளங்கிடக் காரணமான வடிவே, வெம்பியே வந்திடும் பம்பு பேய் பில்லியை வெட்டி பலியிட்ட வடிவே, வேதவேதாந்தி யாய் ஆதியாய் சோதியாய் விளங்கிய மௌன வடிவே, பைம்பொன் மலரடி தொழுது நம்பியே வந்திடும் பக்தருக் கருளும் வடிவே, படியின் கண்ணடி யவர்களிடர் தீர நடனமிடும் பார்வதி யம்மை யுமையே.

புத்ரனுய்ச் சித்ரமயில் ரத்ன வடிவேலனைப் பொறுமையாய்த் தந்தநீலி, புனிதரொடு நித்தம் விளையாடு சிவசத்தி பரிபூரணி கரக பாலி, சித்ரவா ளேந்திவரு சத்ருசங்காரி சிவசங்கரி கோலாகலி ஸ்ரீரிங்காரி ஓங்காரி யாங்காரி ரீங்காரி ஸ்ரீங்காரமான சொரூபி, எத் திசையிலும் பரவு சித்த வித்தியாதா ரிரவிமதி நவநாயகர்—எழிலான வானவர்கள், முதலான யாவர்களு மெந்நாளு முன்மலர்த்தாள், பத்தியாய்த் தொழுதிடச் சித்தம் வைத்தருள்செய்யும் பரமகல்யாணி, கௌரி படியின் கண்ணாடி யவர்களிடர் தீர நடனமிடும் பார்வதி யம் மையுமையே. (6)

வாலைபுவ னேஸ்வரி கோலாகலி ருத்ரி வையகமளித்த முதல்வி, வானவர்க ளோதி துதி ஞானப்பிரகாச மிகு வளர்தரும் பஞ்சாட்சரீ, மூலாதாரச் செல்வி மேலாம்பதந் தரும் மோகாம்ப ரிவராகி, முக் கண்ணி யுக்ரமொடு கொக்கரித்தே வரும் மூர்த்தி சிவசத்தி ரூபி, ஆலவிட முண்டமணி கண்டரொடு கோலமா யமர்ந்து வளர் சக் ரேஸ்வரி அணுவாகி மலையாகி அண்டபகி ரண்டமா யளாவிய வகோர வீரி, பாலனுய் வீரபத்ரன் றனைத் தந்துநிகழ் பரம கல்யாணி கௌரி படியின் கண்ணாடி யவர்களிடர் தீர நடனமிடும் பார்வதி யம்மை யுமையே. (7)

சுந்தரி யுன்ற னிரு கந்த மலர் கழலினைச் சொந்தமாய்த் தொ ழுத அன்பர், சூட்சி கமலாட்சி யருளாட்சி மீனுட்சியே சுந்தரி யென்பவர்கள் முன், விந்தையாய் வந்தருள் தந்திடுஞ் சிவசத்தி வேத வேதாந்த ருத்ரி விக்ரம திரிசூலி உக்ரகோலா கலி விளங்கு கிரிராஜ குமரி, அந்தமிகு மாலின் சகோதரி யென்றனிட ரகற்றிடு மகோரவீரி, அம்பிகை பராபரி கம்பரிட மனோகரி அருள் பாண்டிய குமாரி, பந்தியா யந்தாத் தமரர் தொழுதேத்திடும் பரம கல்யாணி கௌரி, படியின் கண்ணாடி யவர்களிடர் தீர நடனமிடும் பார்வதியம் மையுமையே. (8)

காமதை கூப்பி நான் றெவாலயஞ் சென்று கனவிலுந் தொழு து மறியேன், காவியம் நான் றையோதிடும் பெரியோர்கள் கழலடி பணிந்து மறியேன், சிரமதை வணக்கியே ஜெகத்ரக்ஷகி யென்று செப்பி துதிசெய்து மறியேன், செப்பிடும பேர்களை ஒப்புடன் கண்டவர்கள் சேவை யொரு நாளு மறியேன, திரமாக யீன்றதோர் தந்தைதாய் குரவரைத் தேடித் துதிசெய்து மறியேன், திலதநுதல்

வடிவழகி அடியனைப்போல் மூடர் திரிபுவியி லொருவ ருளரோ, பரிவாக வந்துடன் அருள்தந்து மெனையாளும் பரம கல்யாணி கௌரி, படியின் கண்ணடி யவர்களிடர் தீர நடனமிடும் பார்வதி யம்மை யுமையே. (9)

அன்னையென் றுந் தனிரு பொன்னடி வணங்கியே அடியனென் குறைகளெல்லாம், அனுதினஞ் சொல்லியு முன் மனங் கல்லுபோ லாயிடி லென்ன செய்வேன், உன்னைவிட யென்றனுக் குற்ற துணை யாரினி ஒதுவா யிப்புவியிலே உள்ளமதில் கள்ளமது வெள்ளளவுங் கொள்ளாமல் உத்தமி ஒடிவந்து, என் வினையை நீக்கியே இன்ப சுகந் தந்து நீ எங்கணுங் கீர்த்தி யோங்கி, இருக்கவருள் புரிகுவாய் திருக்குகள் செய்யாம லெழிலான வகோர வீரி, பன்னுமறை தொழுதேத்து மன்ன பூரணி ருத்ரி பரம கல்யாணி கௌரி, படியின் கண்ணடி யவர்களிடர் தீர நடனமிடு பார்வதியம்மை யுமையே.

சத்தியென் றுனது திருநாமமதை பக்தியாய்ச் சாற்றி துதி செய்த பேர்க்குச், சரிகையுங் கிரிகையும் யோகமும் ஞானமுஞ் சகல வேதாந்த முதலாய், வெத்தியு முத்தியும் புத்ரசந்தானமும் வேண் டிய பொருளளித்து, விந்தையாய் விளங்கிடும் மந்த்ர பஞ்சாட்சரி விமலி யெண்டோளி நீலி, சித்தமகிழ்ந் துன்மீது பத்துப் பதிக மாய்ச் செப்பி துதிசெய்து போற்றும், சிறுவனிடர் நீக்கியே கரு ணை வைத்துந் தனிரு சேவடிகள் தந்தாளுவாய், பத்தியாய் மாத வர் நித்தமுந் தொழுதேத்து பரம கல்யாணி கௌரி, படியின் கண்ணடி யவாகளிடர் தீர நடனமிடு பார்வதியம்மை யுமையே. (11)

வாழ்த்து.

வாழி மான் முதல் வானவர் வாழியே
வாழி மாதுகாமாட்சியார் வாழியே
மாழி மாமகள்பாமகள் வாழியே
வாழி மாநில மாதவம் வாழியே.

பலதேவர் வாழ்த்து.

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

கதிதரு காஞ்சி மூதூர் கணபதி கந்தர் வாழி
துதிபர சிவன் காமாக்ஷி துலங்கு மாதவன் காத்தாயி
நிதிதருகன்னி காளி நிகழ்மாரி பச்சை யாதி
பதிதனிலமர் பூவாடை பலதேவர் வாழி வாழி.

முற்றிற்று.

உ

இப்புத்தகத்தை அச்சியற்ற பொருள் முதலிய எல்லா விதத்திலும் உதவி செய்ய வாக்களித்து அதன்படி உதவி புரிந்த அடியிற்கண்ட கனதனவான்களுக்கு எனது மனமார்ந்த வந்தனம் உரியதாகும்.

| | ரூ. | அ. | ப |
|---|---|---|---|
| பெரியகாஞ்சிபுரம் சாத்தாங்குட்டைத்தெருவு தானிய வியாபாரம், ம-ா-ா-ஸ்ரீ ந. க. நடேச முதலியார். தரும் .... | 5 | 0 | 0 |
| ஷை யூர் ஷை தெருவு மு. அப்பாதுரை முதலியார் தரும் ... | 5 | 0 | 0 |
| ஷை யூர் ஏகாம்பரபுரம் பெஞ்சி கோர்ட்டு மெம்பரும் திருப்புட்குழி தேவஸ்தான தருமகர்த்தரும் ஜவுளி சு. சின்னசாமி நாயகர் தரும் ... | 5 | | 0 |
| ஷையூர் ஷைபுரம் வடவண்ட மாடவீதி தானிய வியாபாரம் ரா. ஏகாம்பர நாயகர் தரும் ... | 5 | 0 | 0 |
| ஷையூர் ஷைபுரம் வர்த்தகம் பு. ஆ. பழனி செட்டியார் தரும் .... | 5 | 0 | 0 |
| ஷையூர் ஷைபுரம் தா. பெ. திருவேங்கடப் பிள்ளை தரும் | 5 | 0 | 0 |
| ஷையூர் ஷைபுரம் திரு. குப்புசாமி பிள்ளை தரும் ... | 5 | 0 | 0 |
| ஷையூர் ஆடி சன்பேட்டை நூல்மளிகை சு. சுப்பிரமண்ய முதலியார் தரும் .... | 10 | 0 | 0 |
| ஷையூர் ஷை மளிகை சொ. சுப்ரமண்ய முதலியார் .... | 5 | 0 | 0 |
| ஷையூர் நிமந்தகாரத் தெருவு கொல்லத்து வேலை மு. சண்முக முதலியார். தரும் .... | 5 | 0 | 0 |
| ஷையூர் ஷை தெருவு கொல்லத்து வேலை வே. | 5 | 0 | 0 |
| சண்முக முதலியார் தரும் .... | 5 | 0 | 0 |
| ஷையூர் ஷை தெருவு கொல்லத்து வேலை க. பச்சையப்ப முதலியார் தரும் ... | 5 | 0 | 0 |
| ஷையூர் ஷை தெருவு சுண்ணாம்புகாளவாய் வியாபாரம் க. அண்ணாமலை முதலியார், மாணிக்க முதலியார் தரும் .... | 5 | 0 | 0 |

ஷையூர் ஷைதெருவு தானியவியாபாரம் ஆ. நாகாத்
தின முதலியார் தரும் .... 5 0 0

ஷையூர் ஷை தெருவு நெசவு தொழில் குரு. கு. முரு
கேச முதலியார் தரும் ... 5 0 0

ஷையூர் பாண்ட வீதி வெள்ளகுளம் ரைஸ்மில் வி. மு.
பாலசுந்தர நாயகர் தரும் ... 5 0 0

ஷையூர் ஷைவீதி கண்ட்ராக்டர் கி. மு. செங்கல்வராய
முதலியார் தரும் .... 10 0 0

ஷையூர் ஷை வீதி கண்ட்ராக்டர் கி. மு. முத்துவேல்
முதலியார் தரும் ... 5 0 0

ஷையூர் ஷை வீதி தரி வியாபாரம் அபு. க. பூங்கா
வன முதலியார் தரும் ... 5 0 0

ஷையூர் ஷைவீதி சுண்ணும்பு காளவா பங்காரு நாயுடு
வால் தரும் .... 5 0 0

ஷையூர் ஷை தெருவு தானிய வர்த்தகம் எ. பூங்கா
வன நாயகரால் தரும் ... 5 0

ஷையூர் ஷை வீதி கண்ட்ராக்டர் எ. ஆறுமுக
நாயகர் தரும் ... 5

ஷையூர் ஷை வீதி கொல்லத்து வேலை மு. குப்பு நாய
கர் வாதப்ப நாயகரால் தரும் .... 5 0 0

ஷையூர் ஷை வீதி கொல்லத்து வேலை பெ. கணபதி
நாயகரால் தரும் .... 5 0 0

ஷையூர் ஷை வீதி தானிய வர்த்தகம் வி. மு. பத்மநாப
நாயகரால் தரும் .... 5 0 0

ஷையூர் ஷை வீதி சென்னை, கா. லோகய்ய நாயுடுவால்
தரும் .... 5 0 0

ஷை யூர் வெள்ளகுளத்து தெருவு செ. மு நடேச
நாயகரால் தரும் ... 5 0 0

ஷையூர் ஷைதெருவு ஸர்வதீர்த்தம் ரைஸ்மில் முனி
சிபல் கவுன்சிலர் த. மு. அரங்கசாமி நாயகர் .... 5 0 0

ஷையூர் ஷை தெருவு தானிய வர்த்தகம் த. மு. ஜெ.
நாகவேலு நாயகரால் தரும் ... 5 0 0

ஷை யூர் ஷை தெருவு கு. மு. மாணிக்க நாயகரால்
தரும் ... 5 0 0

| | | | |
|---|---|---|---|
| ஷையூர் ஷை தெருவு எ. பாசுராம நாயகர் தரும் .... | 6 | 0 | 0 |
| ஷையூர் கம்மாளத்தெருவு கொல்லத்து வேலை க. ஆறுமுக நாயகரால் தரும் ... | 5 | 0 | 0 |
| ஷையூ ஷை தெருவு வெ. கி. மாணிக்க ஆச்சாரியர் தரும் .... | 5 | 0 | 0 |
| ஷையூர் ஷை தெருவு பாலக்காடு ஓட்டல். ர. நாராயண அய்யரால் ... | 5 | 0 | 0 |
| ஷையூர் செங்கழுநீரோடைத் தெருவு ரா. சண்முக கிராமணியால் தரும் ... | 5 | 0 | 0 |
| ஷையூர் திருப்பக்குடல் தெருவு ஜோஸியம் நடேச முதலியார் தரும் .... | 5 | 0 | 0 |
| ஷையூர் ஷை தெருவு தானியவியாபாரம் அ. சாமி முதலியாரால் தரும் .... | 5 | 0 | 0 |
| ஷையூர் நெல்லிக்காரத் தெருவு இரும்பு சோடா வியாபாரம் மு. வெங்கடேச முதலியார் தரும் ... | 5 | 0 | 0 |
| ஷையூர் ஒக்கப்பிரந்தான் வீதி முனிசிபல் கவுன்சிலர் பஞ்சாயத்து கோர்ட்டு பிரஸிடெண்டு கி. தானப்ப நாயகர் தரும் .... | 5 | 0 | 0 |
| ஷையூர் ஷை வீதி புதுத்தெருவு வீ. சின்னகுழந்தை நாயகர் .... | 5 | 0 | 0 |
| ஷையூர் கெங்கணு மண்டபம் கெந்தபொடி கடை பஞ்சாயத்துகோர்ட்டு மெம்பர் வீ. முத்தையா முதலியார் ஏகாம்பர முதலியார் தரும் ... | 5 | 0 | 0 |
| ஷையூர் ஷை கடை, அ. மாணிக்கசெட்டியார் ராஜவேல் செட்டியார் தரும் .... | 5 | 0 | 0 |
| ஷையூர் ஷை கடை மு. கோவிந்தராஜ செட்டியார் தரும் .... | 5 | 0 | 0 |
| ஷையூர் ஷை கடை கி. நடேச செட்டியார் கோவிந்தராஜ செட்டியார் தரும் .... | 5 | 0 | 0 |
| ஷையூர் கோனேரிகுப்பம் டவுன் பாங்கி டைரக்டர் பலசரக்கு மளிகை, அ. குப்புசாமி நாயுடுவால் .... | 5 | 0 | 0 |
| ௱ஷையூர் புத்தேரித்தெருவு, மு. ஏகாம்பர முதலியாரால். | 5 | 0 | 0 |
| ஷையூர் எடத்தெருவு நா. விஜயராகவப்பிள்ளை, க. இரத்னப் பிள்ளையால் தரும் ... | 5 | 0 | 0 |

| | | | |
|---|---|---|---|
| ஷையூர் கெங்கணுமண்டபம் ஓட்டல் நா. ராமச்சந்திர அய்யர் .... | 5 | 0 | 0 |
| ஷையூர் பஞ்சுகொட்டி குப்புநாயக்கர் தெருவு வட்டி வியாபாரம் ந. சின்ன கன்னியப்ப முதலியார் தரும் | 25 | 0 | 0 |
| ஷையூர் சிமுண்டைராஜவீதி புஷ்பவியாபாரம் மு. ராஜா நாயகர் தரும் .... | 5 | 0 | 0 |
| ஷையூர் ஷைவீதி ஷை வியாபாரம், ஏ. நயனு நாயகர் ... | 5 | 0 | 0 |
| ஷையூர் கரிக்கினிலமர்ந்தவள் தேவஸ்தானம் சுப்ரமண்ய அர்ச்சகரால் ... | 5 | 0 | 0 |
| காஞ்சிபுரம் புதுப்பாக்கம் கிராமம் ஆனைகுட்டி நாயகர் | 5 | 0 | 0 |
| காஞ்சிபுரம் திருமார்பேர் கிராமம் கு. கோ. கோபால முதலியார் ... | 5 | 0 | 0 |
| ஷையூர் அரிச்சந்திரன் பஸ் சர்வீஸ் புரொப்ரைட்டர் சொக்கலிங்க முதலியார் தரும் .... | 5 | 0 | 0 |
| காஞ்சிபுரம் செங்கழுனீ ரோடைத்தெருவு தானிய வர்த்தகம் மு. அர்ச்சுன நாயகர் தரும் .... | 5 | 0 | 0 |
| ஷையூர் நிமந்தக்கார ஒத்தவாடை வீதி, மெத்தைவீடு கொல்லத்து வேலை மு. ஆறுமுக முதலியார் தரும். | 10 | 0 | 0 |
| ஷையூர் ஷை வீதி ஷை கொல்லத்து மேஸ்திரி மு துரைசாமி முதலியார் ... | 10 | 0 | 0 |

ப. கோட்டைய நாயகர்.

205

உ

# பிழை திருத்தம்.

பக்கம் 19 வரி 16-ன் கீழ் சுப்ரமண்யசுவாமி பாடலில், கான கத்தில் வள்ளியறை கண்ட சிவசுப்ரமண்யா வனவளையல் செட்டி யாக வந்த சிவசுப்ரமண்யா, புனந்தனிலே வளையலிட்ட புண்ணியனே சுப்ரமண்யா.

பக்கம் 20 வரி 4 ன் கீழ் என்றுந் தேவிமார்களோடு எழுந்தரு ளுஞ் சுப்ரமண்யா.

பக்கம் 70 வரி 12-ன்கீழ் பதியடுக்குப் பாடல் முதலில் வாரி குழல் முடித்து வஞ்சியர்கள் நின்றிருக்க.

பக்கம் 77 வரி முதலில் நித்திரை செய்கிற பாடலில், அடதா ளம்-நித்ரைபுரி நித்ரைபுரி நித்ரைபுரிவீரே நித்ரைபுரி நித்ரைபுரி நினைந்து மகிழ்வீரே.

பக்கம் 77 முதலில் எச்சரிக்கை பாடலில், அடதாளம்-நகர காளி நகரகாளி நகரகாளி காவல் நகரகாளி நகரகாளி பகரகாளி காவல்.

பக்கம் 77 முதலில் வந்தன பாடலில், அடதாளம்-வந்தனஞ் செய் வந்தனஞ்செய் வந்தனஞ் செய்தேனே வந்தனஞ்செய் வந்த னஞ்செய் பந்தமுடன் றேனே.

பக்கம் 78 முதலில் துயில் நீக்கும் பாடலில் அடதாளம், எழுந் தருள்வீர் எழுந்தருள்வீர் எழுந்தருளுவீரே எழுந்தருள்வீர் எழுந் தருள்வீ ரெழில்விமையோர்க ளீரே.

பக்கம் 91 முதலில் காத்தவராய சுவாமி பாடலில்-அடதாளம் வனங்காத்த வனங்காத்த வனங்காத்தவராயா வனங்காத்த வனங் காத்த புனங் காத்தவராயா.

பக்கம் 147 வரி 12-வது வள்ளியம்மன் வளைய லேலப்பாட்டில் 3-வது வரியில், உம்மையு நம்மையு முறவாக்கும் வளையல்.

பக்கம் 148 ஷை பாட்டு 3-வது வரியில் பைந்தொடியே நாமி ருவருஞ் சற்றுப்

பக்கம் 162-19-வது வரியில் அறுசீர் ஆசிரிய என்பதை எடு த்து விட்டு விருத்தம் என்று சேர்த்துக்கொள்ளவும்.

பக்கம் 197 அறுசீர் ஆசிரிய விருத்தம் 3-வது வரியில் சுந்தரக் என்பதை சுந்திர என்று வாசிக்கவும்.

பக்கம் 200 பார்வதியம்மன் பதிகத்தில் 11-வது விருத்தத்தில் பத்துப் என்பதை பத்தும் என்று சேர்த்து கொள்ளவும்.

உ

சிவசத்திமயம்.

# அட்டவணை.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | விநாயகர் பாடல் | 5 |
| 2. | சரஸ்வதி பாடல் | 10 |
| 3. | சபை வணக்கம் புலவர் (துதி பாடல்.) | 13 |
| 4. | சுப்ரமண்யர் பாடல் | 15 |
| 5. | ஈஸ்வரர் பாடல். | 20 |
| 6. | பெருமாள் பாடல். | 28 |
| 7. | காமாக்ஷியம்மன் பாடல். | 34 |
| 8. | பச்சையம்மன் பாடல். | 39 |
| 9. | அங்காள பரமேஸ்வரி பாடல். | 44 |
| 10. | கன்னியம்மன் பாடல். | 48 |
| 11. | காளியம்மன் பாடல். | 51 |
| 12. | மாரியம்மன் பாடல். | 55 |
| 13. | திரௌபதையம்மன் பாடல். | 61 |
| 14. | பதியடுக்கு பாடல். | 67 |
| 15. | நித்திரை செய்கிற பாடல். | 77 |
| 16. | எச்சரிக்கை பாடல். | 77 |
| 17. | வந்தனஞ் செய்யும் பாடல். | 77 |
| 18. | நித்திரை தெளிவிக்கும் அல்லது பதிகளை தல் பாடல். | 78 |
| 19. | பூவாடையம்மன் பாடல். | 80 |
| 20. | லக்ஷிமி பூங்குறத்தி பாடல. | 82 |
| 21. | கெங்கை வேங்கையம்மன் பாடல். | [illegible] |
| 22. | ரதிதேவி முடியாலழகி பாடல். | 84 |
| 23. | தெய்வானை பூங்கனி பாடல். | 85 |
| 24. | வள்ளியம்மன் காத்தாயி பாடல். | 86 |
| 25. | ஆரிமுத்து தேவர் பாடல். | 87 |
| 26. | வீரபத்ர தேவர் பாடல். | 88 |
| 27. | அரியா தேவர் பாடல். | 89 |
| 28. | காத்தவராய சுவாமி பாடல். | 91 |
| 29. | வாழ்முனிவரர்கள் பாடல். | 92 |
| 30. | உக்ரவீரன் பாடல் | 93 |

| | | பக்கம். |
|---|---|---|
| 31. | மதுரைவீர சுவாமி பாடல். | 94 |
| 32. | தீபமழைப்பு பாடல். | 95 |
| 33. | கும்பபூசை பாடல். | 96 |
| 34. | ஆள்காரர் பாடல். | 98 |
| 35. | காவலர் பாடல். | 99 |
| 36. | ஆலஞ் சுற்றும் பாடல். | 100 |
| 37. | பந்தடி பாடல். | 100 |
| 38. | தேவதையை அழைக்கும் பாடல். | 102 |
| 39. | தேவதையை கேட்கும் பாடல். | 105 |
| 40. | குறி கேழ்க்கும் பாடல். | 106 |
| 41. | தேவதையை நிருத்தும் பாடல். | 107 |
| 42. | வாடையிடும் பாடல். | 108 |
| 43. | பழ மழைக்கும் பாடல். | 109 |
| 44 | பேய் முனிகளழைப்புப் பாடல். | 111 |
| 45. | பதியடுக்கு சருக்கம். | 113 |
| 46. | விபூதி தரும் பாடல். | 117 |
| 47. | பிரங்கிரிஷி ஏலப்பாட்டு. | 120 |
| 48. | நடராஜர் ஆனந்தக் களிப்பு. | 121 |
| 49. | நடராஜர் ஆனந்த பேரின்ப மருந்து. | 124 |
| 50. | சுப்ரமண்ய சுவாமி திருவிளையாடல் சிந்து. | 129 |
| 51. | ஷடிசுவாமி மிட்டாய் வர்ணமெட்டு சிந்து. | 131 |
| 52. | வள்ளியம்மன் நொண்டி சிந்து. | 141 |
| 53. | வள்ளியம்மன் ஏலப்பாட்டு. | 144 |
| 54. | ஷடி யம்மன் நொண்டி சிந்து. | 149 |
| 55. | ஷடி யம்மன் கும்மிபாடல். | 154 |
| 56. | ஸ்ரீ காமாக்ஷியம்பாள் அகவல். | 165 |
| 57. | சந்தவெளி யம்மன் சரித்திர விளக்கம். | 177 |
| 58. | ஷடி யம்மன் தோத்திர பதிகம். | 187 |
| 59. | ஸ்ரீ வெங்கடேச பெருமாள் பதிகம். | 192 |
| 60. | ஸ்ரீ பார்வதி அம்மன் பதிகம். | 197 |


தையை தேவர்களே யென்று வருகிற பாடல்களெல்லாம் பொதுவாயுள்ளன.

176339

49 A
4-33